|| श्रीः ||

शाश्वतधर्मगोप्त्रे श्रीपते वासुदेवाय नमः ||



ஸ்ரீ வராஹமிஹிராசாரியரால் செய்யப்பட்ட

சாகுனம் என்ற

# शकुनफलनिर्णयः

## சகுனபல நிர்ணயம்.

தமிழுரையுடன்.

இச்சிறந்த உரை

ஹாமஹோபாத்தியாய வேதாந்தகேஸரி

பங்காளூடு பிரும்மஸ்ரீ கணபதி சாஸ்திரிகள்

அவர்களின் முக்கிய சிஷ்யரும், வியாகரண வேதாந்த

சாஸ்திர பாரங்கதரும், பாகவத பகவத்கீதோபன்யாஸகரும்,

சோதிட மந்திர சாஸ்திர வித்வானும் 'ஆர்யமதஸம்வர்த்தனீ'

பத்திராதிபருமான

பிரும்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள்

அவர்களால் இயற்றி

தமது ஆர்யமதஸம்வர்த்தனீ அச்சு இயந்திரசாலையில்

அச்சியற்றி சென்னையிற் பிரசுரஞ்

செய்யப்பட்டது.

காபிரைட்.] 1928. [விலை ரூ. 1-4-0.

TNSDA
01627

Beliefs & superstitions

00211

Mr.V.Ramasubramaniam,
95,V.R.Pillai Street,
MADRAS-5.

II-(75)
Office of the
Director of Archaeology
Madras
1627



**कडलंगुडि नटेश शास्त्री**

**ज्यौतिषिकः**

व्याकरण वेदान्त शास्त्र पारंगतः, भागवत भगवद्गीतोपन्यासकः

आर्यमत संवर्द्धनी पत्रिका संपादकः

॥ श्रीः ॥

शाश्वतधर्मगोप्त्रे श्रीमते वासुदेवाय नमः॥



ஸ்ரீ வராஹமிஹிராசாரியராற் செய்யப்பட்ட

சாகுனம் என்ற

# शकुनफलनिर्णयः

# சகுனபல நிர்ணயம்.

தமிழுரையுடன்.


இச்சிறந்த உரை

மஹாமஹோபாத்தியாய வேதாந்தகேஸரி

பங்கானடு பிரும்மஸ்ரீ கணபதி சாஸ்திரிகள்

அவர்களின் முக்கிய சிஷ்யரும், வியாகரண வேதாந்த

சாஸ்திர பாரங்கதரும், பாகவத பகவத்கீதோபன்யாஸகரும்,

சோதிட மந்திர சாஸ்திர வித்வானும் 'ஆர்யமதஸம்வர்த்தனீ'

பத்திராதிபருமான

**பிரும்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள்**

அவர்களால் இயற்றி



தமது ஆர்யமதஸம்வர்த்தனீ அச்சு இயந்திரசாலையில்

அச்சியற்றி சென்னையிற் பிரசுரஞ்

செய்யப்பட்டது.



காபிரைட்.]



1928.

[விலை ரூ. 1-4-0.

ஆர்யமத ஸம்வர்த்தனீ பிரஸ்,
72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
13 MAR 1978
GOVT. OF MADRAS, MADRAS
1627

# முகவுரை.

ஊழ்வினை காரணமாயுலகிற் பிறந்த உயிர்களுள் மனிதப்பிறவியே மிக்கமேலானதெனச் சுருதி, யுக்தி அனுபவங்களாற் றெள்ளிதிற் புலனாகின்றது. ஏனெனில் ஏனைய உயிர்கட்கில்லாதபடி இம்மனிதப்பிறவியில் அறிவும், அறிவுகொளுத்தும் ஆசிரியனும் அவராற் கையாளப்பெறும் அருமைபெருமைதங்கிய பலநூற்களும் உயிற்றுணையாயிருத்தலே அதன்காரணமாகும். இத்தகைய பெருமை வாய்ந்த இப்பிறவியை யடைந்த மனிதர் யாவரும் அம்மூவகை உதவியைக்கொண்டு இம்மையிலும், மறுமையிலும் பற்பல வழியிலும் சுகம் பெறுவதற்குப் போதிய திறன் படைத்தவராகின்றனர் என்பது வெள்ளிடைமலை. அவ்விதம் மனிதவர்க்கத்திற்கு உதவிபுரிந்து அவர்களைச் சுகம்பெறுவிக்கும் நூற்களுள் சோதிட நூற்களே தலைபெற்று விளங்குகின்றன வென்பதிற் சற்றுமையமுண்டோ? இவ்விதம் மேலான பயனளிக்கும் சோதிட நூலானது, (1) கணிதம், (2) ஜாதகம், (3) சாகை என மூன்று விதமான பிரிவுள்ளதாயிருக்கின்றது. இம்மூன்றிற்கும் ஸம்ஹிதை என்பது பொதுப்பெயராகும். ஒருவன் இம்மூன்றையும் நன்கறிந்து கொள்வது மிக்கவவசியமுமாகும். இதுவிஷயமாக, (1) சூரியன், (2) பிரும்மதேவன், (3) வியாஸர், (4) வசிஷ்டர், (5) அத்ரி, (6) பராசரர், (7) காச்யபர், (8) நாரதர், (9) கார்க்யர், (10) மரீசி, (11) மனு, (12) அங்கிரஸ், (13) ரோமசர், (14) பௌருகுத்ஸர், (15) ச்யவனர், (16) யவனர், (17) பிருகு, (18) சௌனகர், ஆகிய (18) மஹருஷிகள் பற்பல நூற்களைச் செய்து மனிதற்குதவியிருக்கின்றனர். அம்மஹான்களின் கருத்தை நன்குணர்ந்தவரான ஸ்ரீவராஹமிஹிராசாரியர் அம்மூன்று விஷயங்களிலும் விரிவான நூற்களைச்செய்து வெளியிட்டிருப்பது யாவருமறிந்ததொரு விஷயமேயாகும்.

அவ்விதம் வராஹமிஹிராசாரியர் செய்தருளிய நூற்களுள் பிருஹத்ஸம்ஹிதை என்ற நூலானது சோதிடவுலகிற் பொன்னேபோற் போற்றக்கூடியதாகவே யிருக்கின்றதென்பதில் யாதுமையமில்லை. இந்த பிருஹத்ஸம்ஹிதை 85-வது அத்தியாயம் முதல் 95-வது அத்தியாயம் முடியவுள்ள 11 அத்தியாயங்களில் சகுனமூல மறியக்கூடிய பலன் இன்னின்னவை எனத்தெளிவாய்க் கூறியிருப்பதானது வடமொழிப்பயிற்சி பெறுதவர்க்குப்பயன் தருதிருப்பதுபற்றி அந்த அத்தியாயங்களை பட்டோத்பலாசாரியரின் வடமொழிவியாக்கியானத்தை யொட்டித் தமிழில் மொழிபெயர்த்து சகுனபல நிர்ணயம் என அதற்குத்தலையங்கமிட்டு நந்தமிழ்மக்கள் யாவர்க்கும் பயன்படுமாறு அதை நாம் வெளியிட முன்வந்தோம். மேலும், சகுனபல நிர்ணயம் 11-வது சாகுனேத்தரம் என்ற அத்தியாயத்தின் நடுவில் அக்ஷரகோசம் என்றதொருபாகம் சேர்த்து உரை எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதை ஒருவன் நன்கு படித்தறிந்து கொள்ளுவானேல் கேட்போர் ஆச்சரியப்படும்படி அவரின் பெயரையும், அவராற் கேட்கப்படும் பொருளின் பெயரையும் வெகுதெளிவாய் சொல்லி விடக்கூடும் என்பதிலும், இதையே ஜாதகங்களிலும் பொருத்திப் பார்த்து ஊஹித்தறிந்து இஷ்டதேவதாத்தியானத்துடன் பலன் சொல்லும் பொழுது ஜாதகரின் பெயரையும், அவர் செய்யும் தொழில் விஷயமான பொருளின் பெயரையும் எளிதில் ஒருவன் சொல்லிவிடக் கூடும் என்பதிலும் சற்றும் ஐயமில்லை. மேலும், இந்த சகுனபல நிர்ணயமேன்ற இந்த புஸ்தகம் ஒன்றை ஒருவன் நன்கு படித்தறிந்து கொண்டானேல் எவரும் ஆச்சரியப்படும் படியான முறையில் பலன் சொல்லுவதிலிருந்து இவர் ஒரு மஹருஷியோ என எண்ணும் படியான முறையில் யாவராலும் போற்றப்படுவான் என்று சொல்லுவது மிகையாகா.

ஆனல் தக்காலம் நமது பாரத புண்ணிய பூமியிலுள்ள புனிதமான கல்வியையே அடியோடொழித்து அடிமைத்தனத்திற்காளாக்கும் ஏனைய போலி வித்யையைக்கற்ற சிலமூடர் தாம் கற்றகல்வி காரணமாய் மனிதப் பிறவிக்கின்றியமையாத சோதிட நூற்களைப் பலவாறு தம்மனம் போனவாறெல்லாம் இகழ்ந்து

பேசியும், எழுதியும், வரத்தலைப்பட்டிருக்கின்றனர். ஆயினும், இம்மூடர் இவ்விதம் இகழ்ந்து பேசுவதைக்கொண்டும், எழுதுவதைக்கொண்டும் மிக்கமிக்கப்புனிதமானதும், மிக்கமிக்க அனுபவத்திற் கொத்துவரும் விஷயத்தையுபதேசிப்பதுமான இந்த சோதிட நூற்களின் உண்மையான பெருமை பெருகி வருமேயொழிய ஒருபொழும் குன்றி விடாதென்பதை மட்டும் யாம்கூசாமற் கூறுவாம். ஆனல் இவ்விதம் பிதற்றும் இம்மூடரை ஒன்று கேட்கிறேம். அதாவது:—நீவிர் முற்கூறிய மஹருஷிகளாலியற்றப்பெற்ற இதுபோன்ற நூற்களை நன்குபடித்து அதன்கருத்தறிந்து அக்கருத்துக்கிசைய அதை அனுபவத்திற்பொருத்தி என்றேனும் பார்த்ததுண்டா? இனியேனும் பார்ப்பதாக உத்தேசமுண்டா? என்பதாம். ஆனல் ஒருசிலமூடர் இவ்விதம் கூறுவதற்கு தக்ககாரணமில்லாமலுமிருக்கவில்லை. அதாவது:—தற்காலம் சோதிடவித்வான்கள் என்பவருட்சிலர் மேற்சொன்ன மஹான்களின் நூற்களை இன்னதென்று கனவிலும் கண்டறியாதவர்களாய் தம்மனம்போனவாறு ஜாதகம், சகுனம் முதலியவற்றின் பலனைச் சொல்லுவதும், அவ்விதம் அவர் சொல்லுவது அனுபவத்தில் ஒத்துவராதிருத்தலும், அத்தகைய போலி சோதிட வித்வான்களை அண்டித் தனது எதிர்காலபலனை அவர்களிடம் கேட்டு அது அனுபவத்தில் நடைபெறாதிருப்பதைக் கொண்டு உலகிற்பலர் பலவாறு மனச்சோர்வடைதலைக் காண்டலுமே அதன்காரணமாகும் எனநாம் ஒருவாறு எண்ணுகிறேம். இனி இத்தகைய சோதிட சாஸ்திரப்பயிர்ச்சி பெற்றவரிடம் கேட்கப்படும் தமது எதிர்காலபலன் அனுபவத்தில் நன்கே ஒத்துவருமாதலால் முற்கூறிய மேதாவியும் கூட நமது புனிதமான சோதிடசாஸ்திரத்தை இகழ்ந்து பேசவோ, எழுதவோ முன்வரமாட்டார் என்பதுமட்டும் நிச்சயம். மேலும்,

विफलान्यन्यशास्त्राणि विवादस्तेषु केवलम् ।
प्रत्यक्षं ज्यौतिषं शास्त्रं चन्द्रार्कौ यत्र साक्षिणौ ॥

"வேறு சாஸ்திரங்கள் இதுபோன்று கண்கூடானபயனைப் போதிப்பனவல்ல. அவ்விஷயங்களில் சண்டையிடுவது மட்டுந்தான் மீதமாகின்றது. சோதிடசாஸ்திரமோவெனில் கண்

கூடான பயனையுபதேசிக்கின்றது. இவ்விஷயத்தில் மதியும், கதிரவனும் ஸாக்ஷிகளாவர்” எனப்பெரியோர் உபதேசித்துமிருக்கின்றனர். ஆகவே கண் கூடான பலனை யுபதேசிக்கும் ஜோதிட நூற்களுள் சகுனத்தைப்பற்றிக் கூறும் இந்த நூலானது மிக்க மிக்க ஒவ்வொருநாளும் அனுபவத்திற்காணும் விஷயத்தை யுபதேசிப்பதால் எவரும் இதைப்படித்தறிந்து இதனுதவியால் தமக்கு எதிர்காலத்தில் நிகழும் பலன்களை நன்கறிந்து அதற்குத்தக்கபடி நடந்து இம்மை க்ஷேமலாபங்களை அடைய முயலுவார்களென்றெண்ணியே இக்காரியத்தில் நாம் பிரவேசித்திருக்கிறோம்.

சங்கை — வருவன வந்தேதீருமாதலால் அவ்விஷயத்தில் சோதிடசாஸ்திரம் எதற்கு எனின்?

உத்தரம்—இதற்கு நமது பிருஹத்ஜாதகத்தின் முகவுரையிலும், நவக்கிரஹாராதனக்கிரமம், என்றபுஸ்தகத்தின் முகவுரையிலும் விரிவாய் பதிலெழுதியிருப்பதால் அதை அங்கு காண்க. ஆகவே நாம் ஒன்றைமட்டும் இத்தேசத்திய மேதாவிகளைக் கேட்டுக் கொள்ளுகிறோம். அதாவது: இந்த சகுன விஷயமாக (1) இந்திரன், (2) சுக்கிராசாரியார், (3) பிருஹஸ்பதி, (4) கபிஷ்டலர் என்ற முனி, (5) ரிஷபர் என்ற முனி, (6) பாகுரி என்ற முனி, (7) தேவலர், (8) பாரத்வாஜர், (9) அவந்தீ தேசத்திலுதித்தவரும், மஹாராஜாதி ராஜனுமான திரவ்யவர்தனன், (10) கர்க்கர் முதலிய மஹான்களும் அவர்களின் நூற்களைத் தழுவி இந்து தேசத்திலுள்ள மூன்று ரத்னங்கள் எனப் போற்றப்படுபவருள் ஒருவரான ஸ்ரீவராஹ மிஹிராசாரியரும் உலகில் சகுன மூலம் நாம் அறிந்து கொள்ளக்கூடிய அபூர்வ விஷயமிருப்பதாகவே எண்ணி சகுனவிஷயமானதொரு சாஸ்திரத்தை எழுதியிருக்கும்பொழுது ஒவ்வொரு மனிதனும் அந்நூலை ஆராய்ந்தறிந்து அதில் ஏதேனுமுண்மை யிருக்கின்றதா? அல்லது இல்லையா? என அனுபவத்திற் பொருத்தி கண்டறியவேண்டுவது அவசியமாகி விடவில்லையா? என்பதாம்.

மேலும், ஆண்டவனாற் படைக்கப்பட்ட சேதனசேதன ரூபமான இம்மனித உலகில் ஒவ்வொரு வஸ்துவிலும் இயற்கையாக

வே பற்பல சேஷ்டைகளிருப்பதை காண்கிறோம். இயற்கையி லமைந்துள்ள இவற்றின் சேஷ்டைகளுள் ஒன்றின் சேஷ்டை (செய்கை) யானது மற்றொன்றிர்க்குத் தனது வாழ் நாளில் தனது ஊழ்வினை மூலம் நேரும் சுபாசுப பலன்களைத் தெரிந்து கொள்ளுவதற்கு உதவியாகவிருக்கும்படியே ஆண்டவன் அவற்றிர்க்கு அவ்வித சேஷ்டையை இயற்கையி லமைத்திருக்கிறான் என்றும் கொள்ளவேண்டுவது அவசியமாகிறது. ஆனால் எதன் சேஷ்டையானது எந்த தேசத்தில், எந்த காலத்தில் எவ்விதம் உண்டானால் அதனால் எவற்றிர்க்கு பின்னர் வரும் எந்த பலன் எப்பொழுது எம்மாதிரிவரும் என்றாலோ? அதைத்தான் இந்தச் சாஸ்திரமானது உபதேசிக்கின்றதுபற்றி இந்தச் சாஸ்திரமானது இயற்கையில் மற்றெல்லா சாஸ்திரங்களைக் காட்டிலும் மேலானதாகவேதான் ஏற்படுகிறது. மேலும் சித் என்றும், ஜடம் என்றும் கூறப்படும் இவ்விரண்டு பதார்த்தங்களுள் ஜடமான வஸ்துக்கள் யாவும் சித்தான சேதன வஸ்துவிலேயே நின்று அதனாலேயே ஆட்டிவைக்கவும் படுகின்றது என்று கூறும் வேதாந்தங்களை நாம் ஒப்புவோமானால் ஒரு ஜடவஸ்துவின் சேஷ்டையானது மற்றொன்றிற்கு நேரப்போவதைத் தெரிவிப்பதாக வாகின்றது. இதுவேதான் **சகுனம்** எனப்படும் என்று கூறும் இந்த சாஸ்திரத்தையும் நாம் நம்பவேண்டிய வர்களாகவே தானாகிறோம். இதில் யாதும் ஐயமில்லை. ஆகவே ஒன்றின் சேஷ்டை (செய்கை) யைக் கொண்டு பின்னர் வரும் சுபாசுபபலனை யறிவதற்குதவி புரிவதற்காக நம் பெரியோராலெழுதப்பட்ட பற்பல நூற்களுள் வராஹமிஹிராசாரியராற் செய்யப்பட்ட இந்நூலானது மிக்க மிக்க மேலானதுபற்றி இதை ஒவ்வொரு மனிதரும் ஜாதி மத வித்யாஸமின்றி படித்தறிந்து அதன் மூலம் அறிவிக்கப்படும் அசுபங்களைப் போக்கி சுபங்களைப் பெருக்கிக் கொண்டு இம்மையில் விசேஷமான நன்மையையடைவார்களென்றும், அவ்விதமே யடையவேண்டும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

ஆனால் உலகில் சிலர் சோதிடம் பார்ப்பதும், சகுனம்பார்ப்பதும், வீண் பயத்தையே உண்டாக்கி எவனையும், எக்காரியத்திலும் தைரியமாய் பிரவிருத்திக்கச் செய்யாமல் வீணில் சோம்பேறி

களாகஆுக்கக்கூடுமாதலால் இதுபோன்றசாஸ்திரங்கள் அனுவசிய மெனப் பிதற்றுகின்றனர். ஆயினும் அதனுண்மை மூடரான இவர் நினைக்கிறபடியில்லை என்பதே எமது துணிபு. அதாவது:— சோதிடமோ சகுனமோ ஒருவனுக்கு ஒன்றைக் கட்டாயப்படுத் திக் கொடுக்கக் கூடியதல்ல. பின்னையோவெனில் இயர்க்கையா கப் பின்னர் நிகழக்கூடியதை முன்னர் தெரிவிக்கமட்டும் செய் கின்றது. அவ்விதம் சோதிடம், சகுனம் இவற்றால் தெரிவிக்கப் படுவது சுபமானல் தைரியமாக பிரவிருத்தி செய்யவும், அசுபமா னல் எச்சரிக்கை செய்யப்பட்டோம் எனவெண்ணி அதற்குத் தக்கபடி கூடியவரை முன் ஜாக்கிரதையுடன் நாம் நடக்கவும் இதன் மூலம் உதவியேற்படுவதால் சோதிடம், சகுனம் இவற் றை யறியாதவன் சோம்பேறி யாகின்றானே யொழிய இவற்றை யறிந்தவன் ஒரு பொழுதும் சோம்பேறியாக வாகமாட்டான் என்பது மட்டும் நிச்சயம்.

சங்கை—அங்ஙனமாயின் இவ்வுலகில் மேற்றேயத்திலுள்ள வர்கள் கீழ்தேயத்தவர் போன்று இம்மாதிரியான ஸமாசாரங் களை நம்புவதுமில்லை. நம்பாததால் அவர்க்கு ஒருவிதகுறைவும் ஏற்பட்டிருப்பதாக அனுபவத்தில் காணப்படவுமில்லை. இவ்வித மிருக்க அனுவசியமாக நாம்மட்டும் ஏன் இதைப்படித்து பொழு தைப்போக்கவேண்டும் எனின்?

உத்தரம் — இதற்கு இரண்டு விதமாகப்பதில் கூறுவாம்— அவற்றுள் முதலாவது பதில் பின்வருமாறு—தக்க சான்றாகக்காட் டிய மேற்றேயத்தவரில் பலர் இது போன்ற விஷயங்களையுபதே சிக்கும் நூற்களைப் படித்தறிந்து அதன் மூலம் பின்னர்வரும் சுபாசுபங்களை யுணர்ந்து அதற்குத்தக்கபடியேதான் நடக்கின்ற னர் என்பதில்யாதும் ஆக்ஷேபமில்லை. மேற்றேயத்தவர் இதை யறிந்து நடக்கின்றனர் என்பது உமக்கு எவ்விதம் தெரியும் என்று கேட்பீரேல், கூறுவாம்—ரைட் ஆனரபிள் வீ, எஸ் ஸ்ரீனி வாஸசாஸ்திரிகளவர்களிடம் நாம் 1926, மேமாதவாக்கில் பேசி யிருந்தபொழுது "மேற்றேயத்தவர்களிலும் ஜாதகம்,முதலியவற் றை நம்புகின்றவர்களுண்டென்றும், சட்டசபை முதலியபெரிய ஸ்தானங்களுக்கு அபேக்ஷகராக நிற்பவரும் கூட சோதிடவித்

வான்களை யணுகித் தனக்குஜயமுண்டாகுமா? எனக்கேட்டுக் கொள்ளுவதைநான் நேரில்பார்த்திருக்கிறேன்" என்றும் சொல்லி யிருக்கின்றனர். ஆகவே நாம்மேலே சொன்னது அனுபவ பூர்வக மான ஆப்தவாக்கியமேயாகும், என்பதாம். இரண்டாவது ஸமா தானமாவது—மேற்றேயத்தவரோ, கீட்டேயத்தவரோ எவரே னும் சரி ஏதோ ஒருபயனை எதிர்பார்த்துத்தான் ஒருகாரியத் தைச் செய்யத்தொடங்கு கின்றனர் என்பதுமட்டும் திண்ணம். அவ்விதம் தாம் எதிர்பார்க்கும் பலன் இன்னின்னஸமயத்தில் இம்மாதிரியுண்டாகும் என ஒருவர் சொல்லி அது அனுபவத்தில் நடக்கும்பொழுது அவ்விஷயத்தை அவர் எவ்விதம்நம்பாமலிருக் கக்கூடும். அனுபவத்தில் வருவதையும் ஒருவர் நம்பவில்லை என்றால் அவர் ஒன்று மூடராகவோ, அல்லது பைத்தியம் பிடித்த வராகவோ இருக்கவேண்டுமேயொழிய உண்மையான மேதா வியாக ஒருபொழுதுமிருக்க முடியாது. ஆகவே கண்கூடாகக் காணும் எதிர்காலபலனை யுபதேசிக்கும் இதுபோன்ற நூற்களை அவர்களும் படிக்கக்கடமைப்பட்டவர்களாகவே ஆகிவிடுகின்ற னர் என்பதாம். பரோக்ஷமான ஸ்வர்க்க நரகாதி விஷயங்களை யுபதேசிக்கும் நூற்களை நம்பவில்லை என்று ஒருவன் ஏதோ சொல்லலாமேயொழிய கண்கூடாகக்காணும் பலனையுபதேசிக் கும் இதுபோன்ற நூலை எவரும் நம்பாமலிருக்க முடியாதென் பதுமட்டும் திண்ணம். ஆகவே நமது தமிழ்மக்கள் வெகுசிறப்பு வாய்ந்ததும், தனதுவாழ்நாளில் மிக்கமிக்க வுபயோகப்படக் கூடியதும், ஆனதுபற்றியே பொன்னேபோற் போற்றக்கூடியது மான இன்னூலைப் படித்துவிஷயமறிந்து நன்மைபெறுவாராக.

சுபம்.

கடலங்குடி நடேச சாஸ்திரிகள்.

[25-2-1928.]

---

**

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
13 MAR 1970
GOVT. OF MADRAS, MADRAS.
1627

# விஷய அட்டவணை.

பக்கம்.


எந்த சகுனத்தையும் இகழக் கூடாதென்பது ... 1

தனக்கு முன்னிருந்த மஹருஷிகளா லியற்றப்பட்ட சகுன சாஸ்திரங்களைத் தழுவியே இக்கிரந்தம் எழுதப்படுகின்ற தென்பது ... 2

சாகுன சாஸ்திரத்தின் பயன் ... 3

சகுனங்களைப் பிரித்துபதேசித்தல் ... ,,

இன்ன சகுனம் புருஷன், இன்ன சகுனம் ஸ்திரீ, இன்ன சகுனம் நபும்ஸகம் என்பதைக் காண்பதற்குபாயம்... 5

எதை முன்னிட்டு சகுனத்தைப் பற்றிய சுபாசுப விசாரம் செய்யவேண்டும் என்பது. ... 6

யாமபேதம், திக்பேதம் இவற்றைத் தழுவி சகுனபலத்திற்கு சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலம் இவற்றை ஏற்படுத்தலும், திக்குகளுக்கு அங்காரம் முதலிய பெயர்களை யுபதேசித்தலும் ... 7

திக்கு மூலம் சகுனபலனி லுண்டாகின்ற மற்றுமுள்ள விசேஷங்களை யுபதேசித்தல் ... 9

சகுனமுண்டாகும் ஸ்தானத்தைக் கொண்டு அதன் பலனில் அறியவேண்டிய விசேஷம் ... 10

சகுனத்தை தேவதீப்தம், கிரியாதீப்தம் என்று இருவகையாகப் பிரித்தலும், அவற்றுள் ஒவ்வொன்றையும் 5 விதமாகப் பிரித்தலும் ... 11

இன்னின்ன விடங்களில் சகுனம் சுபமாகும் என்பது ... 14

பகல், இரவு என்ற காலம், ஆண், பெண், அலி என்ற வகுப்பு இவற்றை யனுஸரித்து சகுனத்திற்கு விசேஷம் கூறல் ... ,,

கிழக்கு திசையில் வரூவுள்ள சகுனங்கள் ... 15

பக்கம்.

தெற்கு, மேற்கு, வடக்கு திசைகளில் வலுவுள்ள சகுனங்கள் ... 16
இன்னின்ன காலத்திலும், நிலையிலும் சகுனம் சுபமாகவோ, அசுபமாகவோ ஆகாதென்பது ... 17
சிசிருதுவிலும் வஸந்தருதுவிலும் நிஷ்பலமாகின்ற சகுனங்கள் ... ,,
சிராவணம், பாத்திரபதம், ஆச்வினம், கார்த்திகம் என்ற மாதங்களில் நிஷ்பலமாகின்ற சகுனங்கள் ... 18
ஹேமந்தருதுவில் நிஷ்பலமாகின்ற சகுனங்கள் ... 19
திக்சக்கிரத்தை 32 பங்காகப் பிரித்து இன்னின்ன திக்கிற்கு இன்னின்னார் உடையவர் என்பதை யுபதேசித்தல் 19—21
இவ்வித முபதேசித்ததின் பயனும், 32 விதமாகப் பிரிக்கப்பட்ட திக்சக்கிரத்தையும், அவ்வவற்றிற்குரியவர்களையும் காட்டும் கட்டமும் ... 22
சப்தங்களுள் இன்னின்னவை சுபங்களென்றும், இன்னின்னவை அசுபங்களென்றும் பிரித்துக் கூறல் ... 23
இடது பக்கத்தில் சுபமாக வாகின்ற சகுனங்கள் ... ,,
வலது பக்கத்தில் சுபமாகின்ற சகுனங்கள் ... ,,
மறுபடியும் முற்கூறியபடியே இடது புரத்திலும், வலது புரத்திலும் சுபமாகின்ற சகுனங்களை யுபதேசித்தல்... 24
ஸ, ரி, க, ம, ப, த, நி இந்த ஸ்வரங்களுள் இன்னின்னவை சுபமாகும் என்பது ... 25
இன்னின்ன நிலையில் இன்னின்ன சகுனம் சுபாசுபமாகும் என்பதைப்பற்றி விரிவு படுத்தல் ... ,,
வலம் வருவதாலும், இடம் வருவதாலும், சுபமாகின்ற சகுனங்கள் ... 26
கிழக்கு முதலிய திக்குகளில் சுபமாகின்ற சகுனங்கள் ... ,,
திக்கை யனுஸரித்து அசுபமாகின்ற சகுனங்கள் ... 27
ஒருகாரியத்தை ஆரம்பித்தல், ஒருவருடன் சேருதல், யுத்தம், ஓரிடத்தில் பிரவேசித்தல், கெட்டுப்போன

பக்கம்.

வஸ்துவைத்தேடல் இவ்விஷயங்களி லுண்டாகின்ற சகுனத்தைப்பற்றிய விசேஷம் 27—28
ராஜதர்சன விஷயமாய் நேரும் சகுனத்தின் விசேஷம் ... 29
கிரியாதீப்த சகுனம் எப்பொழுது சுபாசுபமாகும் என்பது ,,
கட்டிவிடுகின்ற சகுனம், கார்ய ஸித்தியையும், கட்டுகின்ற சகுனம் காரிய நாசத்தையும் தெரிவிக்கும் என்பதும், இரண்டும் நேருமிடத்தில் வலுவுள்ளதைக் கிரஹித்துக் கொள்ளவேண்டும் என்பதும் ... 30
சகுனமானது ஓரிடத்தில் முதலில் பிரவேசித்து மறுபடியும் அங்கிருந்து கிளம்பி வேறிடம் செல்லுமானால் காரிய ஸித்தியைத் தெரிவிக்கும் என்பது ... ,,
சகுனம் முதலில் சுப சேஷ்டையைச் செய்து அதே சகுனம், பிறகு அசுபசேஷ்டையைச் செய்யுமானால் நேரும் பலன்கள் ... 31
அப்பிரதக்ஷிணமாக (இடது பக்கமாக) ச் செல்லுகின்ற தீப்த சகுனங்களின் பலன் ... ,,
திதி தீப்தாதி சகுனங்கள் இன்ன விஷயத்தில் கெடுதலாகும் என்பது ... ,,
இடியேற்பட்ட சமயம், காலை, மாலை என்ற இரு ஸந்தியா காலங்கள் இவற்றிலுண்டாகும் தீப்தசகுனங்களின் பலன் ... 32
சுடுகாட்டிலுள்ள நெருப்பின் ஸமீபம், தலை மயிர், மண்டையோடு, முள்ளுள்ள மரம், விறகு, சாம்பல், மடித்தமரம், கற்கள் இவற்றிலிருக்கின்ற தீப்த சகுனங்களின் பலன் ... ,,
மலம், ஆஹாரம் இவற்றைச் செய்கின்றதாயும் சப்தம் செய்துகொண்டு வேறிடத்திற்குச் செல்லுகிறதாயும், வேறிடமிருந்து சப்தத்துடன் ஸமீபம் வருவதாயுமுள்ள சகுனத்தின் பலன் ... 33
தீப்தசகுனம் ஒரேவிடத்திலிருந்து கொண்டு நாள் முழுவதும் கத்துமானால் கிராமாதிகளுக்கு இத்தனை காலங்களுள் கெடுதலுண்டாகும் என்பது ... ,,

பக்கம்.

தனது வகுப்பிற் சேர்ந்த பிராணியின் மாம்ஸத்தைச் சாப்பிடும் நிலையிலேற்பட்ட சகுனத்தின் பலன் ... 33

தனது வகுப்புக்குப்புறம்பான வகுப்பு ஸ்திரீயுடன் புணர்ச்சி செய்யும் நிலையிலேற்பட்ட சகுனபலன் ... 34

கால், துடை, தலை இவற்றின் ஸமீபமாயுண்டாகும் சகுன பலன் ... „

சகுன விசேஷத்தை யனுஸரித்து வரப்போகின்ற மனிதன் இன்னார் என்று அறிதல் ... 35

மூலை திக்குகளிலிருக்கின்ற சகுனம் அதற்கு இடதுபக்கமிருக்கும் சகுனத்தால் கூவி அழைக்கப்படுவதின் பயன் ... 36

மேற்கூறிய விஷயத்தில் மற்றுமுள்ள விசேஷம் ... „

மரத்தின் நுனி, மத்தியம், அடிபாகம், நீண்டபொருள், தாமரைப் புஷ்பம், ஒடிந்த நுனியுள்ள பொருள் இவற்றிலுண்டாகின்ற சகுன பலன் ... 37

திக்கையனுஸரித்து சகுன பலனுண்டாகும் காலம் ... „

திக்குகளுக்கு அதிபதிகளையும், ஆண், பெண் என்ற ஸம்க்ஞையையும் கூறல் ... 38

சகுன மூலம் வரப்போவதா யறியப்பட்ட பத்திரிகை இத்தகையதாக விருக்கும் என்று கூறல் ... 40

இன்னின்ன திக்கிலுண்டாகின்ற சகுன பலன் இன்னின்ன ஸ்தானத்திலுண்டாகும் என்றும், இன்னின்ன நிறமுள்ளதாக விருக்கும் என்றும் கூறல் ... „

கிழக்கு முதலிய திக்குகளிலுண்டாகின்ற சகுனங்கள் மூலம் கண்டறியவேண்டிய ஸ்திரீகள் இன்னின்னார் என்பதை யுபதேசித்தல் ... 42

பிரச்ன ஸமயத்தில் சகுனமிருக்கும் திக்கை யனுஸரித்து கேட்கப்படும் பொருள் இன்னதென்று நிர்த்தாரணஞ் செய்தல் ... 43

## அந்தர சக்கிராத்தியாயம் 2.

திக்சக்கிரத்தை 32 விதமாகப் பிரித்துக் கொள்ளல் ... 44

பக்கம்.

சாந்தையாகவான கிழக்கு திக்கு முதலுள்ள திக்பாகங்களி லுண்டாகும் சகுனபலன் 46—52

திக்சக்கிரத்தை 32 விதமாகப் பிரித்து 4 மூலை திக்குகள் 4 பிரதானதிக்குகள், இவற்றின் மத்யபாகம் ஆகிய 9 பாகங்களில் நேரும் பலன்களைக் கூற ஆரம்பித்தல்... 53

9 விதமாகப் பிரித்த திக்பாகங்களுள் மத்திய பாகத்தி லுண்டாகும் சகுனபலன் ... 54

இவ்விதமே தென்கிழக்கு முதலிய திக்குகளிலுண்டாகின்ற சகுனபலன் 55—63

## விருதாத்தியாயம் 3.

பகலில் சஞ்சரிக்கக் கூடிய பிராணிகளை யுபதேசித்தல் ... 64

இரவில் ஸஞ்சரிக்கின்றவை இன்னின்னவை என்பதையும், எந்தப் பிராணிகள் தமக்குரிய காலந்தவறி சஞ்சரிக்கின்றனவோ அவைகள் மூலம் நேரும் கெடுதல்களையு'முபதேசித்தல் ... 65

பகல் இரவு இரண்டிலும் சஞ்சரிக்கக் கூடிய பிராணிகள்... 65

வியவஹாரத்திற்காக பிராணிகளுக்கு பெயர்களை யுபதேசித்தல் 65—67

வஞ்ஜுளம், கொட்டைப்பருந்து, கிளி, கழுகு இவற்றின் இன்னின்ன சப்தம் சுபமென்றும் இன்னின்னது அசுபமென்றும் கூறல் ... ,,

மாடப்புறாவின் சேஷ்டை சப்தம் இவற்றின் பலனையும், அப்பலனுண்டாகும் ஸமயத்தையும் கூறல் ... 68

சியாமா என்ற பெண் புறாவின் சப்தத்தைப்பற்றிய விசேஷத்தைக் கூறல் ... ,,

கருங்குரிவியின் சப்தத்தைப்பற்றிய விசேஷம் ... 69

காாயிகா என்ற பக்ஷியின் சப்தத்தைப்பற்றிய விசேஷம்... ,,

திவ்யகம் என்ற பக்ஷியைப்பற்றிய விசேஷத்தைக் கூறல் ... 70

பாம்பின் சேஷ்டித பலன் ... ,,

வால் நீண்ட குருவியின் சேஷ்டை மூல முண்டாகும் பலன்கள் ... ,,

பக்கம்.
தித்திரம், முயல் இவற்றின் சப்தமூலமுண்டாகும் பலன் ... 71
குரங்கு, வான்கோழி இவற்றின் சப்தமும், அதன் பலன்களும் ... ,,
காடை என்ற பக்ஷியின் சேஷ்டை மூலமுண்டாகும் பலன்கள் 71—72
சிட்டுக்குருவி, பேண்டகம் இவற்றின் சப்தம் சேஷ்டை இவைமூலமுண்டாகின்ற பலன்கள் ... 73
ஸ்ரீகர்ணம் என்ற பக்ஷியினுடையசப்தத்தின் பலன் ... ,,
நாணத்தான் குருவியின் சப்தமும் அதன் பலனும் ... ,,
ஸாரிகையினுடைய சப்தமும், அதன் பலனும் ... 74
பேண்டகம் என்ற பக்ஷியின் சப்தமும், அதன் பலனும் ... ,,
கழுதையின் சப்தமும், அதன் பலனும் ... ,,
குரங்கம், பிருஷதம், ருரு என்ற மான்களின் சப்தமும், அதன் பலனும் ... 75
கோழியின் சப்தமும், அதன் பலனும் ... ,,
சிப்பிகை, பூனை, இவற்றின் சப்தம், பசுவின் தும்பல் இவற்றின் பலன்கள் ... ,,
ஊமைக்கோட்டானின் சப்தமும், அதன்பலனும் ... 76
ஸாரஸம் என்ற பக்ஷியின் சப்தமும், அதன் பலனும் ... ,,
பெண் ஊமைக்கோட்டானுடைய சப்தமும், அதன்பலனும் 77
பிங்களையினிடமிருந்து, காரியஸித்தியுண்டாகுமா? உண்டாகாதா என்பதை கேட்டறிதற்குரிய முறையை உபதேசித்தல் 77—78
பல்லிசப்திப்பதின் பலன் ... 79

## ச்வசக்கிராத்யாயம் 4.

நாய் இன்னின்னவிடங்களில் மூத்திரம் விட்டுச் செல்லுமானல் இன்னின்ன விதமான பலனுண்டாகும் என்பது ... 80—81
நாயின் சேஷ்டைகள் மூலம் அறியவேண்டிய சுபாசுபங்களை யுபதேசித்தல் ... ,,
ஸூரியோதய காலத்தில் ஸூர்யனைப் பார்த்து நாய் கிராமமத்தியில் குரைப்பதின் பலன் ... 83

பக்கம்.

நாயானது ஸூரியனுக்கு எதிராய் தென்கிழக்குதிக்கி விருந்துகொண்டு ஊளையிடுவதின் பலன் ... „
நாயானது அஸ்தமனகாலத்தில் ஸூரியனைப் பார்த்து ஊளையிடுவதின் பலன் ... „
நள்ளிரவில் வடக்குமுகமாகவும், விடியற்காலத்தில் வடகிழக்குமுகமாகவு மிருந்துநாய் ஊளையிடுவதின் பலன் 84
நாய் வைக்கோல்போர், மாடி முதலிய உன்னதஸ்தானங்களிலிருந்து ஊளையிடுவதின் பயன் ... „
மழை பொழியப்போவதைத் தெரிவிக்கின்ற நாயின் சேஷ்டைகள் ... „
ரோகமுண்டாகப் போவதையும், வீட்டின் யஜமானீ வியபிசாரி என்பதையும் தெரிவிக்கின்ற நாயின் சேஷ்டைகள் ... 85
நாயானது ஓரிடத்தைக் காலால் பிராண்டுவதின் பயன் ... „
நாய் கண்ணீர் வடிப்பதற்கும், பசுக்களுடன் விளையாடுவதற்கும் பலன் ... 86
நாயானது யாத்திரா காலத்தில் புருஷனுடைய அங்கங்களை முகருவதின் பயன் ... „
தீவிபத்தை யறிவிக்கின்ற நாயின் சேஷ்டைகள் ... 87
கிராமத்தில் பிரதான புருஷனுக்குக் கெடுதலைத் தெரிவிக்கின்ற நாயின் சேஷ்டைகள் ... „
நாய் குறைப்பதிலுள்ள மாறுபாட்டை யனுஸரித்த பலன்கள் 87—88
பல்லைக்காட்டி கடவாய்களை நாக்கினால் நக்குவதின் பயன் ... „
நாய்கள் கிராமத்திலோ, நகரத்திலோ ஒன்றுகூடி குறைப்பதின் பயன் ... 89
நாயானது இன்னின்னவிடத்தில் குறைக்குமானால் இன்னவிதமான பலனுண்டாகும் என்பது ... „

## சிவாருதாத்தியாயம் 5.

பெண்நரியின் தீப்தஸ்வரம், பூர்ணஸ்வரம் இவற்றைக் கூறல் ... 90

***

பக்கம்.
லோமாசிகையின் சப்தத்தைப்பற்றிய விசேஷம் கூறல் ... 90
திக்கை யனுஸரித்து நரியானது சுபமாவதையும் அசுபமாவதையும் கூறல் ... 91
திக்பதிகளைக் கூறல் ... ,,
கெடுதலை விளைவிக்கின்ற பெண்நரியின் சேஷ்டைகள் .... ,,
பெண் நரியின் சப்தத்தை யனுஸரித்து கண்டு கொள்ள வேண்டிய பலன் ... 92
தீயைக்கக்குகின்ற நரியைப்பற்றிய மதபேதம் ... ,,
தூக்குப்போட்டுக் கொள்ளுதல், ஜலத்தில் விழுதல் இவற்றாலுண்டாகின்ற மரணத்தை அறிவிக்கின்ற நரியின் சேஷ்டைகள் ... 93
பெண் நரியின் சப்த விசேஷத்தை அனுஸரித்துண்டாகின்ற பல விசேஷங்கள் ... ,,
கெடுதலை ஸூசிப்பிக்கின்ற பெண் நரியின் லக்ஷணம் ... 94
சுபமான பெண் நரியின் லக்ஷணம் ... ,,
பெண் நரியின் இன்னின்ன விதமான சப்தம் இன்னின்ன விதமான பலனைக் கொடுக்கும் என்பது ... 95

## மிருகசேஷ்டிதாத்தியாயம் 6.

காட்டு மிருகங்கள் கிராமத்தின் எல்லையை அடைந்து கத்துவதன் மூலம் கண்டறியவேண்டிய பலன்கள் ... 96
காட்டு மிருகங்கள் கிராமத்தை யடைந்து செய்கின்ற சேஷ்டைகள் மூலமறிய வேண்டிய பலன்கள் ... 97

## கவேங்கிதாத்தியாயம் 7.

கெடுதலை விளைவிக்கிற பசு சேஷ்டைகளை யுபதேசித்தல் ... 97
பசுவானது இரவில் காரணமின்றி கத்துவதற்கும் ஈக்களாலும், நாய்களாலும் சூழப்படுவதற்கும் பலன் ... 98
சுபஸூசகமான பசுவின் சேஷ்டைகள் ... ,,

## அச்வேங்கிதாத்தியாயம் 8.

குதிரையின் அங்கங்களில் சூடுகாணப்படுவதன் மூலம் கண்டறியவேண்டிய பலன்கள் 99–100

பக்கம்.
குதிரையின் சேஷ்டைகள் மூலமறிய வேண்டிய சுபாசுப பலன்கள் ... 101
குதிரை கனைப்பதன் மூலமறிய வேண்டிய சுபாசுபங்கள்... ,,
நன்மையை விளைவிக்கின்ற குதிரைகள் ... 102
குதிரையின் அசுபமான சேஷ்டைகள் 102–103
குதிரையின் சுபமான சேஷ்டைகள் ... 103
மறுபடியும் குதிரையின் அசுபசேஷ்டைகளை யுபதேசித்தல் 104

## ஹஸ்திசேஷ்டிதாத்தியாயம் 9.

யானைக்கு தந்தத்தை அறுத்து ஏற்படுத்தவேண்டிய முறை 105
தந்தத்தை அறுக்கும் கால் அமையும் உருப்புக்களும் அவற்றின் பலன்களும் 105–106
அறுத்த தந்தஸ்தானம் எவ்விதமிருந்தால் சுபமாகும் என்பது ... 107
யானையின் தந்தம் முறிவு படுதல் மூலமறியவேண்டிய சுபாசுப பலன்கள் ... 108
கெடுதலை விளைவிக்கின்ற யானையின் சேஷ்டைகளை யுபதேசித்தல் ... 110
நன்மையை விளைவிக்கின்ற யானையின் சேஷ்டைகள் ... 111

## வாயஸவிருதாத்தியாயம் 10.

காக்கை, கராயிகை இவைகள் எங்கெந்த பாகத்தில் எங்கெந்த தேசத்தோருக்குச் சுபமாகும் என்றுகூறல் ... 112
காக்கை கூடுகட்டும் ஸ்தானம், காலம் இவற்றின் மூலமறியவேண்டிய பலன்கள் ... ,,
காக்கையானது இன்னின்ன திக்கிலுள்ள கிளையில் கூடு கட்டுமானால் இன்னின்னவிதமான பலனுண்டாகும் என்பது ... 113
காக்கை குஞ்சுபரிப்பதன் மூலமறியவேண்டிய பலன்கள்... 114
காக்கையின் குஞ்சின் நிலையைக் கொண்டு அறியவேண்டிய பலன்கள் ... ,,

பக்கம்.

காக்கைகள் கூட்டம் கூட்டமாய் கிராமமத்தியில் சஞ்சரிப்பதின் பலன் ... 115
காக்கை ஜனங்களை இரக்கையால் அடிப்பதற்கும் இரவில் ஸஞ்சரிப்பதற்கும் பலன் ... „
காக்கைகள் வட்டமிடுவதின் பயன் ... „
அசுபமான காக்கையின் சேஷ்டைகள் ... 116
நாசம், புத்திரஜன்ம, புத்திரீஜன்ம இவற்றைத்தெரிவிக்கின்ற காக்கையின் சேஷ்டைகள் ... „
பொருள் லாபத்தையும், பயத்தையும் தெரிவிக்கின்ற காக்கையின் சேஷ்டைகள் ... 117
மரணம், அன்னலாபம் இவற்றைத் தெரிவிக்கின்ற காக்கையின் சேஷ்டைகள் ... „
யாத்திரா காலத்தில் எந்தத் திரவியத்தைக் காக்கை எடுத்து வருமோ அந்தத் திரவியலாப முண்டாகுமென்பது ... „
மழை பொழியப் போவதைத் தெரிவிக்கின்ற காக்கையின் சேஷ்டைகள் ... 118
அக்கினி பயத்தைத் தெரிவிக்கின்ற காக்கையின் சேஷ்டைகள் ... „
வீட்டிலுட்கார்ந்து கிழக்கு முதலிய திக்குகளைப் பார்த்துக் கொண்டு காக்கை கத்துவதின் பயன் ... 119
சாந்தையாகவான கிழக்கு முதலிய திக்குகளைப் பார்த்துக் கொண்டு காக்கை கத்துவதின் பயன் 110–121
காக்கை காதளவு உயரத்தில் பறப்பதற்கும், கத்திக் கொண்டு எதிரே வருவதற்கும் பலன் ... 121
யாத்திராகாலத்தில் வலது புரத்தில் கத்திவிட்டுப் பிறகு இடது புரத்தில் கத்துவதன் பலன் ... „
காக்கை இடது புரத்தில் கத்திக்கொண்டு பின்தொடர்வதின் பயன் ... 122
காக்கை இடது புரத்தில் கத்திக்கொண்டு எதிரே வருவதின் பயன் ... „

பக்கம்.

காக்கைமுதலில் வலதுபுறத்தில் கத்திவிட்டுப் பிறகு இடதுபுறத்தில் கத்துவதற்கும், எதிரே கத்திக் கொண்டு செல்லுவதற்கும் பயன் ... 122

ரக்தப்பெருக்கை யறிவிக்கும் காக்கையின் சேஷ்டைகள் ... 123

பெரிய மனுஷ்யனுக்கு மரணத்தைத் தெரிவிக்கும் காக்கையின் சேஷ்டைகள் ... „

பயிருடன் கூடிய பூலாபத்தையும், துக்கத்தையும் யாத்திரை செய்பவனுக்கு அறிவிக்கின்ற காகையின் சேஷ்டைகள் ... „

காக்கை இன்னின்னவிடத்தில் வஸித்துக்கொண்டு கத்துமானல் காரியஸித்தியுண்டாகும் என்பது ... 124

பணவரவை யறிவிக்கின்ற ஸ்தானங்கள் ... „

பாம்பு, ஜ்வரம் இவைமூலமுண்டாகும் பயத்தையறிவிக்கின்ற காக்கை கத்திக்கொண்டு வஸிக்கின்ற ஸ்தானங்கள் ... „

காக்கை வைக்கோல் போர், ஜலம், தீப்பற்றிய விடம், இடிவிழுந்த விடம் இவற்றில் வஸித்துக்கொண்டு கத்துவதின் பயன் ... „

பால் முள்ளு, இவையுள்ள மரத்திலும், முள்ளுமாத்திரமுள்ள மரத்திலும், கொடிபடர்ந்த விடத்திலும் காக்கை வஸித்துக்கொண்டு கத்துவதின் பயன் ... 125

நுனி பாகத்தில் வெட்டப்பட்ட மரம், பட்டுப்போன மரம், சாணக்குவியல் இவற்றிலிருந்து கொண்டு காக்கை கத்துவதின் பலன் ... „

சவத்தின் மீதிருந்தும், எலும்பை மூக்கினல் பிளந்துகொண்டும் காக்கைகத்துவதின் பயன் ... „

காக்கையானது கயிறு, எலும்பு, சுள்ளி முள்ளு, வலுவற்ற சாமான், மயிர் இவற்றைக் கவ்விக்கொண்டு கத்துவதின் பயன் ... 126

வெண்ணிறமான புஷ்பம், மலம், மாம்ஸம் இவற்றைக் கவ்விக்கொண்டு கத்துவதின் பயன் ... „

சங்கிலி, தோலால்பின்னிய கயிறு, கொடி இவற்றைக் கவ்விக்கொண்டு கத்துவதின் பயன் ... 127

பக்கம்.

காக்கைகள் ஒன்றுக்கொன்று ஆஹாரத்தை மூக்கினல் மாற்றிக்கொள்ளுவதின் பயன் ... ,,
காக்கைகள் ஆணும் பெண்ணுமாய் கத்துவதின் பயன் ... ,,
ஒருஸ்திரீயின் தலையிலிருக்கிற குடத்தில் காக்கை வஸிப்பதற்கும், அதைமூக்கினல் குட்டுவதற்கும், அதில் விஷ்டிப்பதற்கும் பயன் .. ,,
காக்கை கழுகுகளுடன் கூட ஸைன்யத்தில் பிரவேசித்து கழுகுடன் சண்டைபோடுவதற்கும், சண்டைபோடாம லிருப்பதற்கும் பயன் ... 128
சேற்றினல் பூசப்பட்ட பன்றியின்மேலும், பூசப்படாத பன்றியின்மேலும், ஒட்டகை, கழுதை இவற்றின் மேலும் வஸித்துக் கொண்டு காக்கை கத்துவதின் பயன் ... 128
காக்கை குதிரையின் மிதுட்கார்ந்து கத்துவதற்கும், பின்தொடர்ந்து வந்து கத்துவதற்கும் பலன் ... ,,
32 விதமாகப் பிரிக்கப்பட்ட திக்சக்கிரத்தையனுஸரித்து காக்கையின் சேஷ்டைகள் மூலம் பல விசேஷத்தைக் காணவேண்டும் என்பது ... 129
காக்கையால் செய்யப்படுகின்ற பலவிதமான சப்தங்களும், அவற்றின் பலன்களும் 130–132
ஸ்தலம், ஜலம் இவற்றில் ஸஞ்சரிக்கின்ற பிராணிகள் மாறி சஞ்சரிப்பதின் பலன் ... 132
எறும்புகளின் சேஷ்டைமூல மறியவேண்டிய பலன்கள் ... 133
உண்டாகின்ற பலசகுனங்களுள் எந்த சகுனத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது ... ,,
சகுனத்தை கவனிப்பதன் பலன் ... 134
கெட்ட சகுனமுண்டானல் அதற்குப் பரிஹாரமாய்ச் செய்ய வேண்டியவை ... ,,

## சாகுனோத்தராத்தியாயம் 11.

சகுனபலனைச் சொல்லும்பொழுது கவனிக்கவேண்டியவைகள் ... 135

பக்கம்.

இன்னின்னகாரியங்களில் சகுனத்தைக் கவனிக்க வேண்டும் என்பது ... 136
மழையைத் தெரிவிக்கின்ற சகுனங்கள் ... 137
அக்கினிபயத்தைத் தெரிவிக்கின்றசகுனங்கள் ... 138
கலஹத்தைத் தெரிவிக்கின்ற சகுனங்கள் ... ,,
ஸ்திரீயுடன் சேர்க்கையைத் தெரிவிக்கின்ற சகுனங்கள் ... 139
ஒருவனுடன் சேர்க்கையேற்படப் போவதைத் தெரிவிக்கின்ற சகுனம் ... 140
ஆரம்பிக்கப்படும் காரியம் சுபமாகுமா? அசுபமாகுமா? என்பதை அறிவதற்கு வேறுவழி ... 140
சகுனமூலம் ஒருமனிதனின் வரவை யறிந்து வந்தமனிதனின் ஸ்வரூப மித்தகையதாக விருக்கும் என்று அறிதற்குபாயம் ... ,,

## அக்ஷரகோசாத்தியாயம் (வேறு)

பிரச்னம் செய்த பொருளின் பெயரை அறியவேண்டிய முறை ... 142
இன்னின்ன அக்ஷரங்களுக்கு இன்னின்ன கிரஹங்கள் அதிபதிகள் என்பது ... 144
பெயரிலமைந்துள்ள அக்ஷரங்களின் எண்ணை ராசி, திரேஷ்காணம் இவைமூலம் அறிதற்குபாயம் ... 145
நவாம்சமூலம் பெயரிலுள்ள எழுத்துக்களை அறிதற்குபாயம் ... 147
மேற்கூறிய விஷயமாய் மற்றும் சிலவிசேஷங்களை யுபதேசித்தல் ... 150
பெயரிலுள்ள ஸம்யுக்தாக்ஷரங்களை யறிதற்குபாயம் ... 151
மாத்திரை, விஸர்க்கம் இவற்றை யறிதற்குபாயம் ... 154
மாத்திராஸ்தானத்தை அறிதற்குபாயம் ... 155
1, 4, 7, 10 மிடங்களிலுள்ள நவாம்சங்களைக் கொண்டு பெயரில் அக்ஷரத்தைச்சேர்க்கவேண்டும் என்பது ... 156
சுபக்கிரஹங்கள் மூலம் நாமாக்ஷரத்திலேற்படுகின்ற விசேஷங்கள் ... 157

பக்கம்.

மேஷாதிராசியில் இன்னின்ன அம்சமுதயமாகுமானுல் இன்னின்ன அக்ஷரத்தைக் கிரஹித்துக் கொள்ள வேண்டும் என்று விரிவாய் கூறல் 159–172

மேஷாதிகளில் அம்சக்கிரமமாய் ஏற்படுகின்ற அக்ஷரங்களை விளக்கிக்காட்டும் கட்டம் ... 174

நாமாக்ஷரத்தைக் காணுவதற்கு வேறுஉபாயம் ... 175

அக்ஷரகோசாத்தியாயத்திற் கூறிய முறைகளைக்கொண்டு இன்னின்னவிடத்தில் பெயரைக் காணலாம் என்பது.. 178

---

நாமாவில் அடங்கிய அக்ஷரங்களின் எண்ணை அறிதற்குபாயம் ... 180

அக்ஷரங்களுக்கு அதிபதி கிரஹங்கள் ... „

நாமாவை ஊஹிக்கவேண்டிய முறை ... 182

வந்தமனிதனின் வயதை அறிதற் குபாயம் ... 183

விஷய அட்டவணை முற்றிற்று.

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
13 MAR 1970
GOVT. OF M.D.

श्रीमते वासुदेवाय नमः ॥



# । शकुनफलनिर्णयः ।

## சகுனபல நிர்ணயம்.

அவதாரிகை—முக்கியமான ஓர் காரியத்தை உத்தேசித்து ஓரிடம்விட்டு வேறிடம் செல்லும்பொழுது செல்லுகின்றவனுக்கு எதிர்காலத்தில் நேரக்கூடிய சுபாசுப பலன்களைக் குறிக்கக்கூடிய குறியானது சகுனம் எனப்படும்.

अन्य जन्मान्तर कृतं कर्म पुंसां शुभाऽशुभम् ।
यत्तस्य शकुनः पाकं निवेदयति गच्छताम् ॥

"வேறு ஜன்மங்களிற் செய்யப்பட்ட புண்ணிய பாப ரூபமான கர்மங்கள் யாதுண்டோ, அக்கர்மங்கள் மூலம் நேரும் சுக, துக்க பலன்களை வழிநடக்கும் மனிதர்கட்கு முன்னமே சகுனமானது தெரிவிக்கின்றது" என ஆசிரியரே இதே அத்தியாயம் 5-வது சுலோகத்திற் சொல்லப்போவதை யொட்டியும் மேற் கூறியது தெளிவாகின்றது. இதிலிருந்து ஒருவன் வெளிக்கிளம்பும் பொழுது தனக்கு எதிரில் கெட்ட சகுனமாக ஒருவஸ்து வருவதைக்கண்டு, அவ்விதம் எதிரில் வரும் வஸ்துவைப் பலவாருய் இகழ்ந்து பேசுவதும் அதற்கு வேண்டி கொஞ்சம் வீட்டில்

தங்கித் திரும்பவும் அதே காரியத்தைச் செய்யவேண்டி வெளியிற் செல்லுவதும் முறை தவறான காரிய மென்றேற்படுகின்றது. ஆகவே கெட்ட சகுனமாக எந்த வஸ்துவை எண்ணுகின்றோமோ, அந்த வஸ்து நமக்கு நமது பாபகர்ம மூலம் பின்னர் நேரும் அசுபத்தை முன்னரே தெரிவிப்பது பற்றி அவ்வஸ்துவை பரமோபகாரியாகவே நாம் கொள்ளல் வேண்டும் என்றும் ஏற்படுகின்றது. ஆகவே எந்தச் சகுனம் பின்னர் நேரும் சுபாசுபரூபமான பலனை எவ்விதம் தெரிவிக்கின்றது என்பதை ஆசிரியர் இந்த சாகுனத்யாயத்தில் தெளிவா யுபதேசித் திருப்பதுடன், எந்தச்சகுனமூலம் நேரும்பலன் எவ்வளவு காலத்தில் அனுபவத்திற்காணும், என்பதையும், மற்றும் இவ்விஷயமான பலவிசேஷங்களையும் தெளிவா யுபதேசித்திருப்பதால் அந்த சாகுனத்யாயத்தை யாவற்கும் பயன்படும் முறையில் தமிழில் மொழிபெயர்த்து "சகுனபல நிர்ணயம்" என்ற தலையங்கமிட்டு வெளியிட்டிருக்கிறோம்.

(அ–கை) சாகுனத்யாயத்தின் பிரயோஜன முபதேசிக்கப் படுகின்றது.

मू०॥ यच्छक्र शुक्र वागीश कपिष्ठल गरुत्मताम् ।
मतेभ्यः प्राह ऋषभो भागुरे र्देवलस्य च ॥ १ ॥
भारद्वाज मतं दृष्ट्वा यच्च श्रीद्रव्यवर्द्धनः ।
आवन्तिकः प्राह नृपो महाराजाधिराजकः ॥ २ ॥
सप्तर्षीणां मतं यच्च संस्कृतं प्राकृतं च यत् ।
यानि चोक्तानि गर्गाद्यैर्यात्राकारैश्च भूरिभिः ॥ ३ ॥
तानि दृष्ट्वा चकारेमं सर्वं शाकुन संग्रहम् ।
वराहमिहिरः प्रीत्या शिष्याणां ज्ञानमुत्तमम् ॥ ४ ॥

(கருத்துரை) இந்திரன், சுக்கிராசாரியர், பிருஹஸ்பதி, கபிஷ்டலர் என்ற மஹருஷி, கருடன் ஆகிய மஹான்களுடையவும், பாகுரி என்ற மஹருஷியினுடையவும், தேவலர், என்ற மஹருஷியினுடையவும், மதங்களை அனுஸரித்த எந்த சாகுன

சாஸ்திரத்தை ரிஷபர் என்ற ஆசிரியர் செய்தாரோ, மஹாராஜாதி ராஜவம்சத்தில் பிறந்தவரும், உஜ்ஜயினீ தேசத்திற்கரசனுமான ஸ்ரீதிரவ்யவர்த்தனன் என்ற அரசன் பாரத்வாஜர் என்ற மஹருஷியின் மதத்தை யனுஸரித்த எந்த சாகுன சாஸ்திரத்தைச் செய்தாரோ, கர்க்காசாரியர் முதலிய யாத்ராத்யாயஞ் செய்த வெகு பெரியோர்களால் ஸப்தர்ஷிகளின் மதத்தை யொட்டியும், ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ளதும், பிராகிருத பாஷையிலுள்ளது மான யாதொரு நூற்களை யொட்டியும், எந்த சாகுன சாஸ்திரங்கள் செய்யப்பட்டனவோ, அவை யாவையும் நன்கு படித்தறிந்து வராஹமிஹிரர் என்றவர் சிஷ்யாளிடத்துள்ள ப்ரீதியை முன்னிட்டு எல்லா சாகுன சாஸ்திரங்களுடையவும் சுருக்கமானதும், சகுன விஷயமான சிறந்த அறிவைத் தரக்கூடியதுமான இந்தக் கிரந்தத்தைச் செய்கிறார். (எ—று)

(அ—கை) இதனால் சாகுன சாஸ்திரத்தின் பிரயோஜனம் சொல்லப்படுகிறது—

**मू० ॥ अन्य जन्मान्तर कृतं कर्म पुंसां शुभाऽशुभम् ।**
**यत्तस्य शकुनः पाकं निवेदयति गच्छताम् ॥ ५ ॥**

(க—ரை) வேறு ஜன்மங்களிற் செய்யப்பட்ட புண்ய பாப ரூபமான கர்மம் யாதுண்டோ அதன் பலனை வெளியிற் செல்லுகின்ற புருஷர் (ஜீவர்) கள் விஷயத்தில் சகுனமானது சூசிப்பிக்கின்றது.

(குறிப்பு) இவ்விதம் கூறியதிலிருந்து சகுனத்தினால் பின்னர் வரப்போகும் சுபாசுபபலன் சூசிப்பிக்கப்படுமே யொழிய சகுனத்திற்கு சுபாசுபபலனை உண்டு பண்ணும் திறமை யில்லை என்பது பெறப்பட்டது. (எ—று)

(அ-கை) இதனால் சகுன பேதங்களுபதேசிக்கப்படுகின்றன.

**मू० ॥ ग्रामाऽरण्यांऽबु भू व्योम द्यु निशोभय चारिणः ।**
**रुत यातेक्षितोक्तेषु ग्राह्याः पुं स्त्री नपुंसकाः ॥ ६ ॥**

(க—ரை) சில சகுனங்கள், கிராமத்திலுண்டான வைகளாகவும், சில காட்டிலுண்டான வைகளாகவும், மற்றும் சில ஜலத்தி

லுண்டான வைகளாகவும், சிலவை பூமியிற் சஞ்சரிக்கின்றனவா யும், சிலவை ஆகாசத்திற் சஞ்சரிக்கின்றனவாயும் ஆகும். அவற் றுள் மனிதன், குதிரை, யானை, நாய் முதலியன கிராமத்திலுண் டான வைகளெனப்படும். சிங்கம், வேங்கைப்புலி, காட்டுப்பன் றி, சிறுத்தைப்புலி, மான் முதலியன காட்டிலுண்டானவைகளா கும். ஹம்ஸம் முதலியன ஜலத்திலுண்டான வைகளாகும். நாட்டுப்பன்றி, கீரி, பாம்பு முதலியன பூமியிற் சஞ்சரிக்கின்ற வைகளாகும். ஆகாசத்திலேயே எப்பொழுதும் சஞ்சரிக்கின்றவை களாயும், ஒருபொழுதும் பூமியில் வஸிக்காதவைகளாயும் எவைக ளுண்டோ அவை ஆகாசத்திற் சஞ்சரிக்கின்ற வைகளாகும்.* பகலில் மட்டும் சஞ்சாரஞ் செய்பவைகளாயும், இரவில் மட்டும் சஞ்சரிக்கின்ற வைகளாயும், பகல் இரவு இரண்டிலும் சஞ்சரிக் கின்ற வைகளாயும், சில சகுனங்கள் ஆகின்றன. ஆகவே இம் மாதிரியான சகுனங்களில் அவற்றின் சப்தம், நடை, அவற்றின் லக்ஷணம் இவற்றைக் கண்டறிதல், இது ஸ்திரீயா? புருஷனா? நபும்ஸகனா? எனக்கண்டறிதல், அந்தச் சகுனங்களின் வார்த்தை யை யறிதல் முதலியவற்றை நாமறிந்து கொள்ளவேண்டும். அவற்றுள் வார்த்தை அறிதலை விளக்குவாம். அதாவது—வெகு தூரத்தில் ஒரு சப்தம் உண்டானபோது, இது ஸ்திரீயின் பேச் சா? புருஷனுடைய பேச்சா? நபும்ஸகனுடைய பேச்சா? எனக் கண்டறிதல் என்பதாம். அதை விளக்குவாம்—அச்சமயம் வெகு சமீபத்திலுள்ள புருஷனுடைய ஸம்பாஷணம் கேட்கப் படுமா யின் அப்பொழுது அந்தச் சகுனம் புருஷன் என்றும், இவ்வித மே வெகு சமீபத்திலுள்ள ஸ்திரீயின் ஸம்பாஷணம் கேட்கப் படுமாயின் அந்த சகுனம் ஸ்திரீ என்றும், வெகு சமீபத்தில் நபும்ஸகனுடைய ஸம்பாஷணம் கேட்கப்படுமாயின் அந்த சகு னம் நபும்ஸகன் என்றும் அறிந்து கொள்ளவேண்டும் என்பதாம்.

(அ—கை) முற்கூறியதைப்பற்றியே திரும்பவும் சொல்லுகி றார்—

---

* இவ்விஷயமாய் இதே கிரந்தம் 87-வது அத்தியாயம் 1-வது சுலோகத்தில் விரிவாய் சொல்லப் பட்டிருக்கிறது.

मू० ॥ पृथग् जात्यनवस्थाना देषां व्यक्तिर्न लक्ष्यते ।
सामान्य लक्षणोद्देशो श्लोकावृषिकृताविमौ ॥ ७ ॥

(க—ரை) பொதுவாய் உலகில் மனுஷ்யத்வம் என்ற ஜாதியை முன்னிட்டு மனித வியக்தியையும், பசுத்வம் என்ற ஜாதியை முன்னிட்டு பசு வியக்தியையும், புருஷத்வம் என்ற ஜாதியை முன்னிட்டு புருஷ விசக்தியையும், ஸ்திரீத்வம் என்ற ஜாதியை முன்னிட்டு ஸ்திரீ வியக்தியையும் நிர்ணயமாய்க் கண்டறிவது வழக்கமாக இருக்கிறது. இந்தச் சகுனங்களுக்கோ அவ்விதம் வியக்தியை இன்னமாதிரியுள்ளதென நிர்ணயிக்கக் கூடியபடி தனியான ஜாதி கிடையா. ஆகவே சகுன வியக்தியானது இன்னதென நிர்ணயிக்கக் கூடியதாயில்லை. ஆயினும் அவற்றிற்குப் பொதுவாய் லக்ஷணம் கூறுமிடத்து விருத்தகர்க்க மஹருஷியானவர் இனிவரும் இரண்டு சுலோகங்களால் அவற்றை ஒருவாறு விளக்கி இருப்பதால் நாமும் அந்த சுலோகங்களையேஇங்கு எழுதுகிறோம்.

(அ—கை) விருத்த கர்க்க மஹருஷியால் சகுன வியக்தியின் பொது லக்ஷணமாகக் கூறப்பட்ட இரண்டு சுலோகங்கள் எழுதப் படுகின்றன—

मू० ॥ पीनोन्नत विकृष्टांऽसाः पृथुग्रीवाः सुवक्षसः ।
स्वल्प गंभीर विरुताः पुमांसः स्थिरविक्रमाः ॥ ८ ॥
तनूरस्क शिरोग्रीवाः सूक्ष्माऽस्य पदविक्रमाः ।
प्रसक्त मृदु भाषिण्यः स्त्रियोऽतोऽन्यन्नपुंसकम् ॥ ९ ॥

(க—ரை) பெருத்தும், உயர்ந்தும், விரிந்தும் இருக்கின்ற தோள்களையுடையவைகளும், விரிந்த கழுத்துள்ளவைகளும், அழகிய மார்பை யுடையவைகளும், சுவல்பம் கம்பீரமான சப்த முள்ளவைகளும், நிலைத்த பௌருஷ முள்ளவைகளுமாக இருக்கின்றவைகள் புருஷவியக்தி எனப்படும்.

இதுபோலவே சிறிய மார்பு, தலை, கழுத்து,இவையுள்ளவைகளும், சூக்ஷ்ம (நுட்ப) மானமுகம், கால், நடை, இவையுள்ளவைகளும், ஒன்றுடன் ஒன்று சேர்ந்ததும், மெதுவானதுமான சப்த முள்ளதுமான வைகளுமாக இருக்கின்றவைகள் ஸ்திரீவிய

க்தி எனப்படும். புருஷனுக்குச் சொல்லிய லக்ஷணமும், ஸ்திரீயுக்குச் சொல்லிய லக்ஷணமும் கலந்துள்ளது எதுவோ அது நபும்ஸகவியக்தி எனப்படும்.

(அ—கை) இங்கு எந்த வியக்தியின் லக்ஷணம் இன்னதெனக் குறிப்பாய் சொல்லப் படவில்லையோ அதன் லக்ஷத்தை லோகம் என்ற வேறு சாஸ்திரத்தைக் கொண்டு அறிந்து கொள்ளவேண்டும் என்பதை இதனாலுபதேசிக்கிறார்—

**मू० ॥ ग्रामाऽरण्य प्रचाराद्यं लोकादे वोपलक्षयेत् ।**
**सञ्चिक्षिप्सुरहं वच्मि यात्रामात्र प्रयोजनम् ॥ १० ॥**

(க—ரை) அந்தச் சகுனங்களுடைய கிராம சஞ்சாரம், அரண்ய சஞ்சாரம், பகலில் சஞ்சாரம், இரவில் சஞ்சாரம், பகலிரவு இரண்டிலும் சஞ்சாரம், முதலியவற்றை லோகம் என்ற வேறு சாஸ்திர மூலம் கண்டு கொள்ளவேண்டும். நான்சுருக்கிச் சொல்ல வேண்டுமென்றே எண்ணங்கொண்டவனாய் எவ்வளவு பாகம் யாத்திரை யினுபயோகப்படுமோ அவ்வளவு பாகத்தை மட்டுமே சொல்லுகிறேன். (எ—று)

(அ—கை) எதை முன்னிட்டு சகுனத்தைப் பற்றிய சுபாசுப விசாரம் செய்ய வேண்டு மென்பதை இதனாலுபதேசிக்கிறார்.

**मू० ॥ पथ्यात्मानं नृपं सैन्ये पुरे चोद्दिश्य देवताम् ।**
**सार्थे प्रधानं साम्ये स्याज्जाति विद्या वयोधिकान् ॥ ११ ॥**

(க—ரை) வழியில், நடக்கும் புருஷனுடைய சரீரத்தை முன்னிட்டும், சேனையில், ராஜனை முன்னிட்டும், நகரத்தில், தேவதையை முன்னிட்டும், கிராமமானல் கிராமாதிபதியை முன்னிட்டும், ஒருவகையான கூட்டத்தில், தலைமை வகிக்கும் புருஷனை முன்னிட்டும், ஒருகூட்டத்தில் பிரதானர்களாக அனேகர் இருக்கும் பொழுது ஜாதி, வித்யை, வயது இவற்றால் எவன் அதிகமானவனோ அவனை முன்னிட்டும் சகுனத்தின் சுபாசுபத் தன்மையைக் கண்டறிய வேண்டும். (எ—று)

குறிப்பு—பிரதானமாயுள்ளவர் எல்லாரும் ஒரே ஜாதியினராயிருந்தால் அவர்களுள் அதிகம் வித்யையுள்ளவனைக்கொண்டும், எல்லாரும் ஜாதி, வித்யை இரண்டிலும் ஸமமாக இருந்தால்

அவர்களுள் அதிகம் வயதுள்ளவன் எவனே அவனைக்கொண்டும் சகுனநிர்ணயம் செய்யவேண்டுமென்று பட்டோத்பலர் கூறியிருக்கிறார். (எ—று)

(அ—கை) திக், லக்ஷணம், அதன் மூலமுண்டாகும் பலன் இவ்விஷயத்தில் சிலநியமங்களை யுபதேசிக்கிறார்—

**மூ॥ मुक्तप्राप्तैष्यदर्कासु फलं दिक्षु तथाविधम् ।**
**अङ्गारदीप्तधूमिन्यस्ताश्च शान्तास्ततोऽपराः ॥ १२ ॥**

(க—ரை) சூரியனுக்குத் தனது சஞ்சாரத்தை யொட்டி 8 திக்குகளிலும் ஸ்திதி யேற்படுகின்றது. அது எவ்விதமெனின்? கூறுவாம். சூரியோதயம் முதற்கொண்டு தினத்தின் முதலாவது (1) யாமம் முடிய ஐசானீ திக்கானது (வடகிழக்கு திக்கானது) முக்த சூரியா (சூரியனை விட்ட திக்கு) எனப்படும். நேர் கிழக்கு திக்கானது ப்ராப்தசூரியா (சூரியனை யடைந்த திக்கு) எனப்படும். தென்கிழக்கு திக்கானது ஏஷ்யத் சூரியா (இனிவரப் போகும் சூரியஸம்பந்தமுள்ள திக்கு) எனப்படும். இவ்விதமே இரண்டாவது யாமம்முடிய கிழக்கு திக்கானது முக்தசூரியாஎன்றும், தென்கிழக்கு திக்கானது ப்ராப்தசூரியா என்றும், நேர்தெற்கு திக்கானது ஏஷ்யத்சூரியா என்றும் சொல்லப்படும்.

அது முதல் 3 வதுயாமம் முடிய தென்கிழக்கு திக்கானது முக்தசூரியா என்றும், நேர்தெற்கு திக்கானது ப்ராப்தசூரியா என்றும், தென்மேற்கு திக்கானது ஏஷ்யத் சூரியா என்றும் சொல்லப்படும். அது முதல் 4 வதுயாமம் முடிய அதாவது: அஸ்தமன காலம்வரை நேர் தெற்கு திக்கானது முக்தசூரியா என்றும், தென்மேற்கு திக்கானது ப்ராப்தசூரியா என்றும், மேற்குதிக்கானது ஏஷ்யத் சூரியா என்றும் சொல்லப்படும். சூரியாஸ்தமயத்திற்குப் பின்னர் முதலாவது யாமம் முடிய தென்மேற்கு திக்கானது முக்தசூரியா என்றும், நேர் மேற்கு ப்ராப்த சூரியா என்றும், வடமேற்கு திக்கானது ஏஷ்யத் சூரியா என்றும் சொல்லப்படும். பிறகு இரண்டாவது யாமம் முடிய நேர் மேற்கு திக்கானது

(1) 7½ நாழிகை கொண்ட காலம் யாமம் எனப்படும் பகலுக்கு 4—யாமமும். இரவுக்கு 4-யாமமுமாக ஒருதினத்திற்கு 8-யாமங்களாகும்.

முக்த சூரியா என்றும் வடமேற்கு திக்கானது ப்ராப்த சூரியா என்றும் நேர் வடக்கு திக்கானது ஏஷ்யத் சூரியா என்றும் சொல்லப்படும், அதற்குப் பிறகு மூன்றாவது யாமம் முடிய வடமேற்கு திக்கானது முக்த சூரியா என்றும், நேர்வடக்கு திக்கானது ப்ராப்த சூரியா என்றும் வடகிழக்கு திக்கானது ஏஷ்யத் சூரியா என்றும் சொல்லப்படும். அதற்குப் பிறகு நான்காவது யாமம் முடிய அதாவது: சூரியோதயகாலம்வரை நேர்வடக்கு திக்கானது முக்தசூரியா என்றும். வடகிழக்கு திக்கானது ப்ராப்தசூரியாஎன்றும் நேர்கிழக்குதிக்கானது ஏஷ்யத்சூரியா என்றும் சொல்லப்படும். ஆகவே இதுவரை கூறியபடி முக்த சூரியா, ப்ராப்த சூரியா, ஏஷ்யத்சூரியா என்ற திக்குகளில் ஏற்படும் சகுனத்தின் பலனும் முற்கூறியபடியே தானாகும். அதாவது: அந்தந்ததிக்குகளின் பெயருக்குத் தக்கபடியே அங்குகாணும் சகுனத்திற்குப் பலன் சொல்ல வேண்டும் என்பதாம். அதுபின்வருமாறு—முக்த சூரியா என்ற திக்கில் அசுபமான சகுனம் காணப்படுமாயின் அந்த அசுபசகுனபலன்முக்தம் (விடுபட்டுப்போனது) என்றும், ப்ராப்தசூரியாஎன்றதிக்கில் காணப்பட்ட அசுபசகுனபலன் அதேநாளில்வந்துகொண்டிருக்கும் என்றும், ஏஷ்யத் சூரியாஎன்றதிக்கில் காணப்பட்ட அசுபசகுனபலன் பின்னர் வரக்கூடியதென்றும் கண்டுகொள்ளல் வேண்டும் என்பதாம்.

மேலும், முற்கூறிய முக்த சூரியா, ப்ராப்த சூரியா, ஏஷ்யத் சூரியா என்ற திக்குகள் முறையே அங்கார, தீப்த,தூமினீ என்ற பெயரையும் அடையும். அதாவது: முக்த சூரியா திக்கு அங்காரினீ என்றும். ப்ராப்தசூரியாதிக்கு தீப்தா என்றும், ஏஷ்யத் சூரியாதிக்கு தூமினீ என்றும் சொல்லப்படும் என்பதாம். அதற்கு மேலுள்ள 5 திக்குகளும் சாந்தா, எனப்படும். (எ—று)

(அ—கை) முற்கூறிய திக்குகளின் மூலம் நேரும் பலனில் நியமம் உபதேசிக்கப் படுகின்றது—

**மூ० ॥ तत्पञ्चमदिशां तुल्यं शुभं त्रैकाल्यमादिशेत् ।**
**परिशेषदिशोर्वाच्यं यथाऽऽसन्नं शुभाऽशुभम् ॥ १३ ॥**

(க—ரை) அங்காரிணீ என்ற திக்கிற்கு 5வதான யாதொரு சாந்தா என்றதிக்குண்டோ அதில் சுபமான சகுனமுண்டாவதன் மூலம்நோக்கூடியசுபபலனானது,சென்றுவிட்டதென்றறியவேண்டும். அதாவது—அந்தச்சுபசகுனமானது—எதிர்பார்க்கும் சுபபலன் நடந்து விட்டது என்பதைக் குறிக்கும் என்பதாம். அதே சாந்தா என்ற திக்கில் சகுனமானது இடதுபக்கத்திலுண்டானால், அற்பபலனைத்தரும் அனிஷ்டம் விலகிவிட்டதென்றும் அறிய வேண்டும்.இவ்விதமே தீப்தா என்ற திக்கிற்கு 5வதான யாதொரு சாந்தா என்ற திக்குண்டோ அதில் சுபமான சகுனமுண்டாவதால் சூசிப்பிக்கப்படும் சுபபலனானது, தற்காலம் நடைபெறும் என்றும், அதேதிக்கில் சகுனமானது இடதுபக்கத்தி லுண்டாவதால் சூசிப்பிக்கப்படும் அற்ப அசுபபலனும், தற்காலம் நடைபெறும் என்றும் கண்டுகொள்ள வேண்டும். இதுபோலவே தூமிதா என்ற திக்கிற்கு 5வதான சாந்தா என்ற திக்கில் சுபசகுனமுண்டாவதால் சூசிப்பிக்கப்படும் சுபபலன், எதிர்காலத்தில் நோக்கூடியதென்றும், அதேதிக்கில் இட.துபக்கத்தில் உண்டாகும் சகுனத்தாற் சூசிப்பிக்கப்படும் அற்ப அசுபபலனும், எதிர்காலத்தில் நோக்கூடியதென்றும் கண்டறியவேண்டும். அங்காரிணீ சாந்தா என்ற திக்குகளுக்கு சமீபத்திலிருக்கும் பாகத்தில் கெட்டசகுனமிருந்தால் அற்பமான அனிஷ்டம் சென்று விட்டது என்று அறிந்து கொள்ளவேண்டும். அதேவிடத்தில் நல்லதான சகுனமிருந்தால் சுபபலன் சென்று விட்ட தென்றறியவேண்டும். இவ்விதமே தூமினீ சாந்தா என்ற திக்குக்களுக்கு சமீபமாயுள்ள விடத்தில் நல்லசகுனமிருந்தால் அற்பமான அனிஷ்டம் வரப்போவதாக அறிய வேண்டும். அவ்விடத்திலேயே கெட்ட சகுனமிருந்தால் அதிகமான அநிஷ்டம் வரப்போவதாக அறியவேண்டும்.

(அ—கை) திரும்பவும் முற்கூறியபடி பலநியமத்திற்கு வேண்டியவற்றை உபதேசிக்கிறார்—

**மூ० ॥ शीघ्रमासन्ननिम्नस्थैश्चिरादुत्पन्नदूरगैः ।**

**स्थानवृद्ध्युपघाताच्च तद्वद्ब्रूयात्फलं पुनः ॥ १४ ॥**

(க—ரை) ஸமீபத்தி லிருக்கின்றவைகளும், தாழ்ந்த ஸ்தானத்திலிருக்கின்றவைகளுமான சகுனங்களால் நேரும் சுபாசுபபலன்கள் சீக்கிரமாகவே உண்டாகும். உயர்ந்த பிரதேசத்தி லிருக்கின்றவைகளும், வெகுதூரமான பிரதேசத்தி லிருக்கின்றவைகளுமான சகுனங்களால் நேரும் சுபாசுபபலன், வெகுகாலம் சென்று உண்டாகும் என்று கண்டு கொள்ள வேண்டும். சகுனமிருக்கும் இடத்தின் விருத்தியைக் கொண்டும், நாசத்தைக்கொண்டும் முற்கூறியபடியே பலனைச் சொல்லவேண்டும். அதாவது—எந்தச்சகுனத்தைக் கொண்டு சுபாசுபபலனை அறிய விரும்புகின்றோமோ, அந்தச்சகுனமிருக்கு மிடமானது ஒவ்வொருநாளும் விருத்தியை யடையக்கூடிய நிலையிலிருக்குமானால் அவ்விடத்திலுண்டாகும் சகுனத்தைக்கொண்டு ஊஹிக்கப்படும் சுபாசுபபலன் விரைவி லுண்டாகிக் கொண்டே வரும் என்றும், எந்தஸ்தானத்தில் சகுனமிருக்கின்றதோ அந்தஸ்தானமானது ஒவ்வொருநாளும் நாசமடையக்கூடிய நிலையிலிருக்குமானால் அவ்விடத்திலுண்டாகும் சகுனத்தைக்கொண்டு ஊஹிக்கப்படும் சுபாசுபபலன், விரைவில் நாசமடைந்து கொண்டேவரும் என்றும் அறிந்துகொள்ளவேண்டும். இவ்விஷயத்தில் பராசரர்—

दग्धवक्रातुरच्छिन्नशुष्ककंटकिवृक्षगाः ।
अश्मनिम्नकपालास्थिसिकताकेशभस्मसु ॥
श्मशानांगारवल्मीका ऊषराः पांसुमत्सराः ।
शीर्णजीर्णाऽशुच्यशुभ्रदेशस्थाः दीप्तसंज्ञिताः ॥
मनोज्ञस्निग्धफलितक्षीरपुष्पतरुस्थिताः ।
समप्रशस्तभूमिष्ठाः शान्ताः स्युर्मृगपक्षिणः ॥

பொசுக்கப்பட்டும், வக்கிரமாயும், நாசமடையக் கூடியதாயும், வெட்டுண்டதாயும், பட்டுப்போனதாயும், முள்ளுள்ளதாயுமிருக்கிற மரங்களிலுள்ளவைகளும், கற்கள், தாழ்ந்தவிடம், மண்டையோடு, எலும்பு, சலங்கைமணல், கேசம் (தலைமயிறு) சாம்பல் முதலியவற்றிலுள்ளவைகளும், சுடுகாடு, எரிகொள்ளிகக்ட்டை, கரையான்புத்து, ஊஷரபூமி, ஜலமில்லாக்குளங்கள், சிதறிப்போனதும், கிழடு சென்றதும், அசுத்தமானவைகளும், ரம்யமாக

யில்லாதவைகளுமான தேசத்திலுள்ள மிருகபக்ஷிகள் தீப்தம் என்ற பெயரையுடைய சகுனங்களாகும். ஸமமும், சிறந்தது மான பூமியிலுள்ள மிருகபக்ஷிகள் சாந்தம் என்ற பெயரையுடைய சகுனங்களாகும் என்றதால் உபதேசித்திருக்கிறார். (எ—று)

(அ—கை) 12வது சுலோகத்தில் "முக்த சூர்யாதிக் அங்காரிணீ" "ப்ராப்தசூரியாதிக் தீப்தா" "ஏஷ்யத்சூர்யாதிக் தூமினீ" என்றும் அங்காரிணீ, தீப்தா, தூமினீ என்ற இம்மூன்றுதிக்குகளுக்கும், மேலுள்ள 5 திக்குகளும் "சாந்தா" என்றும் உபதேசிக்கப்பட்டது. பிறகு 14வது சுலோக உரையில் **दग्धवक्राऽऽतुर**......என்று தொடங்கி **दीप्तसंज्ञिताः** என்றதுவரையுள்ளபாராசர சுலோகங்களால் மேற்கூறிய தீப்தா என்ற திக்கிலிருக்கும் சகுனங்களும் தீப்தசகுனங்களேயாகும் என ஒருவாறு சொல்லப்பட்டது. அந்ததீப்தசகுனமானது க்ஷணதிகளால் 5 விதபிரிவையுடைய தேவதீப்தமென்றும், கதிமுதலியவற்றால் 5 விதபிரிவையுடைய க்ரியாதீப்தமென்றும் சொல்லப்படுவதால் தீப்தசகுனமானது பொதுவாய் 10 விதபிரிவையடைகின்றதென்பதையும், அதனுட்பிரிவான தேவதீப்த, கிரியதீப்த லக்ஷணங்களேயும் இதனுலுபதேசிக்கிறார்—

**मू० ॥ क्षणतिथ्युडुवाताऽर्कैर्दैवदीप्तो यथोत्तरम् ।**
**क्रियादीप्तो गतिस्थानभावस्वरविचेष्टितैः ॥ १५ ॥**

(க—ரை) தீப்த சகுனமென்பது தேவதீப்த மென்றும், கிரியா தீப்த மென்றும் இரண்டுவகைப்படும். அவற்றுள் தேவதீப்தமானது—க்ஷண தீப்தம், திதி தீப்தம், உடு (நக்ஷத்திர) தீப்தம், வாத தீப்தம், அர்க்க தீப்தம், என ஐந்து வகைப்படும். இவ்விதமே, கதி தீப்தம், ஸ்தான தீப்தம், பாவ தீப்தம், ஸ்வர தீப்தம், விசேஷ்டித தீப்தம் என கிரியா தீப்தமானது ஐந்து வகைப்படும். இவற்றுள் (1) க்ஷணதீப்தமாவது:—சிவம் முதலிய முஹூர்த்தமே க்ஷண தீப்தமாகும். அந்த முஹூர்த்தத்தில், தாருணங்களும் உக்ரங்களுமான நக்ஷத்திரங்களுடைய ஸம்பந்தமிருந்தால் அதுவே க்ஷணதீப்த முஹூர்த்த மெனப்படும். இந்த முஹூர்த்தத்திலேற்படுவது தீப்த சகுன மெனப்படும். (2) திதிதீப்தமா

வது—நந்தா, பத்ரா, ஜயா, ரிக்தா, பூர்ணு என பிரதமைமுதல் பஞ்சமீ முடியவுள்ள திதிகளின் பெயராகும். ஷஷ்டீ முதல், தசமீ முடியவும், ஏகாதசீ முதல் பர்வம் முடியவும், உள்ள திதிகளுக்கு இதே பெயரிடப் பட்டிருக்கிறது. ஆகவே ஷஷ்டீ, அஷ்டமீ,சதுர்த்தீ, நவமீ, சதுர்த்தசீ, இந்த திதிகள் தீப்தைகள் எனப்படும். இந்தத் திதிகளிலுண்டாகும் சகுனம் திதி தீப்த சகுனம் எனப்படும். (3) உடு (நக்ஷத்ர) தீப்தமாவது—தாருணங்களும், உக்கிரங்களுமான் நக்ஷத்திரங்களில் ஏற்படும் சகுனம் உடுதீப்த சகுன மெனப்படும். மூலம், திருவாதிரை, கேட்டை, ஆயில்யம், இவை தாருண (திக்ஷ்ண) நக்ஷத்திரங்க ளெனப்படும். பூரம், பூராடம், பூரட்டாதி, பரணீ, மகம், இந்த 5 நக்ஷத்திரங்களும் உக்ர நக்ஷத்திரங்க ளெனப்படும். (4)வது வாததீப்தமாவது—சண்டமாயும், கடுமையாயும், குரூரமாயும், எதிர் முகமாயும் வீசும் காற்றுள்ள காலத்திலேற்படுவது வாததீப்த சகுனம் எனப்படும். (5)வது அர்க்க தீப்தமாவது—சூரியனுக்கெதிரிலும் முற்கூறிய வாததீப்த திக்கிலிருப்பதும் யாதுண்டோ அது அர்க்க தீப்த சகுனம் எனப்படும். இதுவரை கூறிய 5 விதமான தீப்தங்களுள் க்ஷணதீப்தத்தைக் காட்டிலும், திதிதீப்தம் மேலானது. அதைக்காட்டிலும் நக்ஷத்திர தீப்தமும், அதைக்காட்டிலும் வாத தீப்தமும், அதைக்காட்டிலும் அர்க்க தீப்தமும் மேன்மேலாகவுள்ளது. ஆகவே தேவதீப்த சகுனமானது முற்கூறிய முறைப்படி ஐந்து விதமாக ஏற்பட்டது. இனி கிரியா தீப்தத்தைச் சொல்லுவாம். கிரியா தீப்தங்களுள் மின்னல், கொள்ளிக்கட்டை, சூரியன், காற்று இவற்றிர்க்கு எதிர்முகமாக ஓடுவது எதுவோ அதுவே (1)வதான கதிதீப்த சகுனமாகும். வெட்டப்பட்டும், வேறுபட்டும், கோணலாயும், பூசப்பட்டும், நாசமாக்கப்பட்டும், இயற்கையில் நாசமடைந்தும், அசுத்தமாயும், உள்ள ஸ்தானத்திலிருப்பது (2)வதான ஸ்தானதீப்த சகுனமாகும். அறிவற்றதும், சுவல்ப அறிவுள்ளதுமானது எதுவோ அதுவே (3)வதான பாவதீப்த சகுனமாகும். விஷமமாயும், குறுகியுமுள்ள எழுத்துக்களுள்ளதும், தேய்ந்தும், தழை தழைத்துமுள்ள குரலுடன் கூடியது எதுவோ அதுவே (4)வதான ஸ்வரதீப்த சகுனமாகும். இரக்

கையை உதறுதல், மூக்கை உதறுதல், உயரவிருந்து கீழேவிழுதல், பற்பல தோற்றமுள்ளதாக விருத்தல், மூக்கால் குத்துதல் முதலியனவுள்ளது எதுவோ அதுவே (5)வதான சேஷ்டாதீப்த சகுனமாகும். இந்தக் கிரியாதீப்த சகுனத்திலும் கதிதீப்தத்தைக் காட்டிலும் ஸ்தானதீப்தமும், ஸ்தானதீபத்தைக் காட்டிலும் பாவதீப்தமும், பாவதீப்தத்தைக் காட்டிலும் ஸ்வரதீப்தமும், ஸ்வரதீப்தத்தைக் காட்டிலும் சேஷ்டாதீப்தமும் ஒன்றைவிட மற்றொன்று மேலானதாகவேயாகும்.

இவ்விஷயத்தில் ருஷிபுத்ரர் சொல்லிய நிர்ணயமாவது.

चतुर्थीषष्ठयष्टमीचतुर्दशीषु तिथिदीप्ताः। विष्ट्यां करणे करणदीप्ताः। मूलेन्द्र, सर्प, रौद्रैन्द्राऽऽग्नेययाम्यपित्र्यऽऽग्नेयपूर्वासु नक्षत्रदीप्ताः। मुहूर्तेऽथैतेषामेव मुहूर्तदीप्ताः। खरपरुषभिन्नभैरवार्तोद्विजनीयविषमविप्लुताक्षरक्षामजर्जरस्वराः स्वरदीप्ताः। अशनिहतपतितच्छिन्नभिन्नभग्नोन्मूलितार्धदळितोपमृष्टशुष्कव्याधिताऽपत्राऽफलाऽक्षीर मलिनशीर्णवित्वगासारविरसकत्वाम्ललवणतिक्तक्वथितायतविषमसंश्रितसंघटितलतावितानावनतनिरोधाऽन्याक्रान्तकटाग्निदग्धेषु तरुषु। प्राकारगोपुराऽट्टालककुम्भूमिसंस्थाः स्थानदीप्ताः। ये शीर्णविषमनिम्नसंकरकेशाऽस्थिकपालवल्मीकांगारपलालविनष्टाऽऽयुधाऽग्न्याऽऽधारकलहसर्पविद्युदुल्कार्कमारुताऽऽयुधाग्नीनुपधावन्ते ते गतिदीप्ताः। पक्षविपातोत्तुंडविधूननैर्निपातपरोच्चावचभावकुट्टनैश्च चेष्टादीप्ताः। चण्डपरुषप्रतिलोममारुताः वातदीप्ताः। अर्काऽभिमुखा दीप्तदिक्स्थाः रविदीप्ता इत्याह भगवानिन्द्रः॥

என்றதால் விரிவாயுபதேசித்துமிருக்கிறார். (எ–று)

(அ–கை) முற்கூறியவற்றிலுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்—

**मू० ॥ दशधैवं प्रशान्तोऽपि सौम्यस्तृणफलाशनः।**
**मांसाऽमेध्याऽशने रौद्रो विमिश्रोऽन्नाशनः स्मृतः॥१६॥**

(க–ரை) சாந்த என்ற சகுனமும் இதுவரை கூறியபடியே 10வித முள்ளதாகவாகும். ஆயினும், அந்தச்சகுனமானது புல்லையோ, பழத்தையோ சாப்பிடுமானல் சுபபலனைத்தரும் என்றும். மாம்ஸத்தையோ, அமேத்ய(மல)ம் முதலியவற்றையோ

சாப்பிடுமானல் ரௌத்ரமென்றும், அன்னத்தைச் சாப்பிடுமானல் சாந்தமாயும் தீப்தமாயும் ஆகும் என்றும் கண்டு கொள்ள வேண்டும். (எ—று)

(அ—கை) இவ்விஷயத்தில் வேறுவிசேஷத்தையுபதேசிக்கிருர்—

मू० ॥ हर्म्यप्रासादमङ्गल्यमनोज्ञस्थानसंश्रिताः ।
श्रेष्ठा मधुरसक्षीरफलपुष्पद्रुमेषु च ॥ १७ ॥

(க—ரை) வீட்டின் மாடி, ராஜாக்களின் மாடிமுதலியவிடம், கோயில், பிராம்மணர், பசு, முதலியன வசிக்குமிடம், பசும்புற்களடர்ந்ததும் குளுமைபொருந்தியதும் நிழலைத்தரக்கூடியதுமான இடம், இவற்றிலிருக்கின்ற சகுனங்கள் சுபமானபலனைத் தரக்கூடியவைகளாகும். நல்லருசியுள்ள பழங்கள் நிரைந்ததும், பாலுள்ளதும்,புஷ்பம் உள்ளதுமான விருக்ஷங்களிலும்,மாதிளம் மரத்திலிருக்கின்றதுமான சகுனங்கள் சிறந்தவைகளாகும்.(எறு)

(அ—கை) இந்தச் சுலோகத்தால் சகுனங்களின் விசேஷமான வலுவை யொட்டி யேற்படும் பலனின் விசேஷத்தை யுபதேசிக்கிருர்—

मू० ॥ स्वकाले गिरितोयस्था बलिनो द्युनिशाचराः ।
क्लीबस्त्रीपुरुषाज्ञेया बलिनः स्युर्यथोत्तरम् ॥ १८ ॥

(க—ரை) பகலிலும், இரவிலும் ஸஞ்சரிக்கின்றவைகள் தனது காலத்தில் (அதாவது:—பகலில் ஸஞ்சரிப்பவை பகற்காலத்திலும், இரவில் சஞ்சரிப்பவை இரவிலும் என்று பொருள்) முறையே மலையிலும், ஜலத்திலும் இருக்குமானல் வலுவுள்ளவைகளாக வாகின்றன. அதாவது: இவைகள் மூலம் சூசிப்பிக்கப்படும் சுபாசுபபலன் அவசியம் வந்தேதீரும் என்று பொருள். அவற்றுள் நபும்ஸக, ஸ்திரீ புருஷ வகுப்பிற் சேர்ந்தவைகள் முறையே ஒன்றைவிட ஒன்று அதிகம் வலுவுள்ளவைகளாக ஆகும் என்று அறிய வேண்டும். அதாவது: நபும்ஸகவகுப்பிற் சேர்ந்ததைவிட ஸ்திரீ வகுப்பிற் சேர்ந்தவை அதிகம் வலுவுள்ளதென்றும், ஸ்திரீ வகுப்பிற் சேர்ந்ததை விட புருஷ வகுப்பிற்

சேர்ந்தவை அதிகம் வலுவுள்ளதென்றும் கண்டுகொள்ள வேண்டுமென்பதாம். (எ—று)

(அ—கை) இவ்விஷயமாகவே மற்றும் சிலவிசேஷம் சொல்லப்படுகின்றது—

**मू०॥ जवजातिबलस्थानहर्षसत्वस्वरान्विताः।**
**स्वभूमावनुलोमाश्च तदूनाः स्युर्विवर्जिताः ॥ १९ ॥**

(க—ரை) வேகமான கதி, ஜாதி, பிரமாணம், ஸ்திதி, மனதின் சந்தோஷம், ஔதார்யம், ஸ்வரம் (சப்தம்) இவைகளுடன் கூடினவைகளும், தனக்குச்சொந்தமான விடத்தில் தனது முறை தவறு திருக்கின்றவைகளும், வலிவுள்ளவைகளாகும். இவ்விதம் கூறியதிலிருந்து எது அதிக வேகமுள்ளதோ, எது ஜாதியிற் சிறந்ததோ, எது இயற்கையில் அதிகம் பலமுள்ளதோ, எதுசிறந்த (அழகுபொருந்திய) ஸ்தானத்திலிருக்கிறதோ எது அதிகம் சந்தோஷத்துடன் கூடியதோ, எது அழகிய சப்தத்துடன் கூடியதோ, எது தான்வசிக்கக்கூடிய விடத்தில் தனதியற்கைக்கு மாறுதபடி வசிக்கக்கூடியதோ, அதுவே சகுனவிஷயத்தில் வலுவுள்ளதாகும். இதுவரை கூறியதற்கு மாறுக வுள்ளவைகள் வலுவற்றவைகள் என்று சொல்லப்படும். (எ—று)

(அ—கை) இனிவரும் சுலோகங்களால் முற்கூறியவற்றின் ஜாதியைப் பிரித்து அவற்றிர்க்கு இன்னின்னதிக்கில் வலுவுண்டென்பதை உபதேசிக்கத்தொடங்கி கிழக்குதிக்கில் இன்னது வலுவுள்ளதென்பதை இதனுல் உபதேசிக்கிறுர்—

**मू०॥ कुक्कुटेभपिरिल्यश्च शिखिवञ्जुळ छिक्कराः।**
**बलिनः सिंहनादश्च कूटपूरी च पूर्वतः ॥ २० ॥**

(க—ரை) கோழி, யானை, சிட்டுக்குருவி, மயில், மாங்குத்திக் குருவி, ஒருவகைமான், சிங்கம் போலச்சத்தமிடும் பக்ஷி, கூடபூரீ என்ற பக்ஷி, இவைகள் கிழக்குதிக்கில் வலுவுள்ளவைகள். (எ-று)

குறிப்பு—20-21-22-23. வது சுலோகங்களால் ஜாதியைப் பிரித்து திக்பலம் கூறுமிடத்தில் அவைகள் அந்தந்ததிக்கில் வலுவுள்ளவைகள் என்றுமட்டும் பொருள் கொள்ளவேண்டுமே யல்

லாது யாத்திரை செய்கின்றவனுக்கு கிழக்கு முதலிய திக்கிலிருந்தால், அல்லது சென்றால் என்று பொருள் கொள்ளவேண்டுவதில்லை எனபட்டோத்பலர் தமதுஉரையிற் கூறியிருக்கிறார். (எ-று)

(அ—கை) தெற்கு திக்கில் இன்னது வலுவுள்ளதென்பதை இந்தச் சுலோகத்தாலுபதேசிக்கிறார்—

**மூ० ॥ क्रोष्टुकोलूकहारीतकाककोकर्क्षपिङ्गळाः ।**
**कपोतरुदिताक्रन्दक्रूरशब्दाश्च याम्यतः ॥ २१ ॥**

(க—ரை) குள்ளநரி, கோட்டான், கருங்குருவி, காக்கை, குயில், காடி, ஊமைக்கோட்டான், மாடப்புறு, அழுகை, வசவு, மற்றும் கொடூரமான சப்தங்கள் ஆகிய இவைகள் தெற்கு திக்கில் வலுவுள்ளவைகள். (எ—று)

(அ—கை) மேற்கு திக்கில் இன்னது வலுவுள்ளதென்பதை இதனாலுபதேசிக்கிறார்—

**மூ० ॥ गोशशक्रौञ्चलोमाशहंसोत्क्रोशकपिञ्जलाः ।**
**बिडालोत्सववादित्रगीतहासाश्च वारुणाः ॥ २२ ॥**

(க—ரை) பசு, முயல், க்ரௌஞ்சபக்ஷி, லோமாசம் என்ற பிராணி, ஹம்ஸம், அணில், கபிஞ்ஜலம் என்ற பக்ஷி, பூனை, விவாஹாதிகள் வீணை, முரசு, மிருதங்கம், உடுக்கு, பேரி, பணவம், கொம்பு, படஹம் முதலியன, கீதம், பரிஹாஸம், ஆகிய இவைகள்மேற்கு திக்கில் வலுவுள்ளவைகள். (எ—று)

(அ—கை) வடக்கு திக்கில் இன்னது வலுவுள்ள தென்பதை இதனாலுபதேசிக்கிறார்—

**மூ० ॥ शतपत्रकुरंगाखुमृगैकशफकोकिलाः ।**
**चाषशल्यकपुण्याहघण्टाशब्दरवा उदक् ॥ २३ ॥**

(க—ரை) அடர்ந்த இரக்கையையுடைய சதபத்ரம் என்ற பக்ஷி (இதை மரங்குத்திக் குருவி என்றும் சொல்லுவர்) மான், எலி, ஒருவகைமான், குதிரை, கழுதை முதலியன, குயில், காடை பொந்தில் வாசஞ்செய்யும் சல்யகம் என்ற ஜந்து, புண்ணியாஹ

சப்தம், மணியின் சப்தம், சங்கத்தின் சப்தம், ஆகிய இவைகள் வடக்கில் வலுவுள்ளவைகள். (எ—று)

(அ-க்க)முற்கூறிய வற்றில் சிலபிரிவினையை யுபதேசிக்கிறார்

मू० ॥ न ग्राम्याऽरण्यगोग्राह्यो नारण्यो ग्राम्यसंस्थितः ।
दिवाचरो न शर्वर्यां न च नक्तं चरो दिवा ॥२४ ॥

(க—ரை) கிராமத்தி லுண்டாகவேண்டிய சப்தமானது காட்டிலுண்டாகுமானல் அதைச்சுபமாகவோ அசுபமாகவோ, எண்ணுவதற்கில்லை. இவ்விதமே காட்டிலுண்டாகவேண்டிய சப்தமானது கிராமத்தி லுண்டாகுமானல் அதையும் சுபமாகவோ அசுபமாகவோ எண்ணுவதற்கில்லை. பகலில் சஞ்சரிக்க வேண்டியவை ராத்திரியில் சஞ்சரித்தாலும், ராத்திரியில் சஞ்சரிக்க வேண்டியவை பகலில் சஞ்சரித்தாலும் அதையும் சுபமாகவோ அசுபமாகவோ எண்ணுவதற்கில்லை. (எ—று)

(அ—கை) இந்தச்சுலோகத்தாலும் முற்கூறியபடி விலக்கு விதியே உபதேசிக்கப்படுகின்றது—

मू० ॥ द्वन्द्वरोगार्दितत्रस्ताः कलहाऽऽमिषकांक्षिणः ।
आपगान्तरिता मत्ता न ग्राह्याः शकुनाः क्वचित् ॥२५॥

(க—ரை) ஸாரஸ பக்ஷிகளின் இரட்டையைத் தவிர்த்து ஆணும் பெண்ணுமாக சஞ்சரிக்கின்றவைகளும், வியாதி பீடிதங்களும், பயத்தை யடைந்தவைகளும், கலஹத்தில் விருப்ப முள்ளவைகளும், மாம்ஸத்தி லாசையுள்ளவைகளும், தனக்கும் அதற்கும் நடுவில் நதியையுடையவைகளும், மதங்கொண்டவைகளுமானசகுனங்களும் சுபங்களாகவோ அசுபங்களாகவோ ஆவதில்லை. (எ—று)

(அ—கை) இவைகளுக்கு ருது காலக்ஞானத்தையும், இன்ன ருதுவில் இன்ன சகுனம் நிஷ்பலம் என்பதையும் இனி உபதேசிக்கின்றவராய், சிசிரம், வஸந்தம் இந்த ருதுக்களில் இன்னின்ன சகுனம் நிஷ்பலம் என்பதை இதனுலுபதேசிக்கிறார்—

मू० ॥ रोहिताश्वाऽजबालेयाः कुरङ्गोष्ट्रमृगाः शशाः ।
निष्फलाः शिशिरे ज्ञेयाः वसन्ते काककोकिलौ ॥२६ ।

(க—ரை) ரோஹிதம் என்ற ஒருவகைமான், குதிரை, ஆடு, கழுதை, குரங்கம் என்ற ஒருவகைமான், ஒட்டகை, மிருகம் என்றபுள்ளிமான், முயல் ஆகிய இவையாவும் சிசிரருதுவில் நிஷ்பலன் களென்றும், காக்கை, குயில் இவைகள் வஸந்த ருதுவில் நிஷ்பலன் களென்றும் அறிய வேண்டும். அதாவது சிசிரருதுவில், ரோஹிதாதி சகுனமும், வஸந்தருதுவில் காக்கை,குயில் முதலியவற்றின் சகுனமும் சுபபலனையோ அசுபபலனையோ தராதாகையால் இந்தச்சகுனங்கள் நிஷ்பலன்களென்றே ஏற்பட்டனவென்பதாம். (எ—று)

(அ—கை) பாத்ரபத மாஸத்திலும், சரத்திலும், (ஆச்வின, கார்த்திகமாசம்) சிராவணத்திலும் இன்னின்ன சகுனம் நிஷ்பலம் என்பதை யுபதேசிக்கிறர்—

**மூ० ॥ न तुभाद्रपदे ग्राह्याः सूकरश्ववृकादयः ।**
**शरद्यब्जादगोक्रौञ्चाः श्रावणे हस्तिचातकौ ॥ २७ ॥**

(க—ரை) பாத்ரபதமாஸத்தில், (ஆவணி மாதசுக்லப்ரதமை முதல்புரட்டாசிமாஸ அமாவாஸ்யைவரைசாந்திரமானத்தில் பாத்ரபதமாஸம் எனப்படும்) பன்றி, நாய், சென்னய், பொந்தில் வஸிக்கும் மிருகம் முதலிய சகுனங்கள் நிஷ்பலன் களாகும். இவ்விதமே ஆச்வின கார்த்திக மாஸங்களில் (புரட்டாசிமாத சுக்லப்ரதமைமுதல் அர்ப்பிசி அமாவாஸ்யை முடிய ஆச்வினம் என்றும், அர்ப்பிசி மாதசுக்லப்ரதமை முதல் கார்த்திகைமாத அமாவாஸ்யை முடிய கார்த்திகமாதம் என்றும் சாந்திரமானமாஸங்களாகும். இம்மாதங்களில்) ஹம்ஸம் முதலியனவும், பசு, கிரௌஞ்சம் என்ற பக்ஷியும், சகுன விஷயத்தில் நிஷ்பலங்களாகும். இவற்றின் சகுனத்தால் அக்காலத்தில் எவ்விதபலனும் உண்டாகாதென்பதாம். சிராவணமாஸத்தில் (ஆடிமாத சுக்ல ப்ரதமை முதல் ஆவணிமாத அமாவாஸ்யை முடிய சிரவாணமாஸமாகும்) யானை, சாதகம் இவைகளாகிற சகுனங்கள் நிஷ்பலன்களாகும். (எ—று)

(அ—கை) வேறுமாதங்களுக்குச்சொல்லப்படுகிறது—

मू० ॥ व्याघ्रर्क्षवानरद्वीपि महिषा सबिलेशयाः ।
हेमन्ते निष्फला ज्ञेया बालाः सर्वे विमानुषाः ॥ २८ ॥

(க—ரை) சிறுத்தைப் புலி, கொண்டமுசுரு, குரங்கு, வேங்கைப் புலி, எருமை, காட்டுப் பன்றி, கீரிப்புள்ளே, ஆகிய பிராணிகளும், மனித பாலன் தவிர மீதமுள்ள பாலர்களும் ஹேமந்த ருதுவில் அதாவது: (மார்க்க சீர்ஷ, பௌஷ மாதங்களில்) நிஷ்பலன்களே யாகும். மனித பாலர்களோ வெனில் சகுனவிஷயத்தில் பலனுள்ள வர்களேயாவர். (எ—று)

(அ—கை) திக்சக்கிரத்தை 32பிரிவாகப்பிரித்து உபதேசிக்க வெண்ணங்கொண்டவராய் அவற்றுள் ஒவ்வொரு பாகத்தையும் கிழக்கு திக்கு தொடங்கி உபதேசிக்கிருர்—

मू० ॥ ऐन्द्राऽनलदिशोर्मध्ये त्रिभागेषु व्यवस्थिताः ।
कोशाऽध्यक्षाऽनलाऽऽजीवितपोयुक्ताः प्रदक्षिणम्॥२९॥

(க—ரை) கிழக்கு, தென்கிழக்கு இந்த இரண்டு திக்குகளுடையவும் நடுவில் 3 பிரிவுகளிருக்கின்றன. அம்மூன்றிலும் முறையே வலமாக முதல்பிரிவானது கோசாத்யக்ஷனென்றும், 2. வது பிரிவானது நெருப்பைக்கொண்டு பிழைப்பவனென்றும். (அதாவது: தட்டான் முதலியவனென்ருவது, இக்காலத்திற்கேற்ருர் போல் மில்வேலே செய்கிறவன், ரயில்வண்டி யோட்டி, சமையல் காரன் என்ருவதும் சொல்லலாம்) 3 வது பிரிவானது தாபஸன் என்றும் கொள்ளவேண்டும். (எ—று)

(அ—கை) இவ்விதமே வேறுதிக்கு களிலு முபதேசிக்கப் படுகிறது—

मू० ॥ शिल्पी भिक्षुर्विवस्त्रा स्त्री याम्याऽनलदिगन्तरे ।
परतश्चापि मातंगगोपधर्मसमाश्रयाः ॥ ३० ॥

(க—ரை) தெற்குதிக்கிற்கும், தென்கிழக்கு திக்கிற்கும் நடுவிலுள்ள யாதொரு மூன்றுபாகங்களுண்டோ அவற்றுள் 1-வதான பாகமானது சில்பி என்றும் (அதாவது: சித்திரமெழுதுகிறவன், எழுத்து எழுதுகிறவன், தச்சன், வர்ணம் பூசுகிறவன் முதலியவன்

சில்பி என்று பொருள்கொள்ளவேண்டும். மேலும், இக்காலத்திற் கேற்றூர்ப் போல் கட்டடம் கண்ட்ராக்டர், இஞ்சினீயர், ஓவர்ஸியர், முதலியோரென்றும் பொருள் கொள்ளவும்) 2வது பிரிவானது ஸன்னியாஸி யென்றும், அல்லது யாசகம் வாங்குகிறவன் என்றும், 3 வது பாகம் இடையில் துணியற்றஸ்திரீ யென்றும், கொள்ளவேண்டும். இவ்விதமே தெற்குதிக்கிற்கும் தென்மேற்குதிக்கிற்கும் இடையிலுள்ள மூன்றுபாகங்களுள் 1 வது பாகமானது யானையை ஆசிரயித்த புருஷனென்றும் 2 வது பாகமானது கோபனை (எடையரை) ஆசிரயித்த புருஷன் என்றும் 3 வதுபாகமானது தர்மத்தை ஆசிரயித்த புருஷனென்றும் கொள்ளவேண்டும். (எ—று)

(அ—கை) இவ்விதமே வேறுதிக்குகளிலு முபதேசிக்கப்படுகிறது—

**மூ॰ ॥ नैर्ऋतीवारुणीमध्ये प्रमदा सूति तस्कराः ।**
**शौण्डिकः शाकुनी हिंस्रो वायव्यापश्चिमान्तरे॥ ३१ ॥**

(க—ரை) தென்மேற்கு திக்கிற்கும் மேற்குதிக்கிற்கும் இடையிலுள்ள மூன்று பாகங்களுள் 1வதான பாகமானது நல்ல யௌவனப்பருவமுள்ள ஸ்திரீ யென்றும், இரண்டாவது பாகமானது பிரஸவ மென்றும், 3 வது பாகமானது திருடர்களென்றும் கொள்ளவேண்டும் மேற்கு திக்கிற்கும் வடமேற்கு திக்கிற்கும் இடையிலுள்ள மூன்றுபாகங்களுள் 1வதுபாகமானதுஸுராபான (கட்குடிப்பதில்) பற்றுள்ளவனென்றும், 2 வது பாகமானது மீன் பிடிப்பவன் என்றும், 3 வதுபாகமானது குரூரனென்றும் கொள்ள வேண்டும். (எ—று)

(அ—கை)இவ்விதமே வேறுதிக்கிலு முபதேசிக்கப்படுகிறது—

**மூ॰ ॥ विषघातकगोस्वामि कुहकज्ञास्ततः परम् ।**
**धनवानीक्षणीकश्च मालाकारः परं ततः ॥ ३२ ॥**

(க—ரை) வடமேற்கு திக்கிற்கும், வடக்கு திக்கிற்கும் இடையில் மூன்று பாகங்களிருக்கின்றன. அவற்றுள் 1 வதுபாகமானது விஷத்தைப்போக்குகின்றவன் என்றும், 2வது பாகமானது

பசுக்களுக்கு யஜமானன் (அதாவது: அதிகம் பசுவுள்ளவன்) என்றும் 3வதுபாகமானது இந்திரஜால வித்யை யறிந்தவன் என்றும், கொள்ள வேண்டும். பிறகு வடக்குதிக்கிற்கும் வடகிழக்கு திக்கிற்கும் இடையில் மூன்று பாகங்கள் இருக்கின்றன. அவற்றுள் 1 வதுபாகமானது தனமுள்ள வனென்றும், 2-வது பாகமானது சோதிட வித்வான் என்றும், 3-வது பாகமானது மாலை தொடுப்பவன் என்றும் கொள்ளவேண்டும். (எ—று)

(அ—கை) இவ்விதமே வேறு திக்கிலும் சொல்லப் படுகிறது.

**மூ॰ ॥ वैष्णवश्चरकश्चैव वाजिनां रक्षणे रतः ।**

**द्वात्रिंशदेवं भेदाः स्युः पूर्वदिग्भिः सहोदिताः ॥३३॥**

(க—ரை) வடகிழக்கு திக்கிற்கும் நேர்கிழக்குதிக்கிற்கும் இடையில் மூன்று பாகங்களிருக்கின்றன. அவற்றுள் 1—வது பாகமானது விஷ்ணுபக்தன் என்றும் 2—வது பாகமானது கூடபுருஷன் என்றும் (ரஹஸ்ய போலீஷ் அதிகாரிஎன்றும் சொல்லலாம்) 3—வது பாகமானது குதிரைகளை ரக்ஷிப்பதில் பற்றுள்ளவன் என்றும் கொள்ள வேண்டும். ஆகவே இதுவரை கூறியமுறைப்படி கிழக்கு திக்குமுதலிய 8—திக்குக்கள் 32—விதமாகப் பிரித்து உபதேசிக்கப்பட்டன வென்று ஏற்பட்டது. (ஏ—று)

(அ—கை) இந்தச் சுலோகத்தால் 8—திக்குகளிலும் அதிபர்களை யுபதேசிக்கிறார்—

**மூ॰ ॥ राजा कुमारो नेता च दूतः श्रेष्ठीचरो द्विजः ।**

**गजाध्यक्षश्च पूर्वाद्याः क्षत्रियाद्याश्चतुर्दिशम् ॥ ३४ ॥**

(க—ரை) கிழக்கு திக்கில் அரசனும், தென்கிழக்கில் ராஜபுத்திரனும், தெற்கில் சேனாதிபதியும், தென்மேற்கில் தூதனும், நேர் மேற்கில் செட்டி (வைசியன்) யும், வடமேற்கில் கூடபுருஷனும் (ரஹஸ்ய போலீஸ்காரனும்) நேர்வடக்கில் பிராம்மணனும் வடகிழக்கில் யானை கட்டுமிடத்திற்கு அத்யக்ஷனும், அதிபர்களாவர். இவ்விதமே கிழக்கில் க்ஷத்திரியரும், தெற்கில் வைசியரும், மேற்கில் சூத்திரரும், வடக்கில் பிராம்மணரும் அதிபர்களாவர். (எ—று)

(அ—கை) இதுவரை கூறிய சக்கிரவிபாகமூலம் உண்டாகும் பலனை அறியவேண்டிய முறையை யுபதேசிக்கிறார்—

**मू० ॥ गच्छतस्तिष्ठतो वापि दिशि यस्यां व्यवस्थितः ।**
**विरौति शकुनो वाच्यस्तद्दिग्जेन समागमः ॥ ३५ ॥**

(க—ரை) மனிதன் வெளியிற் செல்லும் பொழுதோ, அல்லது அசைவற்றவனாய் ஓரேயிடத்திலிருக்கும் பொழுதோ, எந்தத் திக்கில் சகுனமானது இருக்குமோ, அல்லது எந்தத்திக்கில் சப்திக்குமோ அந்தத் திக்கானது எந்த வஸ்துவாக முன்னர் சொல்லப்பட்டதோ அந்த வஸ்துவின் சேர்க்கையானது அந்த தினத்திலுண்டாகும் என்று சொல்லவேண்டும். அதை விளக்குவாம்—கிழக்குத் தென்கிழக்கு திக்குகளின் நடுவில் முதல் பாகத்தில் சகுனமுண்டானால் அதே தினத்தில் கோசாத்யக்ஷனுடனும் (கஜானா டிப்டிகலெக்டர், பாங்க் காஷியர் என்றும் தத்காலத்திற்கேற்றபடி பொருள் கொள்ளலாம்) 2-வது பாகத்தில் சகுனமுண்டானால், அனலா ஜீவியுடனும் சேர்க்கை யானதுண்டாகும் (இதை தட்டான், சமையற்காரன், ரயிலோட்டி, மெஷின்மென் என்றும் சொல்லலாம்) 3-வது பாகத்தில் சகுனமிருக்குமானால் தாபஸனுடன் சேர்க்கையுண்டாகும் என்று கொள்ளவேண்டும். இவ்விதமே மேலுள்ள விடங்களிலும் பொருட்படுத்திக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 29 வடகிழக்குதிக்<br>30 வைஷ்ணவன்<br>31 சரகன்<br>32 அசுவரக்ஷகன் | 1 கிழக்குதிக்<br>2 கோசாத்யக்ஷன்<br>3 அக்னிஜீவி<br>4 தாபஸன் | 5 ஆக்னேயதிக்<br>6 ஸ்த்ரீ<br>7 பக்ஷி<br>8 நக்ஷத்ரஜீவீ |
| 25 வடக்குதிக்<br>26 தனவான்<br>27 சோதிடவித்வான்<br>28 மாலாகாரன் | திக்கின் 32<br>விபாகத்தைக்<br>காட்டும் கட்டம். | 9 தெற்குதிக்<br>10 யானை<br>11 கோபாலகன்<br>12 தார்மிகன் |
| 21 வாயவீதிக்<br>22 விஷகாரகன்<br>23 கோஸ்வாமீ<br>24 இந்த்ரஜாலீ | 17 மேற்குதிக்<br>18 சௌண்டிகன்<br>19 மீன்பிடிப்பவன்<br>20 குரூரன் | 13 நைர்ருதிதிக்<br>14 ப்ரமதாஸ்திரீ<br>15 ஸாது:<br>16 தஸ்கரன் |

குறிப்பு—மேற்கண்ட கட்டத்திற் கண்டபடி திக்கின் பிறிவை அறிந்துகொண்டு அங்கு சொல்லியபலனையும், அந்தந்ததிக்கில் சகுனம் காணும்பொழுது கண்டு கொள்ளவும். (எ—று)

(அ—கை) சுபங்களாயும், அசுபங்களாயுமுள்ள சப்தங்கள் இன்னின்னவை என்பதை இதனாலுபதேசிக்கிறார்—

मू० ॥ भिन्नभैरवदीनार्तपौरुषक्षामजर्जराः ।
स्वना नेष्टाः शुभाः शान्तहृष्टप्रकृतिपूरिताः ॥ ३६ ॥

(க—ரை) சப்தங்கள், பின்னங் (விஷமங்) களாகவும், குரூரங்களாகவும், தைன்யத்தை யடைந்தனவாகவும், ஆர்தங்களாகவும் பருஷங்களாகவும், தேய்ந்த தாகவும், உடைந்த சட்டியின் சப்தத்திற் கொப்பான வைகளாகவும், இருக்குமானால் அவைகள் யாவும் சுபங்களாகமாட்டா. சாந்தமான திக்கிலுண்டானதும் சூரியனுக் கெதிர்முகமாக உள்ளதும், மதுரமான ஸ்வரத்துடன் கூடியதும், சந்துஷ்டப் பிரகிருதியால் நிரப்பப் பட்டதுமான (அதாவது: இயற்கையாகவே அதிகம் சந்தோஷமுள்ளதுமான) சப்தங்கள் சுபங்களாகும். (எ—று)

(அ—கை) வெளியிற் செல்லுகின்ற வர்களுக்கு எவைகள் இடது பக்கத்திற் செல்லுவதால் சுபங்களாகின்றனவோ அவற்றின் பெயரை இந்தச் சுலோகத்தா லுபதேசிக்கிறார்—

मृ० ॥ शिवा श्यामा रला छुच्छुः पिङ्गला गृहगोधिका ।
सूकरी परपुष्टा च पुन्नामानश्च वामतः ॥ ३७ ॥

(க—ரை) குள்ளநரி, பெண்புறா, சண்டையிடும் குருவி, மூஞ்சோறு, பெண்கோட்டான், பல்லீ, பெண்பன்றி, குயில், இவைகளும், மற்றும் புருஷப்பெயருள்ள பக்ஷிகளும் இடதுபக்கம் செல்வதால் சுப சூசகங்களாகும். (எ—று)

(அ—கை) வலது பக்கம் செல்லுவதால் சுபசூசகங்களாகும் பக்ஷிகளின் பெயரை யுபதேசிக்கிறார்—

मृ० ॥ स्त्रीसंज्ञा भासभषककपिश्रीकर्णधिक्कराः ।
शिखिश्रीकण्ठपिप्पीकरुरुश्येनाश्च दक्षिणाः ॥ ३८ ॥

(க—ரை) ஸ்திரீ பெயருள்ளபக்ஷிகளும், பாஸம் என்ற பக்ஷி யும், பஷகம் என்ற பக்ஷியும், குரங்கும், ஸ்ரீகர்ணம் என்ற பக்ஷி யும், திக்காரம் என்ற ஒருவகை மானும், கொட்டைப்பருந்தும் வலது பக்கம் செல்லுமானல் சுபங்களாகும். (எ—று)

(குறிப்பு)शिवा गोधा कालका राजपुत्री भरद्वाज कापोतकी सूकरिका पिप्पीका स्तुतक्षि प्रचला पिण्डीक पिङ्गळाद्याः स्त्रीसंज्ञाः शेषाः पुन्नामानः॥ என்றதால் பராசரர் ஸ்திரீப்பெயருள்ளவை இன்னின்னவை எனச்சொல்லி யிருக்கிறார். இங்குள்ள பதங்களுக்கு பெரும் பாலும் பொருள் கீழுள்ள அநேகவிடங்களில் எழுதப்பட்டிரு ப்பதால் இவ்விடத்தில் திரும்பவும் எழுதவில்லை. மேலும், இவ் விதமே வேறு கிரந்தத்திலும்

श्येनो रुरुः पूर्वकुटः कपिञ्च श्रीकर्ण धिक्कारक पिप्पिकाजाः ॥
स्त्रीसंज्ञिता ये च शिखिद्विपौ च याने हिता दक्षिणभागसंस्थाः ॥

என்றதால் சொல்லப் பட்டிருக்கிறது. (எ—று)

(அ—கை) இடது பக்கம், வலது பக்கம் இவ்விடங்களிலு ள்ள மற்றவைகளும், ஆண், பெண் பெயருள்ள பக்ஷிகள் போல சுபங்களும் அசுபங்களும் ஆகின்றன என்பதை யுபதேசிக்கிறார்—

मू० ॥ क्ष्वेडाऽऽस्फोटित पुण्याह गीत शंखांऽबुनिस्वनाः ।
सतूर्याध्ययनाः पुंवत् स्त्रीवदन्या गिरः शुभाः ॥ ३९ ॥

(க—ரை) விரலை மற்றொருவிரலால் தேய்த்து உண்டாகும் சப்தம் க்ஷ்வேடம், எனப்படும். கைகளைத் தட்டியுண்டாகும் சப்தம், ஆஸ்போடிதம் எனப்படும். இவ்விருசப்தங்களும், புண் ணியாஹ சப்தம், கீதசப்தம், சங்கம் ஜலம் இவற்றின் சப்தம் தூர்யம் என்ற வாத்ய சப்தம், வேதாத்யயனம் செய்யும் சப்தம் இவைகள், முன்சொன்ன புருஷப் பெயருள்ள வைகள் போல இடதுபக்கத்தில் நேர்ந்தால் சுபத்தைத்தரும். மற்றவார்த்தை கள், ஸ்திரீபெயருள்ளவைகள் போல அதாவது: வலதுபக்கத்தில் நேர்ந்தால் சுபங்களாகும். மங்களமான வார்த்தைகளும் வலது பக்கத்தி லிருந்தால் சுபங்களாக ஆகும். (எ—று)

(அ—கை) ஸ, ரி, க, ம,ப, த, நி,இவைகளுள் இன்னின்னவை யாத்திரையில் சோபனங்கள் என்பதை இதனை லுபதேசிக்கிறார்—

மூ॰ ॥ ग्रामौ मध्यमषड्जौ तु गांधारश्चेति शोभनाः।
षड्जमध्यमगान्धारा ऋषभश्च स्वरा हिताः ॥ ४० ॥

(க—ரை) தேவர்களின் யாத்ராகாலத்தில் மத்யமஸ்வரம், ஷட்ஜஸ்வரம் இவைகள் சோபனங்களாகும். காந்தாரஸ்வரமும் சோபனமே யாகும். ஆகவே மனிதர்களின் யாத்ராகாலத்தில் ஷட்ஜம், மத்யமம், காந்தாரம், ரிஷபம் இந்தஸ்வரங்கள் ஹிதத்தையே தரக்கூடியன. (எ—று)

(அ—கை) வேறு சுபாசுபசகுனங்களையுபதேசிக்கிறார்—

மூ॰ ॥ रुतकीर्तनदृष्टेषु भारद्वाजाऽजबर्हिणः ।
धन्या नकुलचाषौ च सरटः पापदोऽग्रतः ॥ ४१ ॥

(க—ரை) பாரத்வாஜம் என்ற வால்நீண்ட கருங்குருவி, ஆடு, மயில், ஆகிய இவைகளின் சப்தமும், பெயரைச் சொல்லுதலும், தரிசனமும், சுபமானசகுனமாகவாகும். கீரிப்பிள்ளையும், காடையென்ற பக்ஷியும் சப்தம், நாமகீர்த்தனம், தரிசனம் இவற்றில் சுபங்களே யாகும். ஓணான் எதிரில் வந்தால் பாப (கெட்ட) பலனை யுண்டாகும். (எ—று)

(அ—கை) மேற்கூறியவிஷயமாய் மற்றும் சிலவற்றை யுபதேசிக்கிறார்—

மூ॰ ॥ जाहकाऽहिशशक्रोडगोधानां कीर्तनं शुभम् ।
रुतं संदर्शनं नेष्टं प्रतीपं वानरर्क्षयोः ॥ ४२ ॥

(க—ரை) ஜாஹகம் என்ற பிராணி (ஜந்து) யினுடையவும், பாம்பு, முயல், பன்றி, உடும்பு, இவைகளுடையவும் பெயரை யாத்திரர்காலத்திற் சொல்லுதல் நலமானது. ஆனால் மேற்சொல்லிய பிராணிகளின் சப்தமும், அவைகளை நேரில் பார்ப்பதும் சுபமானதன்று. குரங்கு கரடி இவைகளின் சப்தமும் பார்வையும் சுபத்தைத்தரும். இவைகளின் பெயரை யாத்ராகாலத்தில் சொன்னல் அது அசுபமாகவே ஆகும். (எ—று)

(அ—கை) இதே விஷயமாய் மற்றும் சிலவற்றையுபதேசிக்கிறார்—

मू०॥ ओजाः प्रदक्षिणं शस्ता मृगाः सनकुलांडजाः ।
चाषः सनकुलो वामो भृगुराहाऽपराह्णतः ॥ ४३ ॥

(க—ரை) மான்கள், கீரிப்பிள்ளை, பறவை இவைகள் ஒற்றைப் பட்ட எண்ணுள்ளவைகளாய் அதாவது: (1-3-5-7-9-11-13. இம் மாதிரியான எண்ணுள்ளவைகளாய்)வலம் வருமானால் அதாவது: (யாத்திரை செய்பவனுடைய இடதுபக்கத்தினின்றும் வந்துவலது பக்கமாக போகுமானல்) சுபங்களாகும். இதற்கு நேர்விரோத மாக வலதுபக்கமிருந்து இடதுபக்கம் போகுமானல் அசுபங்க ளாகும். காடையும் கீரியும் இடது பக்கம்போனல் சுபசகுன மாகும். பிருகு என்ற மஹருஷியானவர் காடையும், கீரியும், மத்தியான்ஹத்திற்கு மேல் இடதுபக்கம் போனல் சுபமே யொ ழிய பூர்வாண்ஹத்தில் போனல் சுபமான தன்று என்று சொல் லுகிருர். (எ—று)

(அ—கை) வேறு பிராணிகள்மூலமேற்படும் சகுனத்தை இதனுலுபதேசிக்கிருர்—

मू०॥ छिक्करः कूटपूरी च पिरिली चाह्नि दक्षिणाः ।
अपसव्याः सदा शस्ता दंष्ट्रिणः सबिलेशयाः ॥ ४४ ॥

(க—ரை) குள்ளநரி, கூடபூரி என்ற பிராணி, பிரிலீ என்ற பக்ஷி, இவைகள் பகலில் வலதுபக்கம் சென்ருல் சுபங்களாகும். பாம்பு, கீரி, பன்றி, பூனை, முதலியன எப்பொழுதுமே வலது பக்கமிருந்து இடதுபக்கம் போனல் சுபங்களாகும். (எ-று)

(அ—கை) இன்னின்ன திக்கில் இன்னின்ன சகுனங்கள் சுபங்களாகவும், அசுபங்களாகவும் ஆகின்றன வென்பதை இத னுலுபதேசிக்கிருர்—

मू०॥ श्रेष्ठे हयसिते प्राच्यां शवमांसे च दक्षिणे ।
कन्यकादधिनी पश्चादुदग्गोविप्रसाधवः ॥ ४५ ॥

(க—ரை) குதிரை, வெண்ணிறமானவஸ்து இவைகள் யாத்தி ரைசெய்பவனுக்குக் கிழக்குதிக்கிலிருந்தால் சுபங்களாகும். சவம் (பிணம்) மாம்ஸம் இவைகள் தெற்குதிக்கிலிருந்தால் சுபங்களா

கும். விவாஹமாகாதபெண், தயிர் இவைகள் மேற்கு திக்கிலிருந்தால் சுபங்களாகும். பசு, பிராம்மணன், சாதுக்கள் இவர்கள் வடக்குதிக்கிலிருந்தால் சுபங்களாகும். (எ—று)

(அ—கை) இதுவரை சுபசகுனங்களையுபதேசித்து இனி அசுபமான சகுனங்கள் இன்னின்னவை என்பதையுபதேசிக்கிறார்—

**मू० ॥ जालश्वरणौ नेष्टौ प्राग्याम्यौ शस्त्रघातकौ ।**
**पश्चादासवषण्डौ च खलाऽऽसनहलान्युदक् ॥ ४६ ॥**

(க—ரை) வலையுடனும் நாயுடனும் சஞ்சரிப்பவர்கள் யாத்திரை செய்பவனுக்குக்கிழக்கில் சஞ்சரித்தால் அசுபர்களாவர். இரும்பு முதலிய ஆயுதம், (அதாவது: மண்வெட்டி, கோடறி முதலியன) ஹிம்ஸிப்பவன் இவை தெற்கில் சஞ்சரித்தால் அசுபங்களாகும். கள் முதலியன, நபும்ஸகன் இவை மேற்கில் சஞ்சரித்தால் அசுபங்களாகும். துஷ்டன், ஆஸனம், கலப்பை இவைவடக்கில் சஞ்சரித்தால் அசுபங்களாகும். (எ—று)

(அ—கை) இந்தச்சுலோகத்தால் கர்மம், ஸங்கமம், யுத்தம், பிரவேசம், நஷ்டவஸ்துவைத்தேடுதல் முதலியவற்றில் நேரும் சகுனங்களின் விசேஷத்தை உபதேசிக்கிறார்—

**मू० ॥ कर्मसंगमयुद्धेषु प्रवेशे नष्टमार्गणे ।**
**यानव्यस्तगता ग्राह्या विशेषश्चात्र वक्ष्यते ॥ ४७ ॥**

(க—ரை) கர்மம், (அதாவது: நாம்செய்யுங்காரியம்) யாதானுமொருபெரியார் முதலியோருடன் ஸங்கமம் (சேர்க்கை) சண்டை ஆகிய இவற்றிலும், கிருஹப்பிரவேசம் முதலியவற்றிலும், நஷ்டவஸ்துவைத் தேடுவதிலும், யாத்திரையிற் சொல்லியதற்கு மாறாகவுள்ளவைகளே கிரஹிக்கத்தருந்தவைகள். அதாவது: யாத்திரையில் எவை வலதுபக்கத்தில் செல்லுவதால் சுபங்களெனச் சொல்லப்பட்டனவோ அவைகள் மேற்சொல்லியகர்மம் முதலியவற்றில் இடதுபக்கத்திற் சென்றால் சுபங்களென்றும், எவை இடது பக்கத்திற் சென்றால் சுபங்களெனச் சொல்லப்பட்டனவோ மேற்கூறியவற்றில் அவை வலதுபக்கத்திற் சென்றால் சுபங்

களென்றும், இவ்விதமே எதிரில் சுபங்களெனச் சொல்லப்பட்டவை பின்புறத்தில் சென்ருல் சுபங்களெனவும், பின்புறத்தில் சுபங்களாகச் சொல்லப்பட்டவை எதிரில் சென்ருல் சுபங்களெனவும், சொன்னதாக அறிந்து கொள்ளவேண்டும். இவ்விதம் கூறியதினின்றும் யாத்திரையில் கிழக்கு திக்கில் சுபங்களாக உள்ளவை இவ்விஷயத்தில் மேற்கு திக்கில் சுபங்களென்றும், மேற்கில் சுபமாக உள்ளவை இங்கு கிழக்கில் சுபமானவை என்றும், யாத்திரையில் தெற்கில் சுபமானவை இங்கு வடக்கில் சென்ருல் சுபங்களெனவும், வடக்கில் சுபங்களாகச் சொல்லப்பட்டவை இங்கு தெற்கில் சென்ருல் சுபங்களென்று சொன்னதாகவும் கண்டு கொள்ளவேண்டும். மேலும், மேற்சொல்லிய கர்மம், ஸங்கமம் முதலியவற்றிலுள்ள விசேஷம் யாதுண்டோ அது இனி சொல்லப்படும். (எ—று)

(அ—கை) மேற்கூறிய கர்மம், ஸங்கமம் முதலியவற்றிலுள்ள சில விசேஷமானது இந்தச் சுலோகத்திற் சொல்லப்படுகிறது—

**மூ॰ ॥ दिवा प्रस्थानवद्ग्राह्याः कुरंगरुरुवानराः ।**
**अह्नश्च प्रथमे भागे चाषवञ्जुलकुक्कुराः ॥ ४८ ॥**
**पश्चिमे शर्वरीभागे नप्तृकोलूकपिंगलाः ।**
**सर्व एव विपर्यस्ता ग्राह्याः सार्थेषु योषिताम् ॥ ४९ ॥**

(க—ரை) முற்கூறிய கர்மா முதலியவற்றில் பகலில் குரங்கம் (ஒருவகைமான்) ருரு (இதுவும் மான் ஜாதியிற்சேர்ந்ததே) குரங்கு இவைகள் யாத்திரையிற் போலவே இந்தச்சகுனவிஷயத்திலும் எண்ணத்தக்கவைகள். பகலின் முதல்பாகத்தில் காடைபக்ஷி, வஞ்ஜுளம் என்ற பக்ஷி, நாய் இவைகளும் யாத்திரையிற் போலவே சகுனவிஷயத்திலும் எண்ணத் தக்கவைகள். ராத்திரியின் கடைபாகத்தில் நப்த்ருகம் என்ற பக்ஷி, ஊமைக்கோட்டான், பெண்கோட்டன் இவைகள் யாத்திரையிற் போலவே சகுனவிஷயத்திலும் எண்ணத்தக்கவைகள். ஸ்திரீகளின் தனிமையான கூட்டவிஷயத்தில் இதுவரை சொல்லியவை யாவும் கர்மம் ஸங்கமம், யுத்தம் பிரவேசம், நஷ்டமார்க்கணம் முதலியஎல்லாவற்றிலும் முற்கூறிய வற்றிற்கு மாருகவே எண்ணத்தக்கவைகள்.

(அ—கை) அதே விஷயமாக, வேறுசிலவற்றை இதனுலுபதேசிக்கிருர்—

मू० ॥ नृपसन्दर्शने ग्राह्यः प्रवेशेऽपि प्रयाणवत्।
गिर्यरण्यप्रवेशेषु नदीनाञ्चावगाहने ॥ ५० ॥
वामदक्षिणगौ शस्तौ यौ तु तावग्रपृष्ठगौ ॥

(க—ரை) ராஜதரிசன விஷயத்திலும், ராஜகிருஹ பிரவேச விஷயத்திலும், பிரயாணத்திற் போலவே கிரஹிக்கத் தக்கது. மலையில் பிரவேசவிஷயத்திலும், காட்டில் பிரவேசவிஷயத்திலும், நதிகளைத்தாண்டும் விஷயத்திலும் எவைகள் இடதுபக்கம், வலது பக்கம் இவற்றிலிருந்தால் சுபங்களெனச் சொல்லப்பட்டனவோ அவைகள் எதிரிலும், பின்பக்கத்திலும் சுபங்களாகின்றன. அதாவது: யாத்திரையில் எவை இடதுபக்கஞ்சென்ருல் சுபங்களோ அவைகள் எதிரிலும், எவைகள் யாத்திரையில் வலதுபக்கத்தில் சுபங்களோ அவைகள் இங்கு பின்பக்கத்திலும் சென்ருல் சுபங்களாகின்றன. (எ—று)

(அ—கை) வேறு சகுனவிஷயங்களிற் சிலவற்றை யுபதேசிக்கிருர்—

मू० ॥ क्रियादीप्तौ विनाशाय यातुः परिघसंज्ञितौ ॥ ५१ ॥
तावेवतु यथा भागं प्रशान्तरुतचेष्टितौ ।
शकुनौ शकुनद्वारसञ्ज्ञितावर्थसिद्धये ॥ ५२ ॥

(க—ரை) 15வது சுலோகத்தில் கிரியாதீப்தம் இன்னதென முன்னருபதேசிக்கப்பட்டது. கிரியாதீப்த சகுனங்கள் வெளியிற் செல்ல வெண்ணமுள்ளவனுடைய இரண்டு பக்கங்களிலுமிருக்குமாளுல் அப்பொழுது அவைகள் யாத்திரை செய்பவனுக்கே விநாசத்தைத் தெரிவிக்கின்றவைகளாக ஆகின்றன. ஆகவே அந்தக்கிரியாதீப்தசகுனங்கள் பரிகம் என்ற பெயரை யடைகின்றன. அவைகளுள் எது வலது பக்கத்திலுள்ளதோ அது வலதுபக்கத்தில் சுபமாகவும், எது இடதுபக்கத்திலிருக்கின்றதோ அது இடதுபக்கத்தில் சுபமாகவும், ஆகும். அவைகள் சாந்தமான சப்தம், சேஷ்டை இவற்றையுடையவைகளாக இருக்

குமாருல் அந்த சகுனங்கள் சுபமான அர்த்தங்களுக்கு வழியாக இருந்துகொண்டு காரியசித்தியைத் தருகின்றவைகளாக ஆகிவிடுகின்றன. (எ—று)

(அ—கை) இதனுல் வேறுசிலரின் மதத்தையனுஸரித்து சகுனத்வாரத்தை (அதாவது: சுபமான அர்த்தங்கள் வருவதற்கு மார்க்கமாகவுள்ளதை) உபதேசிக்கிருர்—

**मू० ॥ केचित्तु शकुनद्वारमिच्छन्त्युभयतः स्थितैः ।**
**शकुनैरेकजातीयैः शान्तचेष्टाविराविभिः ॥ ५३ ॥**

(க—ரை) சாந்தமான சேஷ்டை, சப்தம் இவற்றையுடையவைகளும், ஒரேயோனியிற் பிறந்தவைகளும், இரண்டுபக்கங்களிலு மிருப்புவைகளுமான சகுனங்களால் சகுனத்வாரத்தை சிலர் சொல்லுகின்றனர். (எ—று)

(அ—வை) வேறுசிலவற்றை யுபதேசிக்கிருர்—

**मू० ॥ विसर्जयति यद्येक एकश्च प्रतिषेधति ।**
**सविरोधोऽशुभो यातुः ग्राह्यो यो बलवत्तरः ॥ ५४ ॥**

(க—ரை) எந்த சகுனமானது விடுகிறதோ அது சித்தியைச் சொல்லுகிறது. எது கட்டுகிறதோ அது விரோதத்தைச்சொல்லும். அந்தச்சகுனம் செல்லுகின்றவனுக்கு விரோதமெனப்பெயருள்ளதாயும், அசுபமாயும் ஆகின்றது. அல்லது கட்டுவதும், விடுவதுமான அவ்விரு சகுனங்களுள் 16 வது சுலோகத்திற் சொல்லிய முறைப்படி அதிகம் வலுவுள்ளது எதுவோ அதையே இங்கு சுபமாகவோ, அசுபமாகவோ கிரஹிக்கவேண்டும். (எ—று)

(அ—கை) வேறு சிலவிசேஷத்தை உபதேசிக்கிருர்—

**मू० ॥ पूर्वं प्रावेशिको भूत्वा पुनः प्रास्थानिको भवेत् ।**
**सुखेन सिद्धिमाचष्टे प्रवेशे तद्विपर्ययात् ॥ ५५ ॥**

(க—ரை) சகுனமானது முதலில் பிரவேசம் செய்து திரும்பவும் அங்கிருந்து வேறிடம் பிரயாணஞ்செய்யுமாயின் பிரயாணத்தில் ஹிதம் யாதுண்டோ அதைச் செய்யும். "பிரவேசம், நஷ்டமார்கணம் இவ்விஷயத்தில் யானத்திற்கு நேர்மாருகக் கிரஹித்

துக்கொள்ளவேண்டும் என 47வது சுலோகத்திற் சொல்லியதையே இங்குள்ள ப்ராவேசிக என்ற பதத்தாற் சொன்னதாகக் கொள்ளவும். ஆகவே முற்கூறிய சகுனமானது வெளியிற் செல்லுகின்றவனுக்கு கிலேசமின்றியே காரியசித்தியுண்டாகும் எனத் தெரிவிக்கின்றது. யாத்திரை செய்பவன் காரியத்தை முடித்துக் கொண்டு திரும்பவும் தனது வீட்டில் நுழையும்பொழுது சகுனமானது முதலில் பிரயாணஞ் செய்து பிறகுப்ரவேசத்தைச் செய்யுமானல் அப்பொழுது வீடுதிரும்பினவனுக்கு அனுயாஸமாக காரியசித்தியைச் சொல்லுகிறது. (எ—று)

(அ—கை) வேறு சிலவிசேஷத்தை யுபதேசிக்கிருர்—

**मू० ॥ विसृज्य शकुनः पूर्वं स एव निरुणद्धि चेत् ।**
**प्राह यातुररेर्मृत्युं डमरं रोगमेव च ॥ ५६ ॥**

(க—ரை) சகுனமானது முதலில்விட்டு அதாவது: சுபமான சேஷ்டிதத்தைச் செய்து பிறகு அதே சகுனமானது திரும்பவும் நிஷேதிக்குமானல் அப்பொழுது வெளியிற் செல்லுகின்றவன் எவனே அவனுக்கு சத்துருவினிடமிருந்து மரணமுண்டாகும் என்பதை அந்தச் சகுனம் தெரிவிக்கின்றது. அல்லது ஆயுதகலஹத்தையோ, ரோகத்தையோ தெரிவிக்கின்றதெனக் கொள்ளவும். (எ—று)

(அ—கை) வேறு விசேஷத்தை உபதேசிக்கிருர்—

**मू० ॥ अपसव्यास्तु शकुना दीप्ता भयनिवेदिनः ।**
**आरंभे शकुनो दीप्तो वर्षान्तस्तद्भयंकरः ॥ ५७ ॥**

(க—ரை) அப்பிரதக்ஷிணங்களான சகுனங்கள் சூரியனுக்கெதிர்முகங்களாக இருக்குமானல் பயத்தைத் தெரிவிப்பவைகளாகும். காரியாரம்பத்தில் தீப்தமான சகுனமுண்டானல் அவ்வருஷம் முடிய அதேகாரியத்தில் பயத்தைச் சொல்லும்.

(அ—கை) சேஷ்டாதீப்தத்தின் லக்ஷணத்தையும், அதன் பலனையும் உபதேசிக்கிருர்—

**मू० । तिथिवाय्वर्कभस्थानचेष्टादीप्ता यथाक्रमम् ।**
**धनसैन्यबलाङ्गेष्टकर्मणां स्युर्भयंकराः ॥ ५८ ॥**

(க—ரை) திதிதீப்தமென்றும், வாயு தீப்தமென்றும் அர்க்க தீப்தமென்றும், நக்ஷத்திர தீப்தமென்றும், ஸ்தான தீப்தமென்றும், சேஷ்டா தீப்தமென்றும், சொல்லப்படும் இந்தச் சகுனங்கள் முறையே தனம், ஸைன்னியம், பலம், சரீராவயவம், இஷ்டன், கர்மம், ஆகிய இவைகளுக்கு பயங்கரங்களாக ஆகின்றன.

(அ—கை) வேறு விசேஷத்தை உபதேசிக்கிறார்—

**மூ॰॥ जीमूतध्वनिदीप्तेषु भयं भवति मारुतात् ।**
**उभयोः सन्ध्ययोर्दीप्ताः शस्त्रोद्भवभयंकराः ॥ ५९ ॥**

(க—ரை) மேகத்வனியால் தீப்தங்களான சகுனங்களில் வாயுவினின்றும் பயமுண்டாகின்றது. சூரியோதயாஸ்தமயகாலங்களில் தீப்தங்களான சகுனங்கள் ஆயுதத்தாலுண்டான பயத்தைச் செய்கின்றன. (எ—று)

(அ—கை) வேறு சிலவற்றை யுபதேசிக்கிறார்—

**மூ॰॥ चितिकेशकपालेषु मृत्युबंधवधप्रदाः ।**
**कण्टकीकाष्ठभस्मस्थाः कलहाऽऽयासदुःखदाः ॥ ६० ॥**
**अप्रसिद्धं भयं वापि निःसाराऽश्मव्यवस्थिताः ।**
**कुर्वन्ति शकुनादीप्ताः शान्तायाप्यफलास्तु ते ॥ ६१ ॥**

(க—ரை) சவமெறியும் அக்னிக்கு ஸமீபத்திலிருக்கும் தீப்த சகுனங்கள் மரணத்தையும், தலைமயிரிலிருக்கும் தீப்தசகுனங்கள் பந்தத்தையும், எலும்புத் துண்டிலிருக்கும் தீப்தசகுனங்கள் மரணத்தையும், முள்ளிலவம்மரத்திலிருக்கும் தீப்தசகுனங்கள் கலஹத்தையும், கட்டையிலிருக்கும் தீப்தசகுனங்கள் ஆயாஸத்தையும், சாம்பலிலிருக்கும் தீப்தசகுனங்கள் துக்கத்தையும். உள்ளில் ஒட்டையுள்ள வற்றிலிருக்கும் தீப்தசகுனங்கள் காரியங்களுடைய அப்பிரசித்தியையும், கற்களில் இருக்கும் தீப்த சகுனங்கள் பயத்தையும், செய்கின்றன. அதே சகுனங்கள் சாந்தங்களானல் சுவல்பபலனையே தருகின்றன. (எ—று)

(அ—கை) வேறு சிலவற்றை யுபதேசிக்கிறார்—

**மூ॰॥ असिद्धिसिद्धिदौ ज्ञेयौ निर्हाराहारकारिणौ ।**
**स्थानाद्द्रुवन्व्रजेद्यात्रां शंसतेत्वन्यथाऽऽगमम् ॥ ६२ ॥**

(க—ரை) புரீஷத்தை விடும் சகுனமானது காரியத்தின் அசித்தியையும், ஆஹாரத்தையுட்கொள்ளும் சகுனமானது லீலையாககாரியசித்தியையும் செய்கின்றது. யாதேனுமொருஸ்தானத்தினின்றும் சப்தம்செய்து கொண்டு போகும் சகுனமானது யாத்திரையைச் சொல்லும். சப்தம் செய்து கொண்டு ஒருஸ்தானத்தில் வந்துட்காரும் சகுனமானது ஒருவனுடைய வரவைச் சொல்லும். (எ—று)

(அ—கை) வேறுவிசேஷத்தை யுபதேசிக்கிறார்—

**மூ॰ ॥ कलहः स्वरदीप्तेषु स्थानदीप्तेषु विग्रहः ।**
**उच्चमादौ स्वरं कृत्वा नीचं पश्चाच्च दोषकृत् ॥ ६३ ॥**

(க—ரை) ஸ்வரதீப்த சகுனங்களில் கலஹமும், ஸ்தானதீப்த சகுனங்களில் சண்டையும் உண்டாகும். முதலில் உறத்தசப்தம் செய்து பிறகு தாழ்ந்த சப்தம் செய்யும் சகுனமானது தோஷத்தைச் செய்கின்றது. (எ—று)

(அ—கை) வேறு விசேஷத்தை யுபதேசிக்கிறார்—

**மூ॰ ॥ एकस्थाने रुवन्दीप्तः सप्ताहाद्ग्रामघातकः ।**
**पुरदेशनरेन्द्राणामृत्वर्धाऽयनवत्सरात् ॥ ६४ ॥**

(க—ரை) தீப்த சகுனமானது சப்தித்துக் கொண்டு நாள் முழுவதுமே ஒருஸ்தானத்திலிருக் குமானல் ஏழுநாள்டகளுள் கிராமநாசத்தைச் செய்கிறது. அவற்றுள் நகரத்தில் ஓரிடத்திலிருந்து கொண்டு நாள் முழுவதும் சப்திக்குமானல் இரண்டு மாதத்திற்குள் பட்டினத்தை யழித்துவிடும். சாமான்னிய தேசத்திலிருந்து கொண்டு நாள்முழுவதும் சப்திக்குமானல் மூன்று மாதங்களுள் அந்தத் தேசத்தை யழித்துவிடும். ராஜனுடைய ஸ்தானத்திலிருந்து நாள்முழுவதும் சப்திக்குமானல் ஒருவருஷத்திற்குள் ராஜனுக்கு நாசத்தைச் செய்யும். (எ—று)

(அ—கை) வேறு விசேஷத்தை யுபதேசிக்கிறார்—

**மூ॰ ॥ सर्वे दुर्भिक्षकर्तारः स्वजातिपिशिताऽशिनः ।**
**सर्पमूषकमार्जारपृथुलोमविवर्जिताः ॥ ६५ ॥**

(க—ரை) பாம்பு, எலி, பூனை, மீன் இவைகளைத்தவிர்த்து தனது வகுப்பிற் சேர்ந்தவற்றின் மாம்சத்தைச் சாப்பிடும் சகுனங்கள் யாவும் துர்ப்பிக்ஷத்தைச் செய்யும். (எ—று)

(அ—கை) வேறு விசேஷத்தை யுபதேசிக்கிறார்—

**மூ॰॥ परयोनिषु गच्छन्तो मैथुनं देशनाशनाः ।**
**अन्यत्र वेसरोत्पत्तेर्नृणाञ्चाऽजातिमैथुनात् ॥ ६६ ॥**

(க—ரை) வேறு யோனியில் பிறந்தவைகளுடன் மைதுனம் செய்யும் சகுனங்கள் தேசத்தை யழித்துவிடும். ஆனால் கோவேறுகழுதையினுத்பத்தியைக் கொண்டும், மனிதர்கள், *பெண்குதிரையை மைதுனம் செய்வதைக்கொண்டும் மேற்சொன்ன பலன்சொல்லுவதற்கில்லை. மேலும், ஒருஜாதியிற்பிறந்த சகுனமானது வேறுஜாதியில் மைதுனஞ் செய்து கர்ப்போத்பாதனஞ் செய்தால்தான் மேற்கூறியபலன் நடக்கும் என்பது **वेसरोत्पत्तेः** என்ற பதத்தினின்றும் பெறப்படுகிறது. (எ—று)

(அ—கை) வேறு விசேஷத்தை யுபதேசிக்கிறார்—

**மூ॰॥ बन्धघातभयानि स्युः पादोरूमस्तकान्तिगैः ।**
**शष्पाऽऽपः पिशिताऽन्नादैर्दोषवर्षक्षतग्रहाः ॥ ६७ ॥**

(க—ரை) சகுனமானது காலின் சமீபத்திற்செல்லுமானால் பந்தத்தை (கட்டுப்படுதலை) செய்கிறது. துடைகளினருகிற் சகுனஞ்செல்லுமானால் அப்பொழுது அடிபடுதலைச் செய்யும். தலையினருகில் செல்லுமானால் அப்பொழுது பயத்தைச் செய்கிறது. புற்களைச் சாப்பிடும் சகுனமானது மனிதர்கட்கு தோஷத்தையும், ஜலத்தைக் குடிக்கும் சகுனமானது மழையையும் மாம்ஸத்தைச் சாப்பிடும் சகுனமானது அங்கத்தில் காயத்தையும், அன்னத்தைச் சாப்பிடும் சகுனமானது யாதானும் பந்துவுடன் சேர்க்கையையும் செய்கிறது. (எ—று)

---

* अजातिमैथुनात्=என்றபதத்திற்கு பெண்குதிரையை மனிதன் மைதுனம் செய்வதைத் தவிர்த்து என பட்டோத்பலர் தமதுவியாக்கியானத்தில் சொல்லியிருக்கிறார். இதனின்றும் மனிதரில் சிலர் பெண்குதிரையை மைதுனஞ்செய்வதுண்டு என்றேற்படுகிறது.

(அ—கை) இவ்வித சகுனோபதேசத்தினால் வரப்போகின்ற வர் இன்னின்னார் என்பதை அறியும்படி உபதேசிக்கிறார்—

मू० ॥ क्रूरोग्रदोषदुष्टैश्च प्रधानन्रूपवृत्तकैः ।
चिरकालेन दीप्ताद्यास्वागमो दिक्षु तन्नृणाम् ॥ ६८ ॥

(க—ரை) தீப்தா முதலிய திக்குகளில் இருக்கும் சகுனங் களால் குரூரன், உக்கிரதோஷதுஷ்டன், பிரதானராஜ சரித்திர முள்ளவன், வெகுகாலஞ் சென்றவன் ஆகியவர்களுடன் கூடின குரூராதிபுருஷர்களின் வரவு உண்டாகின்றது. அதாவது:— தீப்தா திக்கில் சகுனமிருந்தால் குரூரனுடன் கூடினகுரூர மனி தனுடைய வரவுண்டாகின்றது. தூமிதா என்றதிக்கில் சகுன மிருந்தால் உக்கிரமான தோஷத்தால் துஷ்டனான மனிதனுடன் கூடின உக்கிரமான தோஷதுஷ்டனான மனிதனுடைய வரவா னது உண்டாகின்றது. சாந்தா என்ற திக்கில் சகுனமிருந்தால் பிரதானனான நகுஷன் முதலிய அரசர்களுடைய சரித்திரமுள்ள வர்களான மனிதர்களுடன் கூடின அத்தகையமனிதர்களு டைய வரவானது உண்டாகின்றது. அங்காரிதா என்ற திக்கில் சகுனமிருந்தால் வெகுகாலஞ்சென்ற மனிதனுடன் கூடின வெகு காலஞ்சென்ற (அதாவது: வயதுமுதிர்ந்த) மனிதனுடைய வர வானது உண்டாகின்றது. (எ—று)

(அ—கை) இந்த சுலோகத்தினால் அவ்விதம் முன்சொன்ன படி வருகின்ற மனிதன் கையில் யாதேனும் திரவியத்துடன் வருகின்றானா, திரவியமில்லாமலே வருகின்றானா வென்பதை அறி யும் முறையை யுபதேசிக்கிறார்—

मू० ॥ सद्रव्यो बलवांश्च स्यात्सद्रव्यस्याऽऽगमो भवेत् ।
द्युतिमान्विनतप्रेक्षी सौम्यो दारुणवृत्तिकृत् ॥ ६९ ॥

(க—ரை) சகுனமானது யாதேனு மொருதிரவியத்துடன் கூடினதாயும் பலவானாயு மிருக்குமானால் அந்த தினத்தில் எவன் வருகிறானோ அவன் யாதேனும் திரவியத்துடனேயே வருவான். இதற்கு மாறாகவிருந்தால் சூன்யஹஸ்தனாகவேதான் வருவான். முன்சொன்ன அதேசகுனமானது தீப்தியுள்ளதாயும், கீழ்நோக்

கின பார்வையுள்ளதாயு மிருக்குமானல் வருகின்றவன் உண்மையில் நல்லவனுயினும், வந்ததும் கொடுமையான காரியத்தைச் செய்வான் அதாவது:— உபத்திரவத்தை விளைவிப்பான் என்பதாம். (எ—று)

(அ—கை) வேறு விசேஷத்தை யுபதேசிக்கிருர்—

**मू० ॥ विदिक्स्थः शकुनो दीप्तो वामस्थेनाऽनुवाशितः ।**
**स्त्रियाः संग्रहणं प्राह तद्दिगाऽऽख्यातयोनितः ॥ ७० ॥**

(க—ரை) கோணதிக்கிலிருக்கின்ற சகுனமானது சூரியனுக்கெதிர்முகமாக இருந்துகொண்டு இடதுபக்கத்திலிருக்கின்ற வேறுசகுனத்தினல் சப்திக்கப்பட்டதாக (கூவிஅழைக்கப்பட்டதாக) இருக்குமானல் அந்தத்திக்கில் சொல்லப்பட்ட பிறவியையுடைய மனிதனிடமிருந்து ஸ்திரீயின் ஸம்யோகத்தைச் சொல்லுகிறது. அதாவது: அப்புருஷன் அந்த ஸ்திரீயைக் கொடுக்கிருன் என்பதாம். அல்லது அந்ததிக்கில் எந்தஸ்திரீயின் பிறவி சொல்லப்பட்டதோ அந்தஸ்திரீயின் சேர்க்கையைச் சொல்லுகிறது வின்றும் பொருள் கொள்ளலாம். (எ—று)

(அ—கை) வேறுசிலவிசேஷத்தையுபதேசிக்கிருர்—

**मू० ॥ शान्तः पञ्चमदीप्तेन विरुतो विजयावहः ।**
**दिङ्नरागमकारी वा दोषकृत्तद्विपर्यये ॥ ७१ ॥**

(க—ரை)சாந்த சகுனமானது தனக்கு 5வதான தீப்தா என்ற திக்கிலிருக்கின்றதாய் அதாவது: சூரியனுக்கு நேர்முகமாக இருக்கின்றதாய்க் கொண்டு சப்திக்குமானல் அந்த சகுனம் விஜயத்தைத்தரும். அல்லது, அந்ததிக்கிலுள்ள மனிதனுடைய வரவைபாவது தெரிவிக்கும். முன்சொன்னதற்கு மாருக இருந்தால் தோஷத்தைச் செய்யும். அதாவது:தீப்த சகுனமானது தனக்கு 5வதான சாந்ததிக்கிலிருந்து சப்திக்குமானல் அப்பொழுது அசுபத்தைத்தரும் என்பதாம். (எ—று)

(அ—கை) வேறுவிசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

**मू० ॥ वामसव्यगतो मध्यः प्राह स्वपरयोर्भयम् ।**
**मरणं कथयन्त्येते सर्वे समविराविणः ॥ ७२ ॥**

(க—ரை) 71 வது சுலோகத்தால் சொல்லப்பட்ட சகுனமானது நடுவிலிருந்து இடதுபக்கத்திலிருக்கும் சகுனத்தால் கூவிஅழைக்கப்பட்டால் தன்னைச் சேர்ந்தவர்களிடமிருந்து பயத்தையும், அதேநடுவிலிருக்கும் சகுனமானது வலதுபக்கத்திலிருக்கின்ற சகுனத்தாற் கூவிஅழைக்கப்பட்டால் சத்துருவின் பயத்தையும் சொல்லும். இவ்விதம் கூறியதிலிருந்து வலது இடதுபக்கங்களினின்று சப்திக்கப் படுமானல் தன்னைச்சேர்ந்தவன், சத்து இருவரிடமுமிருந்துமே பயத்தைச்சொல்லும் என்றும் கொள்ளவேண்டும். இதுவரை சொல்லியவை மூன்றுமே சமமாக ஒரேசமயத்தில் சப்திக்குமானல் மரணத்தைச் சொல்லுகின்றவைகளாக ஆகும். (எ—று)

(அ—கை) வேறு சிலவற்றையுபதேசிக்கிறார்—

मू० ॥ वृक्षाग्रमध्यमूलेषु गजाश्वरथिकाऽऽगमः ।
दीर्घाब्जमुषिताग्रेषु नरनौशिबिकाऽऽगमः ॥ ७३ ॥

(க—ரை) மரத்தின் நுனியிலிருக்கும் சகுனமானதுயானைமீதேறிய மனிதனுடைய வரவையும், மரத்தின் நடுவிலிருக்கும் சகுனமானது குதிரைமீதேறிய மனிதனுடைய வரவையும், மரத்தின் அடியிலிருக்கும் சகுனமானது தேரின் மீதேரிய மனிதனுடைய வரவையும், செய்கிறது. நீண்டதான வஸ்துவிலிருக்கும் சகுனமானது மனிதன் மீதேறின புருஷனுடைய வரவையும் தாமரைப்பூ முதலியவற்றின் மீதேறிய சகுனமானது ஓடம், கப்பல் முதலியவற்றின் வரவையும், ஒடிந்த நுனியை யுடையவற்றிலிருக்கும் சகுனமானது பல்லக்கின் மீதேறியவனுடைய வரவையும், தெரிவிக்கிறது. (எ—று)

(அ—கை) வேறுவிசேஷத்தை யுபதேசிக்கிறார்—

मू० ॥ शकटेनोन्नतस्थे वा छायास्थे छत्रसंयुते ।
एकत्रिपञ्चसप्ताहात्पूर्वाद्यास्वन्तरासु च ॥ ७४ ॥

(க—ரை) உயர்ந்த விடத்தில் அதாவது: மலை, வீட்டின் நுனி முதலிய விடங்களிலிருக்கும் சகுனமானது வண்டிமீதேறிய மனிதனுடைய வரவையும், நிழலுள்ள விடத்திலிருக்கும்

சகுனமானது குடைபிடித்திருக்கும் மனிதனுடைய வரவையும், சொல்லுகிறது. மேலும், கிழக்கு முதலியதிக்குகளிலிருக்கும் சகுனத்தால் சூசிப்பிக்கப்பட்ட சுபாசுபரூபமான பலன்யாதுண்டோ (அதாவது:—ஒருவனுடைய வரவு, ஒன்றுடன் சேர்க்கை முதலியனவாம்) அந்தப்பலன்களுள் கிழக்குதிக்கிலிருக்கும் சகுனத்தால் சூசிப்பிக்கப்பட்ட சுபாசுபபலன் ஒருநாளிலும்,தெற்குதிக்கிலிருக்கும் சகுனத்தால் சூசிப்பிக்கப்பட்ட சுபாசுபபலன் மூன்றுநாளிலும், மேற்குதிக்கிலிருக்கும் சகுனத்தால் சூசிப்பிக்கப் பட்ட சுபாசுபபலன் 5 நாளிலும், வடக்குதிக்கிலிருக்கும் சகுனத்தால் சூசிப்பிக்கப்பட்ட சுபாசுபபலன் 7நாளிலும் உண்டாகும். இவ்விடத்தில் சுலோகத்தில் **च** என்றசப்தப்பிரயோகம் செய்திருப்பதைக்கொண்டு ஆக்னேய (தென்கிழக்கு) திக்கிலிருக்கும் சகுனத்தால் சூசிப்பிக்கப்படும் சுபாசுபபலன் ஒருநாளிலும், தென்மேற்குதிக்கிலுள்ள சகுனத்தால் சூசிப்பிக்கப்படும் சுபாசுபபலன் 3 நாளிலும் வடமேற்குதிக்கிலிருக்கும் சகுனத்தால் சூசிப்பிக்கப்படும் சுபாசுபபலன் 5 நாளிலும், வடகிழக்கு திக்கிலிருக்கும் சகுனத்தால் சூசிப்பிக்கப்படும் சுபாசுபபலன் 7 நாட்களிலுமுண்டாகும் என்றும் பொருள் கொள்ளவேண்டுமென பட்டோத்பலர் எழுதியிருக்கிறார். (எ—று)

(அ—கை) இவ்விஷயமாகவே வேறுசிலவிசேஷத்தையுபதேசஞ்செய்கிறார்—

**मू० ॥ सुरपतिहुतवहयमनिर्ऋतिवरुणपवनेन्दुशङ्कराः क्रमशः। प्राच्याद्यानां पतयो दिशः पुमांसोऽगनाविदिशः ॥७८॥**

(க—ரை) கிழக்கு முதலியதிக்குகளுக்கு இந்திரன் முதலியோர் அதிபதிகளாவர். அதாவது:—இந்திரன் கிழக்குதிக்கிற்கும், அக்னி தென்கிழக்குதிக்கிற்கும்,யமன் தெற்கு திக்கிற்கும்,ராக்ஷஸர்களுக்கதிபதியான நிருருதி தென்மேற்குதிக்கிற்கும், வருணன் மேற்குதிக்கிற்கும், வாயு வடமேற்குதிக்கிற்கும், சந்திரன் வடக்குதிக்கிற்கும், சிவன் வடகிழக்குதிக்கிற்கும் முறையே அதிபதிகளாவர் என்பதாம். கிழக்கு முதலிய நான்கு திக்குகளும் புருஷர்களென்றும், கோணதிக்குகள் ஸ்திரீகளென்றும் கண்டறியவும்.

இதன் பிரயோஜனம் யாதெனின்:—வந்தமனிதனுக்கு அந்ததினத்தில் எந்ததிக்குடன் ஸம்பந்தமிருக்கின்றதோ அவன் அந்ததிக்கிற்கு அதிபதிஎவனோ அவனுடைய பெயருள்ளவனாகவோ, அந்த திக்பதியினிடத்து பக்தியுள்ளவனாகவோ இருப்பான் எனக் கண்டுகொள்ளவும், திருட்டுமுதலியன நடந்தவிடத்தில் திருட்டுப் போனவஸ்து இருக்குமிடத்தைக் கண்டுகொள்ளவும், சுபாசுப சகுனவிஷயத்தில் லாபாலாப முண்டாகுமிடத்தைக் கண்டு கொள்ளவும், பிரச்னத்திலோ, சிந்தையிலோ அந்ததிக்கில் மனதின்ஸ்திதியைக்கண்டு கொள்ளவும், வியாதியுள்ளவன் விஷயத்தில் அந்த தேவதாராதனத்தினால் வியாதி நிவிருத்தியுண்டாகும் எனக்கண்டுகொள்ளவும் இது உபயோகமுள்ளது என்பதாம். இவ்விஷயத்தில்

वर्णानां ब्राह्मणादीनामुत्तरादिदिशः स्मृताः ।
ऐशान्याद्याश्च विदिशस्तेषां स्त्रीणां प्रकीर्तिताः ॥

பிராம்மணனுக்கு வடக்குதிக்கென்றும், க்ஷத்திரியனுக்கு கிழக்கு திக்கென்றும், வைசியனுக்கு தெற்கு திக்கென்றும், சூத்திரனுக்கு மேற்கு திக்கென்றும், பிராம்மண ஸ்திரீயுக்கு வடகிழக்கு திக்கென்றும், க்ஷத்திரிய ஸ்திரீயுக்கு தென்கிழக்கு திக்கென்றும், வைசிய ஸ்திரீயுக்கு தென்மேற்கு திக்கென்றும், சூத்திர ஸ்திரீயுக்கு வடமேற்கு திக்கென்றும் திக்விபாகத்தை பராசரர் சொல்லியிருக்கிறார். இதன் பிரயோஜனமாவது:—மேற்கூறிய பிரதான திக்குகளில் பிரச்னம் செய்பவனோ, சகுனமோ இருந்தால் புருஷனாற்செய்யப்பட்ட சிந்தை, அல்லது பிறவி என்றும், விதிக்கு (கோணதிக்கு) களிலிருந்தால் ஸ்திரீயினாற்செய்யப்பட்ட சிந்தை, அல்லது பிறவி என்றும் அறிதலும், திருட்டு முதலியவற்றின் விஷயத்தில் சோரனுடைய ஞானமும், இவர்களின் வரவும், அல்லது இவர்களின் சேர்க்கையும் ஏற்படும் என்பதாம்.

(அ—கை) அடுத்த அத்தியாயம் 8 வதுசுலோகத்தில் இன்னின்ன திக்கினின்றும் இன்னின்ன வஸ்துக்கள்வரும் என்று சொல்லப்போகுமிடத்து தென்மேற்கு திக்கின்றும் ஸ்திரீலாபம், குதிரை, அலங்காரம், தூதன், லேகம் (அதாவது: பத்திரிகை) இவைவரும் என்று சொல்லப்போகிறார். அந்த 8வது சுலோகத்

திற் சொல்லப்படும் பத்திரிகை எந்த வஸ்துவால் தயார் செய்யப் பட்டதாக இருக்கும் என்பதை இதனுலுபதேசிக்கிருர்—

मू०॥ तरुताळीविदलांबरसलिलजशरचर्मपट्टलेखाः स्युः ।
द्वात्रिंशत्प्रविभक्ते दिक्चक्रे तेषु कार्याणि ॥ ७६ ॥

(க—ரை) இந்த அத்தியாயம் 29 வது சுலோகத்தில் திக்சக் கிரத்தை 32 விதமாகப்பிரித்து அந்த திக்சக்கிரத்தில் எந்தெந்த சுபாசுபங்களான காரியங்களோ, சகுனங்களோ சொல்லப்பட் டனவோ, இனியும் சொல்லப் படுமோ அவைகள் அந்தந்த ஸ் தானங்களி லுண்டாகின்றன. அவ்வித முண்டாகின்றவைகளுள் தென்மேற்கு திக்கினின்று முண்டாகின்ற வைகளுள் ஒன்ருன லேகமானது (பத்திரிகையானது) கிழக்குதிக்கில் சகுனமிருந்தால் பத்திரிகை மரத்திலெழுதப்பட்டதென்றும், அதாவது: மரத்தின் அவயவமான பட்டையிலோ, இலைகளிலோ எழுதப்பட்டதென் றும், தென்கிழக்கு திக்கில் சகுனமிருந்தால் பன ஓலையிலெழுதப் பட்டதென்றும், தெற்குதிக்கில் சகுனமிருந்தால் ஒருபகுதியில் லாத யாதானுமொன்றில் (பாதிகிழிந்து போன வற்றில் என் றும் சொல்லலாம்) எழுதப்பட்டதென்றும், தென்மேற்கு திக் காலுல் வஸ்திரத்திலென்றும், மேற்கு திக்காலுல் தாமரை இலை முதலியவற்றிலென்றும், வடமேற்கு திக்காலுல், பாணத்தின் பிடியிலென்றும், வடக்குதிக்காலுல் தோலிலென்றும், வடகிழக்கு திக்காலுல் பட்டத்தில் என்றும் கண்டுகொள்ள வேண்டும்.

குறிப்பு—இவ்விதம் ஆசிரியர் சொல்லியிருந்தபோதிலும் இக்காலத்திலோ எல்லாசமாசாரங்களும் காகிதத்திலேயே தயார் செய்யப்படுவதால் மேற்சொன்னபடி அந்தந்தவஸ்துவில் வருவ தென்பது அனுபவத்தில் ஒத்துவராதாகையால் அவரவர் அனுப வத்திற்கு ஒத்தபடி இதைப்பொருள் செய்து கொள்ளவேண்டும்.

(அ—கை) சுபாசுபபலனுண்டாகும் இடத்தை இதனுலுப தேசிக்கிருர்—

मू०॥ व्यायामशिखिनिकूजितकलहांभोनिगडमन्त्रगोशब्दाः।
वर्णास्तु रक्तपीतकक्रूष्णसिताः कोणगा मिश्राः॥ ७७ ॥

(க—ரை) கிழக்குதிக்கில் சகுனமிருக்கும்பொழுது சூசிப்பிக்கப்பட்ட சுபபலனானது யுத்தாதிசமயத்திலென்றும், தென்கிழக்கிலிருக்கும்பொழுது சூசிப்பிக்கப்பட்ட சுபபலனானது அக்னிக்ருகிலென்றும், தெற்கில் எந்தவிடத்தில் ஒலியானதுண்டாகிறதோ அவ்விடத்திலென்றும், தென்மேற்கில் எங்கு சண்டை நடக்கின்றதோ அங்கென்றும், மேற்கில் ஜலமெங்கிருக்கின்றதோ அங்கென்றும், வடமேற்கில் கட்டுப்படுதல் முதலியனவுள்ள இடம் எதுவோ அங்கென்றும், வடக்கில் வேதம் படிக்குமிடமென்றும், வடகிழக்கில் பசுக்களின் சப்தமுள்ளவிடமென்றும் கண்டுகொள்ளவேண்டும். ஆகவே சுலோகத்தின் முற்பாதியிற் கூறப்பட்ட வியாயாமம் முதலியவற்றை உபலக்ஷணமாகக்கொண்டு அம்மாதிரி வகுப்பிற் சேர்ந்த வஸ்துக்கள் நிறைந்த விடத்திலும் சுபாசுப சகுனமுண்டாகுமானல் காரியாகமமோ, ஒருவனுடன் சேர்க்கையோ உண்டாகும் என்றறியவேண்டியதாய் ஏற்படுகிறது. அந்தந்ததிக்குகளினுற் சூசிப்பிக்கப்படும் வர்ணங்களாவன:—கிழக்கினுல் சிவப்பும், தெற்கினுல் பொன்னிறமும், மேற்கினுல் கருப்பும், வடக்கினுல் வெளுப்பும், தென்கிழக்கினுல் சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறமும், தென்மேற்கினுல் பொன்னிறமும் கருப்புங்கலந்தநிறமும், வடமேற்கினுல் கருப்பும் வெளுப்புங் கலந்தநிறமும், வடகிழக்கினுல் வெளுப்பும் சிவப்புங் கலந்தநிறமும் என்பதாம். இதன் பிரயோஜனமாவது—சகுனமானது திரவியத்துடன் கூடி யிருந்தால் திரவியத்துடன் கூடினவனுடைய வரவு சொல்லப்பட்டது. திரவ்வியமானது இத்தகையதென்பது இதனுலுபதேசிக்கப்படுகிறது. இதினின்றும் திருட்டு முதலியன நடந்தவிடத்தில் திரவ்வியவர்ணஞானமும், வஸ்திரவிஷயமான சிந்தையில் வஸ்திரவர்ணக்ஞானமும், இங்நிறமுள்ளதேவதாவிஷயத்திற் பக்திசெய்தலும் உண்டாகும் என்பதாம்.

(அ—கை) சுபாசுப சகுன விஷயத்தில் ஸ்தானத்தை இதனுலுபதேசிக்கிறுர்—

**चिह्नं ध्वजोदग्धमथ श्मशानं दरी जलं पर्वतयज्ञघोषाः ।**
**एतेषु संयोगभयानि विन्द्यादन्यानिवा स्थानविकल्पितानि ॥**

(க—ரை) கிழக்கு திக்கில் சகுனமுண்டானல் பலனுண்டாகுமிடம் கொடிமரத்தை அடையாளமாக வுடையதாகவும், தென்கிழக்கு திக்கிலுண்டானல் பலனுண்டாகுமிடம் நெருப்பினல் பொசுக்கப்பட்டதை அடையாளமாக வுடையதாகவும், தெற்கிலுண்டானல் பலனுண்டாகுமிடம் சுடுகாடாகவும், தென்மேற்கு திக்கிலுண்டானல் பலனுண்டாகுமிடம் குஹையாகவும், மேற்கிலுண்டானல் பலனுண்டாகுமிடம் ஜலமுள்ளவிடமாகவும், வடமேற்கிலுண்டானல் பலனுண்டாகுமிடம் மலையாகவும், (மேட்டுப்பாங்கான விடமென்றும் சொல்லலாம்.) வடக்கிலுண்டானல் பலனுண்டாகுமிடம் யாகம் நடக்குமிடமாகவும், வடகிழக்கிலுண்டானல் பலனுண்டாகுமிடம் மலைக்குன்றுகளடர்ந்த விடமாகவுமிருக்கும். ஆகவே மேற்கூறிய ஸ்தானங்களில் சுபசகுனமுண்டாகுமானல் அடுத்த அத்தியாயம் 1-வது சுலோகத்திற் சொல்லியபடிக்கானவற்றின் சேர்க்கையும், அசுபசகுனமுண்டாகுமானல் அடுத்த அத்தியாயம் 27-வது சுலோகத்திற் சொல்லியபடிக்கான வஸ்துவினிடமிருந்து பயமும் உண்டாகும் என்றும் கண்டுகொள்ள வேண்டும். மேலும், சுபமான சகுனத்தாற் சூசிப்பிக்கப்பட்ட பலன்கள் சுபஸ்தானங்களிலும், அசுபசகுனத்தால் சூசிப்பிக்கப்பட்ட பலன் அசுபஸ்தானங்களிலும் உண்டாகலாம் என்றும் கண்டுகொள்ள வேண்டும். (எ—று)

(அ—கை) கிழக்கு முதலிய திக்குகளிலுண்டாகும் சுபாசுப சகுனங்கள் மூலம் ஸ்திரீகள் இன்னின்னர் என்றறியும்முறையையுபதேசிக்கிறர்—

**स्त्रीणां विकल्पा बृहती कुमारी व्यंगा विगन्धा त्वथ नीलवस्त्रा।**
**कुस्त्री प्रदीर्घा विधवा च ताश्च संयोगचिन्तापरिवेदिकाः स्युः**

(க—ரை) கிழக்கில் பெரிய சரீரமுடைய ஸ்திரீ யென்றும், தென்கிழக்கில் கன்னிகையான ஸ்திரீ என்றும், தெற்கில் அங்கஹீனையான ஸ்திரீ என்றும், தென்மேற்கில் கெட்ட நாற்றமுள்ள ஸ்திரீ என்றும், மேற்கில் கருத்த வஸ்திரமுள்ள ஸ்திரீ என்றும், வடமேற்கில் கெட்ட நடத்தையுள்ள ஸ்திரீயென்றும், வடக்கில் மிக்க வ்யரமுள்ள ஸ்திரீயென்றும், வடகிழக்கில் விதவை ஸ்திரீ

யென்றும் அறியவேண்டும். இந்தச் சுலோகத்தை கிழக்கு முதலிய நான்கு திக்குகளில் மட்டும் பொருத்திப் பொருள் கொள்ளலாமென பட்டோத்பலர் எழுதியிருக்கிறார். அதாவது:—வடகிழக்கில் பெரிய சரீரமுடைய குமாரியென்றும், தென்கிழக்கு திக்கில் வ்யங்கா விகந்தா என்றும், நிருருதி திக்கில் நீலவஸ்திரா குஸ்திரீ என்றும்,வடமேற்கில் ப்ரதீர்க்கா குஸ்திரீ என்றும் பொருள் கொள்ளவேண்டும் என்பதாம். இதன் பிரயோஜனமாவது:—கிழக்கு முதலிய திக்குகளில் அவர்களுடன் சுபமான ஸம்யோகமுண்டானுல் சிந்தையை யுண்டாக்குமென்றும், திருட்டு முதலியன நேர்ந்தால் இம்மாதிரியான ஸ்திரீகளே திருடர்களாக இருப்பார்களென்றும், கண்டுகொள்வது முதலியனவாம். (எ-று)

(அ—கை) மேற்சொன்ன விஷயமாகவே மற்றும் சில விசேஷத்தை யுபதேசிக்கிறார்—

मू० ॥ पृच्छासु रूप्यकनकाऽतुरभामिनीनां
मेषाव्ययानमखगोकुलसंश्रयासु ।
न्यग्रोधरक्ततरुरोध्रककीचकाख्या
श्चूतद्रुमाः खदिरबिल्वनगाऽर्जुनाश्च ॥ ८० ॥

(க—ரை) பிரச்ன ஸமயத்தில் சகுனமோ, பிரச்னம் கேட்பவனோ கிழக்கு திக்கிலிருந்தால் வெள்ளியைப்பற்றிய கேள்வி என்றும், தென்கிழக்கிலிருந்தால் சுவர்ணத்தைப்பற்றிய கேள்வியென்றும், தெற்கிலிருந்தால் வியாதி பீடிதனைப்பற்றிய கேள்வி யென்றும், தென்மேற்கிலிருந்தால் ஸ்திரீயைப்பற்றிய கேள்வி யென்றும், மேற்கிலிருந்தால் செம்மறியாட்டைப்பற்றிய கேள்வி யென்றும்,வடமேற்கிலிருந்தால் குதிரை முதலிய வாகனத்தைப்பற்றிய கேள்வி யென்றும், வடக்கிலிருந்தால் யாகத்தைப்பற்றிய கேள்வி யென்றும், வடகிழக்கிலிருந்தால் கோகுலத்தைப்பற்றிய கேள்வி யென்றும் சொல்லவேண்டும். அவ்விதமே கிழக்கில் ஆலமரமென்றும், தென்கிழக்கில் சிவந்தநிறமுள்ளமர மென்றும், தெற்கில் பாடலிமர மென்றும், தென்மேற்கில் மூங்கிலென்றும், மேற்கில் மாமர மென்றும், வடமேற்கில் கருங்காலிமர மென்றும்,

வடக்கில் பில்வமர மென்றும், வடகிழக்கில் அர்ஜுன விருக்ஷ மென்றும் அறியவேண்டும். இதன் பிரயோஜனம் — கிழக்கு முதலிய திக்குகளில் சுபசகுனமிருந்தால் வெள்ளி முதலியவற்றின் லாபமென்றும், அசுபசகுனமிருந்தால் அவற்றின் நாசமென்றும் அறிவதுடன், இவற்றைக்கொண்டு சேர்க்கையோ, விட்டுப்பிரிதலோ, திருடன் முதலியோரின் ஸ்தானத்தை அறிதலுமோ வாகும் என்பதாம். (எ—று)

மிச்ரகாத்யாயம் என்ற பொதுவிதி முற்றிற்று.

---

## அந்தரசக்கிராத்யாயம் 2.

அவதாரிகை—வடகிழக்கு திக்கு தொடங்கி தென்கிழக்கு திக்குவரை எடுத்துக்கொண்டு இதில் 1-வது யாமத்தில், வடகிழக்கு திக்கானது முக்தசூரியா என்றும், நேர்கிழக்கு திக்கானது ப்ராப்தசூரியா என்றும், தென்கிழக்கு திக்கானது ஏஷ்யத் சூரியா என்றும், சொல்லிப் பிறகு தென்கிழக்கு திக்கு தொடங்கி (1) நேர் தெற்கு, (2) தென்மேற்கு, (3) நேர் மேற்கு, (4) வடமேற்கு, (5) நேர் வடக்கு ஆகிய இவ்வைந்தும் சாந்தா என்றும் சொல்லப்பட்டது. இவ்விதமே 2-வது யாமத்தில் நேர் கிழக்கு திக்கானது முக்தசூரியா என்றும், தென்கிழக்கு திக்கானது பிராப்தா சூரியா என்றும், நேர் தெற்கு திக்கானது ஏஷ்யத் சூரியாவென்றும், சொல்லிப் பிறகு அதற்குமேலுள்ள (1) தென்மேற்கு, (2) நேர் மேற்கு, (3) வடமேற்கு, (4) நேர் வடக்கு, (5) வடகிழக்கு ஆகிய இந்த 5 திக்குகளும் சாந்தா என்றும் சொல்லப்பட்டது. இவ்விதமே 3-வது யாமத்தில் தென்கிழக்கு திக்கானது முக்தசூரியா என்றும், நேர் தெற்கு திக்கானது பிராப்த சூரியா என்றும் தென்மேற்கு திக்கானது ஏஷ்யத் சூரியா என்றும் சொல்லிப் பிறகு (1) நேர் மேற்கு, (2) வடமேற்கு, (3) நேர் வடக்கு, (4) வடகிழக்கு, (5) நேர் கிழக்கு ஆகிய இவ்வைந்தும் சாந்தா என்றும் சொல்லப்பட்டது. இவ்விதமே 4-வது யாமத்தில் நேர் தெற்கு திக்கானது முக்தசூரியா என்றும், தென்மேற்கு திக்கானது பிராப்த சூரியா என்றும், நேர் மேற்கு திக்கானது ஏஷ்யத் சூரியா என்றும் சொல்லிப் பிறகு நேர் மேற்கு

திக்கு தொடங்கி (1) வடமேற்கு, (2) நேர் வடக்கு, (3) வடகிழக்கு, (4) நேர் கிழக்கு, (5) தென்கிழக்கு ஆகிய 5 திக்குகளும் சாந்தா என்றும் சொல்லப்பட்டது. இவ்விதம் உபதேசித்ததிலிருந்து ஒவ்வொரு யாமத்திலும் ஏஷ்யத் சூரியா என்ற திக்குக்குப் பிறகுள்ள 5 திக்குகளும் சாந்தா என்ற திக்குகளாகும் என்றேற்பட்டது. இவ்விதம் சென்ற அத்தியாயம் 12-வது சுலோகத்தி லுபதேசித்து பிறகு நேர்கிழக்கு திக்கிற்கும் தென்கிழக்கு திக்கிற்கும் இடையிலுள்ள பாகங்களை 3 பங்காகவும், தென்கிழக்கு திக்கிற்கும் நேர் தெற்கு திக்கிற்கும் இடையிலுள்ள பாகங்களை 3 பங்காகவும், நேர் தெற்கு திக்கிற்கும் தென்மேற்கு திக்கிற்கும் இடையிலுள்ள பாகங்களை 3 பங்காகவும், இவ்விதமே மேலுள்ள விடங்களிலும் ஒரு திக்கிற்கும் மற்றொரு திக்கிற்கும் இடையிலுள்ளபாகங்களை மூன்று மூன்று பங்காகவும் பிரித்து உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இதினின்று கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய பிரதான திக்குகள் 4; தென்கிழக்கு,தென்மேற்கு, வடமேற்கு,வடகிழக்கு முதலிய கோணதிக்குகள் 4; ஆக 8 திக்குகளாகின்றன. இவ்வெட்டு திக்குகளிலும் ஒவ்வொரு திக்குகளிலும் இடையிலுள்ள பிரிவுகள்(அந்தரங்கள்)மூன்று மூன்று வீதம் 24ம் சேர்த்து மொத்தமாய் திக்குகள் 32 பாகங்களாகவும் உபதேசிக்கப்பட்டன. அவ்வித முபதேசித்ததில் சென்ற அத்தியாயம் 29-வது சுலோகந் தொடங்கி 34-வது சுலோகம் முடியவுள்ள 6 சுலோகங்களால் அந்தந்த பாகங்களிலுண்டாகும் சகுனமூலம் கண்டுகொள்ள வேண்டிய சில பல விசேஷங்களும் உபதேசிக்கப்பட்டன. இந்த அத்தியாயத்தால் முற்கூறிய முறைப்படி அந்தந்த யாமத்திற்குத் தக்கபடி கிழக்கு முதலிய திக்குகள் சாந்தா முதலிய பெயருள்ளவைகளாக ஆகும்பொழுது சாந்தா என்ற பெயரையடைந்த கிழக்கு முதலிய திக்கினின்றும் அதற்கடுத்த திக்வரையுள்ள பாகங்களில் முற்கூறிய மூன்று மூன்று உட்பிரிவுகளும், ஆரம்பதிக்கும் அதற்கடுத்த திக்கும் சேர்ந்து மொத்தம் 5 பாகங்களாக ஆவதால் முற்கூறியபடி சாந்தா என்ற கிழக்கு திக்கு தொடங்கி அவ்வைந்து பாகங்களிலுமுண்டாகும் பலனுபதேசிக்கப்படுகிறது. ஆனதுபற்றியே தான் இந்த அத்தியாயத்

திற்கு **अन्तरचक्रम्** (அந்தர சக்கிரம்) என்று பெயரிடப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த அந்தர சக்கிராத்தியாயத்தில் எழுதப்படும் பலன்களைப் பார்க்கும் பொழுது மேற்கண்டபடி யாமத்திற்குத் தக்கபடி திக்கின் அந்தரங்களை (இடையிலுள்ள பாகங்களைப்) பிரித்து அறிந்து கொண்டு பிறகு இனி எழுதப்படும் பலனையும் பார்க்கவேண்டும் என்றும் ஏற்படும்.

அவற்றுள் இந்த முதலாவது சுலோகத்தால் சாந்தா என்ற பெயரையடைந்த கிழக்குதிக்கில் அதாவது: பகல் 3 வது யாமத்தில் தென்கிழக்கு திக்கு முக்தசூரியாவாகவும், நேர்தெற்கு திக்கு பிராப்தசூரியா வாகவும், தென்மேற்குதிக்கு ஏஷ்யத்சூரியாவாகவும் ஆகுமாதலால் அப்பொழுது நேர் கிழக்கு திக்கானது சாந்தா என்ற பெயரை யடைகிறது. இவ்விதமாகும்பொழுது சாந்தா என்ற நேர் கிழக்கின் 1 பாகம், அதற்கடுத்தபடியிலுள்ள 3 பாகங்கள் தென்கிழக்கு திக்கின் 1 பாகம் ஆக 5 பாகங்களேற்படுகின்றன. இவ்வைந்து பாகங்களுக்குள்ளும் 1-வது பாகந்தொடங்கி 5-வது பாகம் முடியவுள்ள விடங்களிலுண்டாகும் சகுனபலன் இன்னின்னவை என்பதை இந்த முதலாவது சுலோகந்தொடங்கி 3-வது சுலோகம் முடியவுள்ள 3 சுலோகங்களாலு முபதேசிக்கிறார். (இவ்விதமே மேலுள்ள விடங்களிலும் காண்க)—

**मू॰ ॥ ऐन्द्र्यां दिशि शान्तायां विरुवन्नृपसंश्रितागमं वक्ति।**
**शकुनः पूजालाभं मणिरत्नद्रव्यसंप्राप्तिम् ॥ १ ॥**

(க—ரை) அவதாரிகையிற் சொன்னபடி சாந்தையாகவான கிழக்குதிக்கில் சப்திக்கின்ற சகுனமானது ராஜாசிரித புருஷனுடைய வரவைச்சொல்லுவதுடன் அவனிடமிருந்தே பூஜாலாபத்தையும்,மணி,ரத்னம், மற்றுமுள்ள சுவர்ணம் முதலிய திரவியங்கள் இவைகளுடைய பிராப்தியையும் சொல்லுகிறது. அச்சகுனம் சுபமானால் சுபபலனும், மத்தியமமானால் மத்யமபலனும், அசுபமானால் கொஞ்சம் சுபபலனும் உண்டாகும். இவ்விதமே மேலுள்ள விடங்களிலும் காண்க. (எ—று)

(அ—கை) வேறு பலனுபதேசிக்கப்படுகின்றது—

मू० ॥ तदनन्तरदिशि कनकाऽऽगमो भवेद्वाञ्छितार्थसिद्धिश्च ।
आयुधधनपूगफलाऽऽगमस्तृतीये भवेद्भागे ॥ २ ॥

(க—ரை) முன்சொன்ன சாந்தா திக்கிற்கு அடுத்துள்ள 2வது அந்தர திக்கில் சகுனமிருந்தால் கனக(ஸ்வர்ண)லாபமும், விரும்பப்பட்ட பொருளின் சித்தியும் உண்டாகும். அதற்கடுத் தபடியிலுள்ள 3வது அந்தர திக்கில் ஆயுதம், தனம், பாக்கு. பழம் இவற்றின் லாபமுண்டாகும்.

(அ—கை) வேறு பலனுபதேசிக்கப் படுகின்றது—

मू० ॥ स्निग्धद्विजस्य सन्दर्शनं चतुर्थे तथाऽऽहिताग्नेश्च ।
कोणेऽनुजीविभिक्षुप्रदर्शनं कनकलोहाप्तिः ॥ ३ ॥

(க—ரை) முற்கூறியபடி 4வது திக்விபாகத்தில் சகுனமுண் டானுல் இஷ்டனுன பிராம்மணனுடையவும், அவ்விதமே ஆஹி தாக்னியினுடையவும் தரிசனமுண்டாகும். 5 வதான திக்விபா கத்தில் (அதாவது: தென்கிழக்கில்) சகுனமுண்டானுல், வேலைக் காரனுடையவும், பிக்ஷு(ஸன்யாஸி)வினுடையவும் தரிசனமும், சுவர்ணம், இரும்பு இவற்றின் பிராப்தியும் உண்டாகும். (எ-று)

(அ—கை) வேறு அந்தரங்களிலுண்டாகும் சகுனபலனுப தேசிக்கப்படுகிறது—

मू० ॥ याम्येनाऽऽद्ये नृपपुत्रदर्शनं सिद्धिरभिमतस्याप्तिः ।
परतः स्त्रीधर्माप्तिः सर्षपयवलब्धिरप्युक्ता ॥ ४ ॥

(க—ரை) தென்கிழக்குதிக்கு சாந்தா என்றுகும் பொழுது அதாவது:—4வது யாமத்தில் நேர்தெற்கு திக்கானது முக்தசூரி யா வாகவும், தென்மேற்கு திக்கானது பிராப்த சூரியாவாகவும், நேர்மேற்குதிக்கானது எஷ்யத்சூரியாவாகவும், ஆவதால் தென் கிழக்கு திக்கானது சாந்தா என்ற திக்காக ஆகிறது என்பதாம். அந்த சாந்தா திக்கின் முதல்பாகமான அதாவது: தென்கிழக்கு திக்கிற்கு அடுத்துள்ள 1வது பாகத்தில் சகுனமுண்டானுல் ராஜ புத்திரதரிசனமும், காரியசித்தியும், அபீஷ்டமான அர்த்தத்தின் பிராப்தியும் உண்டாகும். இதற்கடுத்துள்ள இரண்டாவது பா

கத்தில் சுபசகுனமுண்டானால் ஸ்திரீபிராப்தியும், தர்மப்பிராப்தியும் உண்டாகும். வெண்கடுகு, யவதான்னியம் இவற்றின் லாபமுமுண்டாகுமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. (எ—று)

(அ—கை) அதற்கடுத்துள்ள பாகத்திலுண்டாகும் சகுன பலன் இதனாலுபதேசிக்கப்படுகிறது—

**மூ० ॥ कोणाच्चतुर्थखंडे लब्धिर्द्रव्यस्य पूर्वनष्टस्य ।**
**यद्वा तद्वा फलमपि यात्रायां प्राप्नुयाद्याता ॥ ५ ॥**

(க—ரை) இதுவரை சொல்லப்பட்டதற்கு 3 வதும் தென்கிழக்கினின்று நான்காவதுமான பாகத்தில் சுபசகுனமுண்டானால் முன்னர் நஷ்டமான வஸ்துவினுடைய லாபமானது உண்டாவதுடன் யாத்திரை செய்பவன் தனதுயாத்திரையில் நேரவேண்டிய பலன் என்னென்ன உண்டோ அவையாவற்றையும் அடைகிறான். (எ—று)

(அ—கை) நேர் தெற்கு திக்கிலும், அதற்கடுத்துள்ள மூன்று பாகங்களிலுமுண்டாகும் சகுனபல னுபதேசிக்கப்படுகிறது—

**மூ० ॥ यात्रासिद्धिः समदक्षिणेच शिखिमहिषकुक्कुटाप्तिश्च ।**
**याम्याद्द्वितीयभागे चारणसंगः शुभं प्रीतिः ॥ ६ ॥**

(க—ரை) ஸமமான தக்ஷிணபாகத்தில் அதாவது: நேர்தெற்குதிக்கில் சுபசகுனமுண்டானால் யாத்திராசித்தியும், மயில், எருமை, கோழி இவற்றின் பிராப்த்தியும் உண்டாகும். நேர்தெற்கிற்கு அடுத்த இரண்டாவது பாகத்தில் (அந்தரத்தில்) சுபசகுனமுண்டானால் நர்த்தகன், நட்டுவக்காரன் முதலியோருடன் சேர்க்கையும், சுபமும் தர்மாதிகளில் ஒருபற்றுதலு முண்டாகும்.

(அ—கை) அதற்குமேலுள்ள 3 வதுபாகத்தில் காணப்படும் சகுனபல னுபதேசிக்கப்படுகிறது—

**மூ० ॥ ऊर्ध्वे सिद्धिः कैवर्तसंगमो मीनतित्तिराद्याप्तिः ।**
**प्रव्रजितदर्शनं तत्परे च पक्वान्नफललब्धिः ॥ ७ ॥**

(க—ரை) நேர்தெற்குதிக்கின் 3வது பாகத்தில் சுபசகுனமானது உண்டானால் காரியசித்தியும், வேடனுடன் சேர்க்கை

யும், மீன் தித்திரபக்ஷி முதலியவற்றின் பிராப்தியும், கத்தியால் வெட்டுகின்றவனுடைய சேர்க்கையும் உண்டாகும். அதற்கு மேலுள்ளதும் தென்கிழக்கிற்கு நான்காவதுமான பாகத்தில், சுபசகுனமுண்டானல் ஸன்னியாஸி, அல்லது விரதானுஷ்டானஞ் செய்பவன் இவருடையதரிசனமும், பக்வமான அன்னம், பழம் இவற்றின் லாபமும் உண்டாகும். (எ—று)

(அ—கை) தென்மேற்கு திக்கிலுண்டாகும் சகுனபலன் சொல்லப்படுகிறது—

**மூ॰ ॥ नैर्ऋत्यां स्त्रीलाभस्तुरगाऽलंकारदूतलेखाप्तिः ।**
**परतोऽस्य चर्मतच्छिल्पिदर्शनं चर्ममयलब्धिः ॥ ८ ॥**

(க—ரை) தென்மேற்கு திக்கானது சாந்தமாகவாகி அதில் சுபமான சகுனமானதுண்டானல் ஸ்திரீலாபமும், குதிரை, அலங்காரம், தூதன், கடிதம் இவற்றின் பிராப்தியும் உண்டாகும். இதற்கு அடுத்த திக்விபாகத்தில் சுபசகுனமானது உண்டானல், தோலின் தரிசனமும் தோல்வேலை செய்பவனின் தரிசனமும், தோலாலாய பாத்திரத்தின் லாபமும் உண்டாகும். (எ—று)

(அ—கை) தென்மேற்கு திக்கினின்றும் 3 வது திக்கிலுண்டாகும் சகுனபலன் சொல்லப்படுகிறது—

**மூ॰ ॥ वानरभिक्षुश्रवणाऽवलोकनं नैर्ऋतात्तृतीयांशे ।**
**फलकुसुमदन्तघटिताऽऽगमश्च कोणाच्चतुर्थांशे ॥ ९ ॥**

(க—ரை) தென்மேற்கு திக்கினின்றும் மூன்றுவது பாகமான திக்விபாகத்தில் சுபசகுனமானது உண்டானல் குரங்கு, சன்னியாஸி, பௌத்தன் இவர்களின் தரிசனம் உண்டாகிறது. மேற்கூறிய திக்கிற்கு 4 வது திக்விபாகத்தில் சுபசகுனமுண்டானல் மாம்பழம் முதலியபழங்களுடையவும், புஷ்பங்களுடையவும், தந்தங்களாற் செய்ப்பட்ட ஸாமான்களுடையவும் வரவானது உண்டாகின்றது. (எ—று)

(அ—கை) மேற்கு திக்கு சாந்தமாகவாகி அதிலும், அதற்குப் பிறகுள்ள திக்விபாகங் களிலுமுண்டாகும் சகுனபல னுபதேசிக்கப்படுகிறது—

मू० ॥ वारुण्यामर्णवजातरत्नवैडूर्यमणिमयप्राप्तिः ।
परतोऽतः शबरव्याधचौरसंगः पिशितलब्धिः ॥ १० ॥

(க—ரை) நேர்மேற்கு திக்கில் முற்கூறியபடி சகுனமுண்டானால் சமுத்திரத்திலுண்டான ரத்தினங்களுடையவும், வைடூர்யங்களுடையவும், வேறுமணிகளுடையவும், மணிமயமான பாத்திரங்களுடையவும் பிரப்தியானது உண்டாகின்றது. அதற்குப் பிறகுள்ள திக்விபாகத்தில் சகுனமுண்டானால் மீன்பிடிப்பவர்களோடும், வேடர்களோடும், திருடர்களோடும் சேர்க்கையும், மாம்ஸலாபமும் உண்டாகும். (எ—று)

(அ—கை) நேர்மேற்கு திக்கினின்றும் 3வது, 4வது திக்விபாகத்திலுண்டாகும் சகுனபலன் சொல்லப்படுகின்றது—

मू० ॥ परतोपि दर्शनं वातरोगिणां चन्दनागरुप्राप्तिः ।
आयुधपुस्तकलब्धिस्तद्वृत्तिसमागमश्चोर्ध्वम् ॥ ११ ॥

(க—ரை) முற்கூறியதற்கடுத்துள்ள திக்விபாகத்தில் சுபசகுன முண்டானால் வாயுவியாதியாற் பீடிக்கப்பட்டவர்களின் தரிசனமும், சந்தனம், அகரு (அகில்கட்டை) இவற்றின் பிராப்தியும் உண்டாகும். இதற்கடுத்துள்ள திக்விபாகத்திலுண்டாகும் சகுனத்தால் ஆயுதம்,புஸ்தகம் இவற்றின் லாபமும்,ஆயுதம் புஸ்தகம் இவற்றையே தொழிலாகவுடைய வர்களுடன் சேர்க்கையும் உண்டாகும். (எ—று)

(அ—கை) வடமேற்கு திக்கானது சாந்தாவாக ஆகி அதிலும் அதற்கடுத்த பாகத்திலும் சுபசகுனமுண்டானால் ஏற்படும் பலனுபதேசிக்கப்படுகிறது—

मू० ॥ वायव्ये फेनकचामरौर्णिकाप्तिस्समेति कायस्थः ।
मृन्मयलाभोऽन्यस्मिन्वैतालिकडिण्डिभाण्डानाम्॥१२॥

(க—ரை) சாந்தாவாகவான வடமேற்கு திக்கில் சகுனமுண்டானால் நுரையினுடையவும், சாமரத்தினுடையவும்,கம்பளம் முதலியவற்றினுடையவும் பிராப்தியுண்டாவதுடன் காயஸ்தனு (கணக்குபிள்ளை) டைய வரவு மேற்படுகிறது. வடமேற்கு திக்கிர்க்கு

அடுத்துள்ள திக்விபாகத்தில் சுபசகுனமுண்டானால் மண்ணாலாய பதார்த்தங்களின் லாபமும், பௌத்தாசாரியனுடையவும், ஒரு வகை வாத்தியத்தினுடையவும் லாபமும் உண்டாகின்றது.

(அ—கை) வடமேற்கு திக்கிற்கு அடுத்துள்ள 2,3வது பாகத்திலுள்ள சகுனபலனுபதேசிக்கப்படுகிறது—

**மூ०॥ वायव्याच्च तृतीये मित्रेण समागमो धनाप्तिश्च।**
**वस्त्राऽश्वाऽऽप्तिरतः परमिष्टसुहृत्संप्रयोगश्च ॥ १३ ॥**

(க—ரை) வடமேற்கு திக்கானது சாந்தையாகவாகி அதினின்றும் 3வது திக்விபாகத்தில் அதாவது: வாயுதிக்கிற்கு அடுத்துள்ள 2வது பாகத்தில் சுபசகுனமானது உண்டானால் மித்திரனுடன் சேர்க்கையும், தனப்பிராப்தியும் உண்டாகும். அதற்கடுத்துள்ள திக்விபாகத்தில் சுபசகுனமுண்டானால் வஸ்திரம்,குதிரை, இவற்றின் பிராப்தியும், இஷ்டமித்திரனுடன் சேர்க்கையும் உண்டாகும். (எ—று)

(அ—கை) நேர் வடக்கு திக்கானது சாந்தையாகவாகி அதில் சகுனமுண்டாவதன் மூலம் நேரும் பலனுபதேசிக்கப்படுகிறது—

**மூ०॥ दधितण्डुललाजानां लब्धिरुदग्दर्शनञ्च विप्रस्य।**
**अर्थाऽवाप्तिरनन्तरमुपगच्छति सार्थवाहश्च ॥ १४ ॥**

(க—ரை) நேர்வடக்கு திக்கானது சாந்தையாகவாகி அதில் சுபசகுனமுண்டானால் தயிர், அரிசி, பொரி, இவற்றின் லாபமும், பிராம்மண தரிசனமும், உண்டாகும். அதற்கடுத்துள்ள திக்விபாகத்தில் சுபசகுனமுண்டானால் அர்த்தப்ராப்தியும் ஒரு கூட்டத்தலைவன் வருதலும் நடைபெறும். (எ—று)

(அ—கை) அதற்கடுத்துள்ள 2,3வது திக்விபாகங்களிலுண்டாகும் சகுனபலனுபதேசிக்கப் படுகின்றது—

**மூ०॥ वेश्यावटुदाससमागमः परे शुक्लपुष्पफललब्धिः।**
**अत ऊर्ध्वं चित्रकरस्य दर्शनं चित्रवस्त्राऽऽप्तिः ॥ १५ ॥**

(க—ரை) வடக்கு திக்கிற்கு அடுத்துள்ள 2வது திக்விபாகத்தில் சுபசகுனமுண்டானால் வேசி, பிராம்மணப் பிரும்மசாரி,

வேலைக்காரன் இவர்களின் வரவும், வெண்ணிறமான புஷ்பம், பலம் இவற்றின் பிராப்த்தியும் உண்டாகும். அதற்கடுத்துள்ள 3வது திக்விபாகத்தில் சுபசகுனமுண்டானால் சித்திரம் எழுதுகின்றவனுடைய தரிசனமும், சித்திரமான வஸ்திரத்தின் பிராப்தியும் உண்டாகும். (எ—று)

(அ—கை) வடகிழக்கு திக்கானது சாந்தையாகவாகி அதிலும் அதற்கடுத்துள்ள திக்விபாகத்திலு முண்டாகும் சகுனபலனுபதேசிக்கப்படுகின்றது—

மூ॰ ॥ ऐशान्यां देवलकोपसंगमो धान्यरत्नपशुलब्धिः ।
प्राक्प्रथमे वस्त्राप्तिः समागमश्चापि बंधक्या ॥ १६ ॥

(க—ரை) வடகிழக்கு திக்கில் சுபசகுனமுண்டானால் கோயிற்பூஜை செய்பவனுடன் சேர்க்கையும், தான்னியம், ரத்தினம், பசு, இவற்றின் லாபமும் உண்டாகும். அதற்கடுத்துள்ள 1வது திக்விபாகத்தில் சுபசகுனமுண்டானால் வஸ்திரப்பிராப்தியும், வேசியினுடைய வரவும் உண்டாகும். (எ—று)

(அ—கை) வடகிழக்கு திக்கிற்கு அடுத்துள்ள 2, 3-வது திக்விபாகத்திலுண்டாகும் சுபமானசகுன பலன்கள் உபதேசிக்கப்படுகின்றன—

மூ॰ ॥ रजकेन समायोगो जलजद्रव्यागमश्च परतोऽन्तः ।
हस्त्युपजीविसमाजश्चास्माद्धनहस्तिलब्धिश्च ॥ १७ ॥

(க—ரை) வடகிழக்கு திக்கிற்கு அடுத்துள்ள 2-வது திக்விபாகத்தில் சுபசகுனமுண்டானால் வஸ்திரங்களுக்குச் சாயம் போடுபவனுடன் சேர்க்கையும், ஜலத்திலுண்டான திரவியங்களுடைய வரவும் உண்டாகும். அதற்கடுத்துள்ள 3-வது திக்விபாகத்தில் சுபசகுனமுண்டானால் யானையைக்கொண்டு ஜீவிப்பவர்களுடைய சேர்க்கையும், மேற்கூறியவர்களிடமிருந்து தனம், யானை இவற்றின் லாபமும் உண்டாகும். (எ—று)

(அ—கை) இதுவரை சொல்லிய 32 விதமான திக்விபாக விஷயமாகவே வேறு விசேஷமானது உபதேசிக்கப்படுகின்றது—

मू० ॥ द्वात्रिंशत्प्रविभक्तं दिक्चक्रं वास्तुबंधनेप्युक्तम् ।
अरनाभिस्थैरन्तः फलानि नवधा विकल्प्यानि ॥ १८ ॥

(க—ரை) இந்த பிருஹத்ஸம்ஹிதை 52-வது அத்தியாயம் 55-வது சுலோகந்தொடங்கி 56-வது சுலோகம் முடியவுள்ள 2 சுலோகங்களால் 32 பாகங்களாகப் பிரிக்கப்பட்ட வாஸ்து பந்தன விஷயத்தில் வாஸ்துவுக்கு கிழக்கு முதலிய ஒவ்வொரு திக்கிலும் 8 துவாரங்கள் பிரித்து எவ்விதம் உபதேசிக்கப்பட்டனவோ அவ்விதமே திக்சக்கிரத்தையும் 32 விதமாகப் பிரித்துக் கொண்டு அந்தப் பாகத்திலேற்படுவதாக இங்கு சொல்லிய சகுன மூலம் நேரும் பலனை யறிந்து கொள்ளவேண்டும். அவ்விதம் 32 விதமாக ஏற்படுத்திய சதுரச்ர சக்கிரத்தினுடைய 4 மூலைகளும், நாலு நடுவிலுள்ள பாகங்களும் ஆரங்களென்றும், சக்கிரத்தின் நடுவிலுள்ளது நேமி (குடம்) என்றும் சொல்லப்படும். அங்குண்டாகின்ற சகுனங்களாலும் * 9 விதமாகப் பிரித்துப் பலன் கண்டு கொள்ளவேண்டும். அதன் விவரம் கட்டத்தில் காண்க. ஆரம் என்பது வண்டிச்சக்கிரத்திலுள்ள குறுக்குக் கால்களாகும். நேமி என்பது வண்டியின் நடுவிலுள்ள குடமாகும். மேலும், சக்கிரத்தின் நடுவிலுள்ள ஒவ்வொரு சக்கிரத்திலும் 8-8 வீதம் மொத்தம் 32 பிரிவு ஏற்படுகின்றது. இதிலும் அந்தந்த யாமத்திற்குத் தக்கபடி முக்த சூரியா, பிராப்த சூரியா, ஏஷ்யத் சூரியா, அதற்கு மேலுள்ள 5ம் சாந்தா என முன்னர் சொன்ன முறைப்படி ஏற்படுத்திக்கொண்டு பின்னர் அந்தந்த விடத்திற்குத் தக்கபடி எழுதியிருக்கும் பலனைப் பார்க்கவும்.

---

* 9 விதமாகப்பிரித்துப் பலன் காணும் முறையாவது:—1. குடத்திலுண்டாகும் சகுனம். 2. கிழக்கிலுள்ள அரத்திலுண்டாகும் சகுனம். 3. தென்கிழக்கிலுள்ள அரத்திலுண்டாகும் சகுனம். 4. தெற்கிலுள்ள அரத்திலுண்டாகும் சகுனம். 5. தென்மேற்கிலுள்ள அரத்திலுண்டாகும் சகுனம். 6. மேற்கிலுள்ள அரத்திலுண்டாகும் சகுனம். 7. வடமேற்கிலுள்ள அரத்திலுண்டாகும் சகுனம். 8, வடக்கிலுள்ள அரத்திலுண்டாகும் சகுனம். 9. வடகிழக்கிலுள்ள அரத்திலுண்டாகும் சகுனம்.




குறிப்பு—இக்கட்டத்தில் வ-கி என்பது வடகிழக்கையும், கி என்பது கிழக்கையும், தெ-கி என்பது தென்கிழக்கையும், தெ என்பது தெற்கையும், தெ-மே என்பது தென்மேற்கையும், மே என்பது மேற்கையும், வ-மே என்பது வடமேற்கையும், வட என்பது வடக்கையும் குறிக்கும்.

(அ—கை) நாபி என்ற குடத்திலுண்டாகும் சகுனபலனும் கிழக்கு திக்கிலுள்ள ஆரக்காலிலுண்டாகும் சகுனபலனு முபதேசிக்கப்படுகிறது:—

**मू० ॥ नाभिस्थे बन्धुसुहृत्समागमस्तुष्टिरुत्तमा भवति ।**
**प्राग्रक्तपट्टवस्त्रागमस्त्वरे नृपतिसंयोगः ॥ १९ ॥**

(க—ரை) சக்கிரத்தின் நாபியி(குடத்தி)ல் சகுனமுண்டானால் பந்து, மித்திரன் இவர்களின் வரவும், உத்தமமான சந்தோஷமும் உண்டாகும். முதல் பாகதிலுள்ள (அதாவது: நேர்கிழக்கிலுள்ள) யாதொரு ஆரக்காலுண்டோ அங்கு சகுனமுண்டானால், ரக்தம்,

பட்டு, வஸ்திரம் இவற்றின் வரவும், ராஜனுடன் சேர்க்கையும் உண்டாகும். (எ—று)

(அ—கை) தென்கிழக்கிலுள்ள அரத்திலுண்டாகும் சகுன பலனை யுபதேசிக்கிறார்—

**மூ॰॥ आग्नेये कौलिकतक्षपारिकर्माश्वसूतसंयोगः ।**
**लब्धिश्च तत्कृतानां द्रव्याणामश्वलब्धिर्वा ॥ २० ॥**

(க—ரை) தென்கிழக்கு திக்கிலுள்ள ஆரக்காலில் சகுன முண்டானால் நெசவு செய்கின்றவனுடனும், தச்சனுடனும், கணக்குச் சரிபார்ப்பவ (ஆடிடர் என்று சொல்லலாம்) னுடனும், குதிரையினுடனும், தேர்பாக (வண்டியோட்டி என்றும் சொல்லலாம்) னுடனும் சேர்க்கை யுண்டாகும். அல்லது முற்கூறியவர்களாற் செய்யப்பட்ட வஸ்துக்களின் லாபமோ குதிரையின் லாபமோ உண்டாகும். (எ—று)

(அ—கை) தெற்கிலுள்ள அரத்திலுண்டாகும் சகுனபலன் சொல்லப்படுகிறது—

**மூ॰॥ नेमीभागं बुध्वा नाभीभागं च दक्षिणे योऽरः ।**
**धार्मिकजनसंयोगस्तत्र भवेद्धर्मलाभश्च ॥ २१ ॥**

(க—ரை) கட்டத்திற்குச் சுற்றுமுள்ள பாகத்திற்கு நேமி எனப் பெயரென்றும், அவ்விதமே சக்கிரத்தின் நடுவிலுள்ள பாகத்திற்கு நாபீ (குடம்) எனப்பெயரென்றும் முன்னர் சொல்லப்பட்டது. ஆகவே, தெற்கிலுள்ள நேமீபாகத்தையும் நாபீ பாகத்தையும் அறிந்துகொண்டு அந்தத்தெற்கிலுள்ள ஆரம் என்ற ஆரக்காலில் சகுனமுண்டானால் தர்மபற்றுள்ள ஜனங்களுடன் சேர்க்கையும் தர்மலாபமும் உண்டாகும். (எ—று)

(அ—கை) தென்மேற்கிலுள்ள அரத்திலுண்டாகும் சகுன பல னுபதேசிக்கப்படுகிறது—

**மூ॥ उस्राकीडककापालिकागमो नैर्ऋते समुद्दिष्टः ।**
**वृषभस्य चात्र लब्धिर्माषकुलुत्थाद्यमशनं च ॥ २२ ॥**

(க—ரை) தென்மேற்கு திக்கிலுள்ள ஆரக்காலில் சகுனமுண்டானால் பசு, விளையாடுபவன், பௌத்தசன்னியாசி, இவர்களின்

வரவும், இதே ஆரக்காலிலுண்டான சகுனத்தால், தந்தத்தாற் செய்யப்பட்ட விருஷபத்தினுடைய லாபமும்,உளுந்து, கொள்ளு முதலியனவும், ஆஹாரமும், யவதான்னியம், கோதுமை, முதலி யனவும் கிட்டும். (எ—று)

(அ—கை) மேற்கிலுள்ள அரத்திலுண்டாகும் சகுனபல னுபதேசிக்கப்படுகிறது—

**மூ॰ ॥ अपरस्यां दिशि योरस्तत्राऽऽसक्तिः कृषीवलैर्भवति ।**
**सामुद्रद्रव्यसुसारकाचफलमद्यलब्धिश्च ॥ २३ ॥**

(க—ரை) மேற்கு திக்கிலுள்ள ஆரக்காலிலுண்டான சகுனத் தினல் பயிரிடுபவனுடன் சேர்க்கையும், சமுத்திரத் திரவியத்தி னுடையவும், ஸுஸாரத்தினுடையவும் பூனைக்காச்சி மணியி னுடையவும், (ஸுஸாரம் என்பது ஓர்வகை மணியாகும்) மாம் பழம் முதலியவற்றினுடையவும், கள்ளினுடையவும், லாபமேற் படும். (எ—று)

(அ—கை) வடமேற்கு திக்விபாகத்திலுள்ள அரத்திலுண் டாகும் சகுனபல னுபதேசிக்கப்படுகின்றது—

**மூ॰ ॥ भारवहतक्षभिक्षुकसन्दर्शनमपि च वायुदिक्संस्थे ।**
**तिलककुसुमस्य लब्धिः सनागपुन्नागकुसुमस्य ॥ २४ ॥**

(க—ரை) வடமேற்கு திக்கிலுள்ள ஆரக்காலில் சகுனமுண் டானல் சுமை சுமப்பவன், தக்ஷன், பிக்ஷுகன் இவர்களின் பார் வையும் திலக புஷ்பத்தினுடையவும், நாகப்புஷ்பம், புன்னுக புஷ் பம் இவற்றினுடையவும் லாபமானதுண்டாகும். (எ—று)

(அ—கை) வடக்கு திக்கிலுள்ள அரத்திலுண்டாகும் சகுன பலன் சொல்லப்படுகின்றது—

**மூ॰ ॥ कौबेर्यांदिशि योऽरस्तत्रस्थो वित्तलाभमाख्याति ।**
**भागवतेन समागममाचष्टे पीतवस्त्रैश्च ॥ २५ ॥**

(க—ரை) நேர் வடக்கு திக்கானது சாந்தமாகவாகி அங் குள்ள ஆரக்காலில் சகுனமானதுண்டானல் அது பணத்தின் லாபத்தைச் சொல்லும். அவ்விதமே பகவத்பக்தனுடன் (பாகவ

தன் என்பதற்கு வைஷ்ணவனென பிராம்மணன் எனப்பட்டோத்பலரின் உரையிலெழுதப் பட்டிருக்கிறது) சேர்க்கையையும், பொன்னிறமான வஸ்திரத்துடன் சேர்க்கையையும் சொல்லுகிறது. (எ—று)

(அ—கை) வடகிழக்கு திக்விபாகத்திலுள்ள அரத்திலுண்டாகும் சகுனபலன் சொல்லப்படுகிறது—

**மூ॰ ॥ ऐशाने व्रतयुक्तावनितासन्दर्शनं समुपयाति ।**
**लब्धिश्च परिज्ञेया कृष्णायःशस्त्रघण्टानाम् ॥ २६ ॥**

(க—ரை) வடகிழக்கு சாந்தையாகவாகி அங்குள்ள ஆரக்காலில் சகுனமுண்டானால் விருதத்துடன் கூடினஸ்திரீயினுடைய பார்வையுண்டாகின்றது. கறுநிறமான இரும்பினுடையவும், ஆயுதத்தினுடையவும், மணியினுடையவும் லாபமானது அறியத்தக்கது. (எ—று)

(அ—கை) இதுவரை சொல்லிய திக்விபாக விஷயத்தில் சில விசேஷ முபதேசிக்கப்படுகிறது—

**மூ॰ ॥ याम्येऽष्टांशे पश्चाद्द्विषट्त्रिसप्ताष्टमेषु मध्यफला ।**
**सौम्येन च द्वितीये शेषेष्वतिशोभना यात्रा ॥ २७ ॥**
**अभ्यन्तरेषु नाभ्यां शुभफलदा भवति षट्सु चारेषु ।**
**वायव्यानैर्ऋतयोररयोः क्लेशावहा यात्रा ॥ २८ ॥**

(க—ரை) தெற்கு திக்விபாகத்திலுள்ள யாதொரு 8விதமான பிரிவுண்டோ அவ்விடத்திலும், அவ்விதமே மேற்கு திக்விபாகத்திலுள்ள தென்மேற்குதிக்கு தொடங்கி 2, 6, 3,7,8,இவ்விடத்திலும், அவ்விதமே வடக்குதிக்விபாகத்திலுள்ள 2,6வது பாகத்திலும்,சகுனமானது சாந்தமாகயிருந்துண்டானல்அப்பொழுதுண்டாகும் யாத்திரையானது சுபமாகவோ,அசுபமாகவோ ஆகாமல் நடுநிலைமையிலுள்ளதாகவே இருக்கும். மீதமுள்ள விடங்களில் அதாவது: மீதமுள்ள 25பாகங்களில் சகுனமிருக்கும் பொழுது செய்யப்படும்யாத்திரையானது அதிகமான சுபகரமாகவே ஆகும். குடத்தின் நடுவிலுள்ள 7, 8 வது திக்விபாகங்களில் வடமேற்கு,

தென்மேற்கு இந்த திக்விபாகங்களை நீக்கி மீதமுள்ள விடங்களி லுண்டான சகுனத்தால் யாத்திரை யானது சுபபலனைத் தருவ தாகவாகிறது. வடமேற்கு, தென்மேற்கு இவ்விடங்களில் சகு னமுண்டானல் யாத்திரையானது கஷ்டத்தைத் தருவதாகவே தானுகும். (எ—று)

(அ—கை) இதுவரை சொல்லிய பலன்கள் சாந்தையாக வான திக்குகளில் சொல்லப்பட்டது. இனி தீப்தா என்ற திக்கு களில் வரும் பலன் சொல்லப்படும் என்பதை யுபதேசிக்கிருர்—

**मू० ॥ शान्तासु दिक्षु फलमिदमुक्तं दीप्तास्वतोऽभिधास्यामि।**
**ऐन्द्र्यां भयं नरेन्द्रात् समागमश्चैव शत्रूणाम् ॥ २९ ॥**

(க—ரை) சாந்தைகளான திக்குகளில் வரும்பலன் இதுவரை உபதேசிக்கப்பட்டது. தீப்தா என்ற திக்குகளில் வரும் பலனை இனி உபதேசிக்கிறேன். கிழக்கு திக்கு தீப்தையாகவாகி அதில் சகுனமுண்டானல் ராஜாக்களிடமிருந்து பயமுண்டாவதுடன் சத்துருஸமாகமமு முண்டாகும். (எ—று)

(அ—கை) கிழக்கு திக்கிற்கடுத்துள்ள திக்விபாகத்திலுண் டாகும் சகுனபலனுபதேசிக்கப் படுகின்றது—

**मू० ॥ तदनन्तरदिशि नाशः कनकस्य भयं सुवर्णकाराणाम् ।**
**अर्थक्षयस्तृतीये कलहः शत्रुप्रकोपश्च ॥ ३० ॥**

(க—ரை) கிழக்கு திக்கிற்கடுத்துள்ள இரண்டாவது பாக மானது தீப்தமாகவாகி அதில் சகுனமிருந்தால் ஸுவர்ணத்தின் நாசமும், தட்டானிடமிருந்து பயமும் உண்டாகும். அதற்கடுத் துள்ள பாகம் தீப்தமாகி அதில் சகுனமிருந்தால், அர்த்தக்ஷய மும், கலஹமும், சத்துருவின் அதிககோபமும் உண்டாகும்.

(அ—கை) அதற்கடுத்துள்ள நான்காவது திக்விபாகத்திலுண் டாகும் சகுனபலனுபதேசிக்கப்படுகின்றது—

**मू० ॥ अग्निभयञ्च चतुर्थे भयमाग्नेयेच भवति चोरेभ्यः ।**
**कोणादपि द्वितीये धनक्षयो नृपसुतविनाशः ॥ ३१ ॥**

(க—ரை) அதற்கடுத்துள்ள தீப்தமாகவான நான்காவது திக்விபாகத்தில் சகுனமுண்டானல் அக்னிபயமுண்டாகும். ஆக்னேய (தென்கிழக்கு) திக்கில் சகுனமுண்டானல் திருடர்களிடமிருந்து பயமுண்டாகும். ஆக்னேயத்திற்கு அடுத்துள்ள இரண்டாவது திக்விபாகத்தில் சகுனமுண்டானல் தனநாசமும், ராஜபுத்திரனுடைய மரணமும் உண்டாகும். (எ—று)

(அ—கை) அதற்கடுத்துள்ள மூன்ருவது திக்விபாகத்திலுண்டாகும் சகுனபலனுபதேசிக்கப் படுகின்றது—

**மூ॰॥ प्रमदागर्भविनाशस्तृतीयभागे भवेच्चतुर्थे च।**
**हैरण्यककारुकयोः प्रध्वंसः शस्त्रकोपश्च ॥ ३२ ॥**

(க—ரை) தென்கிழக்கு திக்கிற்கடுத்துள்ள மூன்ருவது தீப்த திக்விபாகத்தில் சகுனமுண்டானல் ஸ்திரீயின் கர்ப்பநாசமுண்டாகும். அதற்கடுத்துள்ள நான்காவது திக்விபாகத்தில் சகுனமுண்டானல் சுவர்ணவிக்ரயம் செய்கின்றவனுடையவும், சிற்பவேலை செய்கின்றவனுடையவும், நாசமுண்டாவதுடன் ஆயுதபீடையுமுண்டாகும். (எ—று)

(அ—கை) அதற்கடுத்துள்ள ஐந்தாவது திக்விபாகத்திலுண்டாகும் சகுனபலனுபதேசிக்கப் படுகின்றது—

**மூ॰॥ अथ पञ्चमे नृपभयं मारीमृतदर्शनं च वक्तव्यम् ।**
**षष्ठे तु भयं ज्ञेयं गन्धर्वाणां सडोम्बानाम् ॥ ३३ ॥**

(க—ரை) அதற்கடுத்துள்ள ஐந்தாவது திக்விபாகத்தில் சகுனமுண்டானல் ராஜ பயமும், அம்மையும், பிரேத தரிசனமும் உண்டாகும். ஆருவது திக்விபாகத்தில் தொம்பனுடன் கூடப்பாட்டுப் பாடுகின்றவர்களுடைய பயமுண்டாகும் என அறியவேண்டும். (எ—று)

(அ—கை) அதற்கடுத்துள்ள ஏழாவது திக்விபாகத்திலுண்டாகும் தீப்த சகுனபல னுபதேசிக்கப் படுகின்றது—

**மூ॰॥ धीवरशाकुनिकानां सप्तमभागाद्भयं भवति दीप्ते ।**
**भोजनविघात उक्तो निर्ग्रन्थभयं च तत्परतः॥ ३४ ॥**

(க—ரை) தீப்தமான ஏழாவது திக்விபாகத்திலுண்டாகும் சகுனத்தினால் செம்படவன், குருவி பிடிப்பவன் இவர்களிடமிருந்து பயமுண்டாகும். அதற்கடுத்துள்ள எட்டாவது திக்விபாகத்திலுண்டாகும் சகுனத்தால் போஜன நாசம் சொல்லப்பட்டிருக்கிறது. பௌத்த சன்னியாசியினிடமிருந்தும் பயமுண்டாகும்.

(அ—கை) தென்மேற்கு திக்கிலுண்டாகும் தீப்த சகுனபலனுபதேசிக்கப்படுகின்றது—

**மூ॰॥ कलहो नैर्ऋतभागे रक्तस्रावोऽथ शस्त्रकोपश्च ।**
**अपराऽऽद्ये चर्मकृतं विनश्यते चर्मकारभयम् ॥ ३५ ॥**

(க—ரை) தென்மேற்கு திக்கு தீப்தமாகி அதில் சகுனமுண்டானால் கலஹம், ரக்தப்பெருக்கு, சஸ்திரகோபம் (பீடை) இவையுண்டாகும். அதற்கடுத்துள்ள மேற்கு திக்கின் முதற்பாகத்தில் சகுனமுண்டானால் தோலினாற் செய்யப்பட்ட பாதரக்ஷை முதலியவற்றின் நாசமும், தோல்வேலை செய்பவனிடமிருந்து பயமும் உண்டாகும். (எ—று)

(அ—கை) அதற்கடுத்த விடத்திலுண்டாகும் சகுனபலனுபதேசிக்கப் படுகின்றது—

**மூ॰॥ तदनन्तरे परिव्राट् श्रवणभयं तत्परेत्वनशनभयम् ।**
**वृष्टिभयं वारुण्ये श्वतस्कराणां भयं परतः ॥ ३६ ॥**

(க—ரை) முற்கூறியதற்கு அடுத்துள்ள இரண்டாவது திக்விபாகம் தீப்தமாகி அதில் சகுனமுண்டானால் சன்னியாஸியினுடைய பயமும், பௌத்த சன்னியாஸியினுடைய பயமும் உண்டாகும். அதற்கடுத்துள்ள மூன்றாவது திக்விபாகத்தில் சகுனமுண்டானால் உபவாஸபயம் (பட்டினிகிடத்தல்) உண்டாகும். நேர் மேற்குதிக்கில் சகுனமுண்டானால் மழையால் பயமுண்டாகும். அதற்கடுத்த திக்விபாகத்தில் சகுனமுண்டானால் நாய், திருடர் இவர்கள் ஸம்பந்தமான பயமுண்டாகும். (எ—று)

(அ—கை) அதற்கடுத்துள்ள திக்விபாகத்திலுண்டாகும் சகுனபலனுபதேசிக்கப்படுகின்றது—

**மூ० ॥ वायुग्रस्तविनाशः परे परे शस्त्रपुस्तवार्तानाम् ।**
**कोणे पुस्तकनाशः परे विषस्तेन वायुभयम् ॥ ३७ ॥**

(க—ரை) முற்கூறியதற்கடுத்துள்ள திக்விபாகத்தில் தீப்த சகுனமுண்டானால் வாயுவினற் பீடிக்கப்பட்டு மரணமுண்டாகும். அதற்கடுத்துள்ள திக்விபாகத்தில் தீப்த சகுனமுண்டானல் ஆயுதம் எழுத்துவேலை ஜீவனம் இவற்றிர்க்கு நாசமுண்டாகும். வாயு கோணத்தில் (வடமேற்கு திக்கில்) சகுனமுண்டானல் (சாஸ்திர) புஸ்தக நாசமுண்டாகும். அதற்கிரண்டாவது பாகத்திற் சகுனமுண்டானல் விஷம், திருடர், வாயு இவற்றால் பயமுண்டாகும்.

(அ—கை) அதற்கடுத்துள்ள திக்விபாகத்தி லுண்டாகும் சகுனபல னுபதேசிக்கப்படுகின்றது—

**மூ० ॥ परतो वित्तविनाशो मित्रैः सहविग्रहश्च विज्ञेयः ।**
**तस्यासन्ने ऽश्ववधो भयमपि च पुरोधसः प्रोक्तम् ॥३८॥**

(க—ரை) அதற்கடுத்துள்ள திக்விபாகத்தில் சகுனமுண்டானல் வித்தவிநாசமும், சிநேஹிதர்களுடன் சண்டையுமுண்டாகுமென அறியத்தக்கது. அதற்கடுத்துள்ள விடத்திலுண்டாகும் சகுனத்தால் குதிரையின் நாசமும், புரோஹிதரிடமிருந்து பயமுமுண்டாகுமென சொல்லப்பட்டிருக்கிறது. (எ—று)

(அ—கை) அதற்கு மேலுள்ள திக்விபாகத்திலுண்டாகும் சகுனபலனுபதேசிக்கப் படுகின்றது—

**மூ० ॥ गोहरणशस्त्रपातावुदक् परे सार्थघातधननाशौ ।**
**आसन्ने च श्वभयं व्रात्यद्विजदासगणिकानाम् ॥ ३९ ॥**

(க—ரை) வடக்குதிக்கில் சகுனமுண்டானல் பசு திருடப்படுதலும், ஆயுதபீடையும் உண்டாகும். அதற்கு அடுத்துள்ள இரண்டாவது திக்விபாகத்தில் சகுனமுண்டானல் ஒரு கூட்டத்தால் அடிபடுதலும், தனநாசமும் உண்டாகும். அதற்கடுத்துள்ள திக்விபாகத்தில் சகுனமுண்டானல் நாயினல் பயமும், வ்ராத்யனன பிராம்மணனுடையவும், (8வயது முதல் 16 வயதுமுடிய உபநயநஸம்ஸ்காரம் செய்யப்பெறாத பிராம்மணன் வ்ராத்யன்

எனபட்டோத்பலர் எழுதி யிருக்கிறார்) வேலைக்காரனுடையவும், தாஸிகளுடையவும் பயமுண்டாகும். (எ—று)

(அ—கை) வடகிழக்கு திக்கிற்கு சமீபத்திலும் வடகிழக்கிலும் உண்டாகும் சகுனபல னுபதேசிக்கப்படுகின்றது—

**मू० ॥ ऐशानस्यासन्ने चित्रांबरचित्रकृद्भयं प्रोक्तम् ।**
**ऐशाने त्वग्निभयं दूषणमप्युत्तमस्त्रीणाम् ॥ ४० ॥**

(க—ரை) வடகிழக்கு திக்கிற்கு சமீபமாயுள்ள விடத்திலுண்டாகும் சகுனத்தால் சித்திரமான வஸ்திரம், சித்திரம் எழுதுபவன் இவர்களிடமிருந்து பயம் உண்டாகும் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. வடகிழக்கில் சகுனமுண்டானால் அக்னிபயமும், உத்தம ஸ்திரீகளின் தூஷணமும் சொல்லப்பட்டிருக்கிறது.

(அ—கை) ஈசான கோணத்திற்கடுத்துள்ள கிழக்குதிக்கிலுண்டாகும் சகுனபல னுபதேசிக்கப்படுகிறது—

**मू० ॥ प्राक्तस्यैवासन्ने दुःखोत्पत्तिः स्त्रियो विनाशश्च ।**
**भयमूर्ध्वं रजकानां विज्ञेयं काच्छिकानाञ्च ॥ ४१ ॥**

(க—ரை) வடகிழக்கு திக்கிற்கடுத்துள்ள கிழக்கு திக்கில் சகுனமுண்டானால் துக்கமுண்டாகுதலும், ஸ்திரீயுக்கு நாசமும் உண்டாகும். அதற்கடுத்த கிழக்கிலுள்ள திக்விபாகத்தில் சகுனமுண்டானால் வஸ்திரத்திற்குச் சாயம் போடுபவன் அல்லது வண்ணான் இவர்களுடையவும், வாஸனை கூட்டுகிறவனுடையவும் பயமுண்டாகும். (எ—று)

(அ—கை) திக்கை 32 பிரிவாகப்பிரித்து உபதேசிக்கப்பட்டதில் கடைசியாக வரும் 32வது விபாகத்திலுண்டாகும் சகுனபலனுபதேசிக்கப் படுகின்றது—

**मू० ॥ हस्त्यारोहभयं स्याद्द्विरदविनाशश्च मण्डलसमाप्तौ ।**
**अभ्यन्तरे तु दीप्ते पत्नीमरणं ध्रुवं पूर्वे ॥ ४२ ॥**

(க—ரை) திக்விபாகம் முடியுமிடத்திலுண்டான சகுனத்தினால் யானைக்காரன் பயம், யானைக்கு நாசம் இவையுண்டாகும்.

நடுவிலுள்ள ஆரக்காவின் பூர்வபாகத்தில் சகுனமுண்டானால் பத்தினிக்கு மரணமுண்டாவது நிச்சயம். (எ—று)

(அ—கை) ஆக்னேயத்திலுள்ள ஆரக்காவிலும், தெற்கிலுள்ள ஆரக்காவிலும், தென்மேற்கிலுள்ள ஆரக்காவிலும், மேற்கிலுள்ள ஆரக்காவிலும், வடக்கிலுள்ள ஆரக்காவிலுமுண்டாகும் சகுன பல னுபதேசிக்கப்படுகின்றது—

मू० ॥ शस्त्रानलप्रकोपावाग्नेये वाजि मरणशिल्पिभयम् ।
यास्ये धर्मविनाशोऽपरेऽग्न्यवस्कन्दचोक्षवधाः ॥ ४३ ॥
अपरेतु कर्मिणां भयमथ कोणे चानिले खरोष्ट्रवधः ।
अत्रैव मनुष्याणां विषूचिकाविषभयं भवति ॥ ४४ ॥
उदगर्थविप्रपीडा दिश्यैशान्यां तु चित्तसन्तापः ।
ग्रामीणगोपपीडा च तत्र नाभ्यां तथाऽऽत्मवधः ॥ ४५ ॥

(க—ரை) தென்கிழக்கிலுள்ள ஆரத்தில் சகுனமுண்டானல் சஸ்திரம், அக்னி இவற்றால் பீடையும், குதிரைக்கு மரணமும், சிற்பியின் பயமும் உண்டாகும். தெற்கிலுள்ள ஆரத்தில் சகுன முண்டானல் தர்மவினசமுண்டாகும். தென்மேற்கிலுள்ள ஆரத்திலுண்டானல் அக்னி, மேல்வந்து விழுதல், துஷ்டன் இவர்களால் மரணமுண்டாகும். மேற்கிலுள்ள ஆரத்திலுண்டானல் தொழிலாளிபயம், வடமேற்கு கோணத்திலுள்ள ஆரத்திலுண்டானல் கழுதை, ஒட்டகை இவற்றால் வதம் இவையுண்டாகும். இதே வாயுதிக்கில் மனிதர்களுடையவும், பேதி, விஷம் இவற்றினுடையவும் பயமுண்டாகும். வடக்கிலுள்ள ஆரத்தில் சகுன முண்டானல் பணம், பிராம்மணன் இவர்களாற் பீடையுண்டாகும். வடகிழக்கிலுள்ள ஆரத்திலுண்டானல் சித்தத்திற்குத் தாபமுண்டாவதுடன் கிராமஜனங்கள் எடையர் இவர்கள் பீடையுமுண்டாகும். குடபாகத்திலுண்டானல் தனக்கு நாசமுண்டாகும். (எ—று)

அந்தர சக்கிராத்தியாயம் என்ற பலாத்தியாயம் முற்றிற்று.

## 3வது விருதாத்தியாயம்.

(அ—கை) இந்த அத்தியாயத்தில் விருதம் என்ற சப்தமுண்டாவதன் மூலம் கண்டறியவேண்டிய பலனுபதேசிக்கப்படுகின்றது. அவ்விதம் பிராணிகளின் சப்தமூலம் பலனை யுபதேசிக்கவேண்டி 1 முதல் 10-வது சுலோகம் முடியவுள்ள 10 சுலோகத்தால் சப்திக்கும் பிராணிகளை பகலில் சஞ்சரிப்பவை என்றும், இரவில் சஞ்சரிப்பவை என்றும், இவ்விரண்டிற்கும் இடையிற் சஞ்சரிப்பவை என்றும் 3 விதமாகப்பிரித்து இம்மூன்று காலங்களுள் இன்னின்ன காலத்தில் இன்னின்னவற்றின் சப்தமுண்டானல் இன்னின்ன பலனுண்டாகும் என 11-வது சுலோகந்தொடங்கி 47-வது சுலோகம் முடியவுள்ள 37 சுலோகத்தாலுபதேசிப்பாந் தொடங்கி 1-வது சுலோகத்தால் பகலில் சஞ்சாரியான பிராணிகள் இன்னின்னவை என உபதேசிக்கிருர்—

**மூ॰ ॥ श्यामाश्येनशशघ्नवञ्जुळशिखिश्रीकर्णचक्राह्वया-**
**श्चाषाऽऽण्डीरकखञ्जरीटकशुकध्वांक्षाः कपोतास्त्रयः ।**
**भारद्वाजकुलालकुक्कुटखराहरीतगृध्रौ कपिः**
**फेण्टः कुक्कुटपूर्णकूटचटकाः प्रोक्ता दिवा सञ्चराः ॥**

(க—ரை) பெண்புரு, பருந்து, முயல்பிடிக்கும்பக்ஷி, மரங்குத்திகுருவி, மயில், ஸ்ரீகர்ணம் என்றபக்ஷி, சக்கிரவாகம் என்றபக்ஷி, காடை என்ற பக்ஷி, ஆண்டீரம் என்றபக்ஷி, மீன்குத்திக்குருவி, கிளி, காக்கை, மாடப்புரு, சித்திரமான மாடப்புரு, தவிட்டுநிறமானபுரு குங்குமநிறமானபுரு எனமூன்றுவித புருக்கள், கருங்குருவி, வான்கோழி, கழுதை, ஹாரீதம் என்ற பக்ஷி கழுகு, குரங்கு, பெண்டம் என்ற ஒருவகைபக்ஷி கோழி, பெருங்கோழி, சிட்டுக்குருவி ஆகிய இவைகள் பகல்சஞ்சாரிகள் எனப்படும். (எ—று)

(அ—கை) ராத்ரி சரப் (இரவில் சஞ்சரிப்பவை) எனப்பெயருள்ளவற்றை இந்த இரண்டாவது சுலோகத்தாலுபதேசிக்கிருர்—

**மூ॰ ॥ लोमाशिकापिङ्गलछिप्पिकाख्यौ-**
**वल्गुल्युलूकौ शशकश्च रात्रौ ।**

सर्वे स्वकालोत्क्रमचारिणः स्युः
देशस्य नाशाय नृपान्तदा वा ॥ २ ॥

(க—ரை) லோமாசிகா என்பது ஓர்வகைப் பிராணி, பெண் ஊமைக்கோட்டான், சிப்பிகா என்பது ஓர்வகைபக்ஷி, வல்குலீ, ஆண்ஊமைக்கோட்டான், முயல், ஆகிய இவைகள் ரத்திரி சஞ்சாரமுள்ளவைகள். ஆகவே இதுவரை கூறியபிராணிகளுள் ராத்திரி சஞ்சாரியான பிராணிபகலிலும், பகலில் சஞ்சரிப்பவை ராத்திரியிலும் சஞ்சரிக்குமானல் தேசநாசத்தையும் பொருட்டாவது, அரசனுக்கு நாசத்தைத்தரக்கூடியதாகவாவது ஆகும்.

(அ—கை) பகல் இரவு இரண்டிலும் சஞ்சரிப்பவைகளை இதனுலுபதேசிக்கிருர்—

मू० ॥ हयनरभुजगोष्ट्रद्वीपिसिंहर्क्षगोधा
वृकनकुलकुरंगश्वाऽजगोव्याघ्रहंसाः ।
पृषतमृगसृगालश्वाविदाख्याऽन्यपुष्टाः
द्युनिशमपि बिडालः सारसः सूकरश्च ॥ ३ ॥

(க—ரை) குதிரை, மனிதன், பாம்பு, ஒட்டகை, சிறுத்தைப் புலி, சிங்கம், கரடி, உடும்பு, சென்னுய், கீரி, மான், நாய், ஆடு, பசு, வேங்கைப்புலி, ஹம்ஸம், ஒருவகை புள்ளிமான், வேறு வகைமான், குள்ளநரி, காட்டுப்பன்றி, குயில். பூனை, நீர்காக்கை, காட்டுப்பன்றி, இவைகள் பகல் இரவு இரண்டிலும் சஞ்சரிக்கக் கூடியன. (எ—று)

(அ—கை) இனிசாஸ்திரத்தில் பொதுவாய் பேசுவதற்கு வேண்டி இதுவரை கூறியவற்றிற்குள்ள சில பொதுப்பெயர்களை யுபதேசிக்கிருர்—

मू० ॥ भषकूटपूरिकुरवककरायिकाः पूर्णकूटसंज्ञाः स्युः ।
नामान्युलूकचेट्याः पिङ्गलिका पेचिका हक्का ॥ ४ ॥

(க—ரை) பஷம், கூடபூரி, குரவகம், கராயிகம், இவைகள் பூர்ணகூடம் என்றபக்ஷியின் பொதுப்பெயராகும். பிங்களிகா,

பேசிகா, ஹக்கா இவைகள் பெண்ஊமைக்கோட்டானின் பெயர்களாகும். (எ—று)

(குறிப்பு) இம்மாதிரியான பெயர்களைக்கொடுத்து ஆங்காங்கு பலன் சொல்லுமிடத்து இந்தப்பொதுப்பெயரை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு ஆங்காங்கு பொருள்கொள்ள வேண்டும்.

**மூ॰॥ कपोतकीच श्यामा वञ्जुलकः कीर्त्यते खदिरचुञ्चुः।**
**छच्छुन्दरी नृपसुता वालेयो गर्दभः प्रोक्तः ॥ ५ ॥**

(க—ரை) பெண் புறாவானது கபோதகீ என்றும், சியாமா என்றும் சொல்லப்படும். மரங்குத்திக் குருவியானது வஞ்ஜுளகம் என்றும், கதிரசுஞ்சு என்றும் சொல்லப்படும். சுச்சுந்தரீ என்ற மூஞ்சோரானது, ந்ருபசுதா என்றும், அல்லது ராஜ புத்திரீ என்றும் சொல்லப்படும். கர்த்தபம் என்ற கழுதையானது வாலேயம் என்று சொல்லப்படும். (எ—று)

**மூ॰॥ स्रोतस्तडागभेद्यैकपुत्रकः कलहकारिका च रला।**
**भृङ्गारवच्च विरुवति निशि भूमौ द्व्यंगुलशरीरा ॥ ६ ॥**

(க—ரை) ரலா என்றபக்ஷியானது ஸ்ரோதோபேத்யம் என்றும், தடாகபேத்யம் என்றும், ஏகபுத்ரகம் என்றும், கலஹகாரிகா என்றும் சொல்லப்படும். இரவில் ஹூம் ஹூம் என சத்தம் செய்யும்பிராணி ப்ருங்காரவம் எனப்படும். இந்த ப்ருங்காரம் போலவே ரலா என்பது சத்தமிடும். இதன் சரீரம் இரண்டு அங்குலமளவுள்ளதாகவே இருக்கும். சிலர் ப்ருங்காரம் என்பதை பக்ஷி என்கின்றனர். (எ—று)

**மூ॰॥ दुर्बलिको भाण्डीकः प्राच्यानां दक्षिणः प्रशस्तोऽसौ ।**
**धिक्कारो मृगजातिः कृकवाकुः कुक्कुटः प्रोक्तः ॥ ७ ॥**

(க—ரை) பாண்டீகம் என்பது துர்பலிகம் என்று சொல்லப்படும்(இதை நாணத்தான் குருவி என்கின்றனர்)இந்த பாண்டீகமானது கிழக்குதேசத்திலுள்ளவர்களுக்கு வலதுபக்கமிருந்தால் சுபமெனப்படும். இதினின்றும் மற்றதேசத்தவர்க்கு இடதுபக்கமிருந்தால் சுபமெனச் சொல்லியதாக ஏற்படுகிறது. ஒருவகை

மான் ஜாதியானது திக்காரம் என்று சொல்லப்படும். குக்குடம் என்ற கோழியானது கிருகவாகு என்று சொல்லப்படும். (எ—று)

**மூ॰ ॥ गर्ताकुक्कुटकस्य प्रथितं तु कुलालकुक्कुटो नाम ।**
**गृहगोधिकेति संज्ञा विज्ञेया कुड्यमत्यस्य ॥ ८ ॥**

(க—ரை) கர்த்தாகுக்குடம் என்ற வான்கோழிக்கு குலால் குக்குடம் என்ற பெயர் பிரசித்தமானதே. வீட்டிலுள்ள சுவறுகளில் மீன்போன்று ஒட்டிக்கொண்டிருக்கும் பல்லிக்கு கிருஹகோதிகா என்று பெயரென அறியவேண்டும். (எ—று)

**மூ॰ ॥ दिव्यो धन्वन उक्तः क्रोडः स्यात्सूकरोऽथ गौरुस्रा ।**
**श्वा सारमेय उक्तो जात्या चटिकाच सूकरिका ॥ ९ ॥**

(க—ரை) தன்வனம் என்பது திவ்யமென்றும், சூகரம் என்ற பன்றியானது க்ரோடம் என்றும், கோ என்ற பசுவானது உஸ்ரா என்றும், ச்வா என்ற நாயானது ஸாரமேயமென்றும், இயற்கையில் சடிகா என்ற சிட்டுக்குருவியானது ஸூகரிகா என்றும் சொல்லப்படும். (எ—று)

(அ—கை) இவ்விதம் அவ்வவற்றின் பெயரைக்காணும் விஷயத்தில் வேறு விசேஷத்தை யுபதேசிக்கிறார்—

**மூ॰ ॥ एवं देशे देशे तद्विद्भ्यः समुपलभ्य नामानि ।**
**शकुनरुतज्ञानार्थं शास्त्रे सञ्चित्य योज्यानि ॥ १० ॥**

(க—ரை) இதுவரை கூறியபடி அந்தந்த தேசத்திலுள்ள சகுனத்தின் பெயரையறிந்த பெரியோர்களிடமிருந்து சகுனத்தின் பெயர்களைத் தெரிந்துகொண்டு சுபாசுப சூசகமான சகுனத்தின் சப்தஞானத்திற்குவேண்டி விசாரித்தறிந்து இந்த சாஸ்திரத்திலிந்த விடத்தில் அவற்றைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

(அ—கை) வஞ்ஜுளம், கொட்டைப்பருந்து, கிளி, கழுகு இவற்றின் சப்தமறியும் முறையை உபதேசிக்கிறார்—

**மூ॰ ॥ वञ्जुलकरुतं तित्तिडिति दीप्तमथ किक्किलीति तत्पूर्णम् ।**
**श्येनशुकगृध्रकंकाः प्रकृतेरन्यस्वरा दीप्ताः ॥ ११ ॥**

(க—ரை) தித்திட் என்ற மரங்குத்திக்குருவியின் சப்தமானது தீப்தமெனப்படும். கிக்கிலி என்ற அதன் சப்தமானது பூர்ணம் (சுபம்) எனப்படும். கொட்டைப்பருந்து, கிளி, கழுகு, கங்கம் இவைகள் இயற்கைக்குமாருக சப்தித்தால் தீப்தங்கள் எனப்படும்.

(அ—கை) கபோதம் என்றமாடப்புருவின் சேஷ்டிதத்தை யுபதேசிக்கிருர்—

मू० ॥ यानाऽऽसनशय्यानिलयनं कपोतस्य सद्मविशनं वा ।
अशुभप्रदं नराणां जातिविभेदेन कालोऽन्यः ॥ १२ ॥
आपाण्डुरस्य वर्षाच्चित्रकपोतस्य चैव षण्मासात् ।
कुङ्कुमधूम्रस्य फलं सद्यः पाकं कपोतस्य ॥ १३ ॥

(க—ரை) மாடப்புரு குதிரை முதலிய வாகனம், பீடாதிகளான ஆஸனம், படுக்கை, இவைகளில் சப்தமோ கூட்டில் பிரவேசமோ அசுபத்தைத் தரும்சகுனமாகும். இவற்றிற்கு வகுப்பை யநுஸரித்து வெவ்வேருன காலமானது பின்னர் சொல்லப்படும். அதனுடைய ஜாதிபேதத்திற்குத்தக்கபடி பலன் தருவதாகவாகும். அதாவது:—வெண்ணிறமான புருவினுடைய சேஷ்டிதமானது ஒருவருஷத்திற்குள் பலன்தரும். பலநிறமுள்ள புருவின் சேஷ்டிதமானது ஆறுமாதத்தில் பலன்தரும். குங்கும்வர்ணமான புருவினுடைய சேஷ்டிதமானது உடனே பலனைத் தரும். (எ—று)

(அ—கை) சியாமாவென்ற பெண்புருவின் சப்தத்தாலுண்டாகும் பலனையுபதேசிக்கிருர்—

चिचिदितिशब्दः पूर्णः श्यामायाः शूलि शूलितिच धन्यः ।
चचेति च दीप्तः स्यात् स्वप्रियलाभाय चिकूचिगिति ॥ १४ ॥

(க—ரை) சியாமா என்ற பெண்புருவினுடைய சிசித் என்ற சப்தமானது பூர்ணமெனப்படும். சூலிசூல் என்ற சப்தமானது சுபமானது. சச்சா என்றசப்தமானது தீப்தமெனப்படும். சிக்சிக் என்ற அதன்சப்தமானது தனது பிரியனுடைய லாபத்தையும் பொருட்டு ஆகும். (எ—று)

(அ—கை) ஹாரீதம் என்ற பக்ஷியினுடையவும், வால்நீண்ட குருவி (கருங்குருவி) யினுடையவும் சப்தத்தின் பலனையுபதேசிக்கிறார்—

मू० ॥ हारीतस्य तु शब्दो गुग्गुः पूर्णोऽपरे प्रदीप्ताः स्युः ।
स्वरवैचित्र्यं सर्वं भारद्वाज्याः शुभं प्रोक्तम् ॥ १५ ॥

(க—ரை) ஹாரீதம் என்ற பக்ஷியினுடைய குக்கு என்ற சப்தமானது பூர்ணமெனப்படும். இதற்குமாறான வேறுசப்தங்கள் தீப்தங்களெனப்படும். பாரத்வாஜி என்ற பெண் கருங்குருவியினுடைய பற்பலவித சப்த வைசித்திரியமும் சுபமானதென்றே சொல்லப்பட்டிருக்கிறது. (எ—று)

(அ—ரை) காராயிகா என்பது பூர்ணகூடம் எனமுன்னர் சொல்லப்பட்டது. அவற்றின் சப்தத்தைச் சொல்லுகிறார்—

मू० ॥ किष्किषिशब्दः पूर्णः करायिकायाः शुभः कहकहेति ।
क्षेमाय केवलं करकरेति न त्वर्थसिद्धिकरः ॥ १६ ॥

कोट्टक्लीति क्षेम्यः स्वरः कट्टक्लीति वृष्टये तस्याः ।
अपरः कोटिकिलीति च दीप्तः खलु गुंकृतः शब्दः ॥

(க—ரை) காராயிகை என்கின்ற பூர்ணகூடியினுடைய (இதைக் கவுதாரி பக்ஷியென்பர்) கிஷ்கிஷி என்ற சப்தமானது பூர்ணமெனப்படும். கஹ கஹ என்ற சப்தம் சுபமானது. கரகர என்ற சப்தமானது கேவலம் க்ஷேமத்தையும் (அதாவது:—கிடைத்தவற்றைக் காப்பாற்றிக் கொள்ளுவதையும்) பொருட்டே யாகுமேயல்லாது புதிதாக அர்த்த சித்தியைத்தராது. கோடுக்லீ என்ற அதன் சப்தமானது க்ஷேமத்தைத் தரக்கூடியது. கடுக்லீ என்ற அதன் சப்தமானது மழையைக் குறிக்கும். கோடுகீலீ, என்ற அதன் சப்தம் எவ்வித பலனையும் தருவதில்லை. கும் என்ற சப்தமானது தீப்தம் எனப்படும். (எ—று)

मू० ॥ शस्तं वामे दर्शनं दिव्यकस्य
सिद्धिर्ज्ञेया हस्तमात्रोच्छ्रितस्य ।

तस्मिन्नेव प्रोन्नतस्थे शरीरात्
धात्री वश्यं सागरान्ताऽभ्युपैति ॥ १८ ॥

(க—ரை) திவ்யகம் என்ற தன்வனமானது இடது பக்கத்தில் காணப்பட்டால் சுபமுண்டாகும். ஒரு முழம் உயர்ந்த விடத்தி லிருந்தால் காரிய சித்தியுண்டாகும். ஒரு புருஷ உயரத்திற்கு மேலிருந்தால் யாத்திரை செய்பவனுக்கு சமுத்திரத்தை எல்லை யாகவுடைய பூமியின் லாபம் உண்டாகும். (எ—று)

(அ—கை) பாம்பின் சேஷ்டிதம் சொல்லப்படுகின்றது—

मू० ॥ फणिनोऽभिमुखाऽऽगमोऽरिसंगं
कथयति बंधुवधाऽत्ययं च यातुः ।
अथवा समुपैति सव्यभागात्
न स सिद्ध्यै कुशलो गमाऽगमे च ॥ १९ ॥

(க—ரை) யாத்திரை செய்கின்றவனுக்கெதிரில் நல்லபாம்பு தென்பட்டால் அது சத்துருவின் சேர்க்கையைத் தெரிவிக்கும். அல்லது யாத்திரை செய்கின்றவனுடைய பந்துக்களின் வதம் அல்லது நாசம் இவற்றையும் தெரிவிக்கும். வலது பக்கத்தினின் றும் இடது பக்கத்திற் சென்றால் போக்குவரவில் சுகமாக காரிய சித்தி நடைபெறுது. (எ—று)

(அ—கை) வால்நீண்ட குருவியின் சேஷ்டை சொல்லப்படு கிறது—

मू० ॥ अब्जेषु मूर्धसु च वाजिगजोरगाणां
राज्यप्रदः कुशलकृच्छुभशाद्वलेषु ।
भस्मास्थिकाष्ठतुषकेशतृणेषु दुःखं
दृष्टः करोति खलु खंजनकोऽब्दमेकम् ॥२०॥

(க—ரை) வால்நீண்ட குருவியானது தாமரைப்பூவிலும், குதிரை, யானை, பாம்பு இவைகளின் தலையிலும் பார்க்கப்படுமா னல் ராஜ்யத்தைத்தரும். சுத்தமான பிரதேசங்களிலும், புல்தரை களிலும் பார்க்கப்படுமானல் க்ஷேமத்தைச் செய்யும். சாம்பல்,

எலும்பு கட்டை, உமி, மயில், புற்கள் இவ்விடங்களில் பார்க்கப் படுமானுல் ஒருவருஷகாலம் துக்கத்தைத் தரும். (எ-று)

(அ-கை) தித்திரம், முயல் இவற்றின் சேஷ்டிதபலன் சொல் லப்படுகின்றது—

**किलिकिल्किलितित्तिरस्वनः शान्तः शस्तफलोऽन्यथापरः ।**
**शशको निशि वामपार्श्वगो वाशन् शस्तफलो निगद्यते॥२१॥**

(க-ரை) கிலிகில்கிலி என்ற தித்திரபக்ஷியின் சப்தமானது சாந்தமெனப்படும். ஆனதுபற்றி அதுசோபனமாகவும் ஆகும் இதற்குமாருகவுள்ள அதன் சப்தமானது ப்ரதீப்தம் எனப்படும். ஆனதுபற்றி அசுபமெனப்படும். முயல் இரவில் இடதுபக்கத் திற் போய்கொண்டு சப்திக்குமானுல் நல்ல பலனுண்டென சொல் லப்படுகின்றது. (எ-று)

(அ-கை) குரங்கு, குலாலகுக்குடம் என்ற வான்கோழி இவற்றின் சப்தமும் அதன்பலனும் சொல்லப்படுகின்றது—

**किलिकिलिविरुतं कपेः प्रदीप्तं न शुभफलप्रदमुद्दिशन्ति यातुः।**
**शुभमपि कथयन्ति चुग्लुशब्दं कपिसदृशं च कुलालकुक्कुटस्य**

(க-ரை) குரங்கினுடைய கிலிகிலி என்ற சப்தத்தைத் தீப் தமென்றும் அது யாத்திரைசெய்பவர்க்கு சுபபலனைத் தருமென் றும் சொல்லுகின்றனர். சுக்லு என்ற குரங்கின் சப்தம் சுபமாகும் குலாலகுக்குட விஷயத்திலும் குரங்குக்குச் சொல்லியபடியே பலன்கண்டு கொள்ளவேண்டும். (எ-று)

(அ-கை) காடை என்ற பக்ஷியினுடைய விருதசேஷ்டிதத் தையுபதேசிக்கிருர்—

**मू० ॥ पूर्णाननः कृमिपतंगपिपीलिकाद्यैः**
**चाषः प्रदक्षिणमुपैति नरस्य यस्य ।**
**खे स्वस्तिकं यदि करोत्यथवा यियासोः**
**तस्यार्थलाभमचिरात्सुमहत्करोति ॥ २३ ॥**

(க-ரை) காடையானது புழு, வெட்டுப்பூச்சி, எறும்பு இவை களால் நிறையப்பெற்ற முகத்துடன் எந்த மனிதனுக்கு வலது

பக்கமாகச் செல்லுகின்றதோ, அல்லது யாத்திரை செய்கின்றவனுடைய தலைக்கு நேராக ஆகாசத்திற் செல்லுகின்றதோ அம்மனிதனுக்கு வெகுஆதிகமான அர்த்தலாபத்தைச் செய்கிறது.

(அ—கை) காடையின் சப்தவிஷயமாக வேறு சிலவற்றை உபதேசிக்கிறார்—

**மூ॰॥ चाषस्य काकेन विरुध्यतश्चेत्पराजयो दक्षिणभागगस्य।**
**वधः प्रयातस्य तदा नरस्य विपर्यये तस्य जयः प्रदिष्टः॥**

(க—ரை) காகத்துடன் சண்டையிடும் காடையானது காகத்திற்கு வலது பக்கத்திலிருந்து தோல்வியை யடையுமானல் அப்பொழுது யாத்திரை செய்கின்ற மனிதனுக்கு மரணமுண்டாகும். காகத்திற்கு வலது பக்கத்திலிருக்குமானல் யாத்திரை செய்பவர்க்கு ஜயமுண்டாகும். இதுபோலவே காடைக்கு ஜயமுண்டானலும் யாத்திரை செய்பவர்க்கு ஜயமே உண்டாகும்.

(அ—கை) காடையினுடைய சப்தம், சேஷ்டிதம் இவற்றின் பலனை உபதேசிக்கிறார்—

**मू॰॥ केकेति पूर्णकुटवद्यदि वामपार्श्वे**
**चाषः करोति विरुतं जयकृत्तदा स्यात्।**
**क्रेक्रेति तस्य विरुतं नशिवाय दीप्तं**
**सन्दर्शनं शुभदमस्य सदैव यातुः॥ २९॥**

(க—ரை) காாயிகா என்பது பூர்ணகூடம் எனமுன்னர் சொல்லப்பட்டது. காடையானது பூர்ணகூடம் என்ற கவுதாரியானது போல யாத்திரை செய்கின்றவனுடைய இடதுபக்கத்தில் கிஷ்கிஷி கஹகஹ என்றும், அவ்விதமே கேகே என்றும் சப்திக்குமானல் ஜயத்தைத் தருவதாகவாகும். க்ரேக்ரே என்ற அதன் சப்தமானது தீப்தமாகும். அது க்ஷேமத்தைத்தருவதாக ஆவதில்லை. காடையின் தரிசனமானது யாத்திரை செய்கின்றவர்க்கு க்ஷேமத்தைத் தருவதாகவே ஆகும். (எ—று)

(அ—கை) அண்டீரகம், பேண்டகம் என்ற பக்ஷியினுடைய சேஷ்டிதபலனை யுபதேசிக்கிறார்—

**अण्डीरकष्टीतिरुतेन पूर्णष्टिट्टिट्टिशब्देनतु दीप्त उक्तः ।**
**फेण्टः शुभो दक्षिणभागसंस्थो नवाशिते तस्य कृतो विशेषः॥**

(க—ரை) அண்டீரகம் என்ற சிட்டுக்குருவியானது ட என்ற சப்தத்தால் பூர்ணமென்ற சகுனமாகும். டிட்டிட்டி என்ற சப்தத்தால் தீப்தம் என்ற சகுனமாகும். பேண்டம் என்ற பக்ஷியானது வலதுபக்கத்தி லிருக்குமானல் சுபமாகும். அதன் சப்தத்தில் எவ்வித விசேஷமுமில்லை. (எ—று)

(அ—கை) ஸ்ரீகர்ணம் என்ற பக்ஷியின் சப்தவிசேஷபலனை உபதேசிக்கிருர்—

**श्रीकर्णरुतंतु दक्षिणे क्वक्वेति शुभं प्रकीर्तितम् ।**
**मध्यं खलुचिक्चिकीति यच्छेषं सर्वं मुशन्ति निष्फलम्॥२७॥**

(க—ரை) வலது பக்கத்திலிருந்து ஸ்ரீகர்ணம் என்ற பக்ஷியானது க்வக்வ என்று சப்திக்குமானல் சுபமெனச்சொல்லப்பட்டிருக்கிறது. சிக்சிகி என்ற அதன் சப்தம் சுபமாகவோ அசுபமாகவோ ஆவதில்லை. மீதமுள்ள சப்தங்கள் நிஷ்பலம் என்று முனிகள் சொல்லுகின்றனர். (எ—று)

(அ—கை) துர்பலி என்பதை நாணத்தான் என சிலர் சொல்லுகின்றனர். அதன் சப்தத்தினுடைய பலன் சொல்லப்படுகிறது

**दुर्बलेरपि चिरिल्विरिल्विति प्रोक्तमिष्टफलदं हि वामतः ।**
**वामतश्च यदि दक्षिणं व्रजेत्कार्यसिद्धिमचिरेण यच्छति॥२८॥**

(க—ரை) துர்பலி என்ற நாணத்தான் குருவியானது இடது பக்கத்திலிருந்து சிரில்விரில் என்று சப்திக்குமானல் இஷ்டமான பலனைத்தரும். இடதுபக்கமிருந்து வலதுபக்கம் போகுமானல் சீக்கிரமாகக் காரியசித்தியைத் தரும். (எ—று)

(அ—கை) இதே நாணத்தான் குருவியினுடைய விசேஷ சப்தத்தை யுபதேசிக்கிருர்—

**चिक्चिकिवाशितमेव तु कृत्वा दक्षिणभागमुपैति तु वामात्।**
**क्षेमकृदेव न साधयतेऽर्थान्व्यत्ययगो वधबन्धभयाय ॥ २९ ॥**

(க—ரை) சிக்சிகி என சப்தம் செய்து இடது பக்கமிருந்து வலது பக்கம் செல்லுமானல் க்ஷேமத்தைச் செய்யும். ஆனல் புதிதாக காரிய சித்தியுண்டாகும். இதற்குமாருக வலது பக்க மிருந்து இடது பக்கம் போகுமானல் வதம், பந்தம் இவற்றைத் தருவதாக ஆகும். (எ—று)

(அ—கை) ஸாரிகா என்பதும் ஒருவகை நாணத்தான் குருவியே யாகும். இதன் சப்தத்தின் பலனுபதேசிக்கப்படுகின்றது—

**मू० ॥ क्रक्रेति च सारिका द्रुतं त्रेत्रे वाप्यभया विरौति या ।**
**सा वक्ति यियासतोऽचिराद्गात्रेभ्यः क्षतजस्य विस्रुतिम् ॥**

(க—ரை) ஸாரிகையானது க்ரக்ர என வேகமாக சப்திக்கக் கூடிய பக்ஷியாகும். இந்த பக்ஷியானது எவ்விதபயமுமின்றி த்ரே த்ரே எனசப்திக்குமானல் யாத்திரை செய்கின்றவனுடைய சரீரத்தினின்றும் ரக்தப்பெருக்கைத் தரும். (எ—று)

(அ—கை) பேண்டகம் என்றபக்ஷியின் சப்தபலனுபதேசிக்கப் படுகின்றது—

**मू० ॥ फेण्टकस्य वामतश्चिरिल्विरिल्विति स्वनः ।**
**शोभनो निगद्यते प्रदीप्त उच्यतेऽपरः ॥ ३१ ॥**

(க—ரை) பேண்டகம் என்ற பக்ஷியினுடைய சிரில்விரில் என்ற சப்தமானது சோபனமென்று சொல்லப்படுகிறது. இதற்கு மாருன சப்தமானது ப்ரதீப்தம் எனப்படும். (எ—று)

(அ—கை) கர்த்தபம் என்கிற கழுதையின் சப்தம் சொல்லப் படுகின்றது—

**श्रेष्ठं खरं स्थास्नुमुशन्ति वाममोङ्कारशब्देन हितं च यातुः ।**
**अतोऽपरं गर्दभनादितं यत्सर्वाऽऽश्रयं तत्प्रवदन्ति दीप्तम् ॥ ३२ ॥**

(க—ரை) கழுதையானது யாத்திரை செய்கின்றவனுடைய இடது பக்கத்தில் அசைவற்று நிற்குமானல் சோபனமானதெனச் சொல்லுகின்றனர். ஓங்காரசப்தத்தால் சப்திக்குமானல் ஹிதமானதாகவாகும். இதற்குமாருகவுள்ள எவ்விதசப்தமும் தீப்தமெனப்படும். அதாவது: அசுபபலனைத்தரும் என்பதாம்.

(அ—கை) குரங்கம், பிருஷதம், ருரு, இவைகள் மான் ஜாதி பேதங்களாகும். அவற்றின் சப்தபலன் சொல்லப்படுகின்றது—

मू० ॥ आकाररावी समृगः कुरङ्गः
ओकाररावी पृषतश्च पूर्णः ।
येऽन्ये स्वरास्ते कथिताः प्रदीप्ताः
पूर्णाः शुभाः पापफलाः प्रदीप्ताः ॥ ३३ ॥

(க—ரை) குரங்கம் என்ற மான் மற்றொருமானுடன் கூடிக் கொண்டு ஆகாரசப்தம் செய்தால் அது பூர்ணமெனப்படும். அவ் விதமே ஓகாரசப்தம் செய்யும் ப்ருஷதம் என்றமானும் பூர்ண மேயாகும். இதற்குமாறான வேறுசப்தங்கள் தீப்தங்களாகும். பூர்ணம் என்பது சுபமாகவும், ப்ரதீப்தம் என்பது கெட்டபல னைத்தருவதாகவும் ஆகும். (எ—று)

(அ—கை) கோழியின் சப்தபலனுபதேசிக்கப்படுகின்றது—

मू० ॥ भीता रुवन्ति कुकुकुक्किति ताम्रचूडा
स्त्यक्त्वा रुतानि भयदान्यपराणि रात्रौ ।
स्वस्थैः स्वभावविरुतानि निशाऽवसाने
ताराणि राष्ट्रपुरपार्थिववृद्धिदानि ॥ ३४ ॥

(க—ரை) கோழிகள் ராத்ரியில் பயந்தவைகளாய் குகுகுகு என சப்திக்குமானால் அந்தசப்தத்தை விடுத்து மீதமுள்ள சப்த ங்கள் பயத்தைத்தருகின்றன. இயர்க்கையிலிருக்கின்ற கோழி கள் விடியற்காலத்தில் உறத்து தனதியற்கையான சப்தத்தைச் செய்யுமானால் ராஜ்யம், புரம், அரசன் இவர்களுக்கு விருத்தி யைத் தரகூடியவைகளாக வாகின்றன. (எ—று)

(அ—கை) சிப்பிகா, பூனை, இவற்றின் சப்தம், பசுவின்தும் மல் இவற்றின் பலனையுபதேசிக்கிறார்—

मू० ॥ नानाविधानि विरुतानि हि छिप्पिकायाः
तस्याः शुभाः कुलकुलुर्नशुभास्तु शेषाः ।

यातुर्बिडालविरुतं न शुभं सदैव
गोस्तुक्षुतं मरणमेव करोति यातुः ॥ ३५ ॥

(க—ரை) சிப்பிகையினுடைய சப்தங்கள் பற்பலவிதமாக உள்ளன. அதனுடைய குலுகுலுஎன்ற சப்தம் சுபமானது. மீதமுள்ளவைகள் சுபங்களல்ல. பூனையின் சப்தமானது யாத்திரைசெய்கின்றவர்க்கு எப்பொழுதுமே சுபத்தைத்தரக்கூடியதன்று. பசுவானது தும்புமானால் யாத்திரை செய்பவர்க்கு மரணத்தையே தரும். (எ—று)

(அ—கை) ஊமைக்கோட்டானுடைய சப்தத்தின் பலன் சொல்லப்படுகின்றது—

மூ॰॥ हुंहुं गुग्लुगितिप्रियामभिलषन्क्रोशत्युलूको मुदा
पूर्णः स्याद्गुरुलुप्रदीप्तमपि च ज्ञेयं सदा किस्किसि ।
विज्ञेयः कलहो यदा बलबलं तस्याऽसकृद्वाशितं
दोषायैव टटट्टेति नशुभाश्शेषास्तु दीप्तस्वराः ॥ ३६ ॥

(க—ரை) ஊமைக்கோட்டானானது சந்தோஷத்துடன் தனது நாயகியை விரும்பிக் கொண்டு ஹூம் ஹூம் குக்லுக் என்று சப்திக்கும். அதில் குருலு என்ற சப்தமானது பூர்ணமாகும். எந்தக் காலத்திலும் கிஸ்கிஸி என்ற சப்தமானது ப்ரதீப்தமாகவே ஆகும். அதே கோட்டான் சண்டையிடும் பொழுது பலபலஎன அடிக்கடி சப்திக்கும். டடட்டட என்ற அதன் சப்தமானது தோஷத்தையும் பொருட்டே ஆகும். மீதமுள்ள ஸ்வரங்கள் தீப்தங்களாக வாகி சுபமற்றவைகளாகவே யாகும். (எ—று)

(அ—கை) ஸாரஸம் என்ற (நீர்காக்கையின்) சப்தபலனுபதேசிக்கப் படுகின்றது—

மூ॰॥ सारसकूजितमिष्टफलं तद्युगपद्विरुतं मिथुनस्य ।
एकरुतं न शुभं यदि वास्यादेकरुते प्रविरौति चिरेण ॥

(க—ரை) ஸாரஸபக்ஷி ஆண்பெண் இரண்டும் சேர்ந்து ஒரே சமயத்தில் சப்திக்குமானால் இஷ்டமானபலனுண்டாகும். ஒரு ஸாரஸபக்ஷியின் சப்தமானது சுபமாகாது. இவ்விதம் ஒன்று சப்

திக்கும் பொழுது கொஞ்சநேரஞ் சென்றுமற்றொன்று சப்திக்குமானாலும் அப்பொழுதும் அந்த சப்தமானது சுகமாகவே ஆகாது என்பதாம். (எ—று)

(அ—கை) பிங்களா என்ற பெண்கோட்டானுடைய சப்த பலனை யுபதேசிக்கிறார்—

मू० ॥ चिरिल्विरिल्विति स्वैरैः शुभं करोति पिङ्गला ।
अतोऽपरेतु ये स्वराः प्रदीप्तसंज्ञितास्तु ते ॥ ३८ ॥

(க—ரை) பிங்களா என்ற பெண் ஊமைக்கோட்டானானது சிரில் விரில் என்ற சப்தங்களால் சுபத்தைத்தருகின்றன. இதற்கு மாறான சப்தங்கள் யாவும் ப்ரதீப்தங்களே யாகும். (எ—று)

मू० ॥ इशिविरुतं गमनप्रतिषेधि
कुशुकुशुचेत्कलहं प्रकरोति ।
अभिमतकार्यगतिं च यथा सा
कथयति तं च विधिं कथयामि ॥ ३९ ॥

(க—ரை) இசி என்ற சப்தமானது யாத்திரைக்குத் தடையைச் செய்யும். குசுகுசு என்று சப்திக்குமானால் கலஹத்தைச் செய்யும். இஷ்டமான காரியசித்தியை அது எவ்விதம் தெரிவிக்குமோ அம்முறையைப் பின்னர் சொல்லுகிறேன். (எ—று)

(அ—கை) அபிமதகாரிய சித்தியைத்தரும் முறை யுபதேசிக்கப்படுகின்றது—

मू० ॥ दिनान्तसन्ध्यासमये निवास
मागम्य तस्याः प्रयतश्च वृक्षम् ।
देवान्समभ्यर्च्य पितामहादीन्
नवांबरस्तं च तरुं सुगन्धैः ॥ ४० ॥
एको निशीथेऽनलदिक्स्थितश्च
दिव्येतरैस्तां शपथैर्नियोज्य ।
पृच्छेद्यथा चिन्तितमर्थमेव
मनेन मन्त्रेण यथा शृणोति ॥ ४१ ॥

(க—ரை) சாயங்கால ஸந்தியாஸமயத்தில் அந்த பிங்களை வஸிக்கும் மரத்தினருகில் வந்து எச்சில் முதலிய அசுத்தமற்றவனுய் புதிதான ஆடையணிந்து கொண்டு பிரும்ம விஷ்ணு ருத்திரர்களைப் பூஜை செய்து பிங்களை வஸிக்கும் மரத்தைச் சந்தனம், குங்குமம், கஸ்தூரி, அகில் முதலியவாஸனைத் திரவியங்களாலலங்கரித்து நடுராத்திரியில் ஒருவனுகவே மரத்தின் தென்கிழக்கு திக்கில் நின்று கொண்டு அந்த பிங்களை தேவர்களுக்குரியவும், மனிதர்கட்குரியவுமான சபதங்களால் கட்டுப்படுத்தி எவ்விதம் சொன்னுல் அது நன்ருய் கேழ்க்குமோ, அவ்விதமே பின்வரும் மந்திரத்தை ஜபித்து தான் நினைத்த காரியத்தின் சித்தியைப் பற்றி அதைக் கேட்கவேண்டும். (எ—று)

(அ—கை) அக்காலம் படிக்கவேண்டிய சுலோகரூபமான மந்திரத்தை யுபதேசிக்கிருர்—

**मू० ॥ विद्धि भद्रे मया यत्त्वमिममर्थं प्रचोदिता ।**
**कल्याणि सर्ववचसां वेदित्री त्वं प्रकीर्त्यसे ॥ ४२ ॥**
**आपृच्छेऽद्य गमिष्यामि वेदितश्च पुनस्त्वहम् ।**
**प्रातरागम्य पृच्छेत्वामाग्नेयीं दिशमाश्रितः ॥ ४३ ॥**
**प्रचोदयाम्यहं यत्त्वां तन्मे व्याख्यातुमर्हसि ।**
**स्वचेष्टितेन कल्याणि यथावेद्मि निराकुलम् ॥ ४४ ॥**

(க—ரை) ஓ கல்யாணி! பிங்களே! பின்வரும் பொருளைப் பற்றி என்னுல் நீ கேட்கப்பட்டவளாக இருக்கின்ருய் என அறிய வேண்டும். எல்லாவிதமான வார்த்தைகளையும் சொல்லுகின்றவளென நீ சொல்லப்படுகின்ருய். இப்பொழுது நான் உன்னிடம் விடைபெற்றுக்கொண்டு இங்கிருந்து போய் திரும்பவும் காலையில் வந்து தென்கிழக்கு திக்கில் நின்று கொண்டு உன்னைக் கேட்கிறேன். ஓ கல்யாணி! நான் உன்னை எதைப்பற்றி கேட்கின்றேனே நீ அதை எனக்கு உனது சேஷ்டையால் கலக்கமற நான் எவ்விதமறிவேனே அவ்விதம் சொல்லுவாயாக. (எ—று)

(அ—கை) இந்தச் சுலோகத்தால் இவ்விதம் கேட்டவனுக்கு

பிங்களிகையானது தனது சேஷ்டிதத்தால் அவனது கேள்விக்குப் பதில் தெரிவிக்கும் முறையுபதேசிக்கப் படுகின்றது—

**इत्येवमुक्ते तरुमूर्धगायाश्चिरिल्चिरिल्वीतिरुतेऽर्थसिद्धिः ।**
**अत्याकुलत्वं दिशिकारशब्दे कुचाकुचेत्येवमुदाहृते वा ॥**
**अवाक्प्रदानेऽपि हितार्थसिद्धिः पूर्वोक्तदिक्चक्रफलैरतोन्यत् ।**
**वाच्यं फलं चोत्तममध्यनीचशाखास्थितायां वरमध्यनीचम् ॥**

(க—ரை) இவ்விதம் சொல்லப்பட்டவுடன் மரத்தின் தலையிலிருக்கின்ற பிங்களையினுடைய சிரில்விரில்வீ என்ற சப்தமுண்டானால் அர்த்த சித்தி யுண்டாகின்றது. திசிகார என சப்திக்குமானால் மனதிற்குக் குழப்பமுண்டாகும். குசாகுசா என்று சப்திக்குமானாலும் அதே மனக்குழப்பந்தா னுண்டாகும். ஒன்றுமே சப்திக்காமலிருந்தாலும் அர்த்த சித்தியுண்டாகும். இதற்குமாறானதெல்லால் 32 விதமாகத் திக்சக்கிரத்தைப் பிரித்து எவ்விதபலன் சொல்லப்பட்டதோ அவ்விதபலனே நடக்கும். மேலும், மரத்தின் உத்தமமான கிளையில் பிங்களை யிருந்தால் சிறந்த பலனென்றும், நடுத்தரமான கிளையிலிருந்தால் நடுத்தரமான பலன் என்றும், தாழ்ந்த கிளையிலிருந்தால் அற்ப பலன் என்றும் கண்டு கொள்ள வேண்டும். (எ—று)

(அ—கை) பல்லியின் சொல்லுக்குப் பலன் சொல்லப்படுகின்றது—

**दिङ्मण्डलेऽभ्यन्तरबाह्यभागे फलानि विन्द्याद्गृहगोधिकायाः ।**
**छुच्छुन्दरीचिचिडितिप्रदीप्ता पूर्णा तु सातित्तिडिति स्वनेन ॥**

(க—ரை) பல்லியானது முற்கூறிய திக்விபாகத்தில் நடுவிலுள்ள நாபியில் வலது பக்கத்திலிருந்து சப்திக்குமானால் அதற்குத் தக்கபடி பலனைக் கண்டறிய வேண்டும். அதாவது:—சாந்தையான திக்விபாகத்திலிருந்து மதுரமாக சப்திக்குமானால் உத்தமமான பலனுண்டாகும். அதேயிடத்தில் துஷ்டமாக சப்திக்குமானால் மத்தியமமான பலனே உண்டாகும். தீப்தா என்ற திக்கிலிருந்து மதுரமாக சப்திக்குமானால் சுபமான பலனுண்டாகும். தீப்தமாக இல்லாத திக்கிலிருந்து தீப்தமாக சப்திக்குமானால்

துஷ்டபலனே நடக்கும். முன்னர் சொன்ன பிங்களை விஷயத்தி லும் இவ்விதமே கண்டு கொள்ளவேண்டும் என பட்டோத்பலர் எழுதியிருக்கிறார். மூஞ்சோறு சிச்சிட் என்று சப்திக்குமானல் தீப்தமென்றும், அதுவே தித்திட் என்று சப்திக்குமானல் பூர்ண மென்றும் இது பூர்ணபலனைத் தரும் என்றும் கொள்ளவேண் டும். (எ—று)

3-வது விருதாத்தியாயம் முற்றிற்று.

---

## ச்வசக்கிராத்தியாயம் 4.

(அ—கை) நாயின் சேஷ்டிதத்தைக்கொண்டுகொள்ள வேண் டிய பலன் இந்த அத்தியாயத்தி லுபதேசிக்கப் படுகின்றது—

**मू० ॥ नृ तुरग करि कुम्भ पर्याणसक्षीरवृक्षेष्टकासञ्चय- च्छत्र शय्यासनोलूखलानि ध्वजं चामरं शाड्वलं पुष्पितं वा प्रदेशं यदाश्वाऽवमूत्र्याऽग्रतो याति यातुस्तदाकार्यसिद्धि- र्भवेदार्द्रके गोमये मिष्टभोज्यागमः शुष्कसम्मूत्रणे शुष्कमन्नं गुडो मोदकाऽवाप्तिरेवाथवा ॥**

(க—ரை) நாயானது மனுஷ்யன், குதிரை, யானை, குடம், குதிரையின் ஜேணம், பாலுள்ள எருக்கு முதலிய மரம், கல்லு களைக் கும்பலாகக் கொட்டியிருக்குமிடம், குடை, படுக்கை, ஆஸ னம், உரல் இவற்றிலோ, கொடிமரம், சாமரம், புற்களடர்ந்த தரை, புஷ்பித்த பிரதேசம், ஆகிய இவ்விடங்களுள் யாதானு மோரிடத்திலோ மூத்திரம் விட்டு யாத்திரை செய்பவனுக்கு எதிரில் ஓடுமானல் அப்பொழுது காரிய சித்தியுண்டாகும். ஈர மான கோமய(சாண)த்தில் மூத்திரம் விட்டால் மிஷ்டமான ஆஹார லாபமுண்டாகும். உணர்ந்த சாணத்தில் மூத்திரம் விட்டால் உணர்ந்த அன்னமும், வெல்லம், குழக்கட்டை (மோத கம்) இவற்றின் பிராப்தியுமுண்டாகும். (எ—று)

**मू० ॥ अथ विषतरु कण्टकी काष्ठ पाषाण- शुष्कद्रुमाऽस्थि श्मशानानि मूत्र्याऽवहत्याथवा**

यायिनोऽग्रेसरोऽनिष्टमाख्याति शय्या कुलालादि-
भाण्डान्यभुक्तान्यभिन्नानि वा मूत्रयन् कन्यकादोषकृद्-
भुज्यमानानि चेद्दुष्टतां तद्गृहिण्यास्तथा
स्यादुपानत्फलं गोस्तु संमूत्रणेऽवर्णजः सङ्करः ॥

(க-ரை) விஷவிருக்ஷத்திலோ, முள்ளுடன் கூடினமரத்திலோ, கட்டையிலோ, கல்லிலோ, பட்டுப்போன மரத்திலோ, எலும்பிலோ, சுடுகாட்டிலோ மூத்திரம் விட்டாலும், அல்லது காலினால் பூமியையடித்து விட்டு யாத்திரை செய்கின்றவனுக்கு எதிரிலோடினாலும், அநிஷ்டத்தைச் சொல்லும். அதாவது: யாத்திரை செய்பவனுக்குப் பின்னர் அசுபம் உண்டாகும் என்று தெரிந்து கொள்ளவேண்டும் என்பதாம். மேலும் பாய்முதலிய விரிப்புகளிலோ, குயவன் முதலியோரின் சட்டியிலோ, கட்டை முதலியவற்றிலோ, புதிதான வஸ்துக்களிலோ, பழுதுபடாத வஸ்துக்களிலோ மூத்திரம் விடுமானால் பெண்ணுக்குக் கெட்ட நடத்தையைத் தெரிவிப்பதாகவாகும். அனுபவத்திலிருக்கும் பாத்திரங்களில் மூத்திரம் விடுமாயின் யாத்திரை செய்பவனுடைய பத்னியின் கெட்டநடத்தையைச் சொல்லும். புதிதான பாதரக்ஷை(செருப்பு)முதலியவற்றில் மூத்ரம் விடுமானால் கன்னிகையின் தோஷத்தையும், காலில் போட்டுக்கொண்ட பழையதான பாதரக்ஷைமுலியவற்றில் மூத்திரம் விடுமானால் பத்னியின் தோஷத்தையும் சொல்லும். மேற்கூறியவற்றில் பசுமூத்திரம் விடுமானால் வீட்டில் தாழ்ந்த ஜாதிமனிதஸங்கரம் உண்டாகும் என்றறியவேண்டும். (எ-று)

(அ-கை) நாயின் சேஷ்டைமூலம் அறியப்படும் வேறு சிலவற்றை யுபதேசிக்கிறார்—

मू० ॥ गमनमुखमुपानहं संप्रगृह्योपतिष्ठेद्यदा
स्यात्तदासिद्धये मांसपूर्णाननेऽर्थाप्तिरार्द्रेण चास्था
शुभं साग्न्यलातेन शुष्केण चास्थ्नागृहीतेन मृत्युः
प्रशान्तोल्मुखेनाऽभिघातोऽथ पुंसः शिरोहस्तपादादि-

**वक्त्रे भुवोऽभ्यागमो वस्त्रचीरादिभिर्व्यापदः**
**केचिदाहुः सवस्त्रे शुभम् ।**
**प्रविशति तु गृहं सशुष्कास्थिवक्त्रे प्रधानस्य**
**तस्मिन्वधः शृङ्खलाशीर्णवल्लीवरत्रादि वा बन्धनं**
**चोपगृह्योपतिष्ठेद्यदा स्यात्तदा बन्धनं-**
**लेढि पादौ विधुन्वन् स्वकर्णावुपर्याक्रमंश्चापि**
**विघ्नाय यातुर्विरोधे विरोधस्तथास्वाङ्गकण्डूयने**
**स्यात्स्वपंश्चोर्ध्वपादः सदा दोषकृत् ॥ १ ॥**

(க—ரை) நாயானது பாதாகைஷயை வாயில் கவ்விக்கொண்டு யாத்திரை செய்பவனுக்கெதிரில் வந்து அவனதருகில் நிற்குமாகுல் அர்த்த (காரிய)சித்தியானதுண்டாகும். வாயில் நிறைந்த மாம்ஸமுள்ளதாயிருக்குமாகுல் தனப்பிராப்தி யுண்டாகும். ஈரமுள்ள எலும்பிகுல் நிறைந்த முகமுள்ளதாயிருக்குமாகுல் சுபமுண்டாகும். எரிகொள்ளிகட்டை, ஈரமற்ற எலும்பு இவற்றை வாயில் கவ்விக்கொண்டிருக்குமாகுல் யாத்திரைசெய்பவனுக்கு மரணமுண்டாகும். எரிந்து அணைந்துபோன கொள்ளிகட்டையைக் கவ்விக்கொண்டிருக்குமாகுல் உபத்திரவமுண்டாகும். அல்லது மனிதனுடைய தலை, கைகள், கால்கள், வேறு அவயவங்கள் இவற்றைக்கவ்விக்கொண்டு வருமாகுல் அப்பொழுது பூமிலாபமுண்டாகும். துணி, மரயுரி (மரப்பட்டை) அல்லது, கிழிந்தவஸ்திரம், மரப்பட்டையின் துணுக்கு இவற்றைக் கவ்விக்கொண்டு ஓடிவருமாகுல் ஆபத்துண்டாகும். வேறு ரிஷிகள் நாய் வஸ்திரத்தைக் கவ்விக்கொண்டோடுமாகுல் சுபமுண்டாகுமென்கின்றனர். மேலும் நாயானது ஈரமற்ற எலும்பைக் கவ்விக்கொண்டு எந்த வீட்டில் நுழைகின்றதோ அந்த வீட்டுச் சொந்தக்காரனுக்கு மரணமுண்டாகும். பழைய இரும்புச்சங்கிலி, கொடி, தோலாலான கயறு, வேறுவிதமான கயறு, கைகால்விலங்குமுதலியன இவற்றைக் கவ்விக்கொண்டு வருமாகுல் அப்பொழுது யாத்திரை செய்பவனுக்கு பந்தனமுண்டாகும். யாத்திரை செய்பவனுடைய கால்களை நக்குமாகுலும், தனது காதை அடித்துக்

கொள்ளுமாளுலும், யாத்திரை செய்பவனின் மேற்பாய விரும்பு மாளுலும், யாத்திரையின் விக்னத்தின் பொருட்டே யாகும். யாத்திரை செய்பவனுக்கு யாத்திராமார்க்கம் (வழி) தடைபட்டு விடும். அதுபோலவே யாத்திரை செய்பவனுடைய அவயவத்தை சொரிந்து கொடுக்குமாளுலும் யாத்திரை செய்பவனுக்கு முற் கூறியபடி யாத்திராவிரோதமே யுண்டாகும். தனது காலைத் தூக்கிக்கொண்டு எக்காலத்திலும் தூங்கிக்கொண்டே இருக்கு மாளுல் தோஷத்தைச் செய்வதாகவே தாளுகும். (எ—று)

(அ—கை) அந்தந்த திக்குக்குத்தகுந்தபடி நாயின் சேஷ்டித மூலமேற்படும் பலனுபதேசிக்கப் படுகின்றது—

**सूर्योदयेऽर्काऽभिमुखो विरौति ग्रामस्य मध्ये यदि सारमेयः ।**
**एको यदा वा बहवस्समेता श्शंसन्ति देशाधिपमन्यमाशु ॥**

(க—ரை) நாயானது சூரியோதயகாலத்தில் கிராமத்தின் நடுவில் நின்றுகொண்டு சூரியனுக்கெதிரில் ஒன்ருகவோ அனேகஞ் சேர்ந்தோ அழுமாளுல் வெகுவிரைவில் அந்த தேசாதிபன்மாறி புதிதாய் வேறு தேசாதிபனேற்படுவான். (எ—று)

(அ—கை) இவ்விஷயமாக வேறு சிலவற்றையுபதேசிக்கிருர்—

**सूर्योन्मुखः श्वाऽनलदिक्स्थितश्च चोरानलत्रासकरोऽचिरेण ।**
**मध्याह्नकालेऽनलमृत्युशंसी सशोणितः स्यात्कलहोऽपराह्णे॥**

(க—ரை) நாயானது சூரியனுக்கெதிராக தென்கிழக்கு திக்கிலிருந்துகொண்டு ஊளையிடுமாளுல் அப்பொழுது வெகு சீக்கிர காலத்திற்குள் திருடர், நெருப்பு இவற்ருல் பயமுண்டாகும். நடுப்பகலில் சூரியனுக்கெதிராக நின்று ஊளையிடுமாளுல் நெருப்பு, மாணம் இவற்றைச் சொல்லுகிறது. மாலையில் (அதாவது; 3-வது யாமத்தில்) சூரியனுக்கெதிரில் நின்று ஊளையிடுமாளுல் ரக்தப் பெருக்கையும், கலஹத்தையும் சொல்லுகிறது. (எ—று)

(அ—கை) இதளுல் வேறு சிலவற்றை யுபதேசிக்கிருர்—

**रुवन्दिनेशाऽभिमुखोऽस्तकाले कृषीवलानां भयमाशु दत्ते ।**
**प्रदोषकालेऽनलदिङ्मुखश्च दत्ते भयं मारुततस्करोत्थम् ॥ ४ ॥**

(க—ரை) சூரியாஸ்தமனகாலத்தில் சூரியனுக்கெதிர்முகமாக நின்றுகொண்டு நாய் ஊளையிடுமானல் பயிரிடுபவர்கட்கு வெகு சீக்கிரத்திற் பயமுண்டாகும் என்பதைத் தெரிவிக்கும். பிரதோஷகாலத்தில் தென்கிழக்கு திக்கிலிருந்துகொண்டு வடமேற்கு திக்கைப் பார்த்துக்கொண்டு ஊளையிடுமானல் காற்று, திருடர் இவற்றினிடமிருந் துண்டாகும் பயத்தைச் சொல்லும். (எ—று)

(அ—கை) வேறு சிலவற்றை யுபதேசிக்கிருர்—

**उदङ्मुखश्चापि निशार्द्धकाले विप्रव्यथां गोहरणं च शास्ति।**
**निशाऽवसाने शिवदिङ्मुखश्च कन्याऽभिदूषानलगर्भपातान्॥**

(க—ரை) நள்ளிரவில் வடக்குமுகமாய் நின்றுகொண்டு ஊளையிடுமானல் பிராம்மண பீடையையும், பசு பிறராலபஹரிக்கப்படுதலையும் தெரிவிக்கும். ராத்திரியின் முடிவில் வடகிழக்கு திக்கை நோக்கி நின்றுகொண்டு ஊளையிடுமானல் கன்னிகை தூஷணத்தையும், அக்னியையும், கர்ப்பம் கலைந்து விடுதலையும் தெரிவிக்கும். (எ—று)

(அ—கை) வேறு சிலவற்றை யுபதேசிக்கிருர்—

**उच्चैः स्वरास्स्युस्तृणकूटसंस्थाः प्रासादवेश्मोत्तमसंस्थिता वा।**
**वर्षासु वृष्टिं कथयन्ति तीव्रामन्यत्र मृत्युं दहनं रुजश्च॥ ६॥**

(க—ரை) நாய்கள் புற்களின் குவியல்களிலோ, அதாவது:—வைக்கோல்போர் முதலியவற்றிலோ, மாடியிலோ, சிறந்தவீடுகளிலோ, இருந்துகொண்டு உறக்க ஊளையிடுமானல் வர்ஷருதுவில் அதிகமான மழையையும், வர்ஷாகாலம் தவிர மற்றகாலங்களில் அதிகமான சாவு, நெருப்பு, பலவிதரோகங்கள் இவற்றையும் தெரிவிக்கும். (எ—று)

(அ—கை) வேறுபலன்களை யுபதேசிக்கிருர்.—

**प्रावृट्कालेऽवग्रहेऽम्भोवगाह्य प्रत्यावर्तैरेचकैश्चाप्यभीक्ष्णम्।**
**आधुन्वन्तो वा पिबन्तश्च तोयं वृष्टिं कुर्वन्त्यन्तरे द्वादशाहात्॥**

(க—ரை) வர்ஷாகாலத்தில் மழைபொழியாதிருக்கும் சமயத்தில் நாய்கள் ஜலத்தில் இறங்கி அந்தஜலத்தின் நடுவில் நின்று

கொண்டு அடிக்கடி வலதுபக்கமிருந்து இடதுபக்கமும், இடது பக்கமிருந்து வலதுபக்கமுமாக சுற்றுகின்றவைகளாகவோ, அல்லது ஜலத்தைக் கலக்குகின்ற வைகளாகவோ, ஜலத்தைக் குடிக்கின்றவைகளாகவோ காணப்படுமானல் 12 தினங்களுக்குள் மழைபொழியுமென்பதைத் தெரிவிக்கும். (எ—று)

(அ—கை) நாயின் மற்றுமுள்ள சேஷ்டிதமூலமறியவேண்டியவற்றை யுபதேசிக்கிருர்:—

**द्वारे शिरोन्यस्य बहिः शरीरं रोरूयते श्वा गृहिणीं विलोक्य।**
**रोगप्रदस्स्यादथ मन्दिरान्तर्बहिर्मुखो वक्ति च बन्धकीं ताम् ॥**

(க—ரை) நாயானது வீட்டின் துவாரபாகத்தில் தலையை நுழைத்து சரீரத்தை (மற்றபாகங்களை) வெளியில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு யஜமானனுடையபத்தினியைப் பார்த்து அடிக்கடி குறைக்குமானல் அவளுக்கு ரோகத்தைக் கொடுப்பதாக வாகும். வீட்டின் உள்பாகத்தில் சரீரத்தையும், வெளியில் தலைபாகத்தையும் வைத்துக்கொண்டு நாயானது வீட்டின் யஜமானனுடைய பத்தினியைப் பார்த்து அடிக்கடி குறைக்குமானல் அவளை வியபிசாரி என்று தெரிவிக்கும். (எ—று)

(அ—கை) மற்றும் சிலவிசேஷத்தையுபதேசிக்கிருர்:—

**कुड्यमुत्किरति वेश्मनो यदा तत्र खानकभयं भवेत्तदा।**
**गोष्ठमुत्किरति गोग्रहं वदेद्धान्यलब्धिमपि धान्यभूमिषु ॥ ९ ॥**

(க—ரை) நாயானது வீட்டின் சுவரை நகங்களால் பிராண்டுமானல் அந்த வீட்டில் கன்னம் வைப்பவன் மூலம் பயமுண்டாகும் என்பதைத் தெரிவிக்கும். பசுக்கள் கட்டுமிடத்தை நாயானது நகங்களால் பிராண்டுமானல் பசுக்கள் அபஹரிக்கப்படும் என்பதைத் தெரிவிக்கும். நெல்விளையும் பூமியை பிராண்டுமானல் தான்யலாபத்தைத் தெரிவிக்கும். (எ—று)

(அ—கை) சுபாசுபஸூசகமான நாயின் வேறுவிதமான சேஷ்டிதங்களை யுபதேசிக்கிருர்:—

एकेनाक्ष्णा साश्रुणा दीनदृष्टिर्मन्दाहारो दुःखकृत्तद्गृहस्य ।
गोभिस्साकं क्रीडमानस्सुभिक्षं क्षेमारोग्यं चाभिधत्ते मुदं च ॥

(க–ரை) நாயானது எந்தவீட்டில் ஒருகண்ணில் கண்ணீருடன் கூடியதாயும், யாரும் கண்டு துக்கிக்கத்தகுந்த பார்வையையுடையதாயும் கொண்டு இயற்கையில் எடுத்துக்கொள்ளும் அளவுக்குக் குறைவான ஆஹாரத்தை யுட்கொள்ளுகின்றதோ அந்தக் கிருஹத்திற்கு துக்கத்தின் வரவைத்தெரிவிப்பதாக வாகும். நாயானது பசுக்களுடன் விளையாடிக் கொண்டிருக்குமானல் ஸுபிக்ஷத்தையும், கிடைத்தபொருளுக்கு அழிவில்லாமையையும், ஆரோக்யத்தையும், ஸந்தோஷத்தையும்தெரிவிக்கும்.

(அ–கை) வேறு விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

वामं जिघ्रेज्जानु वित्तागमाय स्त्रीभिस्साकं विग्रहो दक्षिणं चेत् ।
ऊरुं वामं चेन्द्रियार्थोपभोगः सव्यं जिघ्रेदिष्टमित्रैर्विरोधः ॥११॥

(டீ–ரை) நாயானது யாத்திரை செய்பவனுடைய இடது காலை முகர்ந்து பார்க்குமானல் தனத்தின் வரவுண்டாகும். வலதுகாலை முகர்ந்தால் ஸ்திரீகளுடன் சண்டையைத்தெரிவிக்கும். நாய் யாத்திரை செய்பவனுடைய இடது துடையை முகர்ந்தால் இந்திரியங்களாலனுபவிக்கத் தகுந்த சப்தம், கந்தம் முதலியவற்றின் அனுபவமானதுண்டாகும். வலது துடையை முகர்ந்தால் பந்துக்களுடனும், ஸ்னேஹிதர்களுடனும் விரோதமுண்டாகும். (எ–று)

(அ–கை) வேறு விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

पादौ जिघ्रेद्यायिनश्चेद्यात्रां प्राहार्थासिं वाञ्छितां निश्चलस्य ।
स्थानस्थस्योपानहौ चेद्विजिघ्रेत्क्षिप्रं यात्रां सारमेयः करोति ॥

(க–ரை) நாயானது யாத்திரை செய்பவனுடைய இரண்டு கால்களையும் ஒரே சமயத்தில் முகருமானல் யாத்திரையின் நிஷேதத்தையும் அதாவது:—யாத்திரை செய்வது அனுவச்யம் என்பதையும், இருந்தவிடத்திலேயே விரும்பிய பொருளின் லாபத்தையும் தெரிவிக்கும். யாத்திரை செய்பவன் வஸிக்குமிடத்திலிருக்

கிற இரண்டு பாதரக்ஷைகளை முகருமானல் சீக்கிரமாய் யாத்திரை செய்ய வேண்டுமென்பதைத் தெரிவிக்கும். (எ—று)

(அ—கை) வேறு விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**उभयोरपि जिघ्रणे हि बाह्वो र्विज्ञेयोरिपुचोरसंप्रयोगः।**
**अथ भस्मनि गोपयीत भक्षान् मांसास्थीनि च शीघ्रमग्निकोपः॥**

(க—ரை) நாயானது யாத்திரை செய்பவனுடைய இரண்டு கைகளையும் முகர்ந்து பார்க்குமானல் சத்துருக்கள், திருடர்கள் இவர்களுடன் சேர்க்கையை அறியவேண்டும். நாயானது மோதகம் முதலான தின்பண்டங்களையோ, மாம்ஸம், எலும்பு இவைகளையோ, சாம்பலில் மறைத்து வைக்குமானல் சீக்கிர காலத்தில் தீவிபத்தைத் தெரிவிக்கும். இவ்விதமே கர்க்காசாரியரும்—

यदा श्वा जिघ्रति भुजौ यातुर्द्वावपि निर्दिशेत्।
रिपुचोरभयं घोरं तस्मिन्नुत्पातदर्शने॥
आमिषं तु यदाऽऽगृह्य तृणैराच्छाद्य तिष्ठति।
उत्पातं तादृशं दृष्ट्वा विन्द्यादग्निमुपस्थितम्॥

என்றதானுபதேசித்திருக்கிறார். (எ—று)

(அ—கை) நாயின் சேஷ்டிதத்தைப்பற்றிய மற்றுமுள்ள விசேஷத்தை உபதேசிக்கிறார்—

**ग्रामे भषित्वा च बहिःश्मशाने भषन्ति चेदुत्तमपुंविनाशः।**
**यियासतश्चाभिमुखो विरौति यदा तदाश्वा निरुणद्धि यात्राम्॥**

(க—ரை) நாயானது கிராமத்தில் முதலில் குறைத்து விட்டு சுடுகாட்டிற்குச் சென்று அங்கும் குறைக்குமானல் கிராமத்தில் பிரதான புருஷன் எவனே அவனுக்கு மரணமுண்டாகும் என்பதைத் தெரிவிக்கும். யாத்திரை செய்பவனுக்கு எதிரில் நின்று கொண்டு அழுமேயானல் யாத்திரை செய்யவேண்டாம் என்பதைத் தெரிவிக்கும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்—

**मू०॥ उकारवर्णे विरुतेऽर्थसिद्धिरोकारवर्णेन च वामपार्श्वे।**
**व्याक्षेपमौकाररुतेन विन्द्यान्निषेधकृत्सर्वरुतैश्च पश्चात्॥**

(க—ரை) நாயானது உ என்ற அக்ஷரத்தை யுச்சரிப்பது போல் குறைக்குமானல் காரியசித்தி யுண்டாகும். யாத்திரை செய்பவனுடைய இடது பாகத்தில் ஒ என்ற அக்ஷரத்தை யுச்சரிப்பது போல் குறைக்குமானலும் காரியஸித்தியுண்டாகும். ஔ என்ற அக்ஷரத்தை யுச்சரிப்பது போல் குறைக்குமானல் யாத்திரை செய்பவனுக்குக் காரியஸித்தியில் கலக்கத்தைத் தெரிவிக்கும். யாத்திரை செய்பவனுக்குப் பின்பாகத்தில் எந்தவிதமாகக் குறைத்தாலும் யாத்திரா நிஷேதத்தை(யாத்திரை செய்யக்கூடாதென்பதைத்) தெரிவிக்கும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**खं खेति चोच्चैश्च मुहुर्मुहुर्ये रुवन्ति दण्डैरिव ताड्यमानाः ।**
**श्वानोऽभिधावन्ति च मण्डलेन ते शून्यतां मृत्युभयं च कुर्युः॥**

(க—ரை) எந்த நாய்கள் கழியினல் அடிக்கப்பட்டவைகள் போல்கம்கம்என்று உறக்க அடிக்கடி குறைக்கின்றனவோ அவைகளும், ஒன்று கூடிகிராமத்தைக் சுற்றிச்சுற்றி வருகின்ற நாய்களும் கிராமம் பாழடைந்து போவதையும், கிராமத்தில் மரண பயத்தையும் தெரிவிக்கும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்—

**प्रकाश्य दन्तान् यदि लेढि सृक्किणी तदाशनं मृष्टमुशन्ति तद्विदः।**
**यदाननं लेढि पुनर्न सृक्किणी प्रवृत्तभोज्येऽपि तदान्नविघ्नकृत् ॥**

(க—ரை) நாயானது பற்களை வெளியில் காட்டிக்கொண்டு கடவாய்களை நாக்கினல் நக்குமானல் நாயின் சேஷ்டாமூலமறிய வேண்டிய பலன்களை யறிந்த மஹான்கள் நல்ல ஆஹாரலாபம் கிடைக்கும் என்கின்றனர். கடவாய்களை நக்காமல் முகத்தையே நக்குமானல் உண்ண ஆரம்பித்த மனிதனுக்கும் அன்ன விக்னத்தைச் செய்யும். அதாவது:—அன்னம் கிடைக்கமாட்டாதென்று கருத்து. (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை உபதேசிக்கிறார்—

**ग्रामस्य मध्ये यदि वा पुरस्य भषन्ति संहत्य मुहुर्मुहुर्ये ।**
**ते क्लेशमाख्यान्ति तदीश्वरस्य श्वारण्यसंस्थो मृगवद्विचिन्त्यः॥**

(க—ரை) எந்தநாய்கள் கிராமத்தினுடையவோ, நகரத்தினுடையவோ மத்தியில் ஒன்றுகூடி அடிக்கடி குறைக்கின்றனவோ அவைகள் அந்தக் கிராமத்திற்கோ, நகரத்திற்கோ தலைவனுக்கு துக்கத்தைத் தெரிவிக்கின்றன. இதுவரை சொல்லியவை யாவும் கிராமத்தில் வஸிக்கின்ற நாய்களைப் பற்றியனவாகும். காட்டில் வஸிக்கின்ற நாய்கள் விஷயத்திலோ மிருகங்களுக்குச் சொல்லியவற்றையே கண்டுகொள்ள வேண்டும். அதாவது:—**ओजा: प्रदक्षिणं शस्ता:** என்று தொடங்கி சொல்லிய பலன்களையே இங்குமறியவேண்டும் என்பதாம். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**वृक्षोपगे क्रोशति तोयपात: स्यादिन्द्रकीले सचिवस्य पीडा ।**
**वायोर्गृहे सस्यभयं गृहान्त: पीडा पुरस्यैव च गोपुरस्थे ॥१९॥**
**भयंच शय्यासु तदीश्वराणां याने भषन्तो भयदाश्च पश्चात् ।**
**अथापसव्याजनसन्निवेशे भयं भषन्त: कथयन्त्यरीणाम्॥२०॥**

(க—ரை) நாயானது மரத்தின் ஸமீபத்தை யடைந்து குறைக்குமானால் மழைபொழியும். நகரத்தின் கோட்டைவாயிற்படியின் தாப்பாளின் ஸமீபத்தை யடைந்து குறைக்குமானால் மந்திரிக்குப் பீடையுண்டாகும். வீட்டிற்குள் நுழைந்து வடமேற்கு மூலையில் குறைக்குமானால் பயிர்களுக்குக் கெடுதலுண்டாகும். பட்டினத்தின் கோட்டை வாயிற்படியில் நின்று குறைக்குமானால் பட்டினத்திற்கே கெடுதலுண்டாகும். படுக்கையில் நின்று கொண்டு குறைக்குமானால் அந்த படுக்கைக்குச் சொந்தக்காரருக்கு பயத்தைத் தெரிவிக்கும். யாத்திரை செய்யும்பொழுது பின்புரத்தில் குறைக்குமானால் யாத்திரை செய்பவனுக்கு பயத்தைக் கொடுப்பனவாக வாகும். ஜனங்களுடைய கூட்டத்தின் இடது பாகத்தையடைந்து குறைக்குமானால் அந்த ஜனக்கூட்டத்திற்கு சத்துருவினிடமிருந்து பயத்தைத் தெரிவிக்கும். (எ—று)

ச்வசக்கிரம் என்ற 4-வது அத்தியாயம் முற்றிற்று.

## சிவாருதாத்தியாயம் 5.

(அ—கை) இவ்வத்தியாயத்தில் பெண் நரி ஊளையிடுவதன் மூலம் கண்டறியவேண்டிய சுபாசுபபலன்கள் சொல்லப்படுகின்றன. முதலில், நாயின் சப்தவிஷயமாய் முன்கூறியவற்றை இங்கும் கண்டுகொள்ளவேண்டும் என்றும், இங்குள்ள வேறு விசேஷத்தையு முபதேசிக்கிறார்:—

**श्वभिस्सृगालास्सदृशाः फलेन विशेष एषां शिशिरे मदाप्तिः।**
**हूहूरुतान्ते परतश्च टाटा पूर्णः स्वरोऽन्ये कथिताः प्रदीप्ताः ॥**

(க—ரை) சென்ற ச்வசக்கிராத்தியாயத்தில் நாயுக்கு எந்தெந்தவிதமான சேஷ்டைகளும், அதன் மூலம் கண்டுகொள்ளவேண்டிய எந்தெந்தவிதமான பலன்களும் சொல்லப்பட்டனவோ அவைகளையே குள்ளநரிகள் விஷத்திலும் கண்டுகொள்ள வேண்டும். இவைகளுக்கு ஏற்பட்ட விசேஷம் பின்வருமாறு:—சிசிருதுவில்(மாசி, பங்குனி மாதங்களில்) நரிகளுக்கு மதம் உண்டாகின்றது. ஆதலால் சிசிருதுவில் நரியின் சத்தமோ, சேஷ்டைகளோ பயனற்வைகளாயாகின்றன. ஊளையிட்டு முடிக்கும் தருணத்தில் ஹூஹூ என்று சப்தித்து பிறகு டாடா என்றும் சப்திக்குமானல் அந்த சத்தம் பூர்ணம் (சுபம்) எனப்படும். நரியின் மற்றவிதமான சத்தங்கள் யாவும் தீப்தங்கள் எனப்படும்.

(அ—கை) லோமாசிகை என்ற பிராணியின் சேஷ்டிதத்தைப் பற்றிய விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**लोमाशिकायाः खलु कक्कशब्दः पूर्णः स्वभावप्रभवस्स तस्याः।**
**येऽन्ये स्वरास्ते प्रकृतेरपेताः सर्वे च दीप्ता इति संप्रदिष्टाः ॥**

(க—ரை) லோமாசிகை என்பது இரவில் சஞ்சரிக்கக் கூடியதும், மயிர்களைச் சாப்பிடக் கூடியதுமான பிராணியாகும். இதனுடைய கக்க என்ற சப்தமானது இயற்கையி லுண்டாவதாகும். அந்த சத்தம் பூர்ணம் (சுபம்) எனப்படும். இயற்கைக்கு மாறினதாயுள்ள லோமாசிகையின் மற்ற சத்தங்கள் தீப்தங்கள் என்று சொல்லப்பட்டுள்ளன. (எ—று)

(அ—கை) நரியின் சேஷ்டிதத்தைப்பற்றிய விசேஷத்தையுப தேசிக்கிறார்:—

**मू०॥ पूर्वोदीच्योश्शिवा शस्ता शान्ता सर्वत्र पूजिता ।**
**धूमिताऽभिमुखी हन्ति स्वरदीप्ता दिगीश्वरान् ॥ ३ ॥**

(க—ரை) பெண் நரியானது கிழக்கு வடக்கு திக்குகளில் சுபமாகவாகும். அந்தப் பெண் நரியே முன் சாந்தமெனக் கூறிய திக்விபாகத்தில் சாந்தமான குரலுடன் கூடியதாக விருக்குமானால் எந்த திக்கிலும் சுபமாகவே ஆகும். ஸூர்யன் அடைய வேண்டிய திக்கானது தூமிதா எனப்படும். அதாவது:—பொது விதியிற் கூறியபடி ஒவ்வொரு ஏஷ்யத் ஸூரியாவென்ற திக்கானது தூமிதா எனப்படும். அந்தத் தூமிதாதிக்கைப் பார்த்துக் கொண்டு பெண் நரி கொரோமாய் சப்திக்குமானால் அந்தத் திக்கிற்கு எவன் அதிபனோ அவனைக் கொன்றுவிடும். (எ—று)

(அ—கை) இன்னின்ன திக்கிற்கு இன்னின்னார் அதிபர் என்பதை இதனாலுபதேசிக்கிறார்:—

**मू०॥ राजा कुमारो नेता च दूतः श्रेष्ठी चरो द्विजः ।**
**गजाध्यक्षश्च पूर्वाद्याः क्षत्रियाद्याश्चतुर्दिशाम् ॥ ४ ॥**

(க—ரை) கிழக்கு திக்கிற்கு அரசனும், தென்கிழக்கு திக்கிற்கு ராஜபுத்திரனும், தெற்குதிக்கிற்கு ஸேனாதிபதியும், தென்மேற்கு திக்கிற்கு தூதனும், மேற்குதிக்கிற்கு பெரியவியாபாரியும், வடமேற்க்கு திக்கிற்கு கூடபுருஷனும் (ஸீஐடி போலீஸ்) வடக்குதிக்கிற்கு பிராம்மணனும், வடகிழக்குதிக்கிற்கு யானைப்பாகனும், அதிபர்களாவர். இவ்விதமே கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு திசைகளுக்கு முறையே க்ஷத்திரியன், வைச்யன், சூத்திரன், பிராம்மணன் இவர்களதிபர்களாவர். (எ—று)

(அ—கை) பெண் நரியைப்பற்றிய மற்றுமுள்ள விசேஷத்தையுபதேசிக்கிறார்:—

**मू०॥ सर्वदिक्ष्वशुभा दीप्ता विशेषेणाह्न्यशोभना ।**
**पुरे सैन्येऽपसव्या च कष्टा सूर्योन्मुखी शिवा ॥ ५ ॥**

(க—ரை) பெண்நரியானது தீப்தஸ்வரத்துடன் கூடியதா யிருக்குமானல் எந்ததிக்கிலும் அசுபமாகவே யாகும். பகலில் தீப்தஸ்வரத்துடன் கூடியதாகுமானல் மிகவும் அமங்களமா கும். பட்டினத்திற்கோ ஸைன்யங்களுக்கோ தென்பாகத்தில் பெண் நரி இருந்தால் கஷ்டத்தைக் கொடுப்பதாகவாகும். ஸூர் யனுக் கெதிர் முகமாக விருக்கின்ற பெண் நரியும் அசுபமாகவே தானகவும். (எ—று)

(அ—கை) பெண் நரியின் சப்தத்தை யனுஸரித்து பல விசே ஷத்தை யுபதேசிக்கிருர்:—

मू० ॥ याहीत्यग्निभयं शास्ति टाटेति मृतवेदिका ।
धिग्धिग्दुष्कृतिमाचष्टे सज्वाला देशनाशिनी ॥ ६ ॥

(க—ரை) பெண் நரியானது யாஹி என்று ஊளையிடுமானல் நெருப்பினல் பயத்தைத் தெரிவிக்கும். டாடா என்று ஊளையிடு மானல் பந்துக்களின் மரணத்தைத் தெரிவிப்பதாயாகும். திக்திக் என்று ஊளையிடுமானல் கெடுதலைத் தெரிவிக்கும். பெண் நரியா னது வாயில் நெருப்புடன் கூடியதாயிருக்குமானல் பல தேசங்க ளையே நாசம் செய்யும். (எ—று)

(அ—கை) மேற்கூறிய விஷயத்திலேயே வேறுமதத்தை யுப தேசிக்கிருர்:—

मू० ॥ नैव दारुणतामेके सज्वालायाः प्रचक्षते ।
अर्काद्यनलवत्तस्य वक्त्रं लालास्वभावतः ॥ ७ ॥

(க—ரை) ஸூர்யன் முதலியோருக்கு பிரகாசத்துடன் கூடி யிருத்தல் எவ்விதமியற்கையிலேற்பட்டதோ அவ்விதமே நரியின் முகத்திலும் இயற்கையிலமைந்துள்ள லாலா என்ற ஓர்வகை திர வத்தினல் பிரகாசமுண்டாகுத லியற்கையி லேற்பட்டதாகையால் பிரகாசத்துடன் கூடிய நரியுக்கு அமங்களமாயிருத்தலை காச்யபர் முதலியோர் அங்கீகரிக்கவில்லை. பிரகாச முள்ளதுபற்றி நரி அமங்களமாக ஆகவேண்டுமானல் ஸூரியசந்திராதிகளும் அமங் களங்களாக ஏற்பட நேரிடும் என்று கருத்து. காச்யபர் வசனம் பின்வருமாறு:—

नैव दारुणता तस्याः सज्वालायाः स्वभावतः।
लालायाः साग्निकं वक्त्रमतस्सा शुभदा शिवा ॥

(அ—கை) பெண் நரியைப்பற்றியே வேறு விசேஷத்தை யுப தேசிக்கிறார்:—

मू० ॥ अन्यप्रतिरुता याम्या सोद्बंधमृतशंसनी ।
वारुण्यनुरुता सैव शंसते सलिले मृतम् ॥ ८ ॥

(க—ரை) பெண் நரியானது தெற்கு திக்கை யடைந்து மற்றொரு பெண் நரியைப்பார்த்து ஊளையிடுமானால் தூக்குப் போட்டுக்கொண்டு மாணமடைந்த புருஷனைத் தெரிவிக்கும். இம் மாதிரியே பெண் நரியானது மேற்கு திக்கையடைந்து மற்றொரு நரியைப்பார்த்து ஊளையிடுமானால் ஜலத்தில் மாணமடைந்த புருஷனைத்தெரிவிக்கும். (எ—று)

(அ—கை) பெண் நரியின் சப்தவிசேஷத்தை யனுஸரித்து ஏற்படுகின்ற பலவிசேஷத்தை உபதேசிக்கிறார்:—

मू० ॥ अक्षोभः श्रवणं चेष्टं धनप्राप्तिः प्रियागमः ।
क्षोभः प्रधानभेदश्च वाहनानां च संपदः ॥ ९ ॥

फलमासप्तमादेतदग्राह्यं परतो रुतम् ।
याम्यायां तद्विपर्यस्तं फलं षट्पञ्चमाद्दते ॥ १० ॥

(க—ரை) பெண்நரியானது ஒருதடவை ஊளையிட்டு நெருத்தி விடுமானால் அந்த தேசத்திற்கு கலக்கமுண்டாகாது. இரண்டு தடவை ஊளையிட்டு நெருத்துமானால் பிரியமான ஸமாசாரத்தைக் கேட்டலுண்டாகும். மூன்றுதடவை ஊளையிட்டு நெருத்துமானால் அந்ததேசத்திற்கு தனலாபமுண்டாகும். நான்குதடவை ஊளையிட்டு நெருத்துமானால் பிரியனான மனிதனின் சேர்க்கை யுண்டாகும். ஐந்து தடவை ஊளையிட்டு நெருத்துமானால் அந்த தேசத்திற்குக் குழப்பமுண்டாகும். ஆறுதடவை ஊளையிட்டு நெருத்துமானால் தலைவர்களுக்குள் விரோதமுண்டாகும். ஏழு தடவை ஊளையிட்டு நெருத்துமானால் யானை, குதிரை முதலிய வாஹனங்களுக்கு பெருக்குண்டாகும்.

ஏழுதடவைக்குமேல் ஊளையிடுமானால் அதற்கு எவ்வித பய னுமில்லை. பெண் நரியானது தெற்கு திக்கிலிருந்து ஊளையிடு மானால் 5 தடவை, 6 தடவை இவைகளைத்தவிர்த்து மற்ற தட வைகளில் முற்கூறியதற்கு மாறாக பலன் கண்டுகொள்ள வேண் டும். அதாவது:—ஒருதடவை ஊளையிட்டால் தேசத்தில் கலக்க முண்டாகு மென்றும், இரண்டு தடவை ஊளையிட்டால் துக்க சமாசார ச்ரவண முண்டாகுமென்றும், மூன்று தடவை ஊளை யிட்டால் தனநாசமுண்டாகும் என்றும், நான்கு தடவை ஊளை யிட்டால் பிரிய மனுஷ்யனுடைய பிரிவுண்டாகும் என்றும், ஐந்து தடவை ஊளையிட்டால் தேசத்தில் கலக்கமுண்டாகும் என்றும், ஆறுதடவை ஊளையிட்டால் தலைவர்களுள் விரோத முண்டாகும் என்றும், ஏழுதடவை ஊளையிட்டால் வாஹனங்க ளுக்கு நாசமுண்டாகும் என்றும், இதற்குமேற்பட்டு ஊளையிடுவ தெல்லாம் பயனற்றதென்றும் கண்டுகொள்ள வேண்டும். (எ—று)

(அ—கை) அசுபமான பெண் நரி இன்னதென்பதை யுபதே சிக்கிறார்:—

**मू० ॥ या रोमाञ्चं मनुष्याणां शकृन्मूत्रं च वाजिनाम् ।**
**रावात्त्रासं च जनयेत्सा शिवा न शिवप्रदा ॥ ११ ॥**

(க—ரை) எந்த பெண் நரியானது தனது சப்தத்தால் மனி தற்கட்கு மயிர் கூச்சலையும், குதிரைகளுக்கு மூத்திரம், விஷ்டை இவைகளையும்,பொதுவில் ஜனங்களுக்கு ஓர்விதபயத்தையு முண் டுபண்ணுமோ அந்த பெண் நரி சுபத்தைத்தருவதாக வாகமாட் டாது. (எ—று)

(அ—கை) சுபமான பெண் நரியின் லக்ஷணத்தை யுபதே சிக்கிறார்:—

**मू० ॥ मौनंगता प्रतिरुते नरद्विरदवाजिभिः ।**
**या शिवा सा शिवं सैन्ये पुरे वा संप्रयच्छति ॥ १२ ॥**

(க—ரை) எந்தப் பெண் நரியானது மனிதர்கள், யானைகள், குதிரைகள் இவைகளால் எதிர் சப்தம் கொடுக்கப்பட்டவுடன், அதாவது:—இவர்களின் சப்தத்தைக் கேட்டவுடன் மௌனத்

த்தை யடைகின்றதோ அந்த நரியானது ஸைன்யத்திற்கோ, நகரத்திற்கோ, நன்மையைச் செய்வதாகவாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள ஸ்வரத்தின் லக்ஷணத்தை யுபதேசிக்கிறார்:—

**மூ० ॥ भेभेति शिवा भयङ्करी भोभोऽव्यापदमादिशेच्च सा ।**
**मृतिबंधनिवेदिनी फिफे हूहूचात्महिता शिवा स्वरे॥१३॥**

(க—ரை) பெண்நரியானது பேபா என்று சப்திக்குமானல் பயத்தைக் கொடுப்பதாகவாகும். போபோ என்று சப்திக்குமானல் பெரிய ஆபத்தைத் தெரிவிப்பதாகவாகும். பிபே என்று சப்திக்குமானல் மரணம், கட்டுப்படுதல் இவறைத்தெரிவிப்பதாகவாகும். ஹூஹூ என்று சப்திக்குமானல் இச்சப்தத்தைக் கேட்பவர்க்கு நன்மையைச் செய்யும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**शान्तात्ववर्णात्परमारुवन्ती टाटामुदीर्णामिति वाश्यमाना ।**
**टेटेच पूर्वं परतश्च थेथे तस्यास्स्वतुष्टिप्रभवं रुतं तत् ॥ १४ ॥**

(க—ரை) பொதுவிதியிற் சொல்லியபடி சாந்தமாகவான திக்கில் இருக்கின்ற பெண்நரியானது ஊளையிட ஆரம்பிக்கும் தருணத்தில் முதலில் அகாரத்தையுச்சரித்துப் பிறகு ஆகாரத்தை யுச்சரிக்குமானலும், அல்லது பயங்கரமாக டாடா என்று சப்திக்குமானலும், அல்லது முதலில் டேடே என்றுசப்தித்துப் பிறகு தேதே என்று சப்திக்குமானலும், மேற்கூறிய சப்தங்கள் யாவும் அதற்கு சந்தோஷமுண்டாகி அதன் மூலமுண்டாவதால் சோபனமாக வாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**उच्चैर्घोरं वर्णमुच्चार्य पूर्वं पश्चात्क्रोशेत्क्रोष्टुकस्याऽनुरूपम् ।**
**या सा क्षेमं प्राह वित्तस्य चाप्तिं संयोगं वा प्रोषितेन प्रियेण ॥**

(க—கை) எந்த பெண்நரியானது உறக்க க்ரூரமான அக்ஷரத்தை முதலிலுச்சரித்து பிறகு குள்ளநரியைப் போல் ஊளையிடுமோ அந்தநரியானது க்ஷேமத்தைத் தெரிவிப்பதாக வாகும்.

அத்துடன் தனகமத்தையும், அல்லது வெளியிற் சென்றிருக்கின்ற நாயகனுடன் சேர்க்கையையும் தெரிவிக்கும். (எ—று)

5வது சிவாருதாத்யாம் முற்றிற்று.

---

## 6வது மிருகசேஷ்டிதாத்யாயம்.

(அ—கை) மிருகங்களின் சேஷ்டைகள் மூலமறியவேண்டிய சுபாசுபபலன்கள் இவ்வத்தியாயத்தி லுபதேசிக்கப்படுகின்றன. மிருகத்தின் சேஷ்டையை யுபதேசிக்கிறார்:—

**सीमागता वन्यमृगा रुवन्तः स्थिता व्रजन्तोऽथ समापतन्तः ।**
**संप्रत्यतीतैष्यभयानि दीप्ताः कुर्वन्ति शून्यं परितो भ्रमन्तः ॥**

(க—ரை) காட்டில் வஸிக்கக்கூடிய பிராணிகள் கிராமத்தின் எல்லையை யடைந்து தீப்தமாய் சப்தித்துக்கொண்டு அவ்விடத்திலேயே நிற்குமானால் அதே தினத்தில் கிராமத்திற்கு பெரிய ஆபத்துண்டாவதன் மூலம் பயமுண்டாகும் என்பதைத் தெரிவிக்கும். கிராமத்தின் எல்லையைவிட்டு வேறிடத்திற்கு அவைகள் செல்லுமானால் பயம்விலகி விட்டதென்பதைத் தெரிவிக்கும். தீப்தமாய் சப்தித்துக்கொண்டே கிராமத்தின் எல்லைக்கு வருமானல் இனி கிராமத்திற்கு பயம் வரப்போகின்றதென்பதைத் தெரிவிக்கும். மிருகங்கள் பட்டினத்தைச் சுற்றிச் சுற்றி வருமானல் பட்டினத்தை அழித்து விடும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை உபதேசிக்கிறார்:—

**ते ग्राम्यसत्वैरनुवाश्यमानाः भयाय रोधाय भवन्ति वन्यैः ।**
**द्वाभ्यामपि प्रत्यनुवाशितास्ते वन्दिग्रहायैव मृगा रुवन्ति ॥२॥**

(க—ரை) கிராமத்தின் எல்லையை யடைந்த காட்டு மிருகங்கள் கிராமத்தில் வஸிக்கின்ற மிருகங்களால் எதிற்து சப்திக்கப்படுமானல் (அதாவது: காட்டுமிருகத்தின் சப்தத்தைக்கேட்டு கிராமத்தில் வஸிக்கும் மிருகங்கள் பதில்கொடுப்பதுபோல் சப்திக்குமானல்) கிராமத்திற்கு பயத்தைத் தெரிவிப்பதாகவாகும். காட்டில் வஸிக்கும் மற்ற மிருகங்களாலேயே எதிர்த்து சப்திக்கப்படுமானல் அந்த கிராமத்தின் எல்லையையடைந்த

மிருகங்கள் கிராமத்திற்கோ, நகரத்திற்கோ சத்துருக்களால் தகையப்படுதலைத் தெரிவிக்கும். எல்லையை யடைந்த மிருகங்கள் கிராமத்தில் வஸிக்கின்ற மிருகங்களாலும், காட்டில் வஸிக்கின்ற மிருகங்களாலும் எதிர்த்து சப்திக்கப்படுமானல் அந்தப் பட்டினம் சத்துருக்களால் பலாத்காரமாய் அபஹரிக்கப்படும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்.

**वन्ये सत्वे द्वारसंस्थे पुरस्य रोधो वाच्यः संप्रविष्टे विनाशः ।**
**सूते मृत्युस्स्याद्भयं संस्थिते च गेहं याते बंधनं संप्रदिष्टम् ॥३॥**

(க—ரை) காட்டில் வஸிக்கும் பிராணியானது பட்டினத்தின் கோட்டை வாயிற்படியை-யடையுமானல் அந்தப்பட்டினத்திற்கு சத்துருக்களால் தகைதல் உண்டாகும். அந்த காட்டுமிருகம் பட்டினத்திற்குள் பிரவேசிக்குமானல் பட்டினத்திற்கே அழிவு ஏற்படும். காட்டுமிருகம் பட்டினத்தில் பிரஸவிக்குமானல் மரண பயமுண்டாகும். பட்டினத்தில் இறந்து போனல் பயமுண்டாகும். காட்டுமிருகம் வீட்டில் பிரவேசிக்குமானல் வீட்டுக்குச் சொந்தக்காரனுக்கு கட்டுப்படுதல் (ஜயில்வாஸம்) ஏற்படும்.

ஆறுவது மிருகசேஷ்டிதாத்யாயம் முற்றிற்று.

---

## ஏழாவது கவேங்கிதாத்யாயம்.

(அ—கை) இவ்வத்தியாயத்தில் பசுக்களின் சேஷ்டைகள் மூலமறியவேண்டிய சுபாசுபபலன்கள் உபதேசிக்கப்படுகின்றன:—

**गावो दीनाः पर्थिवस्याऽशिवाय पादैर्भूमिं कुट्टयन्तश्चरोगान् ।**
**मृत्युं कुर्वन्त्यश्रुपूर्णायताक्ष्यः पत्युर्भीतास्तस्करानारुवंत्यः॥१॥**

(க—ரை) பசுக்கள் வாடின முகத்துடன் கூடினவைகளாயிருக்குமானல் அரசனுக்கு அமங்களத்தைக் கொடுப்பனவாகவாகும். பசுக்கள் தமது குளம்புகளால் அடிக்கடி பூமியை பிளக்குமானல் அரசனுக்கு ரோகத்தைக்கொடுக்கும். பசுக்கள் கண்ணீரை வடிக்குமானல் அரசனுக்கு மரணத்தைக் கொடுக்கும்.

பயத்துடன் அடிக்கடி கத்துமானல் தமது யஜமானனுக்கு திருடர்களின் பயத்தைத் தெரிவிக்கும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

**अकारणे क्रोशति चेदनर्थो भयाय रात्रौ वृषभश्शिवाय ।**
**भृशं निरुद्धा यदि मक्षिकाभिस्तदाशु वृष्टिं सरमात्मजैर्वा॥२॥**

(க—ரை) பசுவானது காரணமின்றியே கதறுமானல் கெடுதலுண்டாகும். இவ்விதம் இரவில் கத்துமானல் பயத்தைத் தெரிவிப்பதாகவாகும். இரவில் காளைமாடு கத்துமானல் மங்களமுண்டாகும். பசுவானது ஈக்களாலோ நாய்களாலோ சூழப்பட்டிருக்குமேயானல் ஸமீபகாலத்தில் மழையுண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை உபதேசிக்கிருர்:—

***आगच्छन्त्यो वेश्म बंभारवेण संवेशन्त्यो गोष्ठवृद्ध्यै गवां गाः**
**आर्द्राङ्ग्यो वा हृष्टरोम्णःप्रहृष्टाःधन्या गावः स्युर्महिष्योपि चैवम्**

(க—ரை) வெளியிற் சென்று புற்களை மேய்ந்து விட்டு பம்பா என்று மதுரமாய் சப்தித்துக்கொண்டு வருகின்றவைகளாயும், கொட்டிலில் படுத்துக்கொண்டு பம்பா சப்தம் செய்கின்றவைகளாயு மிருக்கின்ற பசுக்கள் பசுக்களின் விருத்தியைக் கொடுக்கும். ஜலத்தினல் நனைந்த அவயவங்களை யுடையனவாயும், மயிர் கூச்சலை யடைந்தனவாயும், ஸந்தோஷத்தை யடைந்தனவாயுமுள்ள பசுக்கள் பசுக்களை விருத்திசெய்வதில் சிறந்தனவாகும். அதாவது: பசுக்களின் விருத்தியைக் கொடுக்கும். பெண் எருமைகள் விஷயத்திலும் பசுக்களுக்குச் சொல்லியவற்றைக் கண்டுகொள்ளவேண்டும். அதாவது: பசுக்களின் சேஷ்டைகள் மூலம் எந்தெந்த விதமான பலன்கள் சொல்லப்பட்டனவோ அப்பலன்களையே எருமைகளின் சேஷ்டைகள் மூலமும் கண்டுகொள்ளவேண்டும் என்பதாம். (எ—று)

ஏழாவது கவேங்கிதாத்யாயம் முற்றிற்று.

---

* இங்குசிலர் आगव्यूतेः என்று படிக்கின்றனர். அதன்படி வீட்டிற்கு இரண்டுமயில்தூரத்திலேயே பம்பாசப்தம்செய்கின்ற என்று பொருள்.

## எட்டாவது அச்வேங்கிதாத்யாயம்.

(அ—கை) இவ்வத்தியாயத்தில் குதிரைகளின் சேஷ்டைகள் மூலம் கண்டறியவேண்டிய சுபாசுபபலன்கள் கூறப்படுகின்றன:—

मू० ॥ उत्सर्गोन्न शुभदमासनात्परस्थं
वामे च ज्वलनमतोऽपरं प्रशस्तम् ।
सर्वाङ्गज्वलनमवृद्धिदं हयानां
द्वे वर्षे दहनकणाश्च धूपनं वा ॥ १ ॥

(க—ரை) நெருப்புப்பற்றி எறிவதுபோல் ஓர்விதபிரகாசமும் சுடுகையும் குதிரையின் அவயவங்களில் சிலஸமயங்களில் காணப்படும். அதைப்பற்றி இங்கு கூறப்படுகின்றது. குதிரையின் மேல் உட்காருவதற்காக போடப்படும் ஜேணத்தின் ஸ்தானத்திற்கு மேற்குபாகத்தில் மேற்கூறிய அக்கினி(சூடு)இருக்குமானல் பொதுவில் சுபத்தைக் கொடுப்பதாக வாகமாட்டாது. அந்த ஆஸனஸ்தானத்திற்கு இடதுபுரத்திலிருந்தாலும் சுபத்தைதக்கொடுப்பதாக வாகமாட்டாது. ஆஸனஸ்தானத்திற்கு வலது புரத்திலோ, கிழக்குபாகத்திலோ அக்கினி (சூடு) இருக்குமானல் நன்மையைக் கொடுப்பதாகவாகும். எல்லா அவயவங்களிலுமே ஜ்வலிப்புகாணப்படுமே யானல் குதிரைகளுக்கு நாசத்தையுண்டாக்கும். எந்தக்குதிரையின் அவயவங்களினின்றும் நெருப்புப்பொரிகளும், புகைகளும் இரண்டுவருஷகாலம் ஓயாமல் கிளம்புகின்றனவோ அவைகளும் குதிரைகளுக்கு அபிவிருத்திக்குறைவைக் கொடுக்கும். (எ—று)

(அ—கை) மேற்கூறிய விஷயமாய் மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

अन्तःपुरं नाशमुपैति मेढ्रे कोशः क्षयं यात्युदरे प्रदीप्ते ।
पायौ च पुच्छे च पराजयस्स्याद्वक्त्रोत्तमाङ्गज्वलने जयश्च ॥

(க—ரை) குதிரைகளின் ஆண்குறியானது முற்கூறிய பிரகாசமுள்ளதாகவிருக்குமானல் அரசனுடைய அந்தப்புரத்திற்கு (ஸ்த்

ரீகளுக்கு) நாசமுண்டாகும். குதிரையின் வயிறு சூடுள்ளதாகக் காணப்படுமானல் பொக்கிஷம் குறைவைய டைந்துவிடும். குதிரையின் மலத்துவாரமோ உபஸ்தமோ, வாலோ சூடுள்ளதாகக் காணப்படுமானல் சத்துருக்களால் தோல்வியுண்டாகும். குதிரையின் முகத்திலோ, தலையிலோ சூடு காணப்படுமானல் சத்துருஜய முண்டாகும். (எ—று)

(அ—கை) குதிரையின் மற்றுமுள்ள அங்கங்களில் சூடுகாணப்படுவதன் மூலம் நேரும் சுபாசுபபலன்களையுபதேசிக்கிறார்:—

**स्कंधासनांसज्वलनं जयाय बन्धाय पादज्वलनं प्रदिष्टम् ।**
**ललाटवक्षोक्षिभुजेच धूमः पराभवाय ज्वलनं जयाय ॥ ३ ॥**

(க—ரை) தோள்பட்டை,குதிரையின் மேலுட்காருவதற்காக போடப்படும் ஆஸனத்திற்குரிய ஸ்தானம், கழுத்தின் இருபக்கங்கள் இவற்றில் ஜ்வலிப்புண்டாகுமானல் ஜயத்தைக் கொடுப்பதாகவாகும். குதிரையின் குளம்புகளில் ஜ்வலிப்புண்டாகுமேயானல் அந்தக் குதிரையின் யஜமானனுக்கு கட்டுப்படுதலுண்டாகும். நெற்றி,மார்பு,கண்கள்,முன்னுள்ள இருகால்கள் இவைகளில் புகைச்சலுண்டாகுமானல் சத்துருவினல் அவமதிப்பையடைவான். மேற்கூறிய நெற்றி முதலிய விடங்களில் ஜ்வலிப்புண்டாகுமானல் சத்துருஜயமுண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**नासापुटप्रोथशिरोऽश्रुपात नेत्रे च रात्रौ ज्वलनं जयाय ।**
**पलाशताम्रासितकर्बुराणां नित्यं शुकाभस्य सितस्य चेष्टम् ॥**

(க—ரை) குதிரையின் மூக்கின் துவாரங்கள், மூக்கின்மத்திய பாகம், தலை, கண்ணீர் வடியக்கூடியவிடமான கன்னம், இரண்டு கண்கள் இவற்றுள் யாதாவதொன்றில் இரவில் ஜ்வலிப்புண்டாகுமேயானல் ஜயத்தைக் கொடுப்பதாக வாகும். பொரசபுஷ்பத்தின்நிறம், சிவப்பு, கருப்பு, சாம்பல்நிறம், இவற்றுள் யாதானுமொரு நிறமுள்ளனவாகவோ, கிளியின் நிறமுள்ளனவாகவோ, வெளுப்பு நிறமுள்ளனவாகவோ இருக்கின்ற குதிரைகளுடைய மேற்கூறிய மூக்கின் துவாரம் முதலியவற்றில் இரவிலோ பகலி

லோ ஜ்வலிப்புண்டாகுமேயானல் அது நன்மையைக் கொடுப்பதாகவேயாகும். (எ—று)

(அ—கை) குதிரையின் சேஷ்டைகள் மூலம் கண்டறியவேண்டிய மற்றுமுள்ள அசுபங்களை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ प्रद्वेषो यवसांभसां प्रपतनं स्वेदो निमित्ताद्विना
कंपो वा वदनाच्च रक्तपतनं धूमस्य वा संभवः ।
अस्वप्नश्च विरोधिनां निशि दिवा निद्राऽलसध्यानता
सादोऽधोमुखता विचेष्टितमिदं नेष्टं स्मृतं वाजिनाम् ॥५॥

(க—ரை) புற்கள் தீர்த்தம் இவற்றில் வெறுப்பு, தடுக்கிக் கீழேவிழுதல், காரணமின்றியே வேர்வையோ நடுக்கமோ யுண்டாகுதல், வாயினின்றும் இரத்தம் விழுதல், அல்லது புகையுண்டாகுதல், விரோதத்தை(க்கெடுதலை)ச்செய்கின்ற குதிரைகளுக்குச் சம்பவிக்கக்கூடிய இரவில் தூக்கமின்மை, பகலில் தூக்கத்தினல் கலக்கமுற்றிருத்தல், சிந்தையுடன் கூடியிருத்தல், மார்பிற்குக் கீழ் ஓர்விதச்சோர்வு, மேல்நோக்கிப் பாராமை இந்தகைய குதிரைகளின் சேஷ்டைகள் அமங்களத்தைக் கொடுப்பனவாகவாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ आरोहणमन्यवाजिनां पर्याणादियुतस्य वाजिनः ।
उपवाह्यतुरङ्गमस्य वा कल्पस्यैव विपन्नशोभना ॥ ६ ॥

(க—ரை) குதிரையானது ஜேணம் முதலியவைகளை யணிந்துகொண்டு மற்றுமோர் குதிரையின் மீதேறுமானல் அது சோபனமாயாகமாட்டாது. எந்தக் குதிரையின் மீதேறிசெல்லுகின்றோமோ அந்தக்குதிரைக்கு ஆரோக்யத்திற்கு ஆபத்து(அதாவது:—ரோகம்)நேருமானல் அதுவும் சோபனமாயாகமாட்டாது. (எ-று)

(அ—கை) குதிரையின் கனைப்பைப்பற்றிய விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

क्रौञ्चवद्रिपुवधाय हेषितं ग्रीवयात्वचलया च सोन्मुखम् ।
स्निग्धमुच्चमनुनादि हृष्टवद्ग्रासरुद्धवदनैश्च वाजिभिः ॥ ७ ॥

(க—ரை) குதிரையானது கிரௌஞ்சம் என்ற பக்ஷியைப் போல் கனைக்குமானாலும், அல்லது அசங்காமல் கழுத்தை உயரத் தூக்கிக்கொண்டு கனைக்குமானாலும், சத்துருக்களுக்கு நாசத்தைக் கொடுக்கும். சந்தோஷமுள்ளனவாயும், புற்களினால் நிறைந்தவாயுடன் கூடினவாயுமுள்ள குதிரைகளால் மதுரமாயும், உறத்தும், கண்டாசப்தம்போல் அனுநாதமுள்ளதாயும் செய்யப்பட்ட கனைப்பும் சத்துருக்களின் நாசத்தின் பொருட்டாக வாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்.

**मू॰॥ पूर्णपात्रदधिविप्रदेवतागन्धपुष्पफलकाञ्चनादि वा ।**
**द्रव्यमिष्टमथवा परं भवेद्भ्रेषतां यदि समीपतो जयः॥८॥**

(க—ரை) குதிரைகனைக்கும் பொழுது சுபத்திரவ்யமான வெள்ளைக்கடுகு, அக்ஷதை முதலியவற்றால் நிறைந்த பாத்திரம், தயிர், பிராம்மணன், தேவதாவிக்கிரஹங்கள், நறுமணமுள்ள திரவியங்கள், புஷ்பங்கள், பில்வப்பழம் முதலியபழங்கள், தங்கம், வெள்ளி முதலியவைகள் மற்றுமுள்ள வெண்கடுகு, கோரோசனை முதலியசுபத்திரவியங்கள் இவற்றுள் யாதானுமொன்று ஸமீபத்தி லிருக்குமானால் அப்பொழுது யாத்திரைசெய்பவனுக்கு ஜயமுண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்.

**भक्ष्यपानखलिनाभिनन्दिनः पत्युरौपयिकनन्दिनोऽथवा ।**
**सव्यपार्श्वगतदृष्टयोऽथवा वाञ्छितार्थफलदास्तुरङ्गमाः ॥ ९ ॥**

(க—ரை) பக்ஷயமான புல்முதலியன, தீர்த்தம், கடிவாளம் இவற்றை ஸந்தோஷத்துடன் கிரஹிக்கின்றனவாயும், அல்லது மற்றுமுள்ள யஜமானனுக்குப் பிரியமான வஸ்துவைத் தாமும் பிரியத்துடன் கிரஹிக்கின்றனவாயும், அல்லது வலதுபக்கம் பார்வையுள்ளனவாயு மிருக்கின்ற குதிரைகள் விரும்பியபொருளைக் கொடுப்பனவாகவாகும். (எ—று)

(அ—கை) குதிரையின் அசுபமான சேஷ்டைகளை யுபதேசிக்கிறார்:—

वामैश्चपादैरभिताडयन्तो महीं प्रवासाय भवन्ति भर्तुः।
संध्यासु दीप्तामवलोकयन्तो ह्रेषन्ति चेद्बंधपराजयाय ॥ १० ॥

(க—ரை) குதிரைகள் இடதுகால்களால் பூமியை யடிக்குமாஞல் தமது யஜமானனுக்கு வெளிதேசவாஸத்தைத் தெரிவிப்பதாகவாகும். ஸூர்யோதயகாலம், நடுப்பகல் ஸூரியாஸ்தமய காலம், நள்ளிரவு என்ற நான்குஸந்தியைகளிலும் பொதுவிதியிற் சொல்லியபடி தீப்தமாகவான திக்கைப்பார்த்துக் கொண்டு குதிரைகள் கனைக்குமாஞல் தமது யஜமானனுக்கு கட்டுப்படுதல் பராஜயம் இவற்றைத் தெரிவிப்பதாகவாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

अतीव ह्रेषन्ति किरन्ति वालान् निद्रारताश्च प्रवदन्ति यात्राम्।
रोमत्यजो दीनखरस्वराश्च पांसून् ग्रसन्तश्च भयाय दृष्टाः॥

(க—ரை) அடிக்கடி கனைக்கின்றனவாயும், வால்களை அங்குமிங்கும் அசைக்கின்றனவாயும், அதிகமாய் தூங்குகின்றனவாயுமிருக்கின்ற குதிரைகள் தமது யஜமானனுக்கு வெளிதேசயாத்திரையைத்தெரிவிப்பனவாகவாகும். இவ்விதமேசரீரத்தினின்றும் மயிர்களை உதிர்க்கின்றனவாயும், தீனமாகவோ, கோரமாகவோ கனைக்கின்றனவாயும், புழுதிகளைத்தின்கின்றனவாயுமிருக்கின்ற குதிரைகள் பயத்தைத் தெரிவிப்பனவாகவாகும். (எ—று)

(அ—கை) இனி குதிரையின் சுபமான சேஷ்டைகளை யுபதேசிக்கிருர்:—

समुद्गवद्दक्षिणपार्श्वशायिनः पदंसमुत्क्षिप्य च दक्षिणं स्थिताः।
जयाय शेषेष्वपि वाहनेष्विदं फलं यथा संभवमादिशेद्बुधः ॥

(க—ரை) சம்புடம்போல் முழங்கால்களைமடக்கிக்கொண்டு வலதுபக்கத்திஞல் படுத்துக்கொள்ளுகின்றவைகளாயும், நிற்கும் ஸமயத்தில் வலதுகாலைத் தூக்கிக்கொண்டு நிற்கின்றனவாயுமிருக்கின்ற குதிரைகள் தமது யஜமானனுக்கு ஜயத்தைத்தெரிவிப்பனவாகவாகும். இங்கு குதிரைகளின் சேஷ்டிதமூலமாய்க் கண்ட

றியவேண்டியதாய்க்கூறிய பலன்களையே மற்றுமுள்ள வாகனங்கள் விஷயத்திலும் ஸம்பவிக்கக்கூடிய நிமித்தவிஷயங்களில் கண்டுகொள்ளவேண்டும். ஜ்வலித்தல், புகையுண்டாகுதல் முதலிய நிமித்தங்கள் மற்றவாஹனங்களுக்குஸம்பவிக்காதாகையால் அவற்றைத்தவிர்த்து மற்றவைகளைக் கிரஹித்துக் கொள்ளவேண்டும், என்பதாம். (எ—று)

(அ—கை) குதிரையின் மற்றுமுள்ள சுபமான சேஷ்டைகளையுபதேசிக்கிறார்:—

மூ॰ ॥ आरोहति क्षितिपतौ विनयोपपन्नो
यात्राऽनुगोऽन्यतुरगं प्रतिहेषते च ।
वक्त्रेण वा स्पृशति दक्षिणमात्मपार्श्वं
योऽश्वस्सभर्तुरचिरा त्प्रचिनोति लक्ष्मीम् ॥१३॥

(க—ரை) எந்தக் குதிரையானது அரசன் தன்மேலேறும்பொழுது வணக்கத்துடன் கூடியதாகவும், பிரயாணம் செய்யவேண்டிய திக்கைநோக்கினதாகவுமிருந்துகொண்டுவேறுகுதிரைகளைக்கும்பொழுது அதற்குபதில்கொடுப்பதுபோல்தானும் கனைக்கின்றதோ, அல்லது எந்தக்குதிரையானது தனது வலதுபக்கத்தை முகத்தினால் தொட்டுக்கொள்ளுகின்றதோ (அதாவது:—நக்கிக்கொள்ளுகின்றதோ) அவ்விருகுதிரைகளும் லக்ஷ்மியின் விருத்தியை யடைவிக்கும். (எ—று)

(அ—கை) இனி அசுபநிமித்தங்களை யுபதேசிக்கிறார்:—

मुहुर्मुहुर्मूत्रशकृत्करोति न ताड्यमानोप्यनुलोमयायी ।
अकार्यभीतोऽश्रुविलोचनश्च शिवं न भर्तुस्तुरगोऽभिधत्ते॥१४॥

(க—ரை) எந்தக்குதிரையானது அடிக்கடி மூத்திரம், விஷ்டை (லத்தி)இவைகளை விடுகின்றதாயும், கொரடாவினால் அடித்தாலும் செல்லவேண்டிய திக்கில் ஒழுங்காய் செல்லாததாயும், காரணமின்றியே பயத்தையடைந்ததாயும், கண்ணீருடன்கூடின கண்களுடன் கூடினதாயுமாகின்றதோ அந்தக்குதிரையானது தனது யஜமானனுக்கு மங்களத்தைத் தெரிவிப்பதாயாகமாட்டாது. (எ—று)

मू० ॥ उक्तमिदं हयचेष्टितमत ऊर्ध्वं दन्तिनां प्रवक्ष्यामि ।
तेषां तु दन्तकल्पनभङ्गम्लानादिचेष्टाभिः ॥ १५ ॥

(க—ரை) இதுவரை குதிரைகளின் சேஷ்டைகளைப்பற்றிகூறப் பட்டன. இனி யானைகளின் சேஷ்டைகளைப்பற்றிக் கூறுகிறேன். அதாவது: — யானைகளுக்கு தந்தத்தை அறுப்பது, தந்தம் ஒடிந்துபோவது, அதிலுள்ள குற்றங்கள் முதலியவற்றால் நேரு கின்ற பலன்களைச் சொல்லுகின்றேன். (எ—று)

எட்டாவது அச்வேங்கிதாத்தியாயம் முற்றிற்று.

---

## ஒன்பதாவது ஹஸ்திசேஷ்டிதாத்தியாம்.

(அ—கை) முதலில் யானைகளுக்கு தந்தத்தைச் சேதனம் செய்யவேண்டிய முறையையுபதேசிக்கிறார்:—

मू० ॥ दन्तस्य मूलपरिधिं द्विरायतं प्रोह्य कल्पयेच्छेषम् ।
अधिकमनूपचराणां न्यूनं गिरिचारिणां किञ्चित् ॥ १ ॥

(க—ரை) யானையின் தந்தத்தின் அடிபாகத்தில் ஓர்கயிற்றைச் சுற்றி அதன் சுற்றளவை எடுத்துக்கொண்டு அவ்வளவை இரட் டிப்பாக்கி இரட்டித்த அவ்வளவுநீளம் தந்தத்தின் அடிபாகம் முதல்அளந்துவிட்டு மீதமுள்ள தந்தபாகத்தை அறுத்துவிட வேண்டும். அதிகம் ஜலமுள்ளவிடங்களில் சஞ்சரிக்கின்ற யானை களுக்கோ வெனில் முற்கூறிய அளவைவிட கொஞ்சம் நீளம் வைத்து அறுக்கவேண்டும். மலைகளில் சஞ்சரிக்கின்ற யானை களுக்கு முற்கூறிய அளவில் கொஞ்சம் குறைவாகவே நீளத்தை விட்டு தந்தத்தை யறுக்கவேண்டும். (எ—று)

(அ—கை) தந்தத்தை அறுக்கும்கால் அமையும் உருவத் தைக்கொண்டு அறியவேண்டிய சுபாசுபங்களை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ श्रीवत्सवर्धमानच्छत्रध्वजचामरानुरूपेषु ।
छेदे दृष्टेष्वारोग्यविजयधनवृद्धिसौख्यानि ॥ २ ॥

(க—ரை) ஸ்ரீவத்ஸம் வார்த்தமானம் இவ்விரண்டும் ஓர்வகை அடையாளங்களாகும். யானையின் தந்தத்தின் சேதமானது

(அறுத்த இடமானது) ஸ்ரீவத்ஸம் போல் காணப்பட்டால் ஆரோக்யமும்,வர்த்தமானம் போல் காணப்பட்டால்,சத்துருஜயமும், குடைபோல் காணப்பட்டால் தனலாபமும், கொடிமரம் போல் காணப்பட்டால் மேன்மேலுமபிவிருத்தியும், வெண்சாமரம்போல் காணப்பட்டால் சுகமும் உண்டாகும். (எ—று)

(அ—கை) மேற்கூறியவற்றில் மற்றுமுள்ள விசேஷத்தையுபதேசிக்கிறார்:—

**मू० ॥ प्रहरणसदृशेषु जयो नन्द्यावर्ते प्रणष्टदेशाप्तिः ।**
**लोष्टे तु लब्धपूर्वस्य भवति देशस्य संप्राप्तिः ॥ ३ ॥**

(க—ரை) யானையின் தந்தச்சேதமானது ஓர்வித ஆயுதத்திற்கு ஒப்பாக விருக்குமானால் சத்துரு ஜயமுண்டாகும். நந்த்யாவர்த்தம் என்பது வீட்டின் கட்டிடத்தில் அமைக்கப்படும் ஓர்வித அடையாளமாகும். அந்த நந்த்யாவர்த்தம் போலிருக்குமானால் கைநழுவிய தேசம் மறுபடியும் கிடைக்கும். மண்கட்டிபோலிருக்குமானால் கொடுப்பதா யுருதி செய்யப்பட்ட தேசம் கிடைக்கும்.

(அ—கை) மற்றுமுள்ளவிசேஷத்தையுபதேசிக்கிறார்:—

**मू० ॥ स्त्रीरूपेऽश्वविनाशो भृङ्गारेऽभ्युत्थिते सुतोत्पत्तिः ।**
**कुंभेन निधिप्राप्तिर्यात्राविघ्नश्च दण्डेन ॥ ४ ॥**

(க—ரை) அறுத்ததுபோக எஞ்சிய யானையின் கொம்பானது ஸ்திரீயின் உருவமுள்ளது போலிருக்குமானால் குதிரைகளுக்கு அழிவுண்டாகும். பிருங்காரம் என்பது ஜலம் வைக்கக்கூடிய ஓர்வகை பாத்திரமாகும். (கிண்டி) அந்தபிருங்காரம் என்றது போலிருக்குமானால் புத்திரஸந்ததியுண்டாகும். குடம்போலிருக்குமானால் புதையல் கிடைக்கும். கழியின் உருவமுள்ளதாயிருக்குமானால் யாத்திரையில் விக்கினமுண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**मू० ॥ कृकलासकपिभुजङ्गेष्वसुभिक्षव्याधयो रिपुवशित्वम् ।**
**गृध्रोलूकध्वांक्षश्येनाकारेषु जनमरकः ॥ ५ ॥**

(க—ரை) அறுத்ததுபோக எஞ்சிய யானையின் தந்தபாகத்தில் ஒணான் வடிவம் காணப்பட்டால் தேசத்திற்கு துர்பிக்ஷமும், குரங்கின் வடிவம் காணப்பட்டால் வியாதிகளும், பாம்பின் வடிவம் காணப்பட்டால் சத்துருவுக்கு வசப்படுதலு முண்டாகும். கழுகு, கோட்டான், காக்கை இவற்றின் வடிவம் காணப்பட்டால் ஜனங்களுக்கு அகாலமரண முண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ पाशेऽथवा कबंधे नृपमृत्युर्जनविपत्स्रुते रक्ते ।**

**कृष्णे श्यावे रूक्षे दुर्गन्धे चाशुभं भवति ॥ ६ ॥**

(க—ரை) மேற்கூறிய யானையின் தந்தத்தில் பாம்பின் வடிவமோ, தலையற்றஉடலின் வடிவமோ காணப்பட்டால் அரசனுக்கு மரணமுண்டாகும். அந்த தந்தத்தினின்றும் ரக்தம் பெருகுமேயானால் ஜனங்களுக்கு ஆபத்துண்டாகும். அறுத்த இடமானது கறுப்பாகவோ, பாசிநிறமாகவோ, சொரசொரப்புள்ளதாகவோ, நாற்றமுள்ளதாகவோ காணப்படுமேயானால் அமங்களமுண்டாகும். (எ—று)

(அ—கை) அறுத்த தந்தஸ்தானம் எவ்விதமிருந்தால் சுபமாகும் என்பதை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ शुक्लः समः सुगन्धिः स्निग्धश्च शुभावहो भवेच्छेदः ।**

**गलनम्लानफलानि च दन्तस्य समानि भङ्गेन ॥ ७ ॥**

(க—ரை) யானையின் அறுத்த தந்தபாகமானது வெளுப்பாயும், எல்லாபாகத்திலும் ஸமமாயும், நல்லவாஸனையுடன் கூடியதாயும், பசையுடன் கூடியதாயு மிருக்குமானால் மங்களத்தைக் கொடுப்பதாக வாகும். தந்தத்தினின்றும் இரத்தம் பெறுகுதல், விகாரமான ரூபமுண்டாகுதல் இவைகளுக்கு தந்தம் ஒடிந்துபோவதால் எந்தப்பலன் களுண்டாவதாய் இனி சொல்லப்போகின்றோமோ அப்பலன்களையும் கண்டுகொள்ளவேண்டும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள சுபாசுபங்களை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ मूलमध्यदशनाग्रसंस्थिता देवदैत्यमनुजाः क्रमात्ततः ।**

**स्फीतमध्यपरिलेपनं फलं शीघ्रमध्यचिरकालसंभवम् ॥**

Office of the
Director of Archaeology

(க—ரை) யானையின் தந்தத்தின் அடிபாகத்தில் தேவர்களும், மத்யபாகத்தில் அஸுரர்களும், நுனிபாகத்தில் மனிதர்களும் வஸிக்கின்றனர். ஆகையால் தந்தத்தின் அடிபாகத்தைப் பற்றி சொல்லப்படும் புலன் அதிகமாகவும் சீக்கிரமுண்டாவதாகவும், மத்யபாகத்தைப்பற்றி சொல்லப்படும் பலன் நடுநிலைமையி லுள்ளதாகவும் ரொம்பசீக்கிரகாலத்திலோ விளம்பித்தோ யுண்டாகாமல் மத்யகாலத்தி லுண்டாவதாகவும், நுனிபாகத்தைப்பற்றி சொல்லப்படும் பலன்கள் ஸ்வல்பமாகவும் ரொம்பகாலம் சென்று உண்டாகின்றதாகவுமாகும். (எ—று)

(அ—கை) மேற்கூறிய விஷயத்திலேயே மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ दन्तभङ्गफलमत्र दक्षिणे भूपदेशबलविद्रवप्रदम् ।**
**वामतः सुतपुरोहितेभयान्हन्ति साटविकदारनायकान् ॥**

(க—ரை) தந்தத்திற்கு பங்கம் (முறிவு) ஏற்படுவதன் மூலம் நேருகின்ற பலன்கள் இனி உபதேசிக்கப் படுகின்றன. யானையின் வலது தந்தம் அடிபாகத்தில் பங்கத்தையடைந்தால் அரசனுக்கு ஓடி ஒளியக்கூடியநிலையும், அதேதந்தம் மத்தியபாகத்தில் பங்கத்தை யடைந்தால் ஜனங்களுக்கு ஊரைவிட்டு ஓடவேண்டிய நிலையும், அதேதந்தம் நுனிபாகத்தில் பங்கத்தையடைந்தால் ஸைந்யங்களுக்குத் தோல்வியையடைந்து ஓடக்கூடிய நிலையுமுண்டாகும். யானையின் இடதுதந்தம் அடிபாகத்தில் பங்கத்தை யடையுமானல் ராஜபுத்திரன், வேடபலம் இவர்களுக்கு நாசத்தையும், அதேதந்தம், மத்தியபாகத்தில் புங்கத்தை யடையுமானல் புரோஹிதன் பார்யை இவர்களுக்கு நாசத்தையும், அதேதந்தம் நுனியில் பங்கத்தை யடையுமானல் ஸேனுபதி பிரதான புருஷன் இவர்களுக்கு நாசத்தையு முண்டாக்கும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்;—

**आदिशेदुभयभङ्गदर्शनात्पार्थिवस्य सकलं कुलक्षयम् ।**
**सौम्यलग्नतिथिभादिभिश्शुभं वर्धते शुभमतोऽन्यथा वदेत् ॥**

(க—ரை) வலதுதந்தம் இடதுதந்தம் இரண்டிலும் பங்கம் (முறிவு)காணப்படுமேயானால் அரசனுடைய வம்சம்யாவும் அழிந்துவிடும். இதுவரைக்கூறிய சுபமான,நிமித்தங்கள் நல்லலக்கினம், நல்லதிதி, நல்லநக்ஷத்திரம் இவற்றுடன் கூடுமானால் அந்த நிமித்தங்களால் சூசிப்பிக்கப்படும் சுபபலன் பூர்ணமாயுண்டாகி மேன்மேலும் விருத்தியடைந்து கொண்டிருக்கும். அசுபநிமித்தங்கள் கெட்டலக்கினம், கெட்டதானதிதி, கெட்டதான நக்ஷத்திரம் இவற்றுடன் கூடுமானால் அசுபபலன் பூர்ணமாயுண்டாகி மேன்மேலும் விருத்தியாகிக்கொண்டே யிருக்கும். திதிலக்கினுதிகளில் கெட்டது நல்லது இரண்டும் கலக்குமானாலும், கெட்டதானதிதி முதலியவற்றில் சுபநிமித்தமும், நல்லதானதிதி முதலியவற்றில் அசுபநிமித்தமும் கலக்குமானாலும் பலனும் சுபம், அசுபம் இரண்டும் கலந்தே நடக்கும் என்றும் கண்டுகொள்ளவேண்டும்.

குறிப்பு—**सौम्यलग्न** என்பதற்கு பட்டோத்பலர் **सौम्यग्रहाणां लग्नानि** என்று விக்கிரஹம் செய்து விருஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுஸ், மீனம் என்று வியாக்யானம் செய்திருக்கிறார். திதிகர்ம குணத்யாயத்தில்—பிரதமை, ஷஷ்டீ, ஏகாதசீ என்றதிதிகள் நந்தா என்றும், த்விதீயை, ஸப்தமீ, த்வாதசீ, என்றதிதிகள் பத்திரா என்றும், திருதீயை, அஷ்டமீ, திரயோதசீ என்றதிதிகள் விஜயா என்றும், சதுர்த்தீ, நவமீ,சதுர்த்தசீ என்றதிதிகள் ரிக்தா என்றும்,பஞ்சமீ,தசமீ,பௌர்ணிமா, அமாவாஸ்யாஎன்ற திதிகள் பூர்ணு என்றும் கூறப்பட்டிருக்கிறது. ரிக்தா திதியைத் தவிர்த்து மற்றதிதிகளை ஸௌம்யதிதி என்றதால் கிரஹித்துக் கொள்ளவேண்டும். நக்ஷத்திர கர்மகுணத்தியாயத்தில்—உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி ரோஹிணீ என்ற (4)நக்ஷத்திரங்களும் துருவங்களென்றும், திருவாதிரை ஆயில்யம் கேட்டை மூலம் என்ற (4)நக்ஷத்திரங்களும் தீக்ஷ்ணங்களென்றும், மகம் பரணீ பூரம் பூராடம் பூரட்டாதி என்ற (5)நக்ஷத்திரங்களும் உக்கிரங்களென்றும், பூசம் ஹஸ்தம் அச்வதீ அபிஜித் என்ற (4)நக்ஷத்திரங்களும் க்ஷிப்ரங்களென்றும், அனுஷம் சித்திரை ரேவதி மிருகசீர்ஷம் என்ற (4)நக்ஷத்திரக்ஷத்திரங்களும் மிருதுக்களென்றும், கிருத்திகை விசாகம் (2)ம் ஸாதாரணங்க

ளென்றும், ஸ்வாதீ புனர்ப்பூசம் திருவோணம் அவிட்டம் சதயம் (5)ம் சரங்களென்றும் கூறப்பட்டிருக்கிறது. இங்குள்ள ஸௌம்யப என்றதால் தீக்ஷ்ணம், உக்கிரம் என்ற வகுப்பில் சேராத நக்ஷத்திரங்களைக் கிரஹித்துக்கொள்ளவேண்டும். (எ—று)

(அ—கை) யானையின் தந்தம் முறிவுபடுவதிலுள்ள விசேஷமானபலனை யுபதேசிக்கிறு:—

**மூ॰ ॥ क्षीरमृष्टफलपुष्पपादपेष्वापगातटविघट्टितेन वा ।**
**वाममध्यरदभङ्गखण्डने शत्रुनाशकृदतोऽन्यथा परम् ॥**

(க—ரை) யானையின் இடது தந்தத்திற்கு, பாலுள்ள மாத்தையோ, தித்திப்பான பழமுள்ள மாத்தையோ, நல்லபுஷ்பமுள்ள மாத்தையோ, நதியின் கரையையோ குத்துவதால் மத்தியபாகத்தில் பங்கம்(முறிவோ, அல்லது பிளவோ)ஏற்படுமானல் சத்துருநாசமுண்டாகும். இதற்கு மாருய் இடது தந்ததிற்கு மேற்கூறிய பாலுள்ள மாம்முதலிய நிமித்தங்களைத் தவிர்த்து மற்ற நிமித்தங்களால் அடிபாகத்திலோ, நுனிபாகத்திலோ பங்கமுண்டாகுமானலும்,வலது தந்தத்திற்கு அடி, மத்தியம், நுனி-என்ற பாகங்களில் பங்க முண்டாகுமானலும் சத்துருவிருத்தி யுண்டாகும். (எ—று)

(அ—கை) யானையின் சேஷ்டையைப்பற்றிய பலன்களை யுபதேசிக்கிருர்:—

**மூ॰ ॥ स्खलितगतिरकस्मात्त्रस्तकर्णोऽतिदीनः**
**श्वसिति मृदु सुदीर्घं न्यस्तहस्तः पृथिव्याम् ।**
**द्रुतमुकुलितदृष्टिः स्वप्नशीलो विलोमो**
**भयकृदहितभक्षी नैकशोऽसृक्शकृत्कृत् ॥ १२ ॥**

(க—ரை) செல்லும் பொழுது காரணமின்றியே தடுக்கலையடைகின்றதாயும், நடுங்குகின்ற காதுகளையுடையதாயும், மிகவும் துக்கத்தை யடைந்ததாயும்,பூமியில் துதிக்கையைவைத்து மெதுவாய் வெகுகாலம்மூச்சுவிடுகின்றதாயும்,நடுக்கத்தையடைந்ததாகவோ, கொஞ்சம் மூடினதாகவோ இருக்கின்ற கண்களை யுடைய

தாயும், நீண்டகாலம் தூக்கத்தையுடையதாயும், விபரீதமான கதியை யுடையதாயும், அதாவது: நாம்எங்கு செல்லும்படி தூண்டுகின்ருேமோ அங்குசெல்லாததாயும், அபத்யமான பொருளைத் தின்கின்றதாயும், அநேகம் தடவை இரத்தம், விஷ்டை இவைகளை விடுகின்றதாயுமிருக்கின்ற யானையானது தனது யஜமானனுக்கு பயத்தைச் செய்வதாயாகும். இங்குகூறியவை தனித்தனியே பயத்திற்கு நிமித்தமாகும் என்று கண்டுகொள்ள வேண்டும். (எ—று)

(அ—கை) சுபமான சேஷ்டைகளை யுபதேசிக்கிருர்:—

**மூ० ॥ वल्मीकस्थाणुगुल्मक्षुपतरुमथनस्स्वेच्छया हृष्टदृष्टि र्यायाद्यत्राऽनुलोमं त्वरितपदगतिर्वक्त्रमुन्नाम्य चोच्चैः । कक्ष्यासन्नाहकाले जनयति च मुहुः शीकरं बृंहितं वा तत्काले वा मदाप्तिर्जयकृदथ रदं वेष्टयन् दक्षिणं च ॥**

(ப—ரை) சுயேச்சையாய் மண்புற்று, கிளைகள் யாவும் வெட்டப்பட்டமரம், புதர், புற்கள், மரம் இவற்றுள் யாதானுமொன்றை தந்தத்தினுலோ, துதிக்கையினுலோ அழிக்கின்ற கஜமும், எந்ததிக்கை நோக்கி நாம் பிரயாணம் செய்யவேண்டுமோ அந்த திக்கை முகத்தை உயரத்தூக்கிப் பார்த்துக் கொண்டு ஸந்தோஷத்துடன் சீக்கிரமாய் அனுஸரித்துச் செல்லுகின்ற கஜமும், முதுகின்மேல் ஆஸனத்தைப் போட்டு, அதை வயிற்றில் கட்டும் தருவாயில் துதிக்கையினின்றும் ஜலத்திவிலையையோ, பீட்கார சப்தத்தையோ செய்கின்ற கஜமும், ஜயத்தைச் செய்வதாயாகும். அல்லது அக்காலத்தில் மதஜலமுண்டாகுதலும் ஜயத்தைக் கொடுக்கும். யாத்ராகாலத்தில் வலது தந்தத்தை துதிக்கையினுல் சுற்றிக்கொள்ளு மானுலும் ஜயமுண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள சேஷ்டைகளை யுபதேசிக்கிருர்:—

**प्रवेशनं वारिणि वारणस्य ग्राहेण नाशाय भवेन्नृपस्य । ग्राहं गृहीत्वोत्तरणं नृपस्य तोयात्स्थलं वृद्धिकरं नृभर्तुः ॥१४॥**

(க—ரை) முதலையினுல் யானை ஜலத்தில் இழுத்து செல்லப்படுமேயானுல் அரசனுக்கு நாசமுண்டாகும். யானையானது முத

லையை இழுத்துக்கொண்டு கரைக்குவந்துவிடுமானல் அரசனுக்கு அபிவிருத்தியைக் கொடுப்பதாகவாகும். (எ—று)

ஒன்பதாவது ஹஸ்தி சேஷ்டிதாத்யாயம் முற்றிற்று.

---

## பத்தாவது வாயஸவிருதாத்யாயம்.

(அ—கை) காக்கை கத்துவதன்மூல மறியவேண்டிய சுபா சுப பலன்களுபதேசிக்கப் படுகின்றன.

மூ॰ ॥ प्राच्यानां दक्षिणतः शुभदाः काकाः करायिका वामाः।
विपरीतमन्यदेशेष्ववधिर्लोकप्रसिद्धैव ॥ १ ॥

(க—துரை) கிழக்கு தேசத்திற் பிறந்தவர்களுக்கு வலது புரத்தில் காகங்கள் சுபங்களாகவும், கூடபூரி என்ற பக்ஷி இடதுபுரத்தில் சுபமாகவு மாகின்றன. மற்ற தேசத்தியோருக்கு மேற் கூறிய முறையை மாற்றிக்கொள்ளவேண்டும். அதாவது: தெற்கு முதலிய மற்றதேசங்களிற் பிறந்தவர்களுக்கு காக்கை இடது புரத்தில் சுபமாகவும், கூடபூரி என்ற பக்ஷி வலது புரத்தில் சுப மாகவுமாகின்றது. இன்னின்னர் இன்னின்ன தேசத்தைச் சேர்ந்தவர் என்பதை லோகவியவஹாரத்திலிருந்தே யறியவேண்டும். (எ—று)

(அ—கை) காக்கையின் சேஷ்டையைப் பற்றி யுபதேசிக்கிறார்:—

மூ॰ ॥ वैशाखे निरुपहते वृक्षे नीडः सुभिक्षशुभदाता।
निन्दितकण्टकिशुष्केष्वसुभिक्षभयानि तद्देशे ॥ २ ॥

(க—ரை) காக்கையானது வைகாசி மாதத்தில் எவ்விதக்கெடுதலுமற்ற மரத்தில் கூடுகட்டுமானல் அந்தத் தேசத்திற்கு ஸுபிக்ஷம், நன்மைகள் இவற்றை விளைவிப்பதாகவாகும். யாவராலும் வெறுக்கப்பட்ட மரத்திலோ, முள்ளுள்ள மரத்திலோ, பட்டுப் போன மரத்திலோ காக்கை கூடுகட்டுமானல் அந்த தேசத்தில் பஞ்சம், பலவிதத்திலும் பயம் இவற்றைக் கொடுப்பதாகவாகும்.

(அ—கை) காக்கை கூடுகட்டுவதன் முறையை யனுஸரித்துக் கண்டுகொள்ள வேண்டிய பலன்களை யுபதேசிக்கிருர்:—

**मू० ॥ नीडे प्राक्शाखायां शरदि भवेत्प्रथमवृष्टिरपरस्याम् ।**
**याम्योत्तरयोर्मध्यात्प्रधानवृष्टिस्तरोरुपरि ॥ ३ ॥**

**शिखिदिशि मण्डलवृष्टिर्नैर्ऋत्यां शारदस्य निष्पत्तिः ।**
**परिशेषयोस्सुभिक्षं मूषकसंपच्च वायव्ये ॥ ४ ॥**

(க—ரை) காக்கையின் கூடானது மரத்தின் கிழக்கு பாகத்திய கிளையிலிருக்குமாளுல் சரத்காலத்தில் (ஐப்பசி, கார்த்திகை, மாதங்களில்) நல்லமழை பொழியும். மரத்தினுடைய மேற்கு பாகத்திய கிளையில் காக்கையின் கூடு இருக்குமாளுல் வர்ஷருதுவில் (ஆவணி புரட்டாசிமாதங்களில்) நல்ல மழை பொர்ழியும். மரத்தினுடைய தென்பாகத்திலோ வடபாகத்திலோ உள்ள கிளையில் காக்கையின் கூடு இருக்குமாளுல் வர்ஷருது சரத்ருது இவ்விரண்டிற்கு மிடையில் அதாவது:— புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் சிறந்த மழைபொழியும். மரத்தினுடைய உச்சிக்கிளையில் காக்யின் கூடு இருக்குமாளுல் ஆவணி,புரட்டாசி,ஐப்பசி,கார்த்திகை என்ற நான்கு மாதங்களிலும் நல்லமழை பொழியும்.

மரத்தினுடைய தென்கிழக்குபாகத்தில் காக்கையின் கூடுஇருக்குமாளுல் சிலவிடத்தில் மழையும், சிலவிடத்தில் மழையில்லாமையும் ஸம்பவிக்கும். மரத்தினுடைய தென்மேற்குதிக்கில் காக்கையின் கூடு இருக்குமாளுல் சரத்காலத்தில் விளையும் பயிர்கள் நன்குவிளையும். மரத்தினுடைய வடமேற்கு, வடகிழக்கு திக்பாகங்களில் காக்கையின் கூடு இருக்குமாளுல் தேசத்தில் ஸுபிக்ஷமுண்டாகும். வடமேற்கு திக்விபாகத்தில் கூடு இருந்தால் எலிகளின் விருத்தி ஏற்பட்டு அதன்மூலம் கெடுதலுமுண்டாகும்.

(அ—கை) மற்றுமுள்ள சேஷ்டையை யுபதேசிக்கிருர்:—

**मू० ॥ शर दर्भ गुल्म वल्ली धान्य प्रासाद गेह निम्नेषु ।**
**शून्यो भवति स देशश्चोराऽनावृष्टिरोगार्तः ॥ ५ ॥**

(க—ரை) நாணல், தர்ப்பை, * புதர், கொடிகள், நெல் முதலிய தான்யக்களஞ்சியம், கோபுரம், வீடு, பொந்து இவற்றில் காக்கையின் கூடு இருக்குமானல் அந்தத் தேசம் பாழடைவதுடன் திருடர், மழை பொழியாமை, ரோகங்கள் இவற்ருல் பீடிக்கப்பட்டதாயு மாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள சேஷ்டைகளை யுபதேசிக்கிருர்:—

**மூ॰ ॥ द्वित्रिचतुश्शावत्वं सुभिक्षदं पञ्चभिर्नृपान्यत्वम् ।**
**अण्डावकिरणमेकाण्डताऽप्रसूतिश्च न शिवाय ॥ ६ ॥**

(க—ரை) ஒரு காக்கைக்கு இரண்டோ, மூன்ருே, நான்கோ குஞ்சுகளிருக்குமானல் அந்த தேசத்திற்கு ஸுபிக்ஷ முண்டாகும். ஐந்து குஞ்சுகளிருக்குமானல் அந்த தேசத்திற்கு முன் இருந்த அரசன் மாறி வேறு அரசன் வருவான். காக்கை முட்டையை கீழே தள்ளுமானலும், ஒரே முட்டையை இடுமானலும், முட்டையையே இடாமலிருக்குமானலும் அந்தத் தேசத்திற்கு மங்கள முண்டாகமாட்டாது. (எ—று)

(அ—கை) மேற்கூறியவற்றைப் பற்றிய விசேஷத்தையுபதேசிக்கிருர்:—

**மூ॰ ॥ चौरकवर्णैश्चोराश्चित्रैर्मृत्युस्सितैस्तु वह्निभयम् ।**
**विकलैर्दुर्भिक्षभयं काकानां निर्दिशेच्छिशुभिः ॥ ७ ॥**

(க—ரை) சௌரகம் என்பது ஓர்வகை கந்தத்திரவ்யமாகும். காக்கையின் குஞ்சுகள் சௌரகம் என்ற திரவியத்தின் நிறமுள்ளனவாக விருக்குமானல் அந்த தேசத்தில் திருடர்களின் பாதையுண்டாகும். பலநிறமுள்ளனவாக விருக்குமானல் அந்ததேசத்தில் மரணபயமுண்டாகும். வெண்ணிறமா யிருக்குமானல் அக்கினியால் பயமுண்டாகும். அங்கத்தில் குறைவிருக்குமானல் துர்பிக்ஷபயமுண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

---

* गुल्मः=एकमूलश्शाखासमूहः इति भट्टोत्पलः ॥

मू० ॥ अनिमित्तसंहतैर्ग्राममध्यगैः क्षुद्भयं प्रविरुवद्भिः ।
रोधश्चक्राकारैरभिघातो वर्गवर्गस्थैः ॥ ८ ॥

(க–ரை) காக்கைகள் அகாரணமாய் கிராமத்தின் மத்தியில் ஒன்றுகூடி கத்துமானல் பசியினல் (துர்பிக்ஷத்தினல்) பயமுண்டாகும். காக்கைகள் கிராமத்தில் சக்கிரம்போல் சுற்றிச்சுற்றி வருமானல் அந்தக்கிராமத்திற்கு சத்துருக்களால் தகைதலுண்டாகும். காரணமின்றியே காக்கைகள் கூட்டம் கூட்டமாய்ச் சேர்ந்திருக்குமானல் உபத்திரவமுண்டாகும். (எ–று)

(அ–கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறர்:—

मू० ॥ अभयाश्च तुण्डपक्षैश्चरणविघातैर्जनानभिभवन्तः ।
कुर्वन्ति शत्रुवृद्धिं निशि विचरन्तो जनविनाशम् ॥ ९ ॥

(க–ரை) காக்கைகள் மூக்கு, இரக்கை இவைகளாலும் காலால்உதைத்தலாலும் ஜனங்களை அவமதிக்குமேயானல் சத்துருவிருத்தியைச் செய்யும். இரவில் சஞ்சரிக்குமானல் ஜனங்களின் நாசத்தைச் செய்யும். (எ–று)

(அ–கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறர்:—

मू० ॥ सव्येन खे भ्रमद्भिस्स्वभयं विपरीतमण्डलैश्च परात् ।
अत्याकुलं भ्रमद्भिर्वातोद्भ्रामो भवति काकैः ॥ १० ॥

(க–ரை) காக்கைள் பிரதக்ஷிணமாய் ஆகாசத்தில் சுற்றிவருமானல் தன்னைச் சேர்ந்தவர்களிடமிருந்தே பயமுண்டாகும். அப்பிரதக்ஷிணமாய்ச் சுற்றிவருமானல் சத்துருவினிடமிருந்து பயமுண்டாகும். *முயர்ச்சியுடன் சுற்றிவருமானல் காற்றைப்போல் சுழலுதலுண்டாகும். அதாவது:—ஓரிடத்தில் நிலைத்து

---

* अत्याकुलम्=सोद्यमम् என்று பட்டோத்பலர் உரைசெய்திருப்பதை யனுஸரித்து இவ்வர்த்தம் எழுதப்பட்டது. अत्याकुलम् என்பதற்கு கலக்கமுற்று, அதாவது:—சிலகாக்கை கிழக்கிலிருந்து மேற்கிலும், சிலகாக்கை மேற்கிலிருந்து வடக்கிலும், சிலவைவடக்கிலிருந்து தெற்கிலுமாகக்கிரமமின்றியே பறக்குமானல் சுழல்காற்றினல் பயமுண்டாகும், என்றுபொருள் கொள்வது உசிதம் என்று தோன்றுகின்றது.

வஸித்தல் ஏற்படாதென்று கருத்து. இவ்விதமே:—

पुरसैन्योपरि व्योम्नि व्याकुलैरनिलाद्भयम् ।
सव्यमण्डलगैस्स्वोत्थमपसव्यैः पराद्भयम् ॥

காக்கைகள் பட்டினத்திற்கோ, ஸைன்யத்திற்கோ மேல் பாகத்தில் ஆகாசத்தில் நாலாதிக்குகளிலும் பரவி சஞ்சரிக்குமானால் காற்றினால் பயமுண்டாகும் என்றதால் வேறுகிரந்தத்திலுமுபதேசிக்கப் பட்டிருக்கிறது. (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ ऊर्ध्वमुखाश्चलपक्षा पथिभयदाः क्षुद्भयाय धान्यमुषः ।
सेनाङ्गस्था युद्धं परिमोषं चान्यभृतपक्षाः ॥ ११ ॥

(க—ரை) உயரத்தூக்கின முகமுள்ளனவாயும், அசங்குகின்ற இரக்கைகளை யுடையனவாயு மிருக்கின்ற காக்கைகள் மார்க்கத்தில் பயத்தைக்கொடுப்பனவாக வாகும். காக்கைகள் தான்யத்தைத் திருடுமானால் துர்பிக்ஷத்தைக் கொடுக்கும். ஸைன்யங்களின் உறுப்புகளில் காக்கையுட்காருமானால் சண்டையைத் தெரிவிக்கும். காக்கைகள் குயிலுக்கொப்பான இரக்கைகளுடன் அதாவது: மிகவும் கறுத்த இரக்கைகளுடன் கூடியனவாகவிருக்குக்குமானால் திருடர்களால் பயமுண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ भस्मास्थिकेशपत्राणि विन्यसन्पतिबधाय शय्यायाम् ।
मणिकुसुमाद्यवहनने सुतस्य जन्माऽन्यथाङ्गनायाश्च ॥

(க—ரை) காக்கையானது படுக்கையில் சாம்பல், எலும்பு, மயிர், இலைகள் இவற்றை வாரி இரைக்குமானால் அந்தப்படுக்கைக்குச் சொந்தக்காரனுக்கு நாசமுண்டாகும். காக்கையானது படுக்கையை ரத்னங்களையோ, புஷ்பங்களையோ, பழங்களையோ கொண்டுவந்து அடிக்குமானால் (போடுமானால்) படுக்கைக்குச் சொந்தக்காரனுக்கு புத்திரஸந்ததி யுண்டாகும். மேற்கூறிய ரத்னங்களைத் தவிர்த்து மற்றவஸ்துக்களைக் கொண்டுவந்து காக்கை படுக்கையை யடிக்குமானால் படுக்கைக்குச் சொந்தக்காரனுக்கு பெண் குழந்தைகள் பிறக்கும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

மூ० ॥ पूर्णाननेऽर्थलाभः सिकताधान्यार्द्रमृत्कुसुमपूर्वैः ।
भयदो जनसंवासाद्यदि भाण्डान्यपनयेत्काकः ॥ १३ ॥

(க—ரை) மணல், நெல் முதலிய தான்யங்கள், ஈரமுள்ள மண், புஷ்பம், காய், பழம் முதலியவற்றால் நிறைந்த முகமுள்ள தாய் (மூக்கையுடையதாய்) காணப்படுமேயானால் பொருள் லாப முண்டாகும். காக்கை வீட்டினின்றும் சட்டிபானை முதலிய பாத்திரங்களை எடுத்துக்கொண்டு போகுமானால் பயத்தைக் கொடுப்பதாகவாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

மூ० ॥ वाहनशस्त्रोपानच्छत्रच्छायाङ्गकुट्टने मरणम् ।
तत्पूजायां पूजा विष्ठाकरणेऽन्नसंप्राप्तिः ॥ १४ ॥

(க—ரை) காக்கையானது வாஹனம் (வண்டி, குதிரை முதலியன) கத்திமுதலிய ஆயுதம், பாதரக்ஷை, குடையின் நிழல் (அல்லது குடை, புருஷனுடைய நிழல்) இவற்றை மூக்கினாலோ, காலினாலோ அடிக்குமானால் (கொத்துதல், பிராண்டுதல் இவற்றைச் செய்யுமானால்) வாஹனாதிகளின் சொந்தக்காரனுக்கு மரணமுண்டாகும். காக்கையானது மேற்கூறிய வாஹனாதிகளின் மேல் புஷ்பம் முதலியவற்றைக் கொண்டுவந்து போடுவதன் மூலம் பூஜை செய்யுமானால் அவற்றின் சொந்தக்காரருக்கும் பூஜையுண்டாகும். மேற்கூறிய வாஹனாதிகளில் காக்கை எச்சமிடுமானால் அவற்றின் சொந்தக்காரருக்கு அன்னலாபம் கிடைக்கும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

மூ० ॥ यद्द्रव्यमुपनयेत्तस्य लब्धिरपहरति चेत्प्रणाशस्स्यात् ।
पीतद्रव्यैः कनकं वस्त्रं कार्पासिकैः सितैरूप्यम् ॥ १५ ॥

(க—ரை) காக்கையானது எந்த வஸ்துவை எடுத்துக் கொண்டு புருஷனுடைய ஸமீபம் வருமோ அந்தத் திரவியத்தின் லாபம் புருஷனுக்கு உண்டாகும். காக்கை புருஷனுடைய ஸமீபத்தினின்றும் எந்தத் திரவ்யத்தை எடுத்துச் செல்லுமோ புருஷ

னுடைய அந்தத் திரவியத்திற்கு நாசமுண்டாகும். காக்கைக் கொண்டுவரும் திரவியம் சிவப்புநிறமுள்ளதா யிருக்குமானுல் சுவர்ணலாப முண்டாகும். இவ்விதமே பஞ்சினுல் செய்த பொருளைக் கொண்டுவருமானுல் வஸ்திர லாபமும், வெண்ணிரமுள்ள வஸ்துவைக் கொண்டுவருமானுல் வெள்ளியின் லாபமு முண்டாகும். இவ்விதமே மேற்கூறிய நிறமுள்ள திரவியங்களை காக்கை புருஷனது ஸமீபத்தினின்று மெடுத்துச் செல்லுமானுல் ஸுவர்ணுதிகளுக்கு நாசமுண்டாகும் என்று மறியவேண்டும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

**மூ॰ ॥ सक्षीरार्जुनवञ्जुलकूलद्वयपुलिनगारुवन्तश्च ।**
**प्रावृषि वृष्टिर्दुर्दिनमनृतौ स्नाताश्चपांसुजलैः ॥ १६ ॥**

(க—ரை) காக்கைகள் பாலுள்ள அத்தி, ஆல் முதலிய மரங்கள், அர்ஜுனம், வஞ்ஜுளம் என்ற மரங்கள் இவற்றிலோ, நதியின் இருகரையோரமாயுள்ள மணல் மேடுகளிலோ இருந்து கொண்டு கத்துமானுல் வர்ஷருதுவில் நல்லமழை யுண்டாகும். மற்ற ருதுக்களில் துர்த்தினத்தைச் (மேகத்தினுல் ஸூரியன் மறைக்கப்பட்ட தினம்) செய்யும். புழுதியினுலோ, ஜலத்தினுலோ, காக்கைகள் ஸ்னுனம்செய்யுமானுலும், வர்ஷருதுவில் மழையையும், மற்றருதுவில் துர்த்தினத்தையும் செய்யும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

**மூ॰ ॥ दारुणनादस्तरुकोटरोपगो वायसो महाभयदः ।**
**सलिलमवलोक्य विरुवन्वृष्टिकरोऽब्दाऽनुरावी वा ॥**

(க—ரை) காக்கையானது மாத்தினுடைய பொந்திலுட்கார்ந்து கொடூரமாய்ச் சப்திக்குமானுல் அந்தக் கிராமத்திற்கு அதிகமான பயத்தைக் கெடுப்பதாக வாகும். ஜலத்தைப் பார்த்துக்கொண்டோ, மேகத்தைப் பார்த்துக்கொண்டோ காக்கை கத்துமானுல் மழையைக் கொடுக்கும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

**மூ॰ ॥ दीप्तोद्विग्नो विटपे विकुट्टयन्वह्निकृद्विधुतपक्षः ।**
**रक्तद्रव्यं दग्धं तृणकाष्ठं वा गृहे विदधत् ॥ १८ ॥**

(க—ரை) காக்கையானது ஸூரியனுக்கு எதிர் முகமாயும், துக்கத்தை யடைந்ததாயு மிருந்துகொண்டு இறக்கைகளை உதறிக் கொண்டு கொடிகளின் கொத்தை மூக்கினால் பிளக்குமானால் அக்னியினின்றும் பயத்தைக் கொடுக்கும். காக்கை வீட்டின் மேல் சிவந்ததான பொருள், பாதி எரிந்துபோன புற்கள், விறகு கள் இவற்றைக் கொண்டுவந்து போடுமானாலும் நெருப்பினால் அந்த வீட்டிற்கு பயமுண்டாகும். (எ—று)

(அ—கை) திக்கை யனுஸரித்து காக்கை கத்துவதாலுண் டாகின்ற பலன்களை யுபதேசிக்கிறார்:—

**மூ० ॥ ऐन्द्र्यादिदिगवलोकी सूर्याभिमुखो रुवन् गृहे गृहिणः।**
**राजभयचोरबन्धनकलहास्स्युः पशुभयं चेति ॥ १९ ॥**

(க—ரை) காக்கையானது கிழக்கு திக்கைப்பார்த்து உட் கார்ந்து கொண்டு ஸூர்யனுக்கெதிராய் வீட்டில் கத்துமானால் அந்தவீட்டின் யஜமானனுக்கு அரசர்கள் மூலம் பயமும், தெற்கு திக்முகமா யுட்கார்ந்து ஸூர்யனுக்கெதிராய் கத்துமானால் திரு டர்கள் மூலம் பயமும், மேற்கு திக்கைப்பார்த்து உட்கார்ந்து கொண்டு ஸூர்யனுக்கெதிராய் கத்துமானால் கட்டுப்படுதலும் (ஜயிலில் வாஸம்) வீட்டில் வடக்கு முகமாயுட்கார்ந்து கொண்டு ஸூர்யனைப் பார்த்து கத்துமானால் சண்டையும், தென்கிழக்கு முதலிய மூலை திக்குகளைப் பார்த்துக்கொண்டு ஸூர்யனுக்கெதி ராய் கத்துமானால் பசுக்களுக்குக்(நாற்கால் ஜந்துக்களுக்கு)கெடு தலுமுண்டாகும். (எ—று)

(அ—கை) சாந்தையாகவான கிழக்கு முதலிய திக்குகளைப் பார்த்துக்கொண்டு காக்கை கத்துவதன் மூலம் நேருகின்ற பலன் களை யுபதேசிக்கிறார்:—

**மூ० ॥ शान्तामैन्द्रीमवलोकयन् रुयाद्राजपुरुषमित्राप्तिः ।**
**भवति च सुवर्णलब्धिः शाल्यन्नगुडाशनाप्तिश्च ॥२०॥**

(க—ரை) பொதுவிதியில் 8-வது பக்கத்திற் சொல்லியபடி சாந்தையாகவான கிழக்கு திக்கைப் பார்த்துக்கொண்டு வீட்டில் காக்கை கத்துமானால் அரசனைச் சேர்ந்த புருஷன் (ராஜாங்காதி

காரம் பெற்றவன்) சிநேஹிதன், இவர்களுடன் கூடுதலும், ஸு வர்ண லாபமும், சம்பா அரிசியின் அன்னம், சர்க்கரான்னம் இவற் றின் லாபமு முண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**मू० ॥ आग्नेय्यामनलाजीविकयुवतिप्रवरधातुलाभश्च ।**
**याम्ये माषकुलुत्था भोज्यं गान्धर्विकैर्योगः ॥ २१ ॥**

(க—ரை) காக்கையானது சாந்தையாகவான தென்கிழக்கு திக்கைப் பார்த்துக்கொண்டு கத்துமானல் நெருப்பினல் ஜீவிப்ப வன் (தட்டான், கொல்லன் முதலியோர்) யௌவனப்பருவ மடைந்த ஸ்த்ரீ, சிறந்த தாது வாகவான ஸுவர்ணம் முதலியன இவற்றின் லாபமுண்டாகும். சாந்தையாகவான தெற்கு திக் கைப் பார்த்துக்கொண்டு கத்துமானல் உளுந்து,கொள்ளு இவை களாகிற உணவுபொருளின் லாபமும், ஸங்கீத வித்வான்களுடன் சேர்க்கையு முண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**मू० ॥ नैर्ऋत्यां दूताश्वोपकरणदधितैलपललभोज्याप्तिः ।**
**वारुण्यां मांससुराऽऽसवधान्यसमुद्ररत्नाप्तिः ॥ २२ ॥**

(க—ரை) காக்கையானது சாந்தமாகவான தென்மேற்கு திக் கைப் பார்த்துக்கொண்டு கத்துமானல், ஸமாசாரம் கொண்டு வருபவன் (அதாவது: கடிதம்) குதிரை,வீட்டிற்குத்தேவையான செம்பு பாத்திரம் முதலியவைகள், தயிர், எண்ணெ, பிண்ணுக்கு, ஆஹாரம் இவற்றின் லாபமுண்டாகும். சாந்தையாகவான மேற்கு திக்கைப்பார்த்து கத்துமானல் மாம்ஸம், கள்ளு, ஒயின், நெல் முதலிய தான்யம், ஸமுத்திரத்தில் விளையக்கூடிய ரத்தினங் களான முத்து, பவழம் முதலியன இவற்றின் லாபமுண்டாகும்.

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**मू० ॥ मारुत्यां शस्त्रायुधसरोजवल्लीफलाशनाप्तिश्च ।**
**सौम्यायां परमान्नाशनं तुरङ्गांबरप्राप्तिः ॥ २३ ॥**

(க—ரை) சாந்தையாகவான வடமேற்கு திக்கைப்பார்த்துக் கொண்டு காக்கை கத்துமானல் இரும்பு, கத்தி முதலிய ஆயுதம், தாமரைப் புஷ்பம், கொடியிலுண்டாகின்ற பழங்கள் (திராக்ஷைப் பழம், கொடிமிந்திரிப்பழம் முதலியன) நல்ல உணவு இவற்றின் லாபமுண்டாகும். சாந்தையான நேர்வடக்கு திக்கைப்பார்த்துக் கொண்டு கத்துமானல் பாயஸ போஜனம், குதிரை, வஸ்திரம் இவற்றின் லாபமுண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ ऐशान्यां संप्राप्तिर्घृतपूर्णानां भवेदनडुहश्च ।**
**एवं फलं गृहपतेर्गृहपृष्ठसमाश्रिते भवति ॥ २४ ॥**

(க—ரை) சாந்தையாகவான வடகிழக்கு திக்கைப் பார்த்துக் கொண்டு கத்துமானல் நெய் நிறைந்த பக்ஷ்யங்கள், காளைமாடு இவற்றின் லாபமுண்டாகும். இவ்விதமே காக்கையானது கிழக்கு முதலிய திக்குகளில் வீட்டின்மேல் கூரையிலுட்காருமானலும் 20-வது சுலோகம் முதற்சொல்லிய பலன்களே வீட்டின் யஜமானனுக் குண்டாவதாய்ச் சொல்லவேண்டும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ गमने कर्णसमश्चेत्क्षेमाय न कार्यसिद्धये भवति ।**
**अभिमुखमुपैति यातुर्विरुवन् विनिवर्तयेद्यात्राम् ॥२५॥**

(க—ரை) காக்கையானது ஒரு புருஷன் யாத்திரை செய்யும்பொழுது அந்த புருஷனுடைய காதளவு உயரத்தில் பறந்து செல்லுமானல் கிடைத்ததற்கு அழிவுண்டாகாது. ஆனல் புதிதாய் காரியஸித்தி யுண்டாகாது. காக்கையானது கத்திக்கொண்டு யாத்திரை செய்பவனுக்கு எதிராய் வருமானல் யாத்திரை செய்யவேண்டாமென்பதைத் தெரிவிப்பதாகவாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ वामे वाशित्वादौ दक्षिणपार्श्वेऽनुवाशते यातुः ।**
**अर्थापहारकारी तद्विपरीतोऽर्थसिद्धिकरः ॥ २६ ॥**

(க—ரை) காக்கையானது யாத்திரை செய்கின்றவனுக்கு இடது பாகத்தில் முதலில் கத்திவிட்டுப் பிறகு வலது பக்கம் சென்று கத்துமானால் பொருள் அபஹரிக்கப்படுதலைத் (க்காரியம் சித்தி பெறாமையை) தெரிவிக்கும். மேற்கூறியதற்கு மாறாய் அதாவது: முதலில் வலது புறத்திலும், பிறகு இடது புறத்திலு மாக கத்துமானால் காரியஸித்தியைத் தெரிவிப்பதாக வாகும்.

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ यदि वामएव विरुवन्मुहुर्मुहुर्यायिनोऽनुलोमगतिः ।**
**अर्थस्य भवति सिद्ध्यै प्राच्यानां दक्षिणश्चैवम् ॥ २७ ॥**

(க—ரை) காக்கையானது யாத்திரை செய்பவனுடைய இடது பாகத்திலேயே அடிக்கடி கத்திக்கொண்டு பின்தொடர்ந்து வருமானால் கார்யஸித்தி யுண்டாகும். கிழக்கு தேசத்தில் பிறந்த வர்களுக்கு மட்டும் காக்கை முற்கூறியபடி வலதுபுறத்தில் கத்திக் கொண்டு பின்தொடர்ந்து வருமானாலும் சுபமாகவே யாகும்.

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ वामः प्रतिलोमगतिर्विरुवन्गमनस्य विघ्नकृद्भवति ।**
**तत्रस्थस्यैव फलं कथयति तद्वांछितं गमने ॥ २८ ॥**

(க—ரை) காக்கையானது இடதுபுறத்தில் கத்திக்கொண்டு யாத்திரை செய்பவனுக்கு எதிராக வருமானால் யாத்திரைக்குத் தடங்கலைச் செய்வதாயாகும். அதாவது:—யாத்திரை செய்யாம லிருந்தவிடத்திலிருந்தாலே விரும்பிய பொருள் கிடைக்கும் என் பதைத் தெரிவிப்பதாகவாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ दक्षिणविरुतं कृत्वा वामे विरुयाद्यथेप्सिताऽवाप्तिः ।**
**प्रतिवाश्य पुरोयायात् द्रुतमत्यर्थागमो भवति ॥ २९ ॥**

(க—ரை) காக்கையானது யாத்திரை செய்பவனுடைய வலது பாகத்தில் முதலில் கத்திப் பிறகு இடது பாகத்தில் வந்து கத்து மானால் விரும்பிய பொருள் கிடைக்கும். யாத்திரை செய்பவ னுக்கு முன்பாகத்தில் காக்கை கத்திக்கொண்டு போகுமானால்

சீக்கிரகாலத்தில் அதிகமாய்ப் பொருள் வரவைத் தெரிவிப்பதாக வாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू०॥ प्रतिवाश्य पृष्ठतो दक्षिणेन यायाद्द्रुतं क्षतजकारी ।
एकचरणोऽर्कमीक्षन् विरुवंश्च पुरोरुधिरहेतुः ॥ ३० ॥

(க—ரை) காக்கையானது யாத்திரை செய்பவனுக்கு பின் பாகத்தில் வந்து கத்திவிட்டு வலதுபுறத்தால் சீக்கிரமாய் செல்லு மானல் ரக்தப்பெருக்கைத் தெரிவிக்கும். அதாவது: ரக்தம் வெளி வரக்கூடிய அபாயத்தைத் தெரிவிக்கும். காக்கையானது யாத் திரை செய்பவனுக்கு முன்னிலையில் ஒருகாலால் நின்று ஸூர்ய னைப் பார்த்துக்கொண்டு கத்துமானலும் ரக்தப்பெருக்குண்டா கும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू०॥ दृष्ट्वार्कमेकपादस्तुण्डेन लिखेद्यदा स्वपिच्छानि ।
पुरतो जनस्य महतो वधमभिधत्ते तदा बलिभुक् ॥३१॥

(க—ரை) காக்கையானது ஸூர்யனைப் பார்த்துக்கொண்டு ஒருகாலால் நின்று மூக்கினல் தனது இரக்கைகளைக் கீரிக்கொள் ளுமானல் பெரியமனுஷ்யன் ஒருவனுக்கு முன்னிலையில் மரணம் கார்த்துக்கொண்டிருப்பதைத் தெரிவிப்பதாகவாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू०॥ सस्योपेते क्षेत्रे विरुवति शान्ते ससस्यभूलब्धिः ।
आकुलचेष्टो विरुवन् सीमान्ते क्लेशकृद्यातुः ॥ ३२ ॥

(க—ரை) புருஷன் யாத்திரை செய்யும்பொழுது காக்கையா னது பயிருடன் கூடின வயலில் பொதுவிதி 8வது பக்கத்திற் சொல்லியபடி சாந்தமாகவான திக்கைப்பார்த்துக்கொண்டு கத் துமானல் பயிருடன் கூடின பூமியின் லாபமுண்டாகும். கிரா மத்தினுடைய எல்லைப் பிரதேசத்தில் (आकुलचेष्टः=सोद्यम इति भट्टोत्पलः।) கலங்கின சேஷ்டையுள்ளதாய்க்கொண்டு கத்துமானல் யாத்திரை செய்பவனுக்கு கஷ்டத்தைத் தெரிவிப்பதாகவாகும்.

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ सुस्निग्धपत्रपल्लवकुसुमफलाऽऽनम्रसुरभिमधुरेषु ।
सक्षीराऽव्रणसंस्थितमनोज्ञवृक्षेषु चार्थसिद्धिकरः ॥३३॥

(க—ரை) மழமழப்புள்ள இலைகள், புதியதளிர்கள், புஷ்பங்கள், பழங்கள், இவற்றால் வணங்கினவைகளாயும், வாஸனையுள்ளனவாயும், தித்திப்புள்ளனவாயும், பாலுள்ளனவாயும், பொந்து பிளவு முதலிய தோஷமற்றனவாயு மிருக்கின்ற மரங்களில் காக்கை வஸித்துக்கொண்டு கத்துமானால் கார்யஸித்தியைக் கொடுக்கும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ निष्पन्नसस्यशाड्वलभवनप्रासादहर्म्यहरितेषु ।
धन्योच्छ्रयमङ्गल्येषु चैव विरुवन् धनागमदः ॥ ३४ ॥

(க—ரை) விளைந்த பயிருடன் கூடிய விடத்திலோ, புல்தரையிலோ, வீட்டினுடைய மாடியிலோ, மொட்டமாடியிலோ, பச்சைநிறமுள்ள விடத்திலோ, புண்யமான ஸ்தானத்திலோ, உயரமான விடத்திலோ, சுபஸ்தலத்திலோ, காக்கை யுட்கார்ந்துகொண்டு கத்துமானால் தனத்தின் வரவைத் தெரிவிப்பதாகவாகும். (எ-று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ गोपुच्छस्थे वल्मीकगेऽथवा दर्शनं भुजङ्गस्य ।
सद्यो ज्वरो महिषगे विरुवति गुल्मे फलं स्वल्पम् ॥

(க—ரை) காக்கையானது பசுவினுடைய வாலிலோ, கரையான் புற்றிலோ காணப்பட்டால் பாம்பின் தர்சனமுண்டாகும். காக்கையானது எருமையின் மேலுட்கார்ந்து கத்துமானால் அதைப் பார்ப்பவனுக்கு அதே தினத்தில் ஜ்வரமுண்டாகும். காக்கை புதரிலிருந்து கத்துவதாய்க் காணப்பட்டால் சுபாசுப பலன் ஸ்வல்பமாகவே யுண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ कार्यस्य व्याघातस्तृणकूटे वामगेऽम्बुसंस्थे वा ।
ऊर्ध्वाग्निप्लुष्टेऽशनिहते च काके वधो भवति ॥ ३६ ॥

(க—ரை) காக்கையானது யாத்திரை செய்பவனுக்கு இடது பக்கத்தில் வைக்கோல் போரிலோ, ஜலத்திலோ வஸித்துக் கொண்டு கத்துமாஞல் காரியத்திற்கு நாசமுண்டாகும். அக்கினியிஞல் எரிந்துபோன மேல்பாகத்தையுடைய விடத்திலோ, இடிவிழுந்த விடத்திலோ காக்கை வஸித்துக்கொண்டு கத்துமாஞல் யாத்திரை செய்பவனுக்கு வதத்தைத் தெரிவிப்பதாகவாகும்.

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

**மூ॰ ॥ कण्टकिमिश्रे सौम्ये सिद्धिः कार्यस्य भवति कलहश्च ।**
**कण्टकिनि भवति कलहो वल्लीपरिवेष्टिते बंधः ॥ ३७ ॥**

(க—ரை) காக்கையானது பாலுள்ளதாயும், முள்ளுள்ளதாயுமிருக்கின்ற மரத்திலிருந்து கத்துமாஞல் கார்யஸித்தியும், கலஹமுமுண்டாகும். பாலற்ற முள்ளுள்ள மரத்திலிருந்து கொண்டு கத்துமாஞல் கலஹம் மட்டு முண்டாகும். கொடிபடர்ந்த மரத்திலிருந்து கொண்டு காக்கை கத்துமாஞல் ஜயில் வாஸமோ, பிறருக்குக் கட்டுப்படுதலோ ஏற்படும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

**மூ॰ ॥ छिन्नाग्रेऽगच्छेदः कलहः शुष्कद्रुमस्थिते ध्वांक्षे।**
**पुरतश्च पृष्ठतो वा गोमयसंस्थे धनप्राप्तिः ॥ ३८ ॥**

(க—ரை) காக்கையானது வெட்டப்பட்ட நுனிபாகத்தையுடைய மரத்திலிருந்து கொண்டு கத்துமாஞல் அச்சமயம் யாத்திரை செய்பவனுக்கு அங்கத்தில் வெட்டுக்காயமுண்டாகும். பட்டுப்போன மரத்திலிருந்து கத்துமாஞல் சண்டை யுண்டாகும். காக்கையானது யாத்திரை செய்பவனுக்கு பின் பாகத்திலோ, முன் பாகத்திலோ, சாணத்தின் குவியலிலிருக்குமாஞல் தனலாபமுண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

**மூ॰ ॥ मृतपुरुषाङ्गावयवस्थितोऽभिविरुवन्करोति मृत्युभयम्।**
**भञ्जन्नस्थि च चञ्च्वा यदि विरुवत्यस्थिभङ्गाय ॥३९॥**

(க—ரை) காக்கையானது இறந்துபோன புருஷனுடைய சரீரத்திலோ, கைகால் முதலிய அவயவங்களிலோ இருந்துகொண்டு யாத்திரை செய்பவனுக்கு எதிராய் கத்துமானல் மரணபயத்தைத் தெரிவிக்கும். காக்கையானது மூக்கினல் எலும்பை பிளந்துகொண்டு கத்துமானல் யாத்திரை செய்பவனுக்கு எலும்பு நொருங்கப்படுத்லைத் தெரிவிக்கும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**मू०॥ रज्ज्वस्थिकाष्ठकण्टकिनिस्सारशिरोरुहानने रुवति ।**
**भुजग गद दंष्ट्रि तस्कर शस्त्राग्नि भयान्यनुक्रमशः ॥**

(க—ரை) காக்கையானது தனதுமூக்கில் கயிறை எடுத்துக்கொண்டு கத்துமானல் பாம்பின் மூலம் பயத்தையும், எலும்பை எடுத்துக்கொண்டு கத்துமானல் ரோகபயத்தையும், விறகை எடுத்துக்கொண்டு கத்துமானல் தத்திப்பல்லுள்ள பன்றி முதலியவற்றின் மூலம் பயத்தையும், முள்ளை வாயிற்கவ்விக்கொண்டு கத்துமானல் திருடர்கள் மூலம் பயத்தையும், வலுவற்ற(மடித்த) வஸ்துவை மூக்கில் கவ்விக்கொண்டு கத்துமானல் ஆயுதங்கள் மூலம் பயத்தையும், மயிரைக் கவ்விக்கொண்டு கத்துமானல் நெருப்பின் மூலம் பயத்தையும் தெரிவிப்பதாக வாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**मू०॥ सितकुसुमाऽशुचिमांसाऽऽननेऽर्थसिद्धिर्यथेप्सिता यातुः।**
**पक्षौ धुन्वन्नूर्ध्वानने च विघ्नं मुहुः क्वणति ॥ ४१ ॥**

(க—ரை) புருஷன் யாத்திரை செய்யும்பொழுது காக்கையானது வெண்ணிறமான புஷ்பம், அமேத்தியம், மாம்ஸம் இவற்றுள் யாதானுமொன்றை மூக்கில் கவ்விக்கொண்டு கத்துமானல் யாத்திரை செய்கின்ற புருஷனுக்கு விரும்பிய பொருள் கிடைக்கும். காக்கையானது இரக்கைகளை உதறிக்கொண்டு மூக்கை உயரத்தூக்கி கத்துமானல் யாத்திரையில் விக்னம் ஸமீபத்திருப்பதைத் தெரிவிப்புதாகவாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ यदि शृङ्खलां वरत्रां वल्लीं वादाय वाशते बन्धः ।
पाषाणस्थे च भयं क्लिष्टाऽपूर्वाध्विकयुतिश्च ॥ ४२ ॥

(க—ரை) புருஷன் யாத்திரை செய்யும்பொழுது இரும்புச் சங்கிலியையோ, தோலால் பின்னிய கயிற்றையோ, கொடியையோ மூக்கில் கவ்விக்கொண்டு கத்துமானல் யாத்திரை செய்பவனுக்கு கட்டுப்படுதலைத் தெரிவிப்பதாகவாகும். காக்கை பாறையின் மேலுட்கார்ந்து கத்துமானல் பயத்தைத் தெரிவிப்பதாகவாகும். அத்துடன் சிரமமடைந்தவனுயும், இதர்க்குமுன் பரிசயிக்கப் படாதவனுயுமுள்ள யாத்திரிகனின் சேர்க்கையு முண்டாகும்.

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

मू० ॥ अन्योऽन्यभक्षसंक्रामितानने तुष्टिरुत्तमा भवति ।
विज्ञेयस्त्रीलाभो दंपत्योर्विरुवतोर्युगपत् ॥ ४३ ॥

(க—ரை) யாத்திரை செய்யும்பொழுது காக்கைகள் ஒன்றுக் கொன்று பக்ஷ்யத்தை மூக்கினுல் மாற்றிக்கொள்ளுமானல் யாத் திரை செய்பவனுக்கு மேலான ஸந்தோஷமுண்டாகும். காக் கைகள் ஆணும் பெண்ணுமாய்ச் சேர்ந்து கத்துமானல் ஸ்திரீ லாப முண்டாகுமென்று அறியவேண்டும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

मू० ॥ प्रमदाशिरउपगतपूर्णकुंभसंस्थेऽङ्गनार्थसंप्राप्तिः ।
घटकुट्टने सुतविपद्धटोपहदनेऽन्नसंप्राप्तिः ॥ ४४ ॥

(க—ரை) காக்கையானது ஒரு ஸ்திரீயின் தலையிலிருக்கின்ற குடத்திலிருக்குமானல் யாத்திரை செய்பவனுக்கு ஸ்திரீ, பொ ருள் இவற்றின் லாபமுண்டாகும். குடத்தை மூக்கினுல் குட்டு மானல் புத்திர மரணமும், குடத்தின்மேல் எச்சமிடுமானல் அன்னலாபமு முண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

मू० ॥ स्कंधावारादीनां निवेशसमये रुवंश्चलत्पक्षः ।
सूचयतेऽन्यस्थानं निश्चलपक्षस्तु भयमात्रम् ॥ ४५ ॥

(க—ரை) யாத்திரை செய்பவன் ஓரிடத்தில் தங்குவதற்காக கூடாரம் முதலியவற்றை ஏற்படுத்துங்கால் காக்கை தனது இரக்கைகளை உதரிக்கொண்டு கத்துமானுல் இந்தவிடத்தைவிட்டு வேறிடத்தில் தங்கவேண்டும் என்பதைத் தெரிவிப்பதாக வாகும். இரக்கையை உதராமல் கத்துமானுல் பயத்தை மாத்திரம் தெரிவிப்பதாகவாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ प्रविशद्भिस्सैन्यादीन् सगृध्रकङ्कैर्विनाऽऽमिषं ध्वांक्षैः ।**
**अविरुद्धैस्तैः प्रीतिर्द्विषतां युद्धं विरुद्धैश्च ॥ ४६ ॥**

(க—ரை) காக்கைகள் மாம்ஸத்தைக் கவ்விக்கொள்ளாமல் கழுகு, கொட்டைப்பருந்து இவற்றுடன்கூடி ஸைன்யத்தையோ, பட்டினத்தையோ அடைந்து ஒன்றுக்கொன்று சண்டை செய்யாமலிருக்குமானுல் சத்துருவுடன் சிநேஹமுண்டாகும். அவைகள் ஒன்றுக்கொன்று சண்டையிடுமானுல் சத்துருக்களுடன் யுத்தமுண்டாவதைத் தெரிவிப்பதாகவாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ बन्धः सूकरसंस्थे पङ्काक्ते सूकरे द्विकेऽर्थाप्तिः ।**
**क्षेमं खरोष्ट्रसंस्थे केचित्प्राहुर्वधं तु खरे ॥ ४७ ॥**

(க—ரை) யாத்திரை செய்யும்பொழுது இருகாக்கைகள் பன்றியின்மே லிருப்பனவாய்க் காணப்பட்டால் பிறருக்குக் கட்டுப்படுதலுண்டாகும். அவ்விரு காக்கைகளே சேரினுல் பூசப்பட்ட பன்றியின் மேலிருப்பனவாய்க் காணப்பட்டால் பொருள் லாபமுண்டாகும். காக்கை கழுதையின் மீதோ, ஒட்டகையின் மீதோ இருப்பதாய்க் காணப்பட்டால் க்ஷேமமுண்டாகும். சில மஹருஷிகள் கழுதையின் மேலிருப்பதாய்க் காணப்பட்டால் மரணமுண்டாகும் என்கின்றனர். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ वाहनलाभोऽश्वगते विरुवत्यनुयायिनि क्षतजपातः ।**
**अन्येऽप्यनुव्रजन्तो यातारं काकवद्विहगाः ॥ ४८ ॥**

(க—ரை) காக்கையானது குதிரையின் மேலுட்கார்ந்து கொண்டு கத்துமானல் யாத்திரை செய்பவனுக்கு வாஹனலாப முண்டாகும். யாத்திரை செய்பவனைப் பின்தொடர்ந்து காக்கை கத்திக்கொண்டு வருமானல் ரக்தப்பெருக்குண்டாகும். அதாவது:—ரக்தம் வெளிவரக்கூடிய அபாயம் நேரிடும். காக்கையைத் தவிர மற்றபக்ஷிகள் யாத்திரை செய்பவனைப் பின்தொடர்ந்து வருமானலும் காக்கை பின்தொடர்ந்து வருவதாலுண்டாகின்ற பலனே யுண்டாகும். இவ்விதமே காச்யபரும்:—

"उलूककङ्कप्लवगा गृध्रश्येनादयश्च ये ।
मांसाशिनश्च विहगास्तुल्या वायसचेष्टितैः॥

கோட்டான், கங்கம் என்ற பறவை (பருந்து) குரங்கு, கழுகு, சியேனம் என்ற பக்ஷி முதலிய மாம்ஸத்தைத் தின்கின்ற பக்ஷிகள் யாவும் சேஷ்டா விஷயத்தில் காக்கைக்கு ஒப்பாகின்றன. அதாவது: காக்கையின் சேஷ்டைக்குச் சொல்லியபலனையே மேற்கூறியவற்றிற்கும் கண்டுகொள்ள வேண்டும் என்றதாலுபதேசித்திருக்கிறார் (எ—று)

(அ—கை) இங்கு கண்டுகொள்ள வேண்டிய விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**मू०॥ द्वात्रिंशत्प्रविभक्ते दिक्चक्रे यद्यथा समुद्दिष्टम् ।**
**तत्तत्तथा विधेयं गुणदोषफलं यियासूनाम् ॥ ४९ ॥**

(க—ரை) முன்னர் திக்சக்கிரத்தை 32 விதமாகப் பிரித்து எந்த திக்விபாகத்தில் சகுனமானது எங்ஙெந்தவிதமா யாவதா யுபதேசிக்கப்பட்டதோ அதை யனுஸரித்து இங்கு கூறிய சுபாசுபசேஷ்டைகளின் பலனை யாத்திரை செய்பவனுக்கு உபதேசிக்க வேண்டும். அதாவது: சாந்தையாகவான திக்கில் காக்கை சுப சேஷ்டையைச் செய்யுமானல் அதன்மூல முண்டாகின்ற நல்ல பலன் அதிகமாகக் கிடைக்கும். அதே திக்கில் அசுப சேஷ்டையைச் செய்யுமானல் அசுபபலன் நடுநிலைமையில் கிடைக்கும். தீப்தமான திக்கில் க்ரூரமான சேஷ்டையைச் செய்யுமானல் க்ரூரபலன் ஸம்பூர்ணமாகவும், சுபசேஷ்டையைச் செய்யுமானல்

சுபபலன் நடு நிலைமையிலுமுண்டாகும் என்று கண்டுகொள்ள வேண்டும். (எ—று)

(அ—கை) இனி காக்கை கத்துவதன்மூல முண்டாகின்ற பலன்களை யுபதேசிக்கிறார்:—

**मू० ॥ का इति काकस्य रुतं स्वनिलयसंस्थस्य निष्फलं प्रोक्तम्।
कव इति चात्मप्रीत्यै केति रुते स्निग्धमित्राप्तिः ॥ ५० ॥
करेति कलहं कुरुकुरु च हर्षमथकटकटेति दधिभक्तम् ।
केके विरुतं कुकु वा धनलाभं यायिनः प्राह ॥ ५१ ॥**

(க—ரை) காக்கையானது தனது கூட்டிலிருந்துகொண்டு 'கா' என்று கத்துமானால் நிஷ்பலமாகும். அதாவது: சுபமென்றோ, அசுபமென்றோ சொல்லமுடியாது. 'கவ' என்று கத்துமானால் தனக்கு ஸந்தோஷமுண்டாகும். 'க' என்று சப்திக்குமானால் மிக்கச்சினேஹமுள்ள மித்திரனுடைய லாபமுண்டாகும்.

'கர' என்று சப்திக்குமானால் சண்டையையும், 'குருகுரு' என்று சப்திக்குமானால் சந்தோஷத்தையும், 'கடகட' என்று கத்துமானால் தயிரன்ன லாபத்தையும், 'கேகே' என்றோ, 'குகு' என்றோ கத்துமானால் தனலாபத்தையும் யாத்திரை செய்பவனுக்குத் தெரிவிப்பதாகவாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**मू० ॥ खरेखरे पथिकागममाह कखाखेति यायिनो मृत्युम् ।
गमनप्रतिषेधिकमा कखला सद्योऽभिवर्षाय ॥ ५२ ॥**

(க—ரை) காக்கையானது **खरेखरे** 'கரேகரே' என்று கத்துமானால் வெளியிற் சென்ற மனிதன் வருவான் என்பதைத் தெரிவிப்பதாகவாகும். **कखाखा** 'ககாகா' என்று கத்துமானால் யாத்திரை செய்பவனுக்கு மரணத்தைத் தெரிவிப்பதாகவாகும். 'ஆ' என்று கத்துமானால் யாத்திரையைத் தடுப்பதாகவாகும். **कखला** 'ககலா' என்று கத்துமானால் உடனே (அதே தினத்தில்) வர்ஷத்தைத் (மழையை) தெரிவிப்பதாகவாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ काकेति विघातः काकटीति चाहारदूषणं प्राह ।
प्रीत्यास्पदं कवकवेति बन्धमेवं कगाकुरिति ॥ ५३ ॥

(க—ரை) காக்கை 'காக' என்று கத்துமானல் காரியநாசமுண்டாகும். 'காகடீ' என்று கத்துமானல் விஷம் முதலியவற்றால் கெடுக்கப்பட்ட ஆஹாரலாபத்தைத் தெரிவிப்பதாகவாகும். 'கவகவ' என்று கத்துமானல் புதிதாய் ஓர் மனிதனுடன் ஸ்னேஹமுண்டாகும். कगाकु 'ககாகு' என்று கத்துமானல் கட்டுப்படுத லுண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ करगौ विरुते वर्षं गुडवत् त्रासाय वडिति वस्त्राप्तिः ।
कलयेति च संयोगः शूद्रस्य ब्राह्मणैस्साकम् ॥ ५४ ॥

(க—ரை) காக்கையானது करगौ 'கரகௌ' என்று கத்துமானல் மழை பொழியும். गुड 'குட' என்று கத்துமானல் பயத்தைத் தெரிவிக்கும். वट् 'வட்' என்று கத்துமானல் வஸ்திரலாபமுண்டாகும். 'கலய' என்று கத்துமானல் சூத்திரனுக்கு பிராம்மணனுடன் சேர்க்கையுண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ कडिति फलाप्तिः फलदाहिदर्शनं टड्डिति प्रहारास्स्युः ।
स्त्रीलाभस्स्त्रीतिरुते गडिति गवां पुडिति पुष्पाणाम् ॥

(க—ரை) कट् 'கட்' என்று காக்கை கத்துமானல் விரும்பிய பலலாபமுண்டாகும். இவ்விதமே நல்ல பலனைக் கொடுக்கின்ற பாம்பின் தர்சனமுமுண்டாகும். टड्ड् 'டட்' என்று கத்துமானல் அடிபடவேண்டி நேரிடும். 'ஸ்திரீ' என்று கத்துமானல் ஸ்திரீ லாபமுண்டாகும். गट् 'கட்' என்று கத்துமானல் பசுலாபமுண்டாகும். पुट् 'புட்' என்று கத்துமானல் புஷ்பலாபமுண்டாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ युद्धाय टाकुटाकिति गुडुवह्निभयं कटेकटे कलहः ।
टाकुलि चिण्टिचि केकेकेति पुरंचेति दोषाय ॥ ५६ ॥

(க—ரை) 'டாகு டாகு' என்று கத்துமானல் சண்டையைத் தெரிவிப்பதாகவாகும். गुडु 'குடு' என்று கத்துமானல் அக்னியி னின்றும் பயத்தைத் தெரிவிக்கும். 'கடே கடே' என்று கத்து மானல் சண்டை யுண்டாகும். 'டாகுலி, चिण्टिचि சிண்டிசி, கேகேக, புரம்' என்று கத்துமானல் கெடுதலைத் தெரிவிப்பதாக வாகும். (எ—று)

(அ—கை) மற்றுமுள்ள விசேஷத்தை யுபதேசிக்கிறூர்:—

**काकद्वयस्यापि समानमेतत्फलं यदुक्तं रुतचेष्टिताद्यैः ।**
**पतत्रिणोऽन्येऽपि यथैव काको वन्याः श्ववच्चोपरिदंष्ट्रिणो ये ॥**

(க—ரை) ஒரு காக்கையின் சப்தம், சேஷ்டை முதலியவை கள் மூலம் எங்கெந்தவிதமான பலன்களைக் கண்டுகொள்ளவேண் டுமாயுபதேசித்தோமோ, அப்பலன்களையே இருகாக்கை, நான்கு காக்கை இவற்றின் சப்தம், சேஷ்டை இவைகள் மூலமும் கண்டு கொள்ளவேண்டும். இங்கு எந்தப்பக்ஷிகளைக் குறிப்பிட்டு அவற் றின் சேஷ்டைகள் மூலம் தனியே பலன்கள் உபதேசிக்கப்பட வில்லையோ அப்பக்ஷிகள் மூலமும் காக்கைகள் மூலமுண்டாவ தாய்ச் சொல்லிய பலன்களே ஏற்படுகின்றனவென்று மறியவே ண்டும். காட்டில் வஸிக்கின்ற பிராணிகளுள் எந்தப் பிராணி கள் சகுனத்திற்காக இங்கு குறிப்பிடப்படவில்லையோ, அப் பிராணிகளின் சேஷ்டைகள் மூலமும் நாயின் சேஷ்டைகள் மூல மறியவேண்டியதா யுபதேசித்த பலன்களையே அறியவேண்டும் என்றும், மேல் தத்திப்பல்லுள்ள பன்றிமுதலியவைகள் சகுன விஷயத்தில் நாய்க்கு ஸமமாகின்றனவென்றும் கண்டுகொள்ள வேண்டும். (எ—று)

(அ—கை) மற்றபிராணிகளின் சேஷ்டைகள் மூலம் கண்ட றிய வேண்டிய சுபாசுபங்களை யுபதேசிக்கிறூர்:—

**मू० ॥ स्थलसलिलचराणां व्यत्ययो मेघकाले**
**प्रचुरसलिलवृष्ट्यै शेषकाले भयाय ।**
**मधुभवननिलीनं तत्करोत्याशु शून्यं**
**मरणमपि च नीला मक्षिका मूर्ध्नि नीला ॥**

(க—ரை) வர்ஷருதுவில் நிலத்தில் சஞ்சரிக்கின்ற பிராணிகள் நீரிலும், நீரில் வஸிக்கின்ற பிராணிகள் நிலத்திலுமாக மாறி வஸிக்குமானால் அதிகமாய் மழை பொழியப்போவதைத் தெரிவிப்பதாகவாகும். மற்ற ருதுவில் மேற்கூறியபடி பிராணிகள் மாறி சஞ்சரிக்குமானால் பயத்தைக் கொடுப்பதாகவாகும். தேனீக்கள் வெளியிற் பரக்காமல் தேன்கூட்டில் தானாகவே அடங்கிக் கிடக்குமானால் அந்த தேசத்தை சீக்கிரகாலத்தில் நிர்ஜனமாகச் செய்துவிடும். கருநிறமுள்ள ஈக்கள் பிராணிகளின் சிரஸ்ஸில் வந்து பதுங்குமானால் மாணத்தைத் தெரிவிப்பதாகவாகும்.

(அ—கை) எறும்பின் சேஷ்டைகள் மூலமறியவேண்டிய சுபாசுபபலன்களை யுபதேசிக்கிறார்:—

विनिक्षिपन्त्यस्सलिलेऽण्डकानि पिपीलिका वृष्टिनिरोधमाहुः ।
तरुं स्थलं वापि नयन्ति निम्नाद्यदा तदा ताः कथयन्ति वृष्टिम् ॥

(க—ரை) பெண் எறும்புகள் தமது முட்டைகளை ஜலத்தில் (அதாவது: ஈரமுள்ளவிடத்தில்) கொண்டுபோய் வைக்குமானால் மழை பொழியாமையைத் தெரிவிப்பதாகவாகும். பெண் எறும்புகள் பள்ளத்தாக்கிலிருந்து தமது முட்டைகளை மரத்தின்மீதோ, உயரமான விடத்திலோ கொண்டுபோய்ச் சேர்க்குமானால் அப்பொழுது அவைகள் மழை பொழியப்போவதைத் தெரிவிப்பனவாகவாகும். (எ—று)

(அ—கை) சகுனத்தை நிச்சயிக்கவேண்டிய முறையை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ कार्यं तु मूलशकुनेऽन्तरजे तदह्नि
विन्द्यात्फलं नियतमेवमिमे विचिन्त्याः ।
प्रारंभयानसमयेषु तथा प्रवेशे
ग्राह्यं क्षुतं न शुभदं क्वचिदप्युशन्ति ॥ ६० ॥

(க—ரை) யாத்திரை செய்யும்பொழுது முதலிலுண்டாகின்ற சகுனத்தை யனுஸரித்தே கார்யஸித்தியையோ, அஸித்தியையோ நிர்ணயிக்க வேண்டும். அதாவது: முதலிலுண்டாகின்ற

சகுனம் சுபமானால் கார்யஸித்தியும், அசுபமானால் அஸித்தியு முண்டாகும். அதற்குப் பிறகு யாத்திரை தொடங்கினதுமுதல் முடிவுவரை யுண்டாகின்ற சகுனங்களின் பலன்கள் அதேதினத்தி லுண்டாகின்றன என்று அறியவேண்டும். ஒரு கார்யத்தைத் தொடங்கும்பொழுதும், யாத்திரை செய்யும்பொழுதும், வீட்டில் பிரவேசிக்கும்பொழுதும், இதுவரை சொல்லிய சகுனங்களைக் கவனிக்கவேண்டும். எச்சமயத்திலும் தும்மலைச் சிறந்ததாய் மஹருஷிகள் உபதேசிக்கவில்லை. அதாவது: தும்மல் மிகவுமசகுனம் என்று கருத்து. (எ—று)

(அ—கை) சகுனத்தைப் புகழவேண்டி அவற்றின் பலன்களை யுபதேசிக்கிறார்:—

**शुभं दशापाकमविघ्नसिद्धिं मूलाभिरक्षामथवा सहायान् ।**
**दुष्टस्य संसिद्धिमनामयत्वं वदन्ति ते मानयितुर्नृपस्य ॥ ६१ ॥**

(கூ—ரை) சகுனங்களை அசட்டை செய்யாது கவனிக்கின்ற அரசனுக்கு (மனிதனுக்கு) அவைகள் நல்லதசாபலனின் லாபத்தையும் (நல்ல தசாபுக்தி நடக்கும்பொழுதும் அசகுனத்தில் காரியத்தைத்தொடங்கினால் அது நிறைவேறாதென்றும், சகுனத்தையனுஸரித்தே தசாபுக்தி பலன்கள் நடக்கும் என்றும் கருத்து) நிர்விக்னமாய்க் கார்யம் நடைபெறுவதையும், முக்கியமான ஸ்தானத்தை (பொருளை) ரக்ஷிக்க வேண்டியதையும், மற்றவர்களின் ஸஹாயத்தையும், ஜயிக்கக்கூடாத சத்துருவும் சுகமாய் ஜயிக்கப் படுவதையும், ஆரோக்யத்தையும் தெரிவித்து அதற்குத் தக்கபடி முன் ஜாக்கிரதையுடன் நடக்குமாறு உபகரிக்கின்றன. (எ—று)

(அ—கை) கெட்ட சகுனத்தின் சப்தம் கேட்டால் செய்ய வேண்டியதை யுபதேசிக்கிறார்:—

**मू० ॥ क्रोशादूर्ध्वं शकुनविरुतं निष्फलं प्राहुरेके**
**तत्राऽनिष्टे प्रथमशकुने मानयेत्पञ्च षट् च ।**
**प्राणायामान्नृपतिरशुभे षोडशैव द्वितीये**
**प्रत्यागच्छेत्स्वभवनमतो यद्यनिष्टस्तृतीयः ॥ ६२ ॥**

(க—ரை) சில ஆசிரியர்கள் யாத்திரை செய்யத்தொடங்கி ஒருமயில் தூரம் சென்றபிறகு ஏற்படுகின்ற சகுனங்களின் சப்தங்கள் பயனற்றவைகளாக வாகின்றன வென்கின்றனர். முதலிலுண்டாகின்ற சகுனம் கெட்டதாக விருக்குமானுல் * 11 பிராணுயாமங்களைச் செய்துவிட்டு பிறகு யாத்திரை செய்தால் கெடுதலுண்டாகாது. இரண்டாம் தடவையாக யாத்திரை செய்யும்பொழுதும் கெட்டசகுனமுண்டானுல் 16 பிராணுயாமம் செய்யவேண்டும். மூன்றும் தடவை யாத்திரை செய்யும்பொழுதும் கெட்டசகுனமே ஏற்படுமானுல் வீட்டிற்கு திரும்பி வந்துவிடவேண்டும். (எ—று)

பத்தாவது வாயஸவிருதாத்தியாயம் முற்றிற்று.

---

## பதினேன்ருவது சாகுனோத்தராத்தியாயம்.

(அ—கை) சகுனபலனை யுபதேசிக்கவேண்டிய முறை இவ்வத்தியாயத்தில் கூறப்படுகின்றது.

**மூ॰ ॥ दिग्देशचेष्टास्वरवासरर्क्षमुहूर्तहोराकरणोदयांशान् ।
चरस्थिरोन्मिश्रबलाबलं च बुध्वा फलानि प्रवदेद्गतज्ञः॥**

(க—ரை) கிழக்குமுதலிய திக்குகள் பொதுவிதியிற் 12-வது சுலோகத்திற் கூறிய அங்காரிதை முதலிய திக்குகள், சகுனம் வஸிக்கின்ற இடம், அதனுடைய செய்கைகள், அதனுடைய சாந்தமாகவோ, தீப்தமாகவோ இருக்கின்ற சப்தம், கிரஹங்களின் சாரவசத்தால் சுபமாகவோ, அசுபமாகவோ இருக்கின்ற தினம், நக்ஷத்திர கர்மகுணுத்தியாயம் என்ற 97-வது அத்தியாயத்தில் கூறப்படுகின்ற துருவம், மிருது, தாருணம், க்ஷிப்ரம், உக்கிரம், சரம், ஸாதாரணம் என்ற நக்ஷத்திரங்கள், சிவம் முதலிய முஹூர்த்தங்கள், ஹோரை (ராசியின் பாதிபாகம்,) 99-வது அத்தியாயமான கரணகுணுத்தியாயத்தில் சொல்லப்படுகின்ற வவம் முதலிய

---

* பிராணுயாமம் செய்யவேண்டிய முறையை நமது ஸந்த்யாவந்தன மொழிபெயர்ப்பிற் காண்க.

காரணங்கள், சகுனமுண்டாகின்ற லக்கினம், திரேஷ்காணம், நவாம்சம், துவாதசாம்சம், த்ரிம்சாம்சம் முதலியன; மேஷம், கடகம், துலாம், மகரம் என்ற சரலக்கினங்கள்; விருஷபம், ஸிம்ஹம், விருச்சிகம், கும்பம் என்ற ஸ்திரலக்கினங்கள்; மிதுனம், கன்னி, தனுஸ், மீனம் என்ற உபயலக்கினங்கள் இவற்றினுடையவும், பலாபலத்தை அறிந்து சகுனத்தின் சப்தத்தை யறிந்தவன் அதன் பலனை யுபதேசிக்கவேண்டும். (எ—று)

(அ—கை) சகுனத்தின் பிரிவை யுபதேசிக்கிறார்:—

**द्विविधं कथन्ति संस्थितानामागामिस्थिरसंज्ञितं च कार्यम् ।**
**नृपदूतचरान्यदेशजातान्यभिघातः स्वजनादिचाऽऽगमाख्यम् ॥**

(க—ரை) சகுனமுண்டாகின்ற விடத்திலிருக்கின்ற புருஷர்களுக்கு சகுனபலன் ஆகாமி (வரப்போகின்றது) ஸ்திரம் (நடந்தது, நடக்கின்றது) என்று இருவகையாய்ப் பிரிந்ததாகவாகும். அதாவது: சகுனபலன் ஆகாமி, ஸ்திரம் என்று இருவகைப்படும். சகுனங்கள் மூலம், அரசன், தூதன் (கடிதம்) ரஹஸ்ய போலீஸ், அயல்தேசம் இவற்றிலுண்டானவைகளையும் கஷ்டத்தையும், தனது பந்து மித்திராதிகளின் வரவையும், வந்தவர்களின் பெயர்களையும் கண்டறியலாமென்றும் மஹருஷிகளுபதேசிக்கின்றனர். (எ—று)

(அ—கை) இந்த விதமான சகுனபலன் வரப்போகின்றது, இந்தவிதமான சகுனபலன் நடந்தோ நடக்கின்றதாகவோ இருக்கின்றது என்பதை யறிவதற்குறிய உபாயத்தை யுபதேசிக்கிறார்:—

**मू० ॥ उद्बद्धसंग्रहणभोजनचोरवह्नि**
**वर्षोत्सवाऽऽत्मजवधाः कलहो भयं च ।**
**वर्गस्स्थिरोऽयमुदयेन्दुयुते स्थिरर्क्षे**
**विन्द्यात्स्थिरं चरगृहे च चरं यदुक्तम् ॥ ३ ॥**

(க—ரை) போக்குவரத்து அற்ற (அதாவது: அசைவற்ற) பொருள், ஒருவனுடன் சேர்க்கை, போஜனம், திருடன், நெருப்பு, மழை, விவாஹம் முதலிய சுபகாரியம், பிள்ளை, மரணம், சண்டை, பயம் என்ற பலன்கள் அசைவற்றதான விடத்திலிருக்

கின்றதாயும், ஸ்திரராசியிலும், சந்திரன் ஸ்திரராசியி லிருக்கும் பொழுது மேற்பட்டதாயுமிருக்கின்ற சகுனத்தால் சூசிப்பிக்கப் பட்டனவாக வாகுமானல் அவற்றை ஸ்திரம் (அதே தினத்தில் நடக்கின்றதாகவோ, நடந்ததாகவோ இருக்கின்றது) என்று அறியவேண்டும். மேற்கூறிய பலன்களே அசைவுள்ள ஸ்தானத் திலிருக்கின்றதாயும், சரராசியிலும், சந்திரன் சரராசியிலிருக்கும் பொழுது மேற்பட்டதாயு மிருக்கின்ற சகுனத்தால் சூசிப்பிக்கப் பட்டனவாக வாகுமானல் சரம் (வரப்போகின்றது) என்று அறியவேண்டும். (எ—று)

(அ—கை) ஸ்திரம், சரம் இவற்றின் ஸ்வரூபத்தை யுபதேசிக் கிருர்:—

**स्थिरप्रदेशोपलमन्दिरेषु सुरालये भूजलसन्निधौ च ।**
**स्थिराणि कार्याणि चराणि यानि चलप्रदेशादिषु चागमाय ॥**

(க—ரை) அசைவற்றதானவிடம், பாருங்கல், வீடு, கோயில், பூமி, ஜலஸமீபம், இவ்விடங்களில் சகுனங்கள் ஏற்படுமானல் சகுனபலன் ஸ்திரம் (அதே தினத்தில் நடக்கின்றது அல்லது நடந்துவிட்டது) என்று அறியவேண்டும். சகுனம் அசைவுள்ள விடத்திலிருக்கின்றதாக வாகுமானல் சகுனபலன் 15 தினங்க ளுள் ஏற்படப்போவதா யறியவேண்டும். (எ—று)

(அ—கை) மழையைத் தெரிவிக்கின்ற சகுனத்தை யுபதேசிக் கிருர்:—

**आप्योदयर्क्षक्षणदिग्जलेषु पक्षावसानेषु च ये प्रदीप्ताः ।**
**सर्वेऽपि ते वृष्टिकरा रुवन्तः शान्तोऽपि वृष्टिं कुरुतेऽबुचारी ॥**

(க—ரை) ஜலராசியான கடகம்,மகரம்,மீனம் என்ற ராசிகள், ஜலநக்ஷத்திரமான பூராடம், சதயம் என்ற நக்ஷத்திரங்கள், மேற் குதிக்கு, ஜலஸமீபம் இவற்றிலும், அமாவாஸ்யா, பௌர்ணமாஸ் யா என்ற திதிகளிலும் ஸம்பந்தித்ததா யிருந்துகொண்டு எந்த சகுனங்கள் பொதுவிதி 15-வது சுலோகத்திற் சொல்லியபடி தேவதீப்தமாகவோ, கிரியாதீப்தமாகவோவாகி கத்துகின்றன வோ, அவைகள் யாவும் மழைபொழியப்போவதைத் தெரிவிப்

பனவாகவாகும். ஜலத்தில் சஞ்சரிக்கின்ற சகுனங்கள் சாந்தமாகவே மேற்கூறிய கடகலக்கினம் முதலியவற்றின் சம்பந்தத்தை யடைந்தாலும், மழை பொழியப்போவதைத் தெரிவிப்பனவாகவாகும். (எ—று)

(அ—கை) அக்கினி பயத்தைத் தெரிவிக்கின்ற சகுனங்களின் ஸ்வரூபத்தை யுபதேசிக்கிறார்:—

**आग्नेयदिग्लग्नमुहूर्तदेशेष्वर्कप्रदीप्तोऽग्निभयाय रौति ।**
**विष्ट्यां यमर्क्षोदयकण्टकेषु निष्पत्रवल्लीषु च दोषकृत्स्यात् ॥**

(க—ரை) தென்கிழக்கு திக்கு, குரூராராசிகளான மேஷம், ஸிம்ஹம், விருச்சிகம், மகரம், கும்பம் என்ற ராசிகள், அக்கினி என்ற முஹூர்த்தம், (அக்னி பஞ்சகமுள்ள முஹூர்த்தம்) அக்கினி நக்ஷத்திரமான கிருத்திகை, அக்கினி ஸமீபமானவிடம், இவற்றுடன் ஸம்பந்தித்த சகுனமானது ஸூர்யனைப் பார்த்துக் கொண்டு கத்துமானல் அக்கினிபயத்தைத் தெரிவிப்பதாகவாகும். விஷ்டி என்ற கரணம், சனியின் கிருஹமான மகரகும்ப ராசிகள், முள்ளுகள், இலையற்ற கொடிகள் இவற்றுடன் ஸம்பந்தித்த சகுனங்கள் ஸூர்யனைப் பார்த்துக்கொண்டு கத்துமானல் கெடுதலைத் தெரிவிப்பதாகவாகும். (எ—று)

(அ—கை) கலஹத்தை ஸூசிப்பிக்கின்ற சகுனங்களின் ஸ்வரூபத்தை யுபதேசிக்கிறார்:—

**ग्राम्यः प्रदीप्तः स्वरचेष्टिताभ्या मुग्रो रुवन्कण्टकिनि स्थितश्च ।**
**भौमर्क्षलग्ने यदि नैर्ऋतीं च स्थितोऽभितश्चेत्कलहाय दृष्टः ॥**

(க—ரை) கிராமத்தில் வஸிக்கின்ற சகுனமானது பொதுவிதியிற் கூறியபடி ஸ்வரம், சேஷ்டை இவைகளால் தீப்தமாகவாகி தென்மேற்கு திக்கில் முள்ளுள்ள மரத்திலிருந்து கொரமாய்க் கத்திக்கொண்டு மகரம், கும்பம் என்ற லக்கினங்களிலுதயத்தை யடைவதுடன் நேரிலும், வலது இடது பக்கங்களிலும் காணப்பட்டால் கலஹத்தைத் (சண்டையை) தெரிவிப்பதாகவாகும்.

(அ—கை) ஸ்திரீயுடன் சேர்க்கையைத் தெரிவிக்கின்ற சகுனத்தின் ஸ்வரூபத்தை யுபதேசிக்கிறார்:—

**लग्नेऽथवेन्दोर्भृगुभांशसंस्थे विदिक्स्थितोऽधोवदनश्च रौति ।**
**दीप्तस्सचेत्संग्रहणं करोति योऽन्या तया या विदिशिप्रदिष्टा ॥**

(க—ரை) சகுனமானது சந்திரனுடைய லக்கினமான கடகத்தில் சுக்கிரனுடைய அம்சமான துலாநவாம்சத்திலுதயமடைந்து மூலைதிக்கி லிருந்துகொண்டு கீழ் நோக்கின முகத்துடன் பொதுவிதியிற் கூறியபடி கிரியாதீப்தமாகவும், ஸ்தானதீப்தமாகவுமாகிகத்துமானுல் பொதுவிதியில் 79-வது சுலோகத்தில் எந்த மூலை திக்கிற்கு எந்தவிதமான ஸ்திரீ உரியவள் என்று கூறப்பட்டிருக்கிருளோ அவளுடன் சேர்க்கை யுண்டாகும். (எ—று)

(அ—கை) மேற்கூறிய விஷயமாகவே மறுபடியு முபதேசிக்கிருர்:—

**पुंराशिलग्ने विषमे तिथौ च दिक्स्थः प्रदीप्तश्शकुनो नराख्यः।**
**वाच्यं तदा संग्रहणं नराणां मिश्रे भवेत्षण्ढकसंप्रयोगः ॥ ९ ॥**

(க—ரை) புருஷராசியான மேஷம், மிதுனம், ஸிம்ஹம், துலாம், தனுஸ், கும்பம் என்ற ராசியிலும், ஒத்தைப்பட்ட திதியான பிரதமை, திருதீயை, பஞ்சமீ, ஸப்தமீ, நவமீ, ஏகாதசீ, திரயோதசீ, அமாவாஸ்யை, பௌர்ணமாஸ்யை என்ற திதியிலும், கிழக்கு,தெற்கு,மேற்கு, வடக்கு என்ற மஹாதிக்குகளிலும் உதயமடைந்த புருஷரூபமான சகுனங்கள் கிரியா தீப்தமாகவோ, தேவதீப்தமாகவோ வாகுமானுல் புருஷர்களுடன் சேர்க்கையைத் தெரிவிப்பதாகவாகும். மேற்கூறிய திதி லக்கினுதிகளுள் லக்கினம் புருஷனுகவும், திதி இரட்டைப்பட்டதாகவு மிருக்கும்பொழுது சகுன முதயமாகுமானுல் நபும்ஸகனுடன் சேர்க்கை யுண்டாகும். (எ—று)

(அ—கை) ஒருவனுடன் சேர்க்கையைத் தெரிவிக்கின்ற சகுன விஷயமாய் மறுபடியு முபதேசிக்கிருர்:—

**एवं रवेः क्षेत्रनवांशलग्ने लग्ने स्थिते वा स्वयमेव सूर्ये ।**
**दीप्तोऽभिधत्ते शकुनो विरौति पुंसः प्रधानस्य हि कारणं तत् ॥**

(க—ரை) ஸூர்யனுடைய ராசியான ஸிம்ஹத்திலோ, ஸூர்ய நவாம்சத்திலோ, ஸூர்யன் வஸிக்கின்ற லக்கினத்திலோ

உதயமடைந்த சகுனமானது பொதுவிதியில் 15-வது சுலோகத்திற் சொல்லியபடி தேவ தீப்தமாகவோ, கிரியா தீப்தமாகவோவாகி சுத்தமானுல் பிரதான புருஷனுடன் சேர்க்கையைத் தெரிவிப்பதாகவாகும். (எ—று)

(அ—கை) செய்கின்ற காரியம் சுபமாகுமா? அசுபமாகுமா? என்பதை அறிவதற்குரிய வேறு உபாயத்தை உபதேசிக்கிருர்:—

**மூ॰॥ प्रारभ्यमाणेषु च सर्वकार्येष्वर्कान्विताद्गाद्गणयेद्विलग्नम्।**
**संपद्विपच्चेति तथा क्रमेण संपद्विपच्चेति तथैव वाच्या ॥**

(க—ரை) எந்தக் கார்யத்தை எந்த லக்கினத்தில் செய்யவாரம்பிக்கிருனே அந்த லக்கினம்வரை ஸூர்யனிருக்கின்ற லக்கினம் முதல் ஸம்பத், விபத் என்று திருப்பித்திருப்பி எண்ணவேண்டும். அதாவது: ஸூர்யனிருக்கின்ற லக்கினம் ஸம்பத் என்றும், அதற்கு இரண்டாவது விபத் என்றும், அதற்கு மூன்ருவது ஸம்பத் என்றும் கணக்கிடவேண்டும். இவ்விதம் கணக்கிடும்பொழுது கார்யத்தை ஆரம்பித்த லக்கினம் ஸம்பத்தாக வருமானுல் ஆரம்பித்த காரியம் நன்மையைப் பயக்குமென்றும், விபத்தானுல் கெடுதலைப் பயக்குமென்றும் கண்டறியவேண்டும். (எ—று)

(அ—கை) சகுனமூலம் ஒருமனிதனின் வரவை யறியலாமென்று உபதேசிக்கப்பட்டது. அவ்விதம் வரப்போகின்ற மனிதனின் ஸ்வரூப மித்தகையதாக விருக்கும் என்பதை அறிவதற்குரிய உபாயத்தை யுபதேசிக்கிருர்:—

**काणेनाक्ष्णा दक्षिणेनैति सूर्ये चन्द्रे लग्नाद्द्वादशे चेतरेण।**
**लग्नस्थेऽर्के पापदृष्टेंध एव कुब्जस्स्वर्क्षे श्रोत्रहीनो जडोवा ॥**
**क्रूरषष्ठे क्रूरदृष्टो विलग्नाद्यस्मिन्राशौ तद्गृहाङ्के व्रणोऽस्य।**
**एवं प्रोक्तं यन्मया जन्मकाले चिह्नं रूपं तत्तदस्मिन् विचिन्त्यम्॥**

(க—ரை) சகுனமுதயமடைந்த லக்கினத்திற்கு 12மிடத்தில் ஸூரியனிருந்தால் வரப்போகின்ற மனிதனுடைய வலதுகண் பொட்டையாகவிருக்கும். மேற்கூறிய 12 மிடத்தில் சந்திரனிருந்தால் இடதுகண் பொட்டையாக விருக்கும். 12 மிடத்தில்

சந்திரன் ஸூர்யன் இருவரு மிருந்தால் இரண்டு கண்ணும் பொட்டையாக விருக்கும். சூரியன் சகுனமுதயமான லக்கினத்திலிருந்தாலும், பொட்டையாகவே விருப்பான். ஸூரியன் சகுனமுதய மடையும்பொழுது ஸிம்ஹ ராசியிலிருந்தால் வரப்போகின்ற மனிதன் கூனியாகவோ, காது அற்றவனாகவோ, (செவிடாகவோ) மூடனாகவோ இருப்பான்.

சகுன முதயமடைந்த லக்கினத்தினின்றும் 6மிடத்தில் க்ரூரக்கிரஹமான சூரியன், செவ்வாய், சனி என்ற கிரஹங்களிருந்து அவைகள் க்ரூரக்கிரஹத்தால் பார்க்கவும் படுமானால் அந்த ஆறுமிடமான ராசி பிருஹத்ஜாதகம் முதலத்தியாயம் 4-வது சுலோகத்தில் கூறியபடி கால புருஷனுடைய எந்த அங்கமாக வாகின்றதோ அந்த அங்கத்தில் வரப்போகின்ற புருஷனுக்கு காயம்(வடு) இருக்குமென்று அறியவேண்டும். இவ்விதமே பிருஹத் ஜாதகம் 4வதான நிஷேகாத்தியாயத்தில் * 17, 18, 19, 20-வது சுலோகங்களால் எந்தெந்தவிதமான யோகங்களில் எந்தெந்தவிதமான அடையாளமுள்ள குழந்தை ஜனிக்குமென்று சொன்னோமோ, அந்த யோகங்கள் சகுனமுண்டாகும் ஸமயத்திலு மமையுமானால் அந்தந்தவிதமான அடையாள முள்ளவனாக வந்தவனிருப்பான் என்று கண்டுகொள்ள வேண்டும். (எ—று)

குறிப்பு—வராஹமிஹிராசாரியர் இந்த அத்தியாயம் 14-வது சுலோகம் முதல் 16-வது சுலோகம் முடியவுள்ள 3 சுலோகங்களால் வந்தவனுக்குப் பெயர் இன்னதென்பதை அறிதற்கு பாயத்தை யுபதேசிக்கப் போகின்றார். ஆயினும், ஆசிரியர் கூறுவது வெகு ஸ்வல்பமாயிருப்பதுபற்றி மந்த புத்திகளாற் சுலுவில் அறிந்துகொள்ள முடியாதெனக் கருதி பட்டோத்பலாசாரியர் போதியாத்திரை என்ற கிரந்தத்தில் யவனேசுவரரால் செய்யப்பட்ட அக்ஷரகோசம் என்ற பாகத்தை இங்கு எழுதி அதற்கு உரை எழுதுவதாகச் சொல்லியிருக்கிறார். ஆதலால் நாமும் அந்த அக்ஷரகோசாத்தியாயத்தை இங்கு எழுதி உரை எழுதுகிறோம். அங்கு அந்த அக்ஷரகோசாத்தியாயம் ப்ரச்ன விஷயமாக

* இதன் விரிவை நமது பிருஹத்ஜாதகமொழிபெயர்ப்பில் காண்க.

ஏற்பட்டிருப்பினும் அதைச் சகுனவிஷயத்திலும் பொருத்திக் கொள்ளலாமென்பதே பட்டோத்பலரின் கருத்து. (எ—று)

(அ—கை) முதன் முதலில் பிரயோஜனத்தை யுபதேசிக்க வேண்டி சொல்லுகிறார்—

மூ॥ अतः परं लोकनिरूपितानि द्रव्येषु नानाक्षरसंग्रहाणि ।
इष्टप्रणीतानि विभाजितानि नामानि केन्द्रक्रमशः प्रवक्ष्ये ॥१॥

(ப—ரை) **अतः**=இந்தப்ரச்ன க்ஞானத்திற்கு **परम्**=பிறகு **लोकनिरूपितानि**=ஜனங்களால் நிரூபிக்கப்பட்டதாயும், அதாவது:—ஸர்வலோகப் பிரசித்தங்களாயும் **द्रव्येषु**=தாது, மூலம், ஜீவன் என்றவைகள் விஷயத்தில் **नानाक्षरसंग्रहाणि**=பலவிதங்களான அக்ஷரங்களி (எழுத்துக்களி) னின்றும் ஸங்கிரஹிக்கப் பட்டவைகளாயும், அதாவது:—ஒன்று சேர்த்துக் கூறப்பட்டவைகளாயும், **इष्टप्रणीतानि**=இஷ்டர்களான அதாவது:—ஆப்தர்களான நாராயணன், அர்க்கன், வஸிஷ்டர், பராசரர், மயன் முதலியோர்களால் நிர்மாணஞ் செய்யப்பட்டவைகளாயும், **विभाजितानि**=அததற்குத் தக்கபடி பிரித்துக் காட்டப்பட்டவைகளாயுமான **नामानि**=பெயர்களை **केन्द्रक्रमशः**=1-4-7-10 என்ற முறையை யொட்டி **प्रवक्ष्ये**=சொல்லப்போகிறேன். (எ—று)

(தா—ம்) பிரச்னம் செய்தபின்னர் பிரச்னவிஷயமான தாது, மூலம் ஜீவன் இவற்றின் பெயர் இன்னதென அறியும் விஷயத்தில் ஸர்வலோகப் பிரசித்தங்களும் அனேகம் எழுத்துக்களை ஒன்று சேர்த்து அமைக்கப் பட்டவைகளும், நாராயணன், அர்க்கன், வஸிஷ்டர், பராசரர், மயன் முதலிய ஆப்தர்களால் ஏற்படுத்தப்பட்டவைகளும் அததற்குத் தக்கபடி பிரித்துக் காட்டப்பட்டவைகளுமான பெயர்களை பிரச்ன காலத்திலுதயமாகும் லக்கினம், அதற்கு 4மிடம், 7மிடம், 10மிடம் ஆகிய இந்த முறையைக் கொண்டு தெளிவாயுபதேசிக்கிறேன். (எ—று)

(அ—கை) கேந்திரக்கிரமத்தையறியும் முறையை இதனுலுபதேசிக்கிறார்—

மூ॥ लग्नांबुसंस्थाऽस्तनभःस्थितेषु क्षेत्रेषु ये लग्नगतागृहांशाः ।
तेभ्योऽक्षराण्यात्मगृहाश्रयाणि विन्द्याद्ग्रहाणां स्ववर्गक्रमेण ॥

(ப—ரை) लग्नांऽबुसंस्थाऽस्तनभःस्थितेषु = லக்கினம், 4மிடம் இவ்விடங்களிலுள்ளவைகளும், 7மிடம், 10மிடம், இவ்விடங்களிலுள்ளவ்வகளுமான क्षेत्रेषु=ராசிகளில் लग्नगता:=லக்னத்தையடைந்தவைகளான அதாவது:—லக்கினத்தைச் சேர்ந்தவைகளான ये= யாதொரு गृहांशा:=எந்த மேஷாதி ராசிகளின் நவாம்சங்களுண்டோ तेभ्यः=அந்த மேஷாதி ராசிகளின் நவாம்சங்களேக்கொண்டு आत्मगृहाश्रयाणि=அதனதன் சொந்த ராசியை ஆசிரயித்த (அததற்கேற்பட்ட) வைகளான अक्षराणि=அக்ஷரங்களே ग्रहाणाम्=சூரியன் முதலிய 7 கிரஹங்களுக்குரிய स्ववर्गक्रमेण=அடுத்த சுலோகத்தாற் சொல்லப்படும் அதனதன் அக்ஷரவர்க்கக் கிரமத்தையனுஸரித்து विन्द्यात्=அறிந்துகொள்ளவேண்டும். (எ—று)

(தா—ம்) பிரச்னகாலத்தில் உதயமானலக்னம் எதுவோ அந்தப்ரச்ன லக்கினம், அதற்கு 4மிடம், 7மிடம், 10மிடம் ஆகிய இந்த 4 ராசிகளிலும் ப்ரச்னலக்கினத்தைச் சேர்ந்த யாதொரு மேஷாதி நவாம்சங்களுண்டோ அந்த மேஷாதி நவாம்சங்களுக்கு சொந்த வீடான யாதொரு ராசியுண்டோ, அவற்றைக்கொண்டு அததற்கேற்பட்ட அக்ஷரங்களே 3-வது சுலோகத்தால் செவ்வாய், சுக்கிரன், புதன், குரு, சனி, சந்திரன், சூரியன் ஆகிய 7 கிரஹங்களுக்குச் சொல்லப்படும் அக்ஷரவர்க்கக் கிரமத்தை முன்னிட்டு உபதேசஞ்செய்திருக்கிறபடி அறிந்துகொள்ளவேண்டும். அதாவது: ப்ரச்னலக்னம் மேஷம் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது 1மிடமாக மேஷமும், அதற்கு 4மிடமாக கடகமும், 7மிடமாக துலாமும், 10மிடமாக மகரமும் வருகின்றன. இப்படி வருவதில் (1) மேஷம், (2) விருஷபம், (3) மிதுனம், (4) கடகம், (5) சிங்கம், (6) கன்னி, (7) துலாம், (8) விருச்சிகம், (9) தனுஸ் ஆகிய 9 நவாம்சங்களிருக்கின்றன. இவற்றுள் லக்கினமான மேஷத்தில் மேஷ நவாம்சமும், மேஷ லக்கினத்திற்கு 4மிடமான கடகத்தில் மேஷத்தின் 4-வது நவாம்சமும், மேஷத்திற்கு 7மிடமான துலாத்தில் 7-வது நவாம்சமும் வருகின்றன. மேஷத்தின் 10மிடமான மகரத்தில் மேஷநவாம்சம் கிடையா. ஆகவே மேஷம், கடகம், துலாம் இந்த 3ராசிகளிலும் மேஷத்தின் 1-வது நவாம்சம், 4-வது நவாம்சம், 7-வது நவாம்சம் இவைகள்

முறையே அமைகின்றன. இவ்விதம் அமைவதில் மேஷநவாம்சம் அமைந்துள்ள மேஷராசிக்கு செவ்வாய் அதிபதியாகிறான். மேஷத்தின் 4-வது நவாம்சமான கடக நவாம்சத்தின் சொந்த வீடு கடகராசியாகிறது. அதற்கு சந்திரன் அதிபதி. மேஷத்தின் 7-வது நவாம்சமான துலாத்திற்கு சொந்தவீடு துலாராசியே யாகிறது. அதற்கு சுக்கிரன் அதிபன். ஆகவே மேஷலக்ன மேஷாம்சமுதயமானால் மேஷராசிக்கு அதிபதியான செவ்வாயின் அக்ஷரமான க வர்க்க மென்றும், கடகாம்ச முதயமாகுமானால் கடகராசிக் கதிபதியான சந்திரனுடைய வர்க்கமான ய வர்க்க மென்றும் துலா முதயமானால் துலாராசிக்கதிபதியான சுக்கிரனுடைய வர்க்கமான ச வர்க்க மென்றும் நாமாக்ஷரங்களை யறியவேண்டும் என்பதாம். மற்றுமிதன் விசேஷத்தை 14-வது சுலோகந்தொடங்கி 29-வது சுலோகம் முடியவுள்ள 16 சுலோகங்களில் தெளிவாய் உபதேசிக்கப் போவதால் அவ்விடத்திற் கண்டுதெளிக. (எ—து)

(அ—கை) செவ்வாய், சுக்கிரன், புதன், குரு, சனி, சந்திரன், சூரியன் ஆகிய 7 கிரஹங்களுக்குரிய அக்ஷரவர்க்கக் கிரமம் இன்னதென்பதை முறையே யுபதேசிக்கிறார்:—

**மூ॰॥ कवर्गपूर्वान्कुजशुक्रचान्द्रिजीवार्कजानां प्रवदन्ति वर्गान्।**
**यकारपूर्वाश्शशिनो निरुक्ता वर्णास्त्वकारप्रभवा रवेः स्युः॥**

(ப—ரை) **कुजशुक्रचान्द्रिजीवार्कजानाम्** = செவ்வாய், சுக்கிரன், புதன், குரு, சனி இவர்களுக்கு **कवर्गपूर्वान्**=க வர்க்கத்தை முதலாவதாகவுடைய **वर्गान्**=அக்ஷர வகுப்புகளை **प्रवदन्ति**=சொல்லுகின்றனர். **शशिनः**=சந்திரனுக்கு **यकारपूर्वाः**=யகாரத்தை முதலாவதாகவுடைய வர்க்கங்கள் **निरुक्ताः**=சொல்லப்பட்டன. **रवेः**= சூரியனுக்கு **अकारप्रभवाः**=அ காரத்தை முதலாவதாகவுடைய வர்க்கங்கள் **स्युः**=(அக்ஷரங்களாக) ஆகின்றன.

(தா—ம்) **क, ख, ग, घ, ङ,** (க (1), க்க (2), க (3), க (4), ங இவைகள் செவ்வாயின் வர்க்கங்களாகும். அதாவது: செவ்வாயைக்கொண்டு பெயரைக் கண்டுபிடிக்கும்பொழுது மேற்கூறிய 5 எழுத்துக்களில் யாதானும் எழுத்துக்கள் அமைந்த பெயரென கண்டுகொள்ள வேண்டும் என்பதாம். இவ்விதமே மேலுள்ள

விடங்களிலும் காண்க. **च, छ, ज, झ, ञ** (ச (1), ச்ச (2), ஜ (3), ஜ்ஜ (4), ஞ) இவைகள் சுக்கிரனுடைய வர்க்கங்களாகும். **ट, ठ, ड, ढ, ण** (ட (1), ட்ட (2), ட (3), ட்ட (4), ண) இவைகள் புதனுடைய வர்க்கங்களாகும். **त, थ, द, ध, न** (த (1), த்த (2), த (3), த (4) ந) இவைகள் குருவினுடைய வர்க்கங்களாகும். **प, फ, ब, भ, म** (ப (1), ப்ப (2), ப (3), ப்ப (4), ம) இவைகள் சனியின் வர்க்கங்களாகும். **य, र, ल, व, श, ष, स, ह** (ய, ர, ல, வ, ஶ, ஷ, ஸ, ஹ) இவைகள் சந்திரனுடைய வர்க்கங்களாகும். **अ, आ, इ, ई, उ, ऊ, ए, ऐ, ओ, औ, अं, अः**, (அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஐ, ஒ, ஔ, அம், அ:) இவைகள் சூரியனுடைய வர்க்கங்களாகும். (எ—று)

(அ—கை) இனி ராசி மூலமாகவும், த்ரேஷ்காண மூலமாகவும் நாமாக்ஷரங்களின் எண்ணை அறிதற்குபாயத்தை உபதேசிக்கிருர்:—

**मू० ॥ द्रेष्काणवृद्ध्या प्रवदन्ति नाम त्रिपञ्चसप्ताक्षरमोजराशौ ।**
**युग्मे तु विन्याद्द्विचतुष्कषट्कं नामाक्षराणि ग्रहदृष्टिवृद्ध्या ॥ ४ ॥**

(ப—ரை) **ओजराशौ**=ஒற்றைப்பட்ட ராசியில் **द्रेष्काणवृद्ध्या**=த்ரேஷ்காணத்தின் விருத்தியைக் கொண்டு **नाम**=பெயரை **त्रिपञ्चसप्ताक्षरम्**=3, 5, 7 என்ற அக்ஷரமுள்ளதாக **प्रवदन्ति**=சொல்லுகின்றனர். **युग्मे**=இரட்டைப்பட்டராசி லக்னமாகும்பொழுதும் முற்கூறியபடி திரேஷ்காண விருத்தியைக்கொண்டு [**नाम**=பெயரை] **द्विचतुष्कषट्कम्**=2, 4, 6 என்ற எழுத்துள்ளதாக **विन्यात्**=அறியவேண்டும். ஆனல் [**तानि**=அந்த] **नामाक्षराणि**=பெயரிலமைந்துள்ள எழுத்துக்கள் **ग्रहदृष्टिवृद्ध्या**=சூரியாதி கிரஹங்களின் திருஷ்டி (பார்வை) யிலுள்ள விருத்தியை (பலாதிக்கியத்தை) யொட்டி ஏற்படும் என்றறியவேண்டும். (எ—று)

(தா—ம்) ஒற்றைப்பட்ட ராசியானது லக்கினமாகும்பொழுது அதில் முதலாவது திரேஷ்காண முதயமாகுமானல் பெயர் 3 எழுத்துள்ளதாக இருக்கும் என்றும், 2-வது திரேஷ்காணம் உதயமாகுமானல் பெயர் 5 எழுத்துள்ளதாக இருக்கும் என்றும், 3-வது திரேஷ்காண முதயமாகுமானல் பெயர் 7 எழுத்

துள்ளதாக இருக்கும் என்றும் கண்டுகொள்ள வேண்டும். அதாவது: மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுஸ், கும்பம் இவைகள் ஒற்றைப்பட்ட ராசிகளெனப்படும். மீதமுள்ள விருஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் இவை இரட்டைப் பட்ட ராசிகளெனப்படும். இவற்றுள் முற்கூறிய ஒற்றைப்பட்ட ராசிகளுள் மேஷம் உதயமானதாக எடுத்துக்கொண்டால் மேஷத்திற்கு முதல் திரேஷ்காணம் மேஷமே. இரண்டாவது திரேஷ்காணம் சிங்கமாகும். மூன்றாவது திரேஷ்காணம் தனுஸ்ஸாகும். இவ்விதமே மிதுனம் லக்கினமானால் மிதுனமே முதல் திரேஷ்காணமாகவும், துலாம் 2-வது திரேஷ்காணமாகவும், கும்பம் 3-வது திரேஷ்காணமாகவும் ஆகும். சிங்கத்திற்கு 1-வது திரேஷ்காணம் சிங்கம், 2-வது திரேஷ்காணம் தனுஸ், 3-வது திரேஷ்காணம் மேஷம் ஆகும். இவ்விதமே மேலுள்ள விடங்களிலும் அந்தராசி 1-வது திரேஷ்காணமென்றும், அதற்கு 5-வது ராசி 2-வது திரேஷ்காணமென்றும், 9-வது ராதி 3-வது திரேஷ்காணமென்றும், பிரித்தறிந்து கொள்ளவும். இவ்விதமே, இரட்டைப் பட்ட 6 ராசிகளுள் விருஷபம் உதயமாகி அதன் 1-வது திரேஷ்காணமான விருஷபத்ரேஷ்காணம் உதயமாகுமானால் அப்பொழுது பெயர் 2 எழுத்துள்ளதென்றும், விருஷபத்தின் 2-வது திரேஷ்காணமான கன்னித்ரேஷ்காண முதயமாகுமானால் அப்பொழுது பெயர் 4 எழுத்துள்ளதாக இருக்கும் என்றும், விருஷபத்தின் 3-வது திரேஷ்காணமான மகரத்ரேஷகாணம் உதயமாகுமானால் பெயர் 6 எழுத்துள்ளதாக இருக்கும் என்றும் கண்டுகொள்ள வேண்டும். ஆனால் இதுவரை சொன்னதைக் கொண்டு ஒற்றைப்பட்ட ராசியிலோ, இரட்டைப்பட்ட ராசியிலோ உதயமான திரேஷ்காண விருத்தியைக் கொண்டு பெயரில் இவ்வளவு இவ்வளவு அக்ஷரவிருத்தி (பெருக்கு) ஏற்படும் என்று மட்டும் உபதேசிக்கப்பட்டதாக ஏற்பட்டது. ஆயினும், இந்த சாஸ்திரமானது உதயலக்கினம், அதற்கு 4,7,10 ஆகிய விடங்களிலுள்ள ராசிகளைக்கொண்டும், அக்ஷரங்களைக் கண்டுபிடிக்கும் முறையை உபதேசிக்கத் தொடங்கியிருக்கிறது. ஆகவே, கிரஹங்களின் ஸ்திதியோகம், திருஷ்டியோகம் என இரண்டுவித யோகங்

களைக்கொண்டு இந்த சாஸ்திரப்பிரவிருத்தி ஏற்படுவதாக இருக்கின்றது. அவ்வித மிருந்தபோதிலும், கிருஹங்களின் ஸ்திதியோகத்தை (அந்தந்த 1-4-7-10 இந்த ராசிகளிலிருப்பதை) விட்டு அந்தந்த விடத்தைப்பார்த்தல் என்ற திருஷ்டியோக விருத்தியைக் கொண்டே முக்கியமாய் அக்ஷரவிருத்திகளை ஊஹித்தறிய வேண்டும். திருஷ்டியோக விருத்தியாவது 3-10 மிடங்களை கால் பார்வையாகப் பார்ப்பதில் சனியும், 5-9 மிடங்களை அரைப்பார்வையாகப் பார்ப்பதில் குருவும், 4-8 மிடங்களை முக்கால் பார்வையாகப் பார்ப்பதில் செவ்வாயும், 7 மிடத்தை முழுப்பார்வையாகப் பார்ப்பதில் மீதமுள்ள சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன் இவர்களும் முறையே வலுவு பெற்றவர்கள் என பிருஹத்ஜாதகம் 2-வது அத்தியாயம் *13-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, கிருஹ திருஷ்டி யோக விஷயமான பலாபலத்தையும் கண்டறிந்துகொண்டு பெயரிலுள்ள அக்ஷரங்களின் விருத்தியை (பெருக்கை) யும் கண்டறிய வேண்டும். (எ—று)

(அ—கை) நவாம்சமூலம் பெயரிலுள்ள எழுத்துக்களின் எண்களை அறிதற்குபாயத்தை யுபதேசிக்கிறார்:—

मू०॥ वर्गोत्तमे द्व्यक्षरकं चरांशे स्थिरर्क्षभागे चतुरक्षरं तत्।
ओजेषु चैभ्योविषमाक्षराणि स्युर्द्विस्वभावेषु तु राशिवच्च ॥५॥

(ப—ரை) [समराशौ=இரட்டைப்பட்ட ராசியில்] वर्गोत्तमे= வர்க்கோத்தமம்பெற்ற चरांशे=சர நவாம்சத்தில் பிரச்னம் ஏற்பட்டால் [नाम=ப்ரச்னப் பெயரானது] द्व्यक्षरकम्=இரண்டு எழுத்துள்ளதாக [स्यात्=இருக்கும்] स्थिरर्क्षभागे=ஸ்திர ராசியின் வர்க்கோத்தமம் பெற்ற ஸ்திர நவாம்சத்தில் ப்ரச்னம் ஏற்பட்டால் तत्=அந்த ப்ரச்னப் பெயரானது चतुरक्षरम्=நான்கு எழுத்துள்ளதாக [भवेत्=ஆகும்] ओजेषु च=ஒற்றைப்பட்ட ராசிகளிலுள்ள एभ्यः = இந்த வர்க்கோத்த மாம்சங்களைக்கொண்டு [नामानि = பெயர்கள்] विषमाक्षराणि=ஒற்றைப்பட்ட எழுத்துள்ளவைகளாக स्युः=இருக்கும். द्विस्वभावेषु च=உபயராசிகளில் வர்க்கோத்தமாம்

* இந்த சுலோகத்திலுள்ள விசேஷார்த்தத்தை நமது பிருஹத் ஜாதக தமிழ் மொழிபெயர்ப்பில் காண்க,

சம் ப்ரச்ன லக்னமானல் राशिवत्=ராசிக்கொப்பாகவே பெயர் இருக்கும். (எ—று)

(தா—ம்) சரம், ஸ்திரம், உபயம் என ராசிகள் மூன்றுவிதமாகப் பிரிக்கப்படும். அவற்றுள் மேஷம், கடகம், துலாம், மகரம் இவைகள் சரராசிகளென்றும், விருஷபம், சிம்மம்,விருச்சிகம், கும்பம் இவைகள் ஸ்திரராசிகளென்றும், மிதுனம், கன்னி, தனுஸ், மீனம், இவைகள் உபயராசிகளென்றும் சொல்லப்படும். இவற்றுள் மேஷத்திற்கு மேஷ நவாம்சமும், கடகத்திற்கு கடக நவாம்சமும், துலாத்திற்குத் துலா நவாம்சமும், மகரத்திற்கு மகர நவாம்சமும் வர்க்கோத்தம நவாம்சங்களாகும். இவ்விதமே விருஷபத்திற்கு விருஷப நவாம்சமும், சிம்மத்திற்கு சிம்ம நவாம்சமும், விருச்சிகத்திற்கு விருச்சிக நவாம்சமும், கும்பத்திற்கு கும்ப நவாம்சமும், வர்க்கோத்தம நவாம்சங்களாகின்றன. இவ்விதமே மிதுனத்திற்கு மிதுன நவாம்சமும், கன்னிக்கு கன்னி நவாம்சமும், தனுஸ்ஸுக்கு தனுர் நவாம்சமும், மீனத்திற்கு மீன நவாம்சமும், வர்க்கோத்தம நவாம்சங்களென பிருஹத்ஜாதகம் 1-வது அத்தியாயம், 14-வது சுலோகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சுலோகத்தில் உத்தரார்த்தத்தில் ஓஜேஷு என்று சொல்லப்பட் டிருப்பதால் இவ்விடத்தில் ஸமராசி அதாவது: இரட்டைப்பட்ட ராசியெனப் பொருள் கொள்ளவேண்டியதாக ஏற்படுகின்றது. ஆகவே இரட்டைப்பட்ட ராசிகளான சரராசிகளில் அதாவது:—கடகம், மகரம் இந்த ராசிகளில் வர்க்கோத்தமமான கடகாம்சமும்,மகராம்சமும் முறையே உதயமாகுமானல் பிரச்னப்பெயரானது இரண்டெழுத்துள்ளதாக விருக்கும் என்றறியவேண்டும். இரட்டைப்பட்ட ஸ்திரராசிகளான விருஷபம், விருச்சிகம், இவற்றுள் ஒன்று ப்ரச்னலக்னமாகவாகி அவற்றின் ஸ்திராம்சம் வர்க்கோத்தமாம்சமாக ஆகுமானல் அதாவது: விருஷபம்,விருச்சிகம்,இந்த வர்க்கோத்தமாம்சங்களுதயமாகுமானல் அப்பொழுது ப்ரச்னப்பெயர் நான்கு அக்ஷரங்களுள்ளதாக இருக்கும். இவ்விதமே ஒற்றைப்பட்ட சரராசிகளான மேஷம், துலாம் இவற்றுள் ஒன்று ப்ரச்னலக்னமாகவாகி அதில் சரநவாம்சமான மேஷம், துலாம் இவை முறையே உதயமாகுமானல் அப்பொழுது

ப்ரச்னப்பெயர் மூன்று எழுத்துள்ளதாக இருக்கும். அதே சர ராசியில் ஸ்திராம்ச முதயமாகுமானல் அதாவது: மேஷலக்கினத்தின் விருஷபம், சிம்மம், விருச்சிகம் இந்த நவாம்சங்கள் உதயமாகுமானலும், துலாலக்கினத்தின் விருச்சிகம், கும்பம், விருஷபம் இந்த நவாம்ச முதயமாகுமானலும் ப்ரச்னப்பெயரானது ஐந்து எழுத்துள்ளதாகவே இருக்கும் என்பதாம். இதுபோலவே ஒற்றைப்பட்ட உபயராசிகள் ப்ரச்னலக்னங்களாகி அதாவது: மிதுனம், தனுஸ், இவைகளுள் ஒன்று ப்ரச்னலக்னமாகவாகி அவற்றுள் ஒற்றைப்பட்ட நவாம்சம் உதயமாகுமானல் அதாவது: மிதுனத்திற்கு மிதுனம்சமும், தனுஸ்ஸிற்கு தனுரம்சமும் வர்க்கோத்தமாம்ச மாகுமாதலால் அந்த மிதுன, தனுர் நவாம்சங்கள் உதயமாகுமானல் அப்பொழுது ப்ரச்னப்பெயர் மிதுனமானல் மூன்று எழுத்துள்ளதாகவும், தனுஸ்ஸானல் ஏழு எழுத்துள்ளதாகவும் முறையே இருக்கும் என்றறிய வேண்டும். இவ்விதமே உபயராசிகளில் இரட்டைப்பட்ட ராசிகளான அதாவது: கன்னி, மீனம், இந்த ராசிகளில் இரட்டைப்பட்ட நவாம்சமான கன்னி, மீனம் இந்த நவாம்சங்களுதய மாகுமானல் அப்பொழுது ப்ரச்னப்பெயர் கன்னியானல் நான்கு அக்ஷரமுள்ளதாகவும், மீனமானல், ஆறு அக்ஷரமுள்ளதாகவும் இருக்கும் என்றறிய வேண்டும். ஒற்றைப்பட்ட ராசிகளிலோ, அல்லது இரட்டைப்பட்ட ராசிகளிலோ உள்ள வர்க்கோத்தமாம்சமானது அந்தந்த ராசிகளின் எந்தத் திரேஷ்காணபாகத்தில் இருக்கின்றதோ அதன் மூலம் ப்ரச்னப்பெயரைச் சொல்லவேண்டும் என்றேற்பட்டது. அதாவது: ஒற்றைப்பட்ட சரராசியான மேஷத்திற்கு முதலாவது திரேஷ்காணம் மேஷமாகவும், இரண்டாவது திரேஷ்காணம் சிம்மமாகவும், மூன்ருவது தனுஸ்ஸாகவும் ஆகின்றது. வர்க்கோத்தமாம்சமான மேஷ நவாம்சமும், முதல் திரேஷ்காணத்திலேயே இருக்கிறது. ஆகவே வர்க்கோத்த மாம்சமிருக்கும் முதல் திரேஷ்காணத்திற்குச் சொல்லிய பிரச்னப்பெயரின் அக்ஷரத்தை மூன்றெனச் சொல்லவேண்டியதாகிறது. துலாத்திற்கும் இவ்விதமே காண்க. இரட்டைப்பட்ட ஸ்திரராசியான விருஷபத்திற்கு விருஷபம், கன்னி, மகரம் இவைகள் முறையே

மூன்று திரேஷ்காணங்களாகின்றன. விருஷபத்தின் வர்க்கோத்தமாம்சமான விருஷப நவாம்சமானது 2வதான கன்னித்ரேஷ்காணத்தில் வருவதால் அதைக்கொண்டு ப்ரச்னப்பெயரின் எழுத்தை நான்கு அக்ஷரமுள்ளதாகச் சொல்லவேண்டுவதாக வருகின்றது. இவ்விதமே ஒற்றைப்பட்ட உபயராசியான மிதுனத்திற்கு மிதுனம், துலாம், கும்பம் இவைகள் முறையே மூன்று திரேஷ்காணங்களாகின்றன. மிதுனத்திற்கு வர்க்கோத்தம நவாம்சமான மிதுனமானது 3-வது திரேஷ்காணமான கும்பத்தில் வருகின்றது. ஆகவே ப்ரச்னப்பெயரின் அக்ஷரங்களை மூன்றென அதைக்கொண்டு சொல்லவேண்டும் என்றேற்படுகின்றது. ஒற்றைப்பட்ட உபயராசியான தனுஸ்ஸிற்கு, தனுஸ், மேஷம், சிம்மம் இவைகள் திரேஷ்காணங்களாகின்றன. தனுஸ்ஸிற்கு வர்க்கோத்தமாம்சமான தனுர் நவாம்சமானது 3-வது திரேஷ்காணமான ஸிம்மத்தில் வருகின்றது. ஆகவே ப்ரச்னப்பெயரின் அக்ஷரத்தை ஏழு அக்ஷரமுள்ளதெனச் சொல்லவேண்டி வருகின்றது. இவ்விதமே இரட்டைப்பட்ட உபயராசிகளான கன்னி. மீனம் இவைகளுள் கன்னி ப்ரச்ன லக்னமாகும்பொழுது கன்னிக்கு கன்னி, மகரம், விருஷபம் இவைகள் திரேஷ்காணங்களாகின்றன. இவற்றுள் கன்னியின் வர்க்கோத்தம நவாம்சமான கன்னியம்சமானது 3-வது திரேஷ்காணமான விருஷபத்தில் வருவதால் ப்ரச்னப்பெயரின் அக்ஷரத்தை 4 அக்ஷரமுள்ளதெனச் சொல்லவேண்டி வருகின்றது. இவ்விதமே மீனத்திற்கு மீனம், கடகம், விருச்சிகம் இவைகள் திரேஷ்காணங்களாகின்றன. மீனத்தின் வர்க்கோத்தம நவாம்சமான மீனமானது 3-வதான விருச்சிக திரேஷ்காணத்தில் வருகிறது. ஆகவே ப்ரச்னப் பெயரின் எழுத்து ஆறு அக்ஷரமுள்ளதெனச் சொல்லவேண்டி வருகின்றது.

(அ—கை) இதுவரை சொல்லியவற்றிலேயே மற்றும் சில விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

மூ॥ द्विमूर्तिसंज्ञे तु वदेद्द्विनाम सौम्येक्षिते द्विप्रकृतौ चराशौ।
यावान्गणः स्वोदयगोंशकानां तावान्ग्रहः संग्रहकेऽक्षराणाम्॥

(ப—ரை) द्विमूर्तिसंज्ञे तु=உபயராசி ப்ரச்ன லக்னமானால் द्वि-नाम=இரண்டு பெயரை वदेत्=சொல்லவேண்டும். द्विप्रकृतौ=உபய

மான **राशौ**=ராசியானது **सौम्येक्षिते च**=புதனால் பார்க்கப்பட்டாலும் இரண்டு பெயரையே சொல்லவேண்டும். **अंशकानाम्**=அம்சங்களுடைய **यावान्**=எவ்வளவு **गण:**=ஸமூஹமானது **स्वोदयग:**=ப்ரச்னஸமயத்தி லுதயமான லக்கினத்தில் சென்றிருக்கின்றதோ **संग्रहके**=பெயரிலும் **तावान्, ग्रह:**=அவ்வளவு அக்ஷர ஸமூஹமானது இருக்கும் என்றறியவேண்டும். (எ—று)

(அ—கை) இனி பெயரிலுள்ள ஸம்யோகாக்ஷரங்களை (சேர்க்கையை யடைந்த அக்ஷரங்களை) யுபதேசிக்கிறார்:—

**மூ॰॥ संयोगमादौ बहुलेषु विन्द्यात्कूटेषु संयोगपरं वदन्ति ।**
**स्वोच्चांशके द्विष्कृतमृक्षयोगाद्गुर्वक्षरं तद्भवनांशके स्यात् ॥**

(ப—ரை) **बहुलेषु**=ஒற்றைப்பட்ட ராசிகளில் **आदौ**=பெயர்களின் ஆதியில் **संयोगम्**=அக்ஷர ஸம்யோகத்தை **विन्द्यात्**=அறியவேண்டும். **कूटेषु**=இரட்டைப்பட்ட ராசிகளில் **संयोगपरम्**=அக்ஷர ஸம்யோகத்தை பின்னுலுடைய பெயரை **वदन्ति**=சொல்லுகின்றனர். **स्वोच्चांशके**=தனதான உச்சாம்சத்தில் **ऋक्षयोगात्**=ராசியோகம் காரணமாய் **अक्षरम्**=பெயரிலுள்ள எழுத்தானது **द्विष्कृतम्**=இரண்டு மடங்கு அதிகமாக்கப்பட்டதாக **भवति**=ஆகின்றது.

(தா—ம்) எழுத்துக்கள் அச் என்றும், ஹல் என்றும் இருவகைப்படும். இவற்றுள் இரண்டு ஹல் எழுத்துக்களுக் கிடையில் அச்செழுத்தின் கலப்பில்லா திருக்குமானல் அவ்விரு ஹல் எழுத்துக்களின் சேர்க்கையை ஸம்யோகம் என பாணினி சொல்லியிருக்கிறார். ஒற்றைப்பட்ட ராசிகள் ப்ரச்ன லக்னங்களாகுமானல் பெயர்களின் ஆதியில் முற்கூறியபடி அக்ஷரங்களின் சேர்க்கையிருக்கும். இந்த ஸம்யோகத்தைப் பலர் பலவிதமாகச் சொல்லுகின்றனர். அதாவது:—இரண்டு எழுத்துக்களின் ஸம்யோகம் ஸம்ச்லேஷம் எனப்படும். இடையில் அச் அக்ஷரங்கள் கலக்காது சேர்க்கையை யடைந்த இரண்டு முதலிய ஹல் அக்ஷரங்கள் ஸம்யோகம் எனப்படும் எனபாணினி சொல்லுகிறார். அனேக பேதங்களென சிலர் சொல்லுகின்றனர். குருவான எழுத்துக்களை இரட்டிப்பு செய்தல் ஸம்யோகம் எனச்சிலர் மதம். சிலர் முடிவிலுள்ளதை இரட்டிப்புச் செய்தல் ஸம்யோகம்

என்கின்றனர். அதாவது:—யப்பா, வல்லா, யஸ்ஸா, லஸ்ஸா என்பனவாம். இரண்டு முறைகளை யொட்டி அக்ஷரங்கள் குருக்களாகவாகின்றன. அவற்றுள் வர்க்காக்ஷரங்களால் ஏற்படுவது ஒன்று, தனது ஸ்வரூபத்தால் உண்டாவது மற்றொன்று. வர்க்காக்ஷரங்களால் ஏற்படுவதில் வர்க்கப்பிரதமமும், வர்க்கப்பிரதமும் சேருவதாலும், வர்க்க திருதீயமும், திருதீயமும் சேருவதாலும் பஞ்சமமும், பஞ்சமமும் சேருவதாலும் அக்ஷரங்கள் குருக்களாகின்றன. அதாவது:—கக்க:, தத்த:, குட்ட: என்பது முதலியன. இது வர்க்கப்பிரதம பிரதமத்திற்கு உதாஹரணமாகும். லல்ல:, **गग्गः** கக்க:, **दद्दः** (தத்த:), **जज्ज**: (ஜஜ்ஜ:) இவை வர்க்கத்திருதீயங்களுக்கு உதாஹரணங்களாகும். **शङ्ङः** (சங்ங:), **नण्ण**: (நண்ண:), **घम्म**: (தம்ம:) இவை வர்க்க பஞ்சமங்களுக்கு உதாஹரணங்களாகும். வேறு எழுத்துடன் வர்க்கத்தின் முதலெழுத்துக்கும் இரண்டாவது எழுத்துக்கும் மூன்றாவது, நான்காவது எழுத்துக்களுக்கும் உதாஹரணம் சொல்லப்படும். **खुक्ख**: (குக்க:), **इच्छ**: (இச்ச:), **डित्थ**: (டித்த:), இவை வர்க்கப்ரதமத்விதீயங்களுக்கு உதாஹரணங்களாகும். **वाग्घ**: (வாக்க:), **दाड्ढः** (தாட்ட:), **शुद्ध**: (சுத்த:), இவை த்ருதீய சதுர்த்தங்களுக்கு உதாஹரணங்களாகும். இதுவரை கூறிய குருக்களுக்கு உதாஹரணங்கள் இவ்விதமேற்படும். வேறானவைகளுக்கு வேறு எழுத்துக்களுடன் சேர்க்கையா லுண்டாகின்றவைகளாவன:—பஞ்சம ப்ரதமங்களாலும், பஞ்சம த்விதீயங்களாலும், பஞ்சம த்ருதீயங்களாலும், பஞ்சம சதுர்த்தங்களாலும் உண்டாகின்ற ஸம்யோகங்களாகும். அவையாவன:—**पङ्क**: (பங்க:), **शङ्ख**: (சங்க:), **शृङ्गम्** (ச்ருங்கம்), **सङ्घ**: (ஸங்க:), இவை முறையே மேற்சொல்லியவற்றிற்கு உதாஹரணங்களாகும். இதைச் சிலர் வேறுவிதமாகச் சொல்லுகின்றனர்.

தனது ஸ்வரூபத்தால் ஏற்படும் ஸம்யோகங்கள் இரட்டிப்பிக்கப்பட்டு உதாஹரிக்கப் படுகின்றன. அவையாவன:—**घम्म**: (தம்ம:), **दत्त**: (தத்த:), **कक्क**: (கக்க:) என்பது முதலியன. ப்ரதம த்விதீயங்களுடனும், திருதீய சதுர்த்தங்களுடனும் ஸம்யோகம் சொல்லப்பட்டு அந்த ஸம்யோகஸம்ஞங்களான குருக்கள்

சொல்லப்படுகின்றன. இதற்கு மாறுன ஸம்க்ஞங்கள் (பெயர்கள்) யாதுண்டோ, அவை ஸம்யோகங்களாகவே ஆகமாட்டா. ஆதாவது:—**धर्मः** (தர்ம:), **वत्सः** (வத்ஸ:) என்பனவாம். முதலிலுள்ள ஸம்யோகமாவது:—**श्रीधरः** (ஸ்ரீதர:), **क्षीरः** (க்ஷீர:), **स्मरः** (ஸ்மர:) என்பதாம். ஒற்றைப்பட்ட ராசிகளில் ஆதியிலுள்ள ஸம்யோகத்தை இவ்விதமறியவேண்டும். மேலும், இரட்டைப்பட்ட ராசிகளில் அக்ஷரஸம்யோகத்தை பெயரின் பின்னுல் வைத்தறிய வேண்டும். அவைகளாவன:—இரண்டு எழுத்துள்ள பெயருக்கு உதாஹரணம் சொல்லுவாம். அதாவது:—**पद्मम्** (பத்மம்), **धर्मः** (தர்ம:), **वत्सः** (வத்ஸ:) என்பனவாம். நான்கு அக்ஷரமுள்ள பெயருக்கு உதாஹரணம் சொல்லுவாம். அதாவது:—**वसुदत्तः** (வஸுதத்த:), **वसुगुप्तः** (வஸுகுப்த:) என்பனவாம். சொந்தமான உச்சாம்சத்தில் பெயரிலுள்ள எழுத்தானது இரட்டிப்பிக்கப்பட்டதாகவாகும். அதாவது:—ப்ரச்னலக்னத்தில் ஒற்றைப்பட்ட ராசி உதயமாகுமானுல் அப்பொழுது ஒற்றைப்படையான வர்க்க அக்ஷரமானது இரட்டிப்பிக்கப்பட்டதாக வாகும். அதாவது:—**दरद्ः** (தரத:), **दामोदरः** (தாமோதர:) என்பதாம். இரட்டைப்பட்ட ராசியானது ப்ரச்னலக்கினமானுல் அப்பொழுது இரட்டைப்பட்ட அக்ஷரம் இரட்டிப்பிக்கப்பட்டதாக வாகும். அதாவது:—**देवदेवः** (தேவதேவ:) **धराधरः** (தராதர:) என்பதாம். இரண்டு அக்ஷரத்தில் உதாஹரணமாவது:—**कप्पः** (கப்ப:) **यप्पः** (யப்ப:), **वल्लः** (வல்ல:) என்பதாம். மேலும், ப்ரச்னலக்னம் எதுவோ அதின் சொந்த நவாம்சமே உதயமாகுமானுல் பெயரானது குருவான அக்ஷரமுள்ளதாகவே இருக்கும். இங்கு **ऋक्षयोगात्** என்பதையும் சேர்த்து பொருள் கொள்ளுவதால் ஒற்றைப்பட்ட ராசியில் ஒற்றைப்பட்ட அக்ஷரமே குருவான அக்ஷரமாகும். அதாவது: **कपित्थः** (கபித்த:), **अश्वत्थः** (அஶ்வத்த:) என்பதாம். இரட்டைப்பட்ட ராசியில் இரட்டைப்பட்ட அக்ஷரமே குரு அக்ஷரமாகவாகும். அதாவது:—**खुक्खः** (குக்க:), **घग्घः** (கக்க:), **शुद्धः** (சுத்த:) என்பனவாம். நான்கு அக்ஷர விஷயத்தில் **शुद्धोदनः** (சுத்தோதன:) முதலியனவாம். (எ—று)

(அ—கை) இதே விஷயத்தில் வேறு விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

मू०॥ मात्रादियुक्स्याद्ग्रहयुक्त्रिकोणे द्रेष्काणपर्यायवदक्षरेषु ।
नभोबलेषूर्ध्वमधोऽम्बुजेषु ज्ञेयो विसर्गोऽस्तबलान्वितेषु ॥ ८ ॥

(ப—ரை) **त्रिकोणे**=ப்ரச்ன லக்கினமான மேஷாதிகளுக்குத் திரிகோணத்தில் அதாவது: 5, 9 மிடத்தில் **ग्रहयुक्**=சூரியன் முதலிய கிரஹங்களுடன் யோகமானது எவ்விதமிருக்குமோ அவ்விதமே **मात्रादियुक्**=பெயருக்கு மாத்திராதிகளுடன் ஆதியில் சேர்க்கையானது **स्यात्**=இருக்கும் **अक्षरेषु**=எழுத்துக்களில் **द्रेष्काणपर्यायवत्**=திரேஷ்காணங்களின் பரியாயம் (பிரசித்தமான உச்சாரணம்) எவ்விதமிருக்குமோ அவ்விதமே பெயருக்கு [**मात्रादियोग: भवेत्**=மாத்திரைகளுடன் ஆதியில் சேர்க்கையிருக்கும்] **नभोबलेषु**=பத்தாமிடத்தில் வலுவுள்ள ராசிகளில் **ऊर्ध्वम्**=பெயருக்கு முதலெழுத்தின் மேற்பாகத்தில் மாத்திராக்ஷரத்தை [**उशन्ति**=சொல்லுகின்றனர்] **अम्बुजेषु**=நான்காமிடம் வலுவு பெறுமானால் **अध:**=பெயருக்கு முதலெழுத்தின்கீழ் மாத்திராக்ஷரத்தை [**उशन्ति**=சொல்லுகின்றனர்] **अस्तबलान्वितेषु**=ஏழாமிடம் வலுவுபெற்றிருந்தால் **विसर्ग:**=பெயரில் விஸர்க்கமானது **ज्ञेय:**=இருக்குமென அறியவேண்டும்.

(தா—ம்) ப்ரச்ன லக்கினமான மேஷாதிகளுக்குத் திரிகோணமான 5, 9 மிடங்களில் சூரியன் முதலிய கிரஹங்களின் யோகம் இருப்பதை யொட்டி அதாவது: அவ்விடங்களில் சூரியாதி கிருஹங்க ளிருக்குமானால் பெயரின் ஆதியில் மாத்திரைகளின் சேர்க்கை இருக்கும் என்றறியவேண்டும். அதாவது:—**शिव:** (சிவ:) என்பது முதலிய பெயரென்றறிய வேண்டும். திரேஷ்காணங்களை ப்ரசித்தமாக எவ்விதம் சொல்லுகின்றோமோ அதற்குத் தக்கபடி அதாவது:—இரட்டைப்பட்டராசி த்ரேஷ்காணமானது ப்ரச்னலக்னத்தில் உதயமாகுமானால் பெயரிலுள்ள இரட்டைப்பட்ட (ஸம்யுக்த) அக்ஷரங்களின் ஆதியில் மாத்திராயோக மிருக்கும் என்றறியவேண்டும். ஒற்றைப்பட்டராசி த்ரேஷ்காண முதயமாகுமானால் பெயரிலும் ஒற்றைப்பட்ட எழுத்தில் ஆதியில் மாத்திரா யோகமிருக்கும். அதாவது:—முறையே **श्रीधर:** (ஸ்ரீதர:),

**ईश्वर:** (ஈஸ்வர:) என்பதாம். 10 மிடத்தில் வலுவுபெற்ற ராசிகள் யாதுண்டோ, அதாவது: மேஷம், விருஷபம், சிம்மம், தனுஸ்ஸின் பிற்பாகம், மகரத்தின் முற்பாகம் இவைகள் 10 மிடமாகவாகுமானல் விசேஷ வலுவுடையன வாகவாகும் என பிருஹத் ஜாதகம் 1-வது அத்தியாயம் 17-வது சுலோகத்திற் சொல்லப்பட்டிருப்பதால் மேற்கூறிய ராசிகள் ப்ரச்னலக்னமாகவாகுமானல் பெயருக்கு மேற்பாகத்தில் மாத்திராக்ஷரத்தைச் சொல்லுகின்றனர். கடகம், மீனம், மகரத்தின் பிற்பாகம் இவைகள் நான்காவது ஸ்தானமாக வந்தால் விசேஷவலுவுடையன என்று சொல்லப்பட்டிருப்பதால் மேற்கூறியஸ்தானங்கள் ப்ரச்னலக்கினமாக வந்தால் பெயருக்குக் கீழ்பாகத்தில் மாத்திராக்ஷர மிருக்கும் என்றும் அறியவேண்டும். அதாவது:—**सुहिरण्य:** (ஸுஹிரண்ய:), **शूरवर्मा** (சூரவர்மா) முதலியனவாம். 7 மிடத்தில் வலுவுடைய ஸ்தானம் பிரச்னலக்கினமாக வாகுமானல், அதாவது:— விருச்சிகமானது 7 மிடமாக வந்தால் மிக்க வலுவுடையது என்று சொல்லப்பட் டிருப்பதால் மேற்கூறிய விருச்சிகம் ப்ரச்னலக்கினமாக வந்தால் பெயரில் விஸர்க்கம் இருக்கும் என்றும் அறியவேண்டும். (எ—று)

(அ—கை) இதே விஷயமாய் வேறு விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**मू० ॥ शीर्षोदयेषूर्ध्वमुशन्ति मात्रामधश्च पृष्ठोदयशब्दितेषु ।**
**तिर्यक्चविन्द्यादुभयोदये तां दीर्घेषु दीर्घामितरेषु चान्याम् ॥**

(ப—ரை) **शीर्षोदयेषु**=சீர்ஷோதயராசிகள் ப்ரச்ன லக்னமாக வருமானல் **मात्राम्**=மாத்திரையை **ऊर्ध्वम्**=பெயரெழுத்தின் மேல்பாகத்தில் **उशन्ति**=சொல்லுகின்றனர். **पृष्ठोदयशब्दितेषु**=பிருஷ்டோதய ராசிகள் ப்ரச்னலக்னமாக வருமானல் **अधश्च**=பெயருக்குக் கீழில் மாத்திராக்ஷரத்தைச் சொல்லுகின்றனர். **उभयोदये**=உபயோதய ராசிகள் ப்ரச்னலக்னமாக வருமானல் **तिर्यक्**=பெயரின் குறுக்கில் **ताम्**=அந்த மாத்திராக்ஷரத்தை **विन्द्यात्**=அறிந்து கொள்ளவேண்டும். **दीर्घेषु**=நீளமுள்ள ராசிகளில் **दीर्घाम्**=மாத்திரையைத் தீர்க்கமானதாகவும் **इतरेषु**=மத்யமமாயும் குறுகினதாயுமுள்ள

ராசிகளில் अन्यामू=பெயரின் மாத்திரையைக் குறுகினதாகவும் (ஹ்ரஸ்வமாகவும்) இருக்கும் என அறிந்து கொள்ளவேண்டும்.

(தா—ம்) சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம் மிதுனம் ஆகிய 6 ராசிகள் சீர்ஷோதய ராசிக ளெனப்படும். மேஷம், விருஷபம், கடகம், தனுஸ், மகரம் என்ற 5 ராசிகளும் பிருஷ்டோதய ராசிக ளெனப்படும். மீனராசியானது உபயோதயராசி எனப்படும். சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம் இவைகள் தீர்க்கராசிக ளெனப்படும். மிதுனம், கடகம், தனுஸ், மகரம் இவைகள் மத்திய ரா்சிகள் எனப்படும். மேஷம், விருஷபம், கும்பம், மீனம் இந்த ராசிகள் ஹ்ரஸ்வ (குறுகின) ராசிகள் எனப்படும். இவற்றுள் சீர்ஷோதய ராசிகள் ப்ரச்ன லக்கினமாக வருமானல் பெயரெழுத்தின் மேற்பாகத்தில் மாத்திரையிருக்கும் என்கின்றனர். அதாவது:—ओ, औ (ஒ, ஔ) முதலியனவாம். பிருஷ்டோதய ராசிகள் பிரச்னலக்னமாக வருமானல் பெயரெழுத்தின் கீழ் மாத்திராக்ஷரத்தைச் சொல்லுகின்றனர். அதாவது: उ, ऊ (உ, ஊ) என்பதாம். உபயோதயமான மீனராசி ப்ரச்ன லக்கினமாகவாகுமானல் இடையில் மாத்திராக்ஷரத்தைச் சொல்லுகின்றனர். அதாவது:—देवदेवः, ऐन्द्रः (தேவதேவ:, ஐந்த்ர:) என்பனவாம். *தீர்க்கராசிகள் ப்ரச்னலக்னமாக வாகுமானல் பெயரில் மாத்திராக்ஷரம் நீண்டதாக இருக்கும் என்கின்றனர். அதாவது:—आ, ई, ऊ, ए, ऐ, ओ, औ (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) என்பனவாம். இவற்றைத் தவிர்த்து ஹ்ரஸ்வமாயும், மத்யமமாயுமுள்ள ராசிகள் ப்ரச்னலக்கின மாகுமானல் பெயரெழுத்தில் ஹ்ரஸ்வமான மாத்திரையே இருக்கும் என்கின்றனர். அதாவது:—अ, इ, उ (அ, இ, உ) என்பனவாம். (எ—று)

(அ—கை) இவ்விஷயமாகவே வேறு விசேஷத்தை யுபதேசிக்கிருர்:—

मू० ॥ प्राग्लग्नतोयाऽस्तनभः स्थितेषु भेष्वंशकेभ्योऽक्षरसंग्रहः स्यात्।
क्रूरोऽक्षरं हन्ति चतुष्टयस्थो दृष्टश्चापि मात्राञ्च त्रिकोणगो वा॥

---

* நமது பிருஹத்ஜாதக மொழிபெயர்ப்பு 1-வது அத்தியாயம் 19-வது சுலோகத்தைப் பார்க்கவும்.

(ப—ரை) प्राग्लग्नतोयास्तनभःस्थितेषु—प्राग्लग्न=ப்ராச்ன லக்னம், तोय=நான்காமிடம், अस्त=ஏழாமிடம், नभ:=பத்தாமிடம், இவ்வி டங்களிலிருக்கும் भेषु=ராசிகளில் இருக்கின்ற अंशकेभ्य:=நவாம் சங்களைக்கொண்டு अक्षरसंग्रह:=எழுத்துக்களின் சேர்க்கையான து [नाम्नि=பெயரில்] स्यात्=ஏற்படுகின்றது. क्रूर:=பாபக்கிரஹமா னது चतुष्टयस्थ:=1-4-7-10 மிடங்களிலிருந்தால் अक्षरम्=பெயரில் எழுத்தை हन्ति=போக்குகின்றது. [सएव=அதே குரூரக்கிரஹ மானது] त्रिकोणग:=5, 9 மிடங்களிலிருந்தால் दृष्ट्या=பார்வையி னல் मात्रां=மாத்திரையை [हन्ति=போக்குகின்றது.]

(தா—ம்) 1-4-7-10 இவ்விடங்களி லிருக்கின்ற நவாம்சங்க ளைக் கொண்டு பெயரில் இன்னின்ன அக்ஷரக்கூட்டம் இருக்கும் என அறியவேண்டும். ஆனல் பாபக்கிரஹமானது 1-4-7-10 மிடங்களிலிருந்தால் பெயரிலுள்ள எழுத்துக்களைப் போக்கிவி டும். அதே குரூரக்கிரஹம் 5, 9 மிடங்களில் இருந்து பார்க்கு மானல் பெயரிலுள்ள மாத்திரையைப் போக்கிவிடும். (எ—று)

(அ—கை) வேறு சில விசேஷத்தை யுபதேசிக்கிறர்:—

मू॰॥ शुभग्रहस्तूर्जितवीर्यभागी स्थानांशतुल्याक्षरदस्सचोक्तः।
पश्यन् स्थितः केन्द्रत्रिकोणयोर्वा स्वोच्चेपि वर्णद्वयमात्मभागे॥

(ப—ரை) शुभग्रह:=சுபக்கிரஹமானது ऊर्जितवीर्यभागी=நிலைத் தபலம் பெறுமானல் स:=நிலைத்தபலம் பெற்ற அந்தக் கிரஹமா னது स्थानांशतुल्याक्षरद:=தானிருக்கும் ஸ்தானத்தின் நவாம்சத் திற்கொப்பான அக்ஷரத்தை தருவதாக उक्तः=சொல்லப்பட்டிருக் கிறது. அல்லது அதே நிலைத்தபலம் பெற்ற சுபக்கிரஹமானது केन्द्रत्रिकोणयोर्वा=1-4-7-10 மிடங்களிலோ, 5, 9 மிடங்களிலோ, स्थितः=இருந்துகொண்டு पश्यन्=பார்த்தாலும், அல்லது स्वोच्चे= தனது உச்சராசியிலோ, आत्मभागे = சொந்த நவாம்சத்திலோ இருந்துகொண்டு पश्यन्=பார்க்குமானலும் वर्णद्वयम्=பெயரில் இரண்டெழுத்தை [ददाति=தருகின்றது.]

(தா—ம்) குரு, சுக்கிரன், சுக்லபக்ஷத்து சந்திரன் பாபருடன் சேருத புதன் இவர்கள் சுபர்களாவர். இந்தச் சுபக்கிரஹமான து நிலைத்த வலுவுபெற்றதாக இருக்குமானல் தானிருக்கும்

ஸ்தானத்தில் எவ்வளவு நவாம்சம் சென்றிருக்கின்றதோ அவ்வளவு அக்ஷரங்களைப் பெயரில் தரும். அல்லது அதே வலுவு பெற்ற சுபக்கிரஹமானது, கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ இருந்து ப்ரச்ன லக்கினத்தைப் பார்க்குமாகிலும், தனது உச்ச வீட்டிலோ, சொந்த நவாம்சத்திலோ, இருந்து பார்க்குமாகிலும் பெயரில் அக்ஷரத்வயத்தைத் (இரண்டு எழுத்தை) தருகின்றது. (எ—று)

(அ—கை) வேறு விசேஷத்தை யுபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ क्षेत्रेश्वरे क्षीणबलेंशके च मात्राक्षरं नाशमुपैति तज्जम् ।**
**असंभवेप्युद्भवमेति तस्मिन् वर्गाद्यमुच्चांशयुजीशदृष्टे ॥ १२ ॥**

(ப—ரை) **क्षेत्रेश्वरे**=பிரச்ன லக்கினாதிபதியானவன் **क्षीणबले**=வலுவற்றவனாய் **अंशके**=வலுவற்ற நவாம்சத்தி லிருந்தானானால் **तज्जम्**=பிரச்ன லக்னாதிபதி மூலம் கிடைத்த **मात्राक्षरम्**=மாத்திரையும், அக்ஷரமும், **नाशम्**=நாசத்தை **उपैति**=அடைகின்றது. **तस्मिन्**=முற்கூறிய க்ஷேத்திரேஶ்வரனானவன் **असंभवे**=வலுவற்றவனாகவோ வலுவற்ற நவாம்சத்தி லிருக்கின்றவனாகவோ ஸம்பவிக்காவிடில் **उद्भवम्**=மாத்திரைகளுடையவும், அக்ஷரங்களுடையவும் நாசமானது உத்பூதியை (பெருக்கை) யடைகின்றது. அந்த க்ஷேத்திரேசுவரன் **उच्चांशयुजि**=உச்ச நவாம்சத்தை யடைந்தோ, **ईशदृष्टे**=நவாம்சாதிபதியால் பார்க்கப்பட்டோ இருந்தால் **वर्गाद्यम्**=வர்க்கத்தின் முதல் எழுத்தை விருத்தி செய்கிறான். (எ—று)

(அ—கை) அநிஶ்சயீகரணத்தை (பெயரின் அக்ஷர நிர்ணயம் செய்யும் விஷயத்தில் பொதுவான சிலவற்றை) உபதேசிக்கிறார்,—

**மூ॰ ॥ केन्द्रे यथा स्थानबलप्रकर्षं क्षेत्रस्य तत्क्षेत्रपतेश्च बुध्वा ।**
**कार्योऽक्षराणामनुपूर्वयोगो मात्रादिसंयोगविकल्पना च ॥ १३ ॥**

(ப—ரை) **केन्द्रे**=1-4-7-10 மிடங்களுள் ஒருஸ்தானத்தில் **क्षेत्रस्य**—ராசியினுடையவும், **तत्क्षेत्रपतेश्च**=அந்த வீட்டிற்குடையவனுடையவும் **यथा**=உள்ளபடி **स्थानबलप्रवर्षकम्**=ஸ்தானம்;பலம் இவற்றின் உத்கர்ஷத்தை (ஆதிக்யத்தை) **बुध्वा**=அறிந்து கொண்டு **अक्षराणाम्**=எழுத்துக்களுடைய **अनुपूर्वयोगः** = தொடர்ச்சியான ஸம்யோகமானது (சேர்க்கையானது) **कार्यः**=செய்யத்தகுந்தது.

[तथा=அவ்விதமே] मात्रादिसंयोगविकल्पना च=மாத்திரையை ஆதியாகவுடைய ஸம்யோகத்தின் (சேர்க்கையின்) விகற்பனையும் [कार्या=செய்யத்தகுந்தது.] (எ—று)

(தா—ம்) பிரச்ன லக்கினம், அதற்கு 4 மிடம், 7 மிடம், 10 மிடம் இவற்றுள் யாதானுமொரு ஸ்தானத்தில் அந்த ஸ்தானத்தினுடையவும், அந்த ஸ்தானாதிபதியினுடையவும் ஸ்தானம், பலம் இவற்றின் ஆதிக்யத்தை நன்கறிந்துகொண்டு அக்ஷரங்களின் தொடர்ச்சியான சேர்க்கையையோ, மாத்திரையைக் கீழில் சேர்ப்பது, மேலில் சேர்ப்பது, இடையில் சேர்ப்பது முதலியவற்றையோ செய்யவேண்டும். (எ—று)

(அ—கை) அம்சக்கிரமமாக ராசிகளுடைய அக்ஷரங்களை உபதேசிக்கிறார்:—

मू० ॥ तत्राऽऽदिराश्यादिचतुर्विकल्पमाद्यंशकादिक्रमपर्ययेण ।
ग्रहांशकेभ्यः स्वगणाक्षराणामन्वर्थने प्राप्तिरियं विधार्या ॥

(ப—ரை) तत्र=பெயர் அமைக்கும் விஷயத்தில் आदिराश्यादिचतुर्विकल्पम्=முதல் ராசியான மேஷத்தை ஆதியாகவுடைய நான்குவித விகல்பத்தை அதாவது:—மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகியவற்றை [कृत्वा=செய்துகொண்டு] आद्यंशकादिक्रमपर्ययेण=அந்தந்த ராசியிலுள்ள முதல் நவாம்சாதிக்கிரமமாய் ग्रहांशकेभ्यः=அந்தந்தக் கிரஹ பாகங்களினின்றும் स्वगणाक्षराणाम्=அந்தந்தக் கிரஹத்திற்கு இதே அத்தியாயம் 3-வது சுலோகத்திற் சொல்லப்பட்ட வர்க்க வர்ணங்களுடைய इयम्=பின்வரும் முறைப்படி प्राप्तिः=பிராப்தியானது विधार्या=செய்யவேண்டியது. (எ—று)

(தா—ம்) பெயரமைக்கும் விஷயத்தில் மேஷம், கடகம், துலாம், மகரம் என மேஷம் முதல் நான்கு கேந்திர ராசிகளை எடுத்துக்கொண்டு அந்தந்த ராசியின் முதலாவது அம்சக்கிரமமாக அதாவது: மேஷத்திற்கு முதலாவதான மேஷாம்சத்தையும், கடகத்திற்கு முதலாவதான கடகாம்சத்தையும், துலாத்திற்கு முதலாவதான துலாம்சத்தையும், மகரத்திற்கு முதலாவதான மகராம்சத்தையும் முறையே எடுத்துக்கொண்டு இம்மாதிரியான கிரஹங்களின் நவாம்சக்கிரமத்தை யனுஸரித்து சூரியாதிக்கிர

ஹங்களுக்குச் சொல்லிய வர்க்காக்ஷரக்கிரமமான முறையில் அக்ஷரப்பிராப்தியைக் கண்டறியவேண்டும். (எ—று)

(அ—கை) மேஷாதி ராசியாதிக்கிரமமாக ஏற்படுவதான வர்ணங்களை உபதேசிக்கிறார்:—

**மூ॰ ॥ मेषे ककारो हिबुके यकास्तुले चकारो मकरे पकारः।**
**मेषे छकारो हिबुकेऽप्यकारस्तुले खकारो मकरे फकारः ॥१४॥**

(க—ரை) மேஷமானது பிரச்ன லக்னமாகவாகும் பொழுது மேஷம், கடகம், துலாம், மகரம் இந்த ராசிகள் கேந்திரங்களாக வாகின்றன. இந்த ராசிகளே தனது நவாம்சத்தாலுதயமடைகின்றன. அவற்றுள் மேஷத்தின் முதல் நவாம்சம் மேஷமேயாகும். அதற்கு செவ்வாய் அதிபதி அது மேஷத்தின் முதல் நவாம்சமானதுபற்றி செவ்வாயின் வர்க்கமான கவர்க்கத்தில் முதலாவது எழுத்தான **क** காரம் (க என்ற எழுத்து) பெயரில் வரும். 4 மிடம் கடகம், அதற்குச் சந்திரன் அதிபதி, கடகத்திலும் முதலாவது நவாம்ச முதயமாவதால் சந்திரனுடைய வர்க்கமான ய வர்க்கத்தின் முதல் எழுத்தான **य** காரம் (ய என்ற எழுத்து) வரும். 7 மிடம் துலாமாகும். அதற்குச் சுக்கிரன் அதிபன். துலாத்திலும் முதலாவது நவாம்சமுதயமாவதால் சுக்கிரனுடைய வர்க்கமான ச வர்க்கத்தின் முதல் எழுத்தான **च** காரம் (ச என்ற எழுத்து) வரும். 10 மிடம் மகரமாகிறது. அதற்குச்சனி அதிபன். மகரத்திலும் முதலாவது நவாம்சமுதயமாவதால் சனியினுடைய வர்க்கமான ப வர்க்கத்தில் முதல் எழுத்தான **प** காரம் (ப என்ற எழுத்து) வரும். இவ்விதமே யவனேசுவரரும்

**मेषे ककारो हिबुके यकारस्तुले चकारो मकरे पकारः।**

என்றதால் சொல்லியிருக்கிறார். மேலும், இவ்விதமே இரண்டாவது நவாம்சம் முதலியவற்றிலும் அதனதன் அதிபதிக்குச் சொல்லிய அக்ஷர வர்க்கக்கிரம கணனத்தால் அந்தந்த அம்சதுல்லியமான வர்ணத்தை யறியவேண்டும் அதை விளக்குவாம். மேஷத்தின் இரண்டாவது நவாம்சம் விருஷபமாகும். அதற்குச் சுக்கிரன் அதிபன். அது இரண்டாவது அம்சமாதலால் சுக்கிர

னுடைய வர்க்கமான च வர்க்கத்தின் இரண்டாவது எழுத்தான छ (ச்ச) காரம் (ச்ச என்ற எழுத்து) வரும். இவ்விதமே 4மிடமான கடகத்தின் இரண்டாவது நவாம்சம் சிங்கமாகும். அதற்கு சூரியன் அதிபன். அது கடகத்தின் இரண்டாவது நவாம்சமாயினும் சூரியவர்க்கம் இதுவரை வாராததால் அந்த வர்க்கத்தில் முதல் எழுத்து முதற்கொண்டே தான் எழுத்துக்கள் ஏற்படும். இவ்விதமே மேலுள்ள விடங்களிலும் காண்க. சூரியனுடைய வர்க்கமான अ வர்க்கத்தில் முதலாவது எழுத்தான अ அகாரம் (அ என்ற எழுத்து) வரும். 7 மிடமான துலாத்தின் இரண்டாவது நவாம்சம் விருச்சிகமாகும். அதற்குச் செவ்வாய் அதிபன். அது துலாத்தின் இரண்டாவது அம்சமாவதாலும், செவ்வாயினுடைய வர்க்கமான क வர்க்கத்தில் முதலாவது எழுத்தான क காரம் மேஷத்தின் முதலாவது அம்சத்தில் வந்து விட்டபடியாலும் क வர்க்கத்தின் இரண்டாவது எழுத்தான ख (க்க) என்ற எழுத்தே வரும். 10 மிடமான மகரத்தின் இரண்டாவது நவாம்சம் கும்பமாகும். அதற்குச் சனி அதிபதி. சனியினுடைய வர்க்கமான प வர்க்கத்தில் முதலாவது எழுத்தான प (ப) என்ற எழுத்தானது மகரத்தின் முதலாவது நவாம்சத்திற்குச் சொல்லப்பட்டிருப்பதால் प வர்க்கத்தின் இரண்டாவது எழுத்தான फ (ப்ப) என்ற எழுத்தே வரும். இவ்விதமே யவனேசுவரரும்

**मेषे छकारो हिबुके ष्यकारस्तुले खकारो मकरे फकारः॥**

என்றதாற் சொல்லியிருக்கிறார் என்பதாம். (எ—று)

(அ—கை) மேஷாதிகளின் வேறு நவாம்சங்களில் வரும் அக்ஷரங்களை யுபதேசிக்கிறார்—

**सू०॥ मेषे टकारो हिबुके ठकारस्तुले तकारो मकरे थकारः।**
**मेषे तु रेफो हिबुके जकारस्तुले बकारो मकरे गकारः॥ १५॥**

(க—ரை) மேஷத்தின் மூன்றாவது நவாம்சம் மிதுனமாகும். அதற்குப் புதனதிபன். அந்தப் புதனுக்கு ट வர்க்கம் அக்ஷரமாகும். ट வர்க்கம் இதுவரை சொல்லப்படாததால் ट வர்க்கத்தின் முதலாவது எழுத்தான ट காரமானது (ட என்ற எழுத்தானது) அக்ஷரமாக வரும். 4 மிடமான கடகத்தின் 3-வது நவாம்

சம் கன்னியாகும். அதற்கும் புதனே அதிபதி. புதனுடைய ट வர்க்கத்தில் இரண்டாவதான ठ (ட்ட) என்ற எழுத்தானது அக்ஷரமாக வரும். 7 மிடமான துலாத்தின் 3-வது நவாம்சம் தனுஸ்ஸாகும் அதற்குக் குரு அதிபன். குருவுக்கு त வர்க்கமாகும். ஆகவே துலாத்தின் 3-வது அம்சத்திற்கு त காரம் (த என்ற எழுத்து) அக்ஷரமாக வரும். 10 மிடமான மகரத்தின் 3-வது நவாம்சம் மீனமாகும். அதற்கும் குருவே அதிபதி. त வர்க்கத்தின் இரண்டாவது எழுத்து थ காரம் ஆகும். ஆகவே மகரத்தின் 3-வது அம்சத்திற்கு थ (த்த) என்ற எழுத்தே வரும். இவ்விதமே யவனேசுவரரும்:—

मेषे टकारो हिबुके ठकारस्तुले तकारो मकरे थकारः।

என்றதாற் சொல்லியிருக்கிறார். மேலும், மேஷத்தின் நான்காவது நவாம்சம் கடகமாகும். அதற்குச் சந்திரன் அதிபன். சந்திரனுக்கு य வர்க்கம் அக்ஷரமாகும். ய வர்க்கத்தின் இரண்டாவது அக்ஷரமான र என்ற எழுத்தானது மேஷத்தின் 4-வது நவாம்சத்தின் அக்ஷரமாக வரும். 4 மிடமான கடகத்தின் 4-வது நவாம்சம் துலாமாகும். அதற்குச் சுக்கிரனதிபன். அவனுக்கு च வர்க்கம் அக்ஷரமாகும். च வர்க்கத்தின் 1-வது, 2-வது அக்ஷரங்கள் இதுவரை சொல்லப்பட்டிருப்பதால் சொல்லப்படாத च வர்க்கத்தின் 3-வது எழுத்தான ज (ஜ) என்ற எழுத்தே அக்ஷரமாக வரும். 7 வதான துலாத்தின் 4-வது நவாம்சம் மகரமாகும். அதற்குச் சனி அதிபதி. அவனுக்கு प வர்க்கம் அக்ஷரமாகும். प வர்க்கத்தின் 1-வது, 2-வது அக்ஷரங்கள் சொல்லப்பட்டிருப்பதால் प வர்க்கத்தில் சொல்லப்படாத 3-வது எழுத்தான ब என்ற எழுத்தே அக்ஷரமாக வரும். 10 மிடமான மகரத்திற்கு 4-வது நவாம்சம் மேஷமாகும். அதற்குச் செவ்வாய் அதிபதி. செவ்வாய்க்கு क வர்க்கம் அக்ஷரமாகும். க வர்க்கத்தின் 1-வது, 2-வது எழுத்துக்கள் சொல்லப்பட்டு விட்டபடியால் क வர்க்கத்திற் சொல்லப்படாத ग என்ற மூன்றாவது எழுத்தே அக்ஷரமாக வரும். இவ்விதமே யவனேசுவரரும்—

मेषे तु रेफो हिबुके जकारस्तुले बकारो मकरे गकारः॥

என்றதாற் சொல்லியிருக்கிறார். (எ—று)

(அ—கை) மேஷாதிகளின் மீதமுள்ள நவாம்சங்களாலேற்படும் அக்ஷரங்களை யுபதேசிக்கிறார்:—

மூ॰॥ आकारमाद्येऽम्बुगते घकारमस्ते भकारं मकरे झकारम् ।
लग्नेडकारं हिबुके दकारमस्ते धकारं मकरे ढकारम् ॥ १७ ॥

(க—ரை) மேஷத்தின் 5-வது நவாம்சமான சிம்மத்திற்கு சூரியன் அதிபதி. சூரியனுடைய வர்க்கத்தின் இரண்டாவது அக்ஷரமாக ஆகாரம் வருகின்றது. கடகத்தின் 5-வது நவாம்சம் விருச்சிகமாகும். அதற்குச் செவ்வாய் அதிபதி. அவனுடைய வர்க்கத்தில் 4-வது அக்ஷரமான घ என்ற எழுத்து வரும். துலாத்தின் 5-வது நவாம்சம் கும்பமாகும். அதற்குச் சனி அதிபதி. சனியின் வர்க்கத்தின் 4-வது அக்ஷரமான भ என்ற எழுத்து வரும். மகரத்தின் 5-வது நவாம்சம் விருஷபம்வரும். அதற்குச் சுக்கிரன் அதிபன். அவனுடைய வர்க்கத்தில் 4-வது அக்ஷரமான झ என்ற எழுத்து வரும். இவ்விதமே யவனேசுவரரும்—

अकारमाद्येऽबुगते घकारमस्ते भकारं मकरे झकारम् ।

என்றதாற் சொல்லியிருக்கிறார். மேலும், மேஷத்தின் 6-வது நவாம்சமான கன்னிக்கும் புதனதிபன். புதனுடைய வர்க்கத்தின் 3-வது அக்ஷரமான ड என்ற எழுத்துவரும். கடகத்தின் 6-வது நவாம்சமான தனுஸ்ஸிற்கு குரு அதிபதி. அந்தக் குரு வர்க்கத்தின் 3-வது அக்ஷரமான द என்ற எழுத்துவரும். துலாத்தின் 6-வது அம்சமான மீனத்திற்கு குரு அதிபதி. குரு வர்க்கத்தின் 4-வது அக்ஷரமான ध என்ற எழுத்து வரும். மகரத்தின் 6-வது நவாம்சமான மிதுனத்திற்குப் புதன் அதிபன். புதனுடைய வர்க்கத்தின் 4-வது அக்ஷரமான ढ என்ற எழுத்து வரும். இவ்விதமே

लग्ने डकारं हिबुके दकारमस्ते धकारं मकरे ढकारम् ॥

என்றதால் யவனேசுவரரும் சொல்லியிருக்கிறார். (எ—று)

(அ—கை) வேறு நவாம்சங்களின் அக்ஷரங்களை யுபதேசிக்கிறார்:—

मू० ॥ लग्ने ञकारो हिबुके मकारस्तुले ङकारो मकरे लकारः।
लग्ने ककारो हिबुके पकारस्तुले चकारो मकरे इकारः॥१८॥

(க—ரை) மேஷத்தின் 7-வது நவாம்சாதிபதி சுக்கிரன். அவனுடைய வர்க்கத்தின் 5-வது அக்ஷரமான ञ என்ற எழுத்து வரும். கடகத்தின் 7-வது அம்சமான மகரத்திற்குச் சனி அதிபதி. அவனுடைய வர்க்கத்தின் 5-வது எழுத்தான म என்ற எழுத்துவரும். துலாத்தின் 7-வது நவாம்சாதிபதி செவ்வாய். அவனுடைய வர்க்கத்தின் 5-வது அக்ஷரமான ङ என்ற எழுத்து வரும். மகரத்தின் 7-வது நவாம்சாதிபதி சந்திரன். அவனுடைய வர்க்கத்தின் 3-வது அக்ஷரமான ल என்ற எழுத்துவரும். இவ்விதமே யவனேசுவராரும்—

लग्ने ञकारो हिबुके मकारस्तुले ङकारो मकरे लकारः।

என்றதாற் சொல்லியிருக்கிறார். மேலும், மேஷத்தின் 8-வது நவாம்சாதிபதி செவ்வாய். அவனுடைய வர்க்கத்தின் 1-வது எழுத்தான क என்ற எழுத்து வரும். கடகத்தின் 8-வது நவாம்சமான கும்பத்திற்குச் சனி அதிபன். அவனுடைய வர்க்கத்தின் முதலாவது அக்ஷரமான प என்ற எழுத்துவரும். துலாத்தின் எட்டாவது நவாம்சாதிபதி சுக்கிரன். அவனுடைய வர்க்கத்தின் முதலாவது அக்ஷரமான च என்ற எழுத்துவரும். மகரத்தின் 8-வது நவாம்சாதிபதி சூரியன். அவனுடைய வர்க்கத்தின் 3-வது எழுத்தான इ என்ற எழுத்து வரும். இவ்விதமே யவனேசுவராரும்—

लग्ने ककारो हिबुके पकारस्तुले चकारो मकरे इकारः।

என்றதால் உபதேசித்திருக்கிறார். (எ—று)

(அ—கை) மேஷாதிகளின் 9-வது நவாம்சாதிபர்கள் மூலம் வரும் அக்ஷரங்களை உபதேசிக்கிறார்:—

मू० ॥ लग्ने नकारो हिबुके तकारस्तुले णकारो मकरे टकारः।
इत्येतदुक्तं चरसंज्ञकस्य वक्ष्ये स्थिराख्यस्य चतुष्टयस्य ॥१९॥

(க—ரை) மேஷத்தின் 9-வது நவாம்சாதிபதி குரு. அவனுடைய வர்க்கத்தின் 5-வது எழுத்தான न என்ற எழுத்துவரும்.

கடகத்தின் 9-வது நவாம்சாதிபதி குரு. அவனுடைய வர்க்கத்தின் முதல் எழுத்தான **त** என்ற எழுத்து வரும். துலாத்தின் 9-வது நவாம்சாதிபதி புதன். அவனுடைய வர்க்கத்தின் 5-வது எழுத்தான **ण** என்ற எழுத்துவரும். மகரத்தின் 9-வது நவாம்சாதிபதி புதன். அவனுடைய வர்க்கத்தின் முதலெழுத்தான **ट** என்ற எழுத்துவரும். சராசி விஷயத்தில் இதுவரை சொல்லப்பட்டது. ஸ்திர ராசிக்கு 1-4-7-10 இவைகள் மூலம் ஏற்படும் அக்ஷரங்கள் இனி உபதேசிக்கப்படும்: (எ—று)

குறிப்பு—எந்தக் கிரஹத்திற்கு எந்த வர்க்கம் அக்ஷரமாகச் சொல்லப்பட்டதோ அந்த வர்க்கத்திலுள்ள 5 எழுத்துகளும் நவாம்சமுறையில் முடிந்து விடுமிடத்து திரும்பவும் அதே கிரஹத்திற்குரிய அந்த வர்க்கத்தின் முதலெழுத்து முதற்கொண்டே எழுத்துக்களைக் கண்டறிய வேண்டுமென இதுவரை கூறிய சில விடங்களிலிருந்து ஏற்படும். இனி கூறப்படும் ஸ்திராதிராசி நவாம்சாக்ஷர விஷயங்களிலும் இவ்விதமே காண்க. (எ—று)

(அ—கை) விருஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகிய ஸ்திரராசிகளுக்கு நவாம்ச மூலம் ஏற்படும் அக்ஷரங்களை உபதேசிக்கிறார்:—

**मू० ॥ वृषे फकारो हिबुके खकारः कीटे वकारो नृघटे ढुकारः।**
**आद्यांशकेभ्यो मतिमान्विदध्यादनुक्रमेण स्थिरसंज्ञकेषु ॥२०॥**

(க—ரை) ஸ்திரராசிகளான விருஷபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் இந்த ராசிகள் முறையே மகரம், மேஷம், கடகம், துலாம் இந்த நவாம்சங்களை முதலாவதாகக் கொண்டு ஆரம்பிக்கின்றன. ஆகவே அம்முறைப்படி அதனதன் நவாம்சாதிபதியின் வர்க்காக்ஷரங்களை இனி கூறும் முறையை யொட்டிக் கண்டறிய வேண்டும். அதாவது: விருஷபத்தின் முதல் நவாம்சம் மகரம். அதற்கு அதிபதி சனி. சனியின் வர்க்கமான **प** வர்க்கத்தில் முதலாவது எழுத்தானது மேஷத்தைப்பற்றிச் சொல்லுமிடத்து 18-வது சுலோகத்தில் கடகத்தின் 8-வது நவாம்சாதிபதியான சனி விஷயத்திற் சொல்லப்பட்டு விட்டபடியால் இனி வருமிடங்களில் அதற்கு மேலுள்ள அக்ஷரங்களையே கண்டுகொள்ள வேண்

டும். மற்ற வர்க்காக்ஷர விஷயங்களிலும் இவ்விதமே அறிந்து கொள்ளவேண்டும். சனியின் வர்க்கமான प வர்க்கத்தில் இரண்டாவது எழுத்தான फ என்ற எழுத்து வரும். சிம்மத்தின் முதலாவது நவாம்சம் மேஷம். அதற்குச் செவ்வாய் அதிபதி. அவனுடைய வர்க்கமான क வர்க்கத்தில் இரண்டாவது எழுத்தான ख என்ற எழுத்தே வரும். விருச்சிகத்தின் முதலாவது நவாம்சம் கடகம். அதற்குச் சந்திரன் அதிபதி. அவனுடையதான ய வர்க்கத்தின் 3வதான व என்ற எழுத்தானது வரும். கும்பத்தின் முதலாவது நவாம்சாதிபதி சுக்கிரன். அவனுடையதான प வர்க்கத்தின் 5-வதான म என்ற எழுத்து வரும். ஆகவே, புத்திசாலியாயுள்ளவன் ஸ்திரராசிகளில் முதலிலுள்ள நவாம்சக்கிரமமாகவே முறையே அக்ஷரக்கிரமங்களை யறியவேண்டும். (எ—று)

(அ—கை) விருஷபாதிகளின் 2, 3-வது அம்சாதிபதிகள் மூலம் ஏற்படும் அக்ஷரங்களை யுபதேசிக்கிறார்:—

मू०॥ लग्ने बकारो हिबुके जकार ईकारमस्तेऽवरगे गकारः।
वृषे थकारो हिबुके टकारः कीटे डकारो नृघटे दकारः ॥२१॥

(க—ரை) விருஷபத்தின் 2-வது நவாம்சாதிபன் சனி. அவனுடைய வர்க்கம் प வர்க்கம். प வர்க்கத்தின் 3 வது அக்ஷரமான ब என்ற எழுத்துவரும். விருஷபத்தின் நான்காமிடமான சிங்கத்தின் 2-வது அம்சத்திற்கு சுக்கிரனதிபன். அவனுடைய च வர்க்கத்தின் 3-வது எழுத்தான ज என்ற எழுத்துவரும். விருஷபத்திற்கு 7 மிடமான விருச்சிகத்தின் 2-வது நவாம்சம் சிங்கம். அதன் அதிபன் சூரியன். சூரியனுடையதான अ வர்க்கத்தின் 4-வதான ई என்ற எழுத்துவரும். விருஷபத்தின் 10 மிடம் கும்பம். அதற்கு இரண்டாவது நவாம்சம் விருச்சிகம். அதன் அதிபன் செவ்வாய். செவ்வாயினுடையதான क வர்க்கத்தில் 3-வதான ग என்ற எழுத்து வரும். இவ்விதமே விருஷபத்தின் 3-வது நவாம்சத்திற்கு குரு அதிபன். அவனுடைய வர்க்கத்தில் 2-வது அக்ஷரமான थ என்ற எழுத்துவரும். ஸிம்மத்தின் 3-வது நவாம்சத்திற்கு புதன் அதிபன். அவனுடைய வர்க்கத்தில் முதலாவது அக்ஷரமான ट என்ற எழுத்து வரும். விருச்சிகத்தின் மூன்றாவது நவாம்சத்திற்குப் புதன் அதிபன். அவனுடைய

வர்க்கத்தின் 3-வது எழுத்தான * ड என்ற எழுத்துவரும். கும்பத்தின் 3-வது நவாம்சாதிபதி குரு. அவனுடைய त வர்க்கத்தின் 3-வது அக்ஷரமான द என்ற எழுத்துவரும். (எ—று)

(அ—கை) விருஷபம் முதலியவற்றின் நான்காவது நவாம்ச மூலம் ஏற்படும் அக்ஷரங்களை யுபதேசிக்கிறார்:—

**मू० ॥ वृषे घकारो हिबुके शकारः कीटे झकारो नृघटे भकारः।**
**लग्ने ञकारो हिबुके उकारः कीटे ङकारो नृघटे मकारः॥२२॥**

(க—ரை) விருஷபத்தின் 4-வது நவாம்சாதிபதி செவ்வாய். செவ்வாயினுடைய வர்க்கத்தின் 4-வது அக்ஷரமான घ என்ற எழுத்து வரும். சிம்மத்தின் 4-வது நவாம்சத்திற்குச் சந்திரன் அதிபன். அவனுடைய வர்க்கத்தின் 5-வது எழுத்தான श என்ற எழுத்து வரும். விருச்சிகத்தின் 4-வது நவாம்சத்திற்கு சுக்கிரன் அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 4-வது அக்ஷரமான झ என்ற எழுத்து வரும். கும்பத்தின் 4-வது நவாம்சத்திற்குச் சனி அதிபன். அவனுடைய வர்க்கத்தின் 4-வதான भ என்ற எழுத்து வரும். விருஷபத்தின் 5-வது நவாம்சத்திற்கு சுக்கிரன் அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 5-வதான ञ என்ற எழுத்துவரும். சிம்மத்தின் 5-வது நவாம்சத்திற்கு சூரியன் அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 5-வதான उ என்ற எழுத்து வரும். விருச்சிகத்தின் 5-வது நவாம்சத்திற்கு செவ்வாய் அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 5-வதான ङ என்ற எழுத்து வரும். கும்பத்தின் 5-வது நவாம்சத்திற்குச் சனி அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 5-வதான म என்ற எழுத்து வரும். (எ—று)

(அ—கை) விருஷபாதிகளின் 6-வது நவாம்சாதிபதிகள் மூலம் கிடைக்கும் அக்ஷரங்களை யுபதேசிக்கிறார்:—

---

* இந்த விடத்தில் மூல சுலோகத்திலும் பட்டோத்பலர் வியாக்கியானத்திலும் ट வர்க்கத்தின் 3-வது அக்ஷரமான ड என்ற எழுத்து என இருப்பதையொட்டி எழுதப்பட்டிருக்கிறது. ஆனல் ट வர்க்கத்தின் முதல் அக்ஷரம் முன்னர் சொல்லப்பட்டிருப்பதால் இரண்டாவதான ठ என்றிருக்கவேண்டும் எனப்படுகின்றது.

மூ॥ * लग्ने डकारोऽथ जले ढकारश्चास्ते धकारोंऽम्बरगे नकारः।
वृषे षकारो हिबुके चकारः कीटे पकारो नृघटे ककारः॥२३॥

(க—ரை) விருஷபத்தின் 6-வது நவாம்சத்திற்கு அதிபன் புதன். அவனுடையதான வர்க்கத்தின் 3-வது அக்ஷரமான ड என்ற எழுத்து வரும். சிம்மத்தின் 6-வது நவாம்சத்திற்குப் புதன் அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 4-வதான ढ என்ற எழுத்து வரும். விருச்சிகத்தின் 6-வது நவாம்சாதிபதி குரு. அவனுடையதான வர்க்கத்தின் 4-வதான ध என்ற எழுத்து வரும். கும்பத்தின் 6-வது நவாம்சத்திற்கு குரு அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 5-வதான न என்ற எழுத்து வரும். இதுபோலவே விருஷபத்தின் 7-வதான நவாம்சத்திற்கு சந்திரனதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 6-வதான ष என்ற எழுத்து வரும். சிம்மத்தின் 7-வதான நவாம்சத்திற்குச் சுக்கிரன் அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் முதலக்ஷரமான च என்ற எழுத்து வரும். விருச்சிகத்தின் 7-வது நவாம்சத்திற்குச் சனி அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 1-வதான प என்ற எழுத்து வரும். கும்பத்தின் 7 வது நவாம்சத்திற்கு செவ்வாய் அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 1வதான क என்ற எழுத்து வரும். (எ—று)

(அ—கை) விருஷபாதிகளின் 8, 9-வது நவாம்சாதிபதிகள் மூலம் வரும் அக்ஷரங்களை யுபதேசிக்கிறார்:—

मू॰॥ ऊकारमाहुर्वृषभे जलेखमस्ते फकारो नृघटे छकारः।
अन्त्ये वृषे टं तमुशन्ति सिंहे थं सप्तमे ठं प्रवदन्ति कुंभे॥२४॥

(க—ரை) விருஷபத்தின் 8-வது நவாம்சாதிபதி ஸூரியன். ஸூரியனுடைய வர்க்கத்தின் 6-வது அக்ஷரமான ऊ என்ற எழுத்து வரும். சிம்ஹத்தின் 8-வது நவாம்சாதிபதி செவ்வாய். அவனுடைய வர்க்கத்தின் ௨-வது அக்ஷரமான ख என்ற எழுத்து வரும். விருச்சிகத்திற்கு 8-வது நவாம்சாதிபதி சனி. அவனுடைய வர்க்கத்தின் 2-வது அக்ஷரமான फ என்ற எழுத்து

* लग्ने ढकारोऽथ जले णकारश्चास्ते धकारोंऽम्बरगे नकारः। என்றும் பாடமிருக்கிறது.

வரும். கும்பத்திற்கு 8-வது நவாம்சாதிபதி சுக்கிரன். அவனுடைய வர்க்கத்தின் 2-வது அக்ஷரமான ஶ என்ற எழுத்து வரும். இவ்விதமே விருஷபத்தின் 9-வது நவாம்சாதிபன் புதன். அவனுடையவர்க்கத்தின் முதல் அக்ஷரமான ट ட என்ற எழுத்து வரும். சிம்மத்தின் 9வது நவாம்சாதிபன் குரு. அவனுடைய வர்க்கத்தின் முதல் அக்ஷரமான त த என்ற எழுத்துவரும். விருச்சிகத்தின் 9வது நவாம்சாதிபன் குரு. அவனுடைய வர்க்கத்தின் இரண்டாவது அக்ஷரமான थ த என்ற எழுத்து வரும். கும்பத்தின் 9வது நவாம்சாதிபன் புதன். அவனுடைய வர்க்கத்தின் 2வது எழுத்தான ठ ட என்ற எழுத்து வரும். (எ—று)

(அ—கை) மிதுனம், கன்னி, தனுஸ், மீனம் என்ற உபயராசிகளுக்கு நவாம்ச மூலமேற்படும் அக்ஷரங்களை யுபதேசிக்கிறார்:—

मू०॥ द्विमूर्तिसंज्ञे मिथुने जकारः षष्ठे बकारः प्रथमांशके स्यात् ।
धनुर्धरेऽस्तोपगते गकारो मीनद्वये चांबरगे सकारः॥२५॥

(க—ரை) மிதுனம், கன்னி, தனுஸ், மீனம் என்ற ராசிகள் உபயராசிகள் எனப்படும். இந்த ராசிகளில் முறையே துலாம், மகரம், மேஷம், கடகம் என்றராசிகளினின்றும் நவாம்சங்களுதயமடைகின்றன. ஆதலால் மிதுனத்திற்கு முதல்நவாம்சம் துலாம். அதற்கு சுக்கிரன் அதிபன். ஆதலால் அவனது வர்க்கத்தின் 3வது எழுத்தான ज ஜ என்ற எழுத்து வரும். மிதுனத்திற்கு 4மிடமான கன்னியின் முதல்நவாம்சம் மகரமாகும். அதற்கு சனி அதிபன். அவனுடையதான प வர்க்கத்தின் 3வது அக்ஷரமான ब என்ற எழுத்து வரும். மிதுனத்திற்கு 7மிடமான தனுஸ்ஸிர்க்கு முதலாவது நவாம்சம் மேஷம். அதற்கு செவ்வாய் அதிபன், அவனுடையதான क வர்க்கத்தின் 3வது அக்ஷரமான ग என்ற எழுத்துவரும். மிதுனத்தின் 10மிடமான மீனத்திற்கு முதலாவது நவாம்சம் கடகம். அதற்குச் சந்திரன் அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 7வது அக்ஷரமான स என்ற எழுத்து வரும். (எ—று)

(அ—கை) மிதுனுதிகளின் இரண்டாவது நவாம்சபதிகள் மூலம்வரும் அக்ஷரங்களை யுபதேசிக்கிறுர்—

मू० ॥ लग्ने घकारो हिबुके भकारश्चास्ते झकारोऽम्बरमध्यगे ई ।
लग्ने दकारो हिबुके धकारमस्ते डकारं विदुरंबरे ढम् ॥ २६ ॥

(க—ரை) ப்ரச்னலக்னமான மிதுனத்தின் 2வது நவாம்சத்திற்கு செவ்வாய் அதிபன். அவனுடையதான வர்க்த்தின் 4வது அக்ஷரமான घ என்ற எழுத்துவரும். மிதுனத்தின் 4மிடமான கன்னியின் 1வது நவாம்சத்திற்குச் சனி அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 4வது அக்ஷரமான भ என்ற எழுத்துவரும். மிதுனத்தின் 7மிடமான தனுஸ்ஸின் 2வது நவாம்சத்திற்குச் சுக்கிரன் அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 4வது அக்ஷரமான झ என்ற எழுத்து வரும். மிதுனத்தின் 10 மிடமான மீனத்தின் 2வது நவம்சத்திற்குச்சூரியன் அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 4வது அக்ஷரமான ई என்ற எழுத்துவரும். இவ்விதமே ப்ரச்னலக்னமான மிதுனத்தின் 3வது நவாம்சத்திற்குக் குரு அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 3வது அக்ஷரமான द என்ற எழுத்து வரும். மிதுனத்தின் 4 மிடமான கன்னியின் 3-வது நவாம்சத்திற்குக் குரு அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 4-வது அக்ஷரமான ध என்ற எழுத்துவரும். மிதுனத்தின் 7 மிடமான தனுஸ்ஸிர்க்கு 3-வது நவாம்சாதிபன் புதன். அவனுடையதான வர்க்கத்தின் 3-வது அக்ஷரமான ड என்ற எழுத்து வரும். மிதுனத்தின் 10 மிடமான மீனத்தின் 3வது நவாம்சத்திற்குப் புதன் அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 4-வது அக்ஷரமான ढ என்ற எழுத்து வரும். (எ—று)

(அ—கை) மிதுனுதிகளின் 4, 5வது நாவம்சாதிபதிகள் மூலம் வரும் அக்ஷரங்களை யுபதேசிக்கிறுர்—

मू०॥ लग्ने मकारो हिबुके ङकारश्चाऽस्ते हकारोऽम्बरगे अकार: ।
लग्ने पकारो जलगे चकार एकारमस्तेऽम्बरगे ककार: ॥२७॥

(க—ரை) ப்ரசனலக்கினமான மிதுனத்தின் 4வது நவாம்சாதிபன் சனி. அவனுடையதான வர்க்கத்தின் 5வது அக்ஷரமான म என்ற எழுத்து வரும். மிதுனத்தின் 4மிடமான கன்னியின் 4வது நவாம்சத்திற்குச் செவ்வாய் அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 5வது அக்ஷரமான ङ என்ற எழுத்து வரும். மிதுனத்தின் 7மிடமான தனுஸ்ஸிற்கு 4வது நவாம்சாதிபன் சந்திரன். அவனுடையதான வர்க்கத்தின் 8வது அக்ஷரமான ह என்ற எழுத்துவரும். மிதுனத்தின் 10மிடமான மீனத்தின் 4வது நவாம்சாதிபன் சுக்கிரன். அவனுடையதான வர்க்கத்தின் 5வது அக்ஷரமான ञ என்ற எழுத்து வரும். இவ்விதமே ப்ரச்னலக்கினமான மிதுனத்தின் 5வது நவாம்சாதிபன் சனி. அவனுடையதான வர்க்கத்தின் 1வது அக்ஷரமான प என்ற எழுத்து வரும். மிதுனத்தின் 4மிடமான கன்னிக்கு 5வது நவாம்சாதிபன் சுக்கிரன். அவனுடையதான வர்க்கத்தின் 1வது அக்ஷரமான च என்ற எழுத்துவரும். மிதுனத்தின் 7மிடமான தனுஸ்ஸிற்கு 5வது நவாம்சாதிபன் சூரியன். அவனுடையதானவர்க்கத்தின் 8வது அக்ஷரமான ऐ என்ற எழுத்து வரும். மிதுனத்தின் 10 மிடமான மீனத்திற்கு 5-வது நவாம்சாதிபன் செவ்வாய். அவனுடையதான வர்க்கத்தின் 1-வது அக்ஷரமான क என்ற எழுத்து வரும். (எ—று)

(அ—கை) இவ்விதமே மிதுனுதிகளின் 6, 7வதுநவாம்சபதிகள் மூலம்வரும் அக்ஷரங்களை யுபதேசிக்கிறார்—

मू० ॥ प्राग्लग्नगे नं जलगे णमाहुरस्तंगते टं नभसि स्थिते तम् ।
प्राग्लग्नगे खं जलगे यमाहुरस्तंगते छं नभसिस्थिते कम् ॥२८॥

(க—ரை) ப்ரச்னலக்னமான மிதுனத்தின் 6-வது நவாம்சாதிபன் குரு. அவனுடையதான வர்க்கத்தின் 5-வது அக்ஷரமான न என்ற எழுத்துவரும். மிதுனத்தின் 4 மிடமான கன்னிக்கு 6-வது நவாம்சாதிபன் புதன். அவனுடையதான வர்க்கத்தின் 5-வது அக்ஷரமான ण என்ற எழுத்துவரும். மிதுனத்தின் 7மிடமான தனுஸ்ஸிற்கு 6-வது நவாம்சாதிபன் புதன். அவனு

டையதான வர்க்கத்தின் முதல் அக்ஷரமான ट என்ற எழுத்து வரும். மிதுனத்தின் 10மிடமான மீனத்திற்கு 6-வது நவாம்சாதிபன் குரு. அவனுடையதான வர்க்கத்தின் 1 வது அக்ஷரமான त என்ற எழுத்துவரும். இவ்விதமேப்ரச்னலக்னமான மிதுனத்தின் 7-வது நவாம்சத்திற்கு செவ்வாய் அதிபன். அவனுடையதான வர்க்கத்தின் 2-வது அக்ஷரமான ख என்ற எழுத்துவரும். மிதுனத்தின் 4மிடமான கன்னிக்கு 7-வது நவாம்சாதிபன் சந்திரன். அவனுடையதான வர்க்கத்தின் 1-வது அக்ஷரமான य என்ற எழுத்து வரும். மிதுனத்தின் 7 மிடமான தனுஸ்ஸிற்கு 7-வது நவாம்சாதிபன் சுக்கிரன். அவனுடையதான வர்க்கத்தின் 2-வது அக்ஷரமான छ என்ற எழுத்து வரும். மிதுனத்தின் 10 மிடமான மீனத்திற்கு 7-வது நவாம்சாதிபன் சனி. அவனுடையதான வர்க்கத்தின் 2-வது அக்ஷரமான फ என்ற எழுத்து வரும். (எ—று)

(அ—கை) மிதுனுதிகளின் 8, 9-வது நவாம்சபதிகள் மூலம் வரும் அக்ஷரங்களை யுபதேசிக்கிறார்—

मू० ॥ लग्ने जमोंकारमथाऽम्बुसंस्थे गमस्तसंस्थे विदुरंबरे बम् ।
ठं लग्नगेऽन्त्ये हिबुकाश्रिते डं थमस्तगे दं नभसि स्थिते वै॥२९॥

(க--ரை) ப்ரச்னலக்னமான மிதுனத்திற்கு 8-வது நவாம்சாதிபன் சுக்கிரன். அவனுடையதான வர்க்கத்தின் 3-வது அக்ஷரமான ज என்ற எழுத்துவரும். ப்ரச்னலக்கினமான மிதுனத்திற்கு 4மிடமான கன்னிக்கு 8-வது நவாம்சாதிபன் சூரியன். அவனுடையதான வர்க்கத்தின் 9 வது அக்ஷரமான ओ என்ற எழுத்து வரும். ப்ரச்னலக்கினமான மிதுனத்திற்கு 7மிடமான தனுஸ்ஸிற்கு 8-வது நவாம்சாதிபன் செவ்வாய். அவனுடையதான வக்கத்தின் 3-வது அக்ஷரமான ग என்ற எழுத்துவரும். ப்ரச்னலக்கினமான மிதுனத்தின் 10மிடமான மீனத்திற்கு 8-வது நவம்சாதிபன் சனி. அவனுடையதான வர்க்கத்தின் 3-வது அக்ஷரமான ब என்ற எழுத்து வரும். இவ்விதமே ப்ரச்னலக்கினமான மிதுனத்தின் 9-வது நவாம்சாதிபன் புதன். அவனு

டையதான வர்க்கத்தின் 2-வது அக்ஷரமான ठ என்ற எழுத்து வரும். ப்ரச்ன லக்கினமான மிதுனத்தின் 4மிடமான கன்னிக்கு 9-வது நவாம்சாதிபன் புதன். அவனுடையதான வர்க்கத்தின் 3-வது அக்ஷரமான ड என்ற எழுத்து வரும். ப்ரச்ன லக்கினமான மிதுனத்தின் 7 மிடமான தனுஸ்ஸிர்க்கு 9-வது நவாம்சாதிபன் குரு. அவனுடையதான வர்க்கத்தின் 2-வது அக்ஷரமான थ என்ற எழுத்து வரும். ப்ரச்ன லக்னமான மிதுனத்திற்கு 10 மிடமான மீனத்திற்கு 9-வது நவாம்சாதிபன் குரு. அவனுடையதான வர்க்கத்தின் 3-வது அக்ஷரமான द என்ற எழுத்து வரும். (எ—று)

(அ—கை) இதுவரை சொல்லியவற்றிலுள்ள பிரிவை யுபதேசிக்கிறார்—

**मू० ॥ एवं विकल्पोऽक्षरसंग्रहोऽयं नाम्नां निरुद्दिष्टविधान उक्तः।**
**सर्वेषु लग्नेषु च केचिदेवमिच्छन्ति पूर्वोक्तविधानवत्तु ॥ ३० ॥**

(க—ரை) பெயர்கள் விஷயத்தில் மீதமின்றி தனித்தனி எடுத்துக் கூறப்பட்ட முறையை யுடைய இந்த அக்ஷரக் கூட்டமானது இம்மாதிரியான மாறுபாடுடையதாக சாஸ்திரங்களிற் கூறப்பட் டிருக்கிறது. ஆகவே இம்மாதிரியாகவே ப்ரச்ன லக்னமாக வாகும் மேஷாதிகளான எல்லா ராசிகள் விஷயத்திலும் இதுவரை குறிப்பிட்ட முறைப்படியே அதாவது: **मेषे ककार:** என்று 14-வது சுலோகந் தொடங்கி 29-வது சுலோகம் வரை சொல்லியபடியே கண்டறிய வேண்டும் என்கின்றனர். (எ—று)

குறிப்பு—**मेषे ककार:** என்ற 15-வது சுலோகந்தொடங்கி **एवं विकल्पोऽक्षरसंग्रहोयं** என்ற 30-வது சுலோகம் முடியவுள்ள 16சுலோகங்களால் மேஷாதி ராசிகளுக்கு நவாம்சமூலமேற்படுவதாகக் கூறிய அக்ஷரங்களை பின்பக்கத்தில் எழுதப்பட்டிருக்கும் கட்டத்திற் காண்க.

| மே | விரு | மிது | கடக | சிங் | கன் | துலா | விரு | தனு | மக | கும் | மீன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| क | फ | ज | य | ख | ब | च | व | ग | प | छ | स |
| छ | ब | घ | अ | ज | भ | ख | ई | झ | फ | ग | ई |
| ट | थ | द | ठ | ट | ध | त | ड | ड | थ | द | ढ |
| र | घ | म | ज | श | ङ | ब | झ | ह | ग | भ | ञ |
| आ | ञ | प | घ | उ | त्र | भ | ङ | ऐ | झ | म | क |
| ड | ढ | न | द | ण | ण | ध | ध | ठ | ढ | न | त |
| ञ | ष | ख | म | च | य | ङ | प | छ | ल | क | फ |
| क | ऊ | ज | प | ख | ओ | च | ठ | ग | इ | छ | ब |
| न | ट | ठ | त | त | ड | ण | थ | थ | ट | ठ | द |

ஆகவே மேஷமானது ப்ரச்னலக்னமாகி அதில் முதலாவது நவாம்சம் உதயமாகுமானுல் அப்பொழுது மேஷத்திற்கு 4 மிடமாக கடகமும், 7மிடமாக துலாமும், 10மிடமாக மகரமும் ஆவதால் அந்த 4, 7-10மிடங்களின் 1-வது நவாம்சங்களும் மேற்கூறியபடி 4-7-10-வதாக ஆவதால் மேஷத்தின் 1-வது நவாம்சத்திற்குச் சொல்லிய **क** என்ற எழுத்து, கடகத்தின் 1-வது நவாம்சத்திற்குச் சொல்லிய **य** என்ற எழுத்து, துலாத்தின் 1-வது நவாம்சத்திற்குச் சொல்லிய **च** என்ற எழுத்து, மகரத்தின் 1-வது

நவாம்சத்திற்குச் சொல்லிய प என்ற எழுது ஆகிய 4 எழுத்துக்கள் ப்ரச்னங்கேழ்க்கப்பட்ட வஸ்துவின் பெயரில் இருக்கும் என்று அறியவேண்டும். ஆனால் 10, 11-வது சுலோகங்களிற் சொல்லியபடி இந்த அக்ஷரங்களில் கூடுதல் குறைவு முதலியவற்றையும் கண்டறிந்து கொண்டு இஷ்டதேவதாத்தியானத்துடனும் சொன்னால் அது அனுபவத்தில் ஒற்றேவரும் என்றும் கண்டுகொள்ள வேண்டும். (எ—று)

(அ—கை) பெயரைக் காணும்வழியில் வேறுவிதமான முறையை யுபதேசிக்கிறார்—

**மூ॰ ॥ केन्द्राणि वा केन्द्रगतांशकैः स्वैः पृथक्पृथक् सङ्गुणितानि कृत्वा ।**
**त्रिकृद्विभक्तं विदुरक्षरं तत् क्षेत्रेश्वरस्यांशपरिक्रम*स्वम् ॥ ३१ ॥**

(க—ரை) ப்ரச்னலக்னங்களாக ஆகக்கூடியவை மேஷம் முதல் மீனம் முடியவுள்ள 12லக்கினங்களாகும். அவற்றுள் மேஷம், கடகம், துலாம், மகரம் இன்னான்கும் சராசிகளெனப்படும். விருஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம், இன்னான்கும் ஸ்திராசிகளெனப்படும். மிதுனம், கன்னி, தனுஸ், மீனம் இவைகள் உபயராசிக ளெனப்படும். மேஷாதியான 4 சராசிகளுள் மத்யம், ஆதி, அந்தம் முதற்கொண்டு பிரச்னம் ஏற்பட்டால் (அதாவது: 1-வது திரேஷ்காணம் 2-வது திரேஷ்காணம், 3-வது திரேஷ்காணம் இவற்றில் பிரச்னம் ஏற்பட்டால் என்பதாம். இவ்விதமே மேலுள்ள விடங்களிலும் காண்க) அப்பொழுது அது முதற்கொண்டு ராசி முதலியவற்றில் சரங்களான 4 கேந்திரங்கள் வருகின்றன. இவ்விதமே விருஷபாதியான 4 ஸ்திராசிகளுள் மத்யம், ஆதி, அந்தம் முதற்கொண்டு ப்ரச்னம் ஏற்பட்டால் அப்பொழுது அது முதற்கொண்டு ஸ்திரங்களான 4 கேந்திரங்கள் வருகின்றன. இவ்விதமே மிதுனாதியான 4 உபயராசிகளுள் மத்யம், ஆதி, அந்தம் முதற்கொண்டு ப்ரச்னம் ஏற்பட்டால் அப்பொழுது அது முதற்கொண்டு உபயராசிகளான 4 கேந்திரங்கள் வருகின்றன. 1-4-7-10 மிடங்கள் கேந்திரங்களாகும். இங்கு. **केन्द्राणि वा** என்ற விடத்திலுள்ள **वा** என்ற சப்தமானது வேறு பாவத்

---

* परिक्रमात्स्वम् என்றும் பாடமுண்டு.

திற் சொல்லிய விகற்பத்தைக் காட்டுகிறது. நான்கு கேந்திரங்களிலும் இருக்கின்ற யாதொரு நவாம்சங்களுண்டோ அந்த சொந்த நவாம்சங்களைக் கொண்டு தனித்தனி பெருக்கப்பட்டவைகளாகச் செய்து கொண்டு அதாவது:—கேந்திரத்திலிருக்கும் மேஷாதி ராசியை நவாம்சங்களான 9 களால் விபாகஞ் செய்து எது ஈவாக வருமோ அவ்வளவு எண்ணை வைத்துக்கொண்டு லக்னுதிகளில் உதயமான நவாம்சங்களால் குணனம் செய்து (பெருக்கி) கொள்ளல் வேண்டும். பிறகு அந்த 4 கேந்திரங்களையும் 9னுல் வகுத்து வரும் (ஈவு) எதுவோ அதை (அந்த அக்ஷரத்தை) க்ஷேத்திரேசுவரனுடைய (ராசி யதிபதியினுடைய) தாகச் சொல்லுகின்றனர். நவாம்ச முறையைக் கொண்டு அந்த அக்ஷரம் அந்தந்த நவாம்சபதிக்குச் சொந்தமானதாக வாகும். இவ்விதம் கூறியதானது த்ரை ராசிகம் செய்யவேண்டு மென்பதைக் குறிக்கும். அதாவது:—ஒன்பது ஒன்பதுகளால் ஒன்பது அக்ஷரங்கள் கிடைக்குமானுல் அப்பொழுது முற்கூறிய நவாம்சங்களால் எவ்வளவு அக்ஷரங்கள் வரும் என்று கண்டுபிடிக்க வேண்டு மென்பதாம். சரங்களான நான்கு கேந்திரங்களிலும் செவ்வாய் முதலிய எல்லாக் கிரஹங்களுக்கும் 6 நவாம்சங்கள் வருகின்றன. அந்த ஆறு நவாம்சங்களால் இவ்வளவு நவாம்சங்களையே குணனம் செய்து (பெருக்கி) 6 அக்ஷரங்கள் வருகின்றன. இதே கேந்திரங்களில் செவ்வாய் முதலிய எல்லாக் கிரஹங்களுக்கும் எந்த எந்த கேந்திரத்தில் எவ்வளவு நவாம்சங்கள் வருகின்றனவோ அந்தந்த கேந்திரத்தில் எல்லாக் கிரஹங்களுக்கும் தனது வர்க்காக்ஷரங்கள் முறையே வருகின்றன. முதலாவது நவாம்சத்தில் தனது வர்க்கத்திலுள்ள முதலாவது அக்ஷரமும், இரண்டாவது நவாம்சத்தில் தனது வர்க்கத்திலுள்ள இரண்டாவது அக்ஷரமும், 3-வது நவாம்சத்தில் 3-வது அக்ஷரமும் இவ்வளவினுல் சரகேந்திரம் நான்கிலும் வருகின்றது. 7-வது நவாம்சத்தில் இரண்டாவதும், 8-வதில் 3-வதும், 9-வதில் 4-வதும், 10வதில் 5-வதும், 11-வதில் திரும்பவும் தனதுவர்க்கத்தில் முதலாவதும் 12-வதில் இரண்டாவதும், சூரியசந்திரர் களுக்கு 4-வதில் 4-வதும், 5-வதில் 5-வதும், 6-வதில் ஆருவதும், வரும். இவ்வளவினுல்

ஸ்திர கேந்திரம் நான்கும் முடிந்ததும் உபயராசி 4 கேந்திரங்களிலும் 13-வதில் 3-வதும், 14-வதில் 4-வதும், 15-வதில் 5-வதும், 16-வதில் திரும்பவும் தனது வர்க்கத்தின் முதலாவதும், 17-வதில் இரண்டாவதும், 18-வதில் 3-வதும் வரும் என்பதாம். சூரிய சந்திரர்களுக்கோ வெனில் 7-வதில் 7-வதும், 8-வதில் 8-வதும், 9-வதில் 9-வதும், சந்திரனுக்கு திரும்பவும் 9-வதும் தனது வர்க்க வர்ணங்களினின்றும் முதலாவது அக்ஷரமும் வரும் என்பதாம். (எ—று)

குறிப்பு—இந்த அக்ஷரகோசாத்தியாயம் 31-வது சுலோகத்திற்கு உரை எழுதியவிடத்தில்பட்டோத்பலரின் வியாக்கியானத்தை அப்படியே தமிழ்படுத்தி எழுதியிருக்கிறோம். இவ்விஷயமாய் தெளிவாய் அவரவரும் தத்தமது ஆசாரியர் மூலம் தெரிந்து கொள்ளுவது அவசியமாதலால் அதற்கு வேண்டி இந்த சுலோகத்தின் பட்டோத்பலரின் வடமொழியிலுள்ள வியாக்கியானத்தை அப்படியே அடியில் எழுதுகிறோம்—

मेषादय: पृच्छालग्ना द्वादश, तेषां त्रयो भेदा:—चरस्थिरद्विस्वभावाख्या: । तत्र चरा मेषकर्कितुलामकरा: । स्थिरा वृषसिंहवृश्चिककुंभा: । द्विस्वभावा मिथुनकन्याधन्विमीना: । मेषादिषु चतुर्षु मध्याद्यंतमारभ्य पृच्छाभवति तत आरभ्य चराणि चत्वारि केन्द्राणि भवन्ति राश्यादिष्विति । अथ स्थिरेषु वृषादिषु चतुर्षु मध्याद्यन्तमारभ्य पृच्छाभवति तत आरभ्य स्थिराणि चत्वारि केन्द्राणि भवन्ति । अथ द्विस्वभावेषु मिथुनादिषु चतुर्ष्वपि मध्याद्यन्तमारभ्य पृच्छाभवति तत एवारभ्य द्विस्वभावानि चत्वारि केन्द्राणि भवन्ति नान्यानि । केन्द्राणि च लग्नचतुर्थसप्तमदशमानि । वाशब्दो भावान्तरोक्तविकल्पप्रदर्शनार्थ: । 'मेषे ककार' इत्येतच्चक्रं प्रागुक्तं प्रादर्शितम् । वाकेन्द्रगतांशकैरस्वैरिति ॥ केन्द्रेषु चतुर्षु ये गता:=समवस्थिता: अंशका:=नवभागा:, तैरात्मीयै: पृथक्पृथक्=प्रत्येकं, संगुणितानि=संहतानि कृत्वा=विधाय ॥ एतदुक्तं भवति ॥ केन्द्रस्थितं राशिं मेषादिकं नवांशैर्नवभिर्विभज्य यद्भवति तावत्संख्यमङ्कं संस्थाप्योदितनवांशकै: स्वैर्गुणयेत् । ततस्तत्केन्द्रचतुष्टयं त्रिकृता=त्रिकृत्या भक्तं कार्यम् ॥ त्रयाणां कृत्=वर्ग:, त्रिकृत् नव इत्यर्थ: । तया विभक्तं विभाजितं तदक्षरं वर्णं विदु:=जानते यल्लब्धं तदक्षरम् । कस्य ? क्षेत्रेश्वरस्य=राश्यधिपते: । अंशपरिक्रमेण=नवांशपरिपाट्या स्वम्=आत्मीयम् । अयमभिप्रा-

योऽत्र त्रैराशिकात्मकः। यदि नवभिर्नवभिर्नवाक्षराणि लभ्यन्ते तदा एभिर्नवांशकैः कत्यक्षराणि? इति। चरेषु चतुर्ष्वपि केन्द्रेषु सर्वेषां भौमादीनां षण्णवांशा भवन्ति। तैश्चैतावत एव संगुण्य षडक्षराणि भवन्ति। एष्वेव केन्द्रेषु सर्वेषां भौमादीनां यस्मिन्यस्मिन्केन्द्रे यावन्तो नवांशका आपतन्ति तस्मिन् तस्मिन् सर्वेषां स्ववर्गाक्षराणि परिपाट्या भवन्ति। प्रथमनवांशके स्ववर्गे प्रथममक्षरं, द्वितीये द्वितीयं, तृतीये तृतीयं, एतावता चरकेन्द्रचतुष्टये। सप्तमे द्वितीयम्। अष्टमे तृतीयम्। नवमे चतुर्थम्। दशमे पञ्चमम्। एकादशे पुनर्निवृत्य स्ववर्गात्प्रथमम्। द्वादशे द्वितीयम्। अर्कचन्द्रयोस्तु चतुर्थे चतुर्थं, पञ्चमे पञ्चमं, षष्ठे षष्ठम्। एतावता स्थिरे केन्द्रचतुष्टये समाप्ते द्विमूर्तिकेन्द्रचतुष्टये त्रयोदशे तृतीयं, चतुर्दशे चतुर्थं, पञ्चदशे पञ्चमम्। षोडशे पुनर्निवृत्य स्ववर्गात्प्रथमं, सप्तदशे द्वितीयम्, अष्टादशे तृतीयमिति। अर्कचन्द्रयोस्तु सप्तमे सप्तमम्। अष्टमे अष्टमम्। नवमे नवमम्। चन्द्रस्य पुनर्निवृत्य नवमं स्ववर्गवर्णेभ्यः प्रथमक्षरमिति॥

(அ—கை) மேற்கூறிய முறைகளைக் கொண்டு இன்னின்ன விடங்களில் நாமங்களை யறியவேண்டும் என்பதை யுபதேசிக்கிறார்:—

मू॰॥ सञ्चिन्तितप्रार्थितनिर्गतेषु नष्टक्षतस्त्रीरतिभोजनेषु।
स्वप्नर्क्षचिन्तापुरुषादिवर्गेष्वेतेषु नामान्युपलक्षयीत॥ ३२॥

(ப—ரை) **सञ्चिन्तित...षु—सञ्चिन्तित** = மனத்தால் கல்பிக்கப்பட்ட பொருள், **प्रार्थित**=வாயாலுச்சரிக்கப்பட்ட பொருள் **निर्गत**= வெளியிற் சென்ற பொருள் இவைகளிலும், **नष्ट...षु—नष्ट**=கண் பார்வையிலிருந்து வேறிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருள் **क्षत**=ஹிம்ஸிக்கப்பட்ட (நாசமடைந்த) பொருள், **स्त्री**=ஸ்திரீ, **रति**=போகம் **भोजन**=போஜனம் இவற்றை சம்பந்தித்த பொருள் இவற்றிலும், **स्वप्नर्क्ष...षु—स्वप्न**=ஸ்வப்னத்தில் கண்டபொருள் **ऋक्ष**=நக்ஷத்திரம், **चिन्ता**=தியானம் செய்யப்பட்ட பொருள் **पुरुषादिवर्ग**=புருஷன், ஸ்திரீ, நபும்ஸகன் முதலியோர் இவர்கள் விஷயத்திலும் **नामानि** = பெயர்களை **उपलक्षयीत** = கண்டு கொள்ள வேண்டும்.

(தா—ம்) என்னுல் மனத்தால் ஸங்கல்பிக்கப்பட்ட பொருளின் பெயர் யாது? என்று ஒருவன் கேட்டால் அப்பொழுது

மேற்கூறிய முறைகளைக் கொண்டு நினைக்கப்பட்ட பொருளின் பெயரைச் சொல்லவேண்டும். "நான் ஒருவனிடம் ஒரு பொருளைப்பற்றிக் கேட்டேன் அப்பொருளின் பெயர் யாது?" என்று ஒருவன் கேட்டாலும் மேற்கூறிய முறைகளைக்கொண்டே கேழ்கப்பட்ட பொருளின் பெயரைச் சொல்லவேண்டும். இவ்விதமே சுலோகத்திலுள்ள மற்ற விஷயங்களிலும் கருத்துக் கொள்ள வேண்டும். மனத்தால் கல்பிக்கப்பட்ட பொருளின் பெயரை பிரச்னகாலத்தி லுதயமடைந்த லக்கினத்திலின்றும், வாயினால் பிரார்த்திக்கப்பட்ட வஸ்துவின் பெயரை பிரச்ன லக்கினத்திற்கு 4மிடத்தை முதலாவதாகக் கொண்டும், வெளியிற் சென்றவனின் பெயரை பிரச்ன லக்கினத்திற்கு 7 மிடத்தை முதலாவதாகக் கொண்டும், கண் பார்வையிலிருந்து வேறிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருளின் பெயரை பிரச்னலக்கினத்திற்கு 10 மிடத்தை முதலாவதாகக் கொண்டும் கண்டறிய வேண்டும். இவ்விதமே ஹிம்ஸிக்கப்பட்ட பொருளின் பெயரை பிரச்ன லக்கினத்தை முதலாவதாகக் கொண்டும், உத்தம ஸ்திரீயின் பெயரை பிரச்ன லக்கினத்திற்கு 4 மிடத்தை முதலாவதாகக் கொண்டும், அனுபவித்த பொருளின் பெயரை பிரச்ன லக்கினத்திற்கு 7 மிடத்தை முதலாவதாகக் கொண்டும், உண்ணப்பட்ட பொருளின் பெயரை 10 மிடத்தை முதலாவதாகக் கொண்டும் கண்டறிய வேண்டும். இவ்விதமே ஸ்வப்னத்தில் கண்ட பொருளின் பெயரை பிரச்னகாலத்தி லுதயமான லக்கினத்தை முதலாவதாகக் கொண்டும், ஜன்ம நக்ஷத்திரம் தெரியாமல் அதைப் பற்றி பிரச்னம் செய்வானாயின் அதன் பெயரை பிரச்னலக்கினத்திற்கு 4 மிடத்தை முதலாவதாகக் கொண்டும், நினைத்துக் கொள்ளப் பட்ட பெயரை பிரச்ன லக்கினத்திற்கு 7 மிடத்தை முதலாவதாகக் கொண்டும், புருஷர்களின் பெயர்களை பிரச்ன லக்கினத்திற்கு 10 மிடத்தை முதலாவதாகக் கொண்டும் கண்டறிய வேண்டும். இவ்விஷயம் பட்டோத்பலரின் உரையில் கூறப்பட்டிருக்கிறது.

அக்ஷர கோசாத்தியாயம் முற்றிற்று.

---

(அ—கை) சகுன மூல முதயமடைந்த லக்கினத்தைக் கொண்டு வந்த மனிதனின் பெயரை அறியலாம் என்று இவ்வத்தியாயம் இரண்டாவது சுலோகத்திற் சொல்லப்பட்டது. அப்பெயரில் அடங்கிய எழுத்துக்களின் எண்ணை அறிதற்குரிய உபாயத்தை உபதேசிக்கிறார்:—

**द्व्यक्षरं चरगृहांशकोदये नामचास्य चतुरक्षरं स्थिरे।**
**नामयुग्ममपि च द्विमूर्तिषु त्र्यक्षरं भवति चास्य पञ्चभिः॥**

(க—ரை) பிரச்னகாலத்திலோ, சகுனமுண்டாகும் பொழுதோ சரராசியோ, சரராசியின் அம்சமோ உதயமடையுமானல் வந்தமனிதனுடையவோ, கேழ்க்கப்பட்ட பொருளினுடையவோ பெயர் இரண்டு அக்ஷரமுள்ளதாகவும், ஸ்திரராசியோ, ஸ்திரராசியின் அம்சமோ உதயமடையுமானல் பெயர் நான்கு அக்ஷரமுள்ளதாகவும், உபயராசியோ, உபயராசி நவாம்சமோ உதயமானல் பிரச்னம் செய்யப்பட்ட பொருளின் பெயர் இரண்டாகவு மிருக்கும். அவ்விருபெயர்களுள் ஒருபெயர் 3 அக்ஷரமுள்ளதாகவும், மற்றொன்று 5 அக்ஷரமுள்ளதாகவு மிருக்கும். சரராசியில் ஸ்திர உபயநவாம்சமும், ஸ்திரராசியில் சர உபயநவாம்சமும், உபயராசியில் சரஸ்திரநவாம்சமும் உதயமாகுமானல் நவாம்சலக்கினப் பிரச்னலக்கினம் இவற்றுள் எது வலுவுள்ளதோ அதைக்கொண்டு பெயரின் அக்ஷரத்தை நிர்த்தாரணம் செய்யவேண்டும். (எ—று)

(அ—கை) வந்தவனின் பெயரில் இன்னின்ன அக்ஷரங்கள் அடங்கி இருக்கும் என்பதை அறிதற்குபாயத்தை உபதேசிக்கிறார்:—

**काद्यास्तुवर्गाः कुजशुक्रसौम्यजीवार्कजानां क्रमशः प्रदिष्टाः।**
**वर्णाष्टकं यादिच शीतरश्मे रवेरकारात्क्रमशस्स्वरास्स्युः॥**

(க—ரை) கவர்க்கம் முதலிய வர்க்கங்கள் முறையே அங்காரகன் முதலியோருக்குரியவைகளாகும். அதாவது:—**क, ख, ग, घ, ङ** இவ்வைந்து எழுத்துக்களும் கவர்க்கம் எனப்படும். இவ்வர்க்கம் செவ்வாய்க்குரியதாகும். **च, छ, ज, झ, ञ** இவ்வைந்து எழுத்துக்களும் சவர்க்கம் எனப்படும். இவ்வர்க்கம் சுக்கிரனுக்குரியதாகும். **ट, ठ, ड, ढ, ण** இவ்வைந்து எழுத்துக்களும் டவர்

க்கம் எனப்படும். இவ்வர்க்கம் புதனுக்குரியதாகும். त, थ, द, ध, न இவ்வைந்து எழுத்துக்களும் தவர்க்கம் எனப்படும். இவ்வர்க்கம் குருவுக்குரியதாகும். प, फ, ब, भ, म இவ்வைந்து எழுத்துக்களும் பவர்க்கம் எனப்படும். இவ்வர்க்கம் சனிக்குரியதாகும். य, र, ल, व, श, ष, स, ह இவ்வெழுத்துக்கள் சந்திரனுக்குரியவைகளாகும். अ, आ, इ, ई, उ, ऊ, ए, ऐ, ओ, औ, अं, अः இவ்வெழுத்துக்கள் சூரியனுக்குரியவைகளாகும். இதன் பிரயோஜனம் யாது எனின்? கூறுவாம். பிரச்ன ஸமயத்தில் பிரச்னலக்கினம், அதற்கு 4, 7, 10மிடம் இவற்றில் எந்தெந்த நவாம்சங்களுதயமடைந்தனவோ, அவற்றிற்கு எந்தெந்தக் கிரஹங்கள் அதிபதிகளோ, அவர்களுக்கு எந்தெந்த வர்க்காக்ஷரங்களுரியவைகளோ அவற்றுள் உதயமடைந்த நவாம்சத்தின் எண்ணை அனுஸரித்து முன் मेषेककार: என்றுதொடங்கி அக்ஷரகோசாத்தியாயத்தில் கூறியபடி அந்தந்த வர்க்காக்ஷரங்களைச் சேர்த்து நாமாவை எற்படுத்தவேண்டும். ஆனல் லக்கினாதி கேந்திரநவாம்சங்களுக்கதிபர்களாக கிரஹங்கள் தமது உச்சவீடு, வக்கிரகதி இவற்றை யடையுமானல் மூன்றினலும், வர்க்கோத்தமாம்சம் சொந்த நவாம்சம், சொந்த வீடு, சொந்ததிரேஷ்காணம் இவற்றி லிருக்குமானல் இரண்டினலும் அந்தந்தக் கிரஹங்கள் மூலமேற்படும் அக்ஷரங்களைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். வர்க்கோத்தமாதிகளிலில்லாத பாபக்கிரஹங்கள் அக்ஷரங்களைக் குறைத்து விடும். இவ்விதம் அந்தந்த கிரஹங்கள் மூலம் அச்சு எழுத்துக்களையும், ஹல் எழுத்துக்களையும் எடுத்துக்கொண்டு பிறகு நாமாவை ஏற்படுத்த வேண்டும். அதாவது:—லக்கினகேந்திரத்திலுதயமான நவாம்சபதியின் மூலம் கிடைத்த அக்ஷரத்தை பெயரின் முதலெழுத்தாகவும், 4-வது கேந்திரத்திலுதயமடைந்த நவாம்சபதியின் மூலம் கிடைத்த எழுத்துக்களை அதற்கு அடுத்த படியாகவும், 7-வது கேந்திரத்திலுதயமடைந்த நவாம்சபதியின் மூலம் கிடைத்த எழுத்துக்களை அதற்கு அடுத்தபடியாகவும், 10-வது கேந்திரத்திலுதயமடைந்த நவாம்சபதியின் மூலம் கிடைத்த எழுத்தை அதற்கு அடுத்தபடியாகவும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

அல்லது கேந்திரங்களில் உதயமடைந்த நவாம்சங்களின் பதிகளுள் எந்தக் கிரஹம் மிக்க வலுவுடையதோ அந்தக்கிரஹத்

திற்குறிய எழுத்தை முதலாவதாகவும், அதற்கடுத்தபடியாய் வலுவுள்ள கிரஹத்தின் எழுத்தை இரண்டாவதாகவும், இவ்விதமே பலக் கிரமத்தை யனுஸரித்து அந்தந்த எழுத்துக்களை பின்னர் பின்னர் முறையே சேர்த்து பெயரைக்கண்டறிய வேண்டும். சிலர் நாமாக்ஷரத்தைத் காணும் முறையை வேறு விதமாக உபதேசிக்கின்றனர். அதாவது:— கேந்திரத்தி லுதயமடைந்த நவாம்சபதியானவன் எந்த ராசியில் எத்தனை கலைகளைத் தாண்டியிருக்கிறானோ அவற்றை யனுஸரித்து அந்தந்தக் கிரஹங்களின் வர்க்காக்ஷரங்களைக் கண்டறியவேண்டும் என்பதாம். ஸூரியன் கேந்திரத்தி லுதயமடைந்த நவாம்சபதியாகவானால் அவன் எந்த ராசியில் எத்துணையாவது கலையிலிருக்கிறான் என்பதைக் கண்டறியவேண்டும். அவ்விதம் கண்டறிந்து 150, 150 கலைக்கு அவனது வர்க்கத்தில் ஒவ்வொரு அக்ஷரம் வீதம் கிரஹித்துக்கொள்ள வேண்டும். ஆகவே ஸூரியன் முதலாவது 150 கலைகளுக்குள்ளிருந்தால் அவனது வர்க்கத்தில் முதலக்ஷரத்தையும், இரண்டாவது 150 கலைகளுக்குள்ளிருந்தால் இரண்டாவது அக்ஷரத்தையும், இவ்விதமே மேலுள்ள 150 கலைகளிலும் வர்க்கத்தின் மேன்மேலுள்ள அக்ஷரங்களையும் கிரஹித்துக் கொள்ளவேண்டும். மேற்கூறிய முறைப்படி சந்திரன் கேந்திரத்தி லுதயமடைந்த நவாம்சபதியானால் 225 கலைகளுக்கு அவனது வர்க்கத்தில் ஒவ்வொரு அக்ஷரம் வீதமும், மற்ற கிரஹங்கள் கேந்திரத்திலுதயமடைந்த நவாம்சபதியானால் 200, 200 கலைகளுக்கு அவரவர்களின் வர்க்கத்தில் ஒவ்வொரு அக்ஷரம் வீதமும் கிரஹித்துக் கொள்ளவேண்டும் என்பதாம்.

(அ—கை) பெயரை ஊஹிக்க வேண்டிய முறையை யுபதேசிக்கிறார்:—

**नामानि चाग्न्यंबुकुमारविष्णुशक्रेन्द्रपत्नीचतुराननानाम् ।**
**तुल्यानिसूर्यात्क्रमशोविचिन्त्य द्वित्र्यादिवर्णैर्घटयेत्स्वबुद्ध्या ॥**

(க—ரை) ஸூரியன் பிரச்ன லக்கினபதியாகவோ, நவாம்சபதியாகவோ ஆனால் வந்தவனின் பெயர் அக்கினியைக் குறிப்பிடுகின்ற பெயர்களுள் யாதானுமொன்றாக விருக்கும் என்றும்,

லக்கினதிபதியாகவோ, லக்கினநவாம்சபதியாகவோ சந்திரனானால் வந்தவனின் பெயர் ஜலத்தைக் குறிக்கின்ற பெயர்களுள் யாதாவதொன்றாக விருக்கும் என்றும், இவ்விதமே செவ்வாயானால் ஸுப்பிரமணியரைக் குறிப்பிடும் பெயர்களுள் யாதாவதொன்றாக விருக்கும் என்றும், புதனானால் விஷ்ணுவைக்குறிக்கின்ற பெயர்களுள் யாதானுமொன்றாக விருக்கும் என்றும், குருவானால் இந்திரனைக் குறிக்கின்ற பெயர்களுள் யாதானுமொன்றாக விருக்கும் என்றும், சுக்கிரனானால் இந்திரபத்தினியைக் குறிக்கின்ற பெயர்களுள் யாதானு மொன்றாக விருக்கும் என்றும், சனியானால் பிரும்மதேவனின் பெயர்களுள் யாதானுமொன்றாக விருக்கும் என்றும் முதலில் ஊஹித்தறிந்து அந்தப் பெயரானது இரண்டு அக்ஷரமுள்ளதாக விருக்குமா ? மூன்று அக்ஷரமுள்ளதாக விருக்குமா ? என்பது முதலியவற்றை மேற்கூறிய முறைகளைக் கொண்டு அறிந்து நாமாவை நிர்த்தாரணம் செய்ய வேண்டும்.*

(அ—கை) வந்த மனிதனின் வயதை அறிதற்குபாயத்தை யுபதேசிக்கிறார்:—

**वयांसि तेषां स्तनपानबाल्य व्रतस्थितायौवनमध्यवृद्धाः ।**
**अतीव वृद्धा इति चन्द्रभौम ज्ञशुक्रजीवार्कशनैश्चराणाम् ॥**

(க—ரை) எல்லாக் கிரஹங்களிலும் அதிகபலம் பெற்ற சந்திரன் லக்கினபதியாகவோ, நவாம்சபதியாகவோ ஆனால் வந்தவன் ஸ்தந்யபானம் செய்யக்கூடிய வயதுள்ளவன் என்றும், செவ்வாயானால் வந்தவன் 2 வயதிற்குமேல் 6 வயதிற்குட்பட்ட வயதுள்ளவன் என்றும், புதனானால் பிரும்மசாரி, அதாவது: 7 வயதிற்குமேல் 16 வயதிற்குட்பட்ட வயதுள்ளவன் என்றும், சுக்கிரனானால் 17 வயதிற்குமேல் 30 வயதிற்குட்பட்ட வயதுள்ளவன் என்றும்,

---

* ஸூரியனுக்கு சிவனும், சந்திரனுக்குப் பார்வதியும், குருவுக்கு தக்ஷிணா மூர்த்தியும், சுக்கிரனுக்கு துர்க்கையும், சனிக்கு சாஸ்தாவும் அதிதைவம் என்று கொள்வதே பெரும்பாலும் அனுபவத்திற்கு ஒத்து வருவதால் இவர்களின் பெயரையே இங்கும் கிரஹித்துக் கொள்ள வேண்டும்.

குருவானுல் 30 வயதிற்கு மேல் 50 வயதிற்குட்பட்ட வயதுள்ளவன் என்றும், ஸூரியனுனுல் 50 வயதிற்குமேல் 80 வயதிற்குட்பட்ட வயதுள்ளவன் என்றும், சனியானுல் 80 வயதிற்கு மேல் 100 வயதிற்குட்பட்ட வயதுள்ளவன் என்றும் கண்டு கொள்ள வேண்டும். (17)

பதினேன்ருவது சாகுனேத்தராத்யாயம் முற்றிற்று.

## சகுனபலநிர்ணயம் முற்றிற்று.

சுபம்.

## சகுனபல நிர்ணயத்திலடங்கிய சுலோகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| பொதுவிதி என்ற | 1-வது | அத்தியாயத்தில் | சுலோகம் | ... 80. |
| அந்தர சக்கிரம் | 2 ,, | ,, | ,, | ... 45. |
| விருதாத்யாயம் | 3 ,, | ,, | ,, | ... 47. |
| ச்வசக்கிராத்யாயம் | 4 ,, | ,, | ,, | ... 20. |
| சிவாருதாத்யாயம் | 5 ,, | ,, | ,, | ... 15. |
| மிருகசேஷ்டிதாத்யாயம் | 6 | ,, | ,, | ... 3. |
| கவேங்கிதாத்யாயம் | 7 ,, | ,, | ,, | ... 3. |
| அச்வேங்கிதாத்யாயம் | 8 ,, | ,, | ,, | ... 15. |
| ஹஸ்திசேஷ்டிதாத்யாயம் | 9 | ,, | ,, | ... 14. |
| வாயஸவிருதாத்யாயம் | 10 ,, | ,, | ,, | ... 62. |
| சாகுனேத்தராத்தியாயம் | 11 | ,, | ,, | ... 17. |
| | | | ஆகமொத்தம் | ... 321 |

சாகுனேத்தராத்தியாயத்திலடங்கிய அக்ஷர கோசாத்தியாயம் ... 32.

Office of the
Director of Archaeology
Madras

1627

### தேவநாகரலிபியில் மூலத்துடனும் தமிழுரையுடனும் கூடின புஸ்தகங்கள்.

### சோதிட சாஸ்திர கிரந்தங்கள்.

# பிருஹத் ஜாதகம்

## தமிழ் மொழிபெயர்ப்பு

இதையே ஹோரை என்றும், வராஹ ஹோரை என்றும் சொல்லுவர். இதற்குப் பல வியாக்யானங்களுக் கிணங்கவும், நமது சொந்தமான பல அனுபவங்களுக் கிணங்கவும் சுலபமான தமிழ் நடையில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரை இவைகளை எழுதி தேவநாகரலிபியில் மூலத்துடன் வெளியிட் டிருக்கிறோம். யாவராலும் மிக்க கடினம் எனக் கருதப்படும் ஆயுர்த்தாயம், தசாந்தர்த்தசை, நஷ்ட ஜாதகம் முதலிய பாகங்களுக்கு யாவர்க்கும் புரியக்கூடிய நிலையில் மிக்க விரிவாக உரை எழுதப்பட் டிருக்கின்றது. உதாஹரணமாய் பலஅனுபவ ஜாதகங்களும் கட்டங்களும் ஆங்காங்கு கொடுக்கப்பட் டிருக்கின்றன. கர்க்கர், பராசரர், சத்தியா சாரியர், யவனேசுவரர் முதலியோரின் கிரந்தங்களினின்றும்,ஸாராவளியினின்றும் அந்தந்த விடத்திற்குத் தேவையான வசனங்களை எடுத்து எழுதி தமிழில் உரையுமெழுதப்பட் டிருக்கிறது. இதன் முகவுரையில் சோதிட சாஸ்திரம் நம்பத்தக்கதல்ல என்றது முதலிய வாதங்களுக்குத் தக்க சமாதானமும், வராஹ மிஹிரரின் கால நிர்ணயமும் செய்யப்பட் டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனது எதிர்கால நிலையை யறிந்து கொள்வது அவச்யமாதலால் சோதிடத்தை யப்யசிக்க விருப்பமுள்ளோரும், பல சாஸ்திரத்திற் பழகுகின்றவர்களும் இப் புஸ்தகத்தைப் படிப்பது மிகவுமவசியம். புஸ்தகம் டிம்மி எட்டு பக்க அளவில் சுமார் 750 பக்கங்களுள்ளது. கிலிட்டு எழுத்துடன் உயர்ந்த காலிகோ பைண்டு செய்தது. கிளேஸ். ரூ. 8 ரப். ரூ. 7.

## ஜாதக சந்திரிகை தமிழ் மொழிபெயர்ப்பு.

(2) இப்புஸ்தகம் சோதிட சாஸ்திரமாகிற இரும்புப்பெட்டிக்குத் திறவுகோலாகும். இதிற் சொல்லிய முறைகள் யாவும் அனுபவத்திற்கு மிக்க ஒத்தவைகளாகும். இதனுதவியின்றி பலன் சொன்னால் அப்பலன்கள் பெரும்பாலும் அனுபவத்திற்கு ஒத்திருக்க மாட்டா. மேலும் இதில் விவாஹத்திற்குவேண்டிய 10 விதப் பொருத்தங்களைப் பார்க்கவேண்டிய முறைகள், அங்காரகதோஷ நிர்ணயம் முதலிய முக்கியமான விஷயங்களுமடங்கியிருக்கின்றன. விலை ரூ 1. 1-2-0 க்கு ஸ்டாம்பு அனுப்பியும் இதைப்பெறலாம்

(3) கோசரபல நிர்ணயம்—இதில் கோசரபலன் பார்க்கவேண்டிய முறைகள் விரிவாய் கூறப்பட்டிருக்கின்றன.

தசாபுக்திபலன்களும், கோசரபலன்களும் சிலவிடங்களில் மாறி நடப்பதற்குரிய காரணங்களும், கோசரபலன், தசாபுக்தி பலன் இவற்றை எவ்விதம் கவனித்தால் அனுபவத்தில் அது ஒத்துவரக்கூடும் என்பதும் பல திருஷ்டாந்தங்கள் வாயிலாக விரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. பள்ளியிற்பயிலும் மாணவர்கள் கூட இதனுதவியால் அந்தந்த வருஷத்தில்மேல் வகுப்புக்கு மாற்றம், பரீக்ஷையில் தேர்ச்சி இவற்றை நன்கு தெரிந்து கொள்ளக்கூடும் என்றால் மற்றவர் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? விலை அணு 12. 14 அணுவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

(4) நஷ்ட ஜாதகம்.—தேவநாகரலிபியில் மூலத்துடனும் தமிழில் விரிவான பதவுரை கருத்துரைகளுடனும் கூடியது. வராஹமிஹிரரால்செய்யப்பட்டநஷ்ட ஜாதகாத்யாயத்தை யனுஸரித்தது. இதனால் ஜாதகமில்லாதவனும் தனதுஜாதகத்தைக்கணித்து கொண்டுவிடலாம். விலை அணு 4. 5 அணுவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

# உடுதசாபல நிர்ணயம்.

(5) இத்தலையங்கத்தின் கீழ் பாராசரஸம்ஹிதை, பலதீபிகை, ஸாராவளி, ஜாதகசந்திரிகை, ஸர்வார்த்தசிந்தாமணி, தமிழ்ஜாதகாலங்காரம் முதலிய புராதன சோதிட கிரந்தங்களில் உடுதசாவிஷயமாய்ச் சொல்லிய பலன்களையும், ஷை தசையைப் பரிசீலனம் செய்யவேண்டிய முறையையும் ஒருங்கே சேர்த்து வெளியிட்டிருக்கிறோம். இதில் தேவநாகரலிபியில் அந்தந்தகிரந்தங்களிலுள்ள மூலசுலோகங்களும், பல அனுபவஜாதகங்கள் உதாஹரணங்கள் இவைகளுடன் கூட எளியதமிழ்நடையில் எழுதப்பட்ட கருத்துரையும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இப்புஸ்தகத்தில் ஒவ்வொரு தசையையு மெடுத்துக்கொண்டு, புக்தி, அந்தரம், ஸூக்ஷமம், பிராணன் வரையுள்ள காலப் பிரிவினைகளை கட்டம்போட்டு காண்பித்து ஒவ்வொன்றிலும் நடக்கும் பலன்களும் விவரமாய் கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே இப்புஸ்தகமொன்று கைவசமிருக்குமானால் உடுதசாபலனைப் பற்றியறிவதற்கு வேறு புஸ்தகம் தேவையாக விருக்காதென்பதுடன், மனம்போனவாறு தசா, புக்தி, அந்தர, ஸூக்ஷம, பிராண பலன்களைச் சொல்லும் ஏனைய சோதிட வித்வான்களையணுகி அவர் மொழி கேட்பதன் மூலம் நேரும் சிரமமும் உங்களுக்கு ஒருபொழுதும் நேராதென்பதுவும் திண்ணம். மேலும், நாம்பலவருஷகாலமாய்சோதிடத்தில்பாடுபட்டு எந்த அனுபவ முறைகளைக்கண்டு கொண்டிருக்கிறோமோ

அவற்றையும் ஆங்காங்கு குறிப்பிட்டுமிருக்கிறோம். சோதிடத்தில் பரிசிரமப் படுகின்றவர்களுக்கு எந்தப் புஸ்தகமொன்றிருந்தால் மற்றபுஸ்தகங்கள் தேவையாக விராதென்பதை நமது அனுபவத்தினின்றும் கண்டு இப்புஸ்தகத்தை வெளியிட்டிருப்பதால் யாவர்க்கும் இப்புஸ்தகம் நிரம்பவும் தேவையாகவிருக்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. டிம்மி 1க்கு 8 பக்க அளவில் சுமார் 480 பக்கங்களுள்ளது. விலை கிளேஸ் ரூ. 4. ரப் ரூ. 3–8–0.

(6) **நவக்கிரஹாராதனக் கிரமம்.** இதில் நவக்கிரஹங்களை யாராதிப்பதேன்? என்ற விஷயமாய்ப் பலவாக்ஷேப சமாதானங்களடங்கிய விரிவான உபன்னியாசமும், எந்தெந்தக் காலங்களில் ஆராதிக்க வேண்டும் என்பதும், நவக்கிரஹப் பிரதிமை, நவக்கிரஹ ஹோம குண்டம் முதலியவற்றைத் தயாரிக்கவேண்டிய முறையும், ஆராதனத்திற்கு வேண்டிய மந்திரங்கள் தமிழுரையுடனு மடங்கி இருக்கின்றன. அத்துடன் நவக்கிரஹ மந்திரம், நவக்கிரஹ ஸ்தோத்திரம், நவக்கிரஹ கவசம், நவக்கிரஹ அஷ்டோத்தரம், விஷ்ணு கவசம், ஆதித்யஹிருதயம் இவைகள் பாராயணத்திற்கு உபயோகப்படுமாறு நாகரலிபியில்தனியே பிழையின்றி அச்சிடப்பட் டிருக்கின்றன. விலை கிளேஸ். ரூ. 1-4-0 ரப் 1-0-0

## வைதிக க்ரந்தங்கள்.

# த்ரிவேதி ஸந்த்யாவந்தனம்.

(7) இந்த இரண்டாவது பதிப்பில் ருக், யஜுஸ், ஸாமவேதிகளின் ஸந்தியாமந்திரங்கள் யாவும், தேவநாகரம், கிரந்தம், தமிழ் ஆகிய மூன்று எழுத்துக்களிலும் அச்சடிக்கப்பட்டிருப்பதுடன் தமிழில் பதவுரை எழுதும்பொழுதும் அதே மூன்று எழுத்துக்களிலும் மந்திரபதங்கள் அச்சடிக்கப் பட்டிருக்கின்றன.

உதாஹரணமாய்—(மூலம்) **आयातु वरदादेवी** (ஆயாது வரதாதேவீ ஆயாது வரதாதேவீ) (பதவுரை) **वरदा** (வரதா வரதா)= வேண்டிய வரனைத்தருகின்ற **देवी** (தேவீ தேவீ)=தேவியானவள் **आयातु** (ஆயாது ஆயாது)=என்னை யனுக்கிரஹிக்கவேண்டி வரட்டும். என்ற மாதிரியாய் எல்லா மந்திரங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தப்பதிப்பானது ஸந்தியா மந்திரார்த்தங்களை அறிந்து கொள்ள ஆவலுள்ள எவர்க்கும் மிக்க மிக்க உபயோகமான தென்பதில் யாதும் ஆக்ஷேபமில்லை. மேலும், பிராணாயாமத்தைப்பற்றியும், காயத்திரீ மந்திரார்த்தத்தைப் பற்றியும், அர்க்கியம் விடுதலைப்பற்றியும், ஆஸனக்கிரமத்தைப் பற்றியும், காலையில் ஜபிக்கவேண்டிய (ப்ராத: ஸ்மரணீயம்) தைப் பற்றியும், மற்றும் பல விஷயங்களைப்பற்றியும், பலவாசங்கா ஸமாதானங்களுடன் இப்புஸ்தகத்திலெழுதியிருப்பதுபோல் வேறு எந்தப்புஸ்தகத்திலும் இதுகாறும் வெளிவந்ததில்லையென்று நாம் சொல்லு

வது மிகையாகா. மேலும், இப்பதிப்பில் தனியாய் மூன்றுவேதிகளின் ஸந்தியாமந்திரங்கள்யாவையும் தேவநாகரம், கிரந்தம்,தமிழ் மூன்று எழுத்திலும் அச்சிட்டிருப்பதுடன், மூன்றுவேதிகளின் ஸமிதாதானம், ஔபாஸனம், பிரும்மயக்ஞம் யக்ஞோபவீத தாரண மந்திரம், பீஷ்மதர்ப்பணம் ஆகிய இவ்விஷயங்களும் தேவநாகரம், கிரந்தம் ஆகிய இரண்டெழுத்தில் மட்டும் அச்சிட்டு சேர்க்கப் பட்டிருக்கின்றன. இப்புஸ்தகம் டபிள்கிரௌன் 16 பக்க அளவில் 25 பாரங்களும், 400 பக்கங்களும் கொண்டது.

புல்காலிகோ பைண்டு செய்த கிளேஸ் காபி ரூ. 3—0—0.
சாதா பைண்டு செய்த ரப் காபி ரூ. 2—4—0.

(8) ஸ்ரீ ருத்திரம்.—கிரந்த லிபியில் மூலமும் தமிழுரையு முள்ளது. கிளேஸ் காபி 1-8-0. ரப் காபி 1-0-0.

(9) புருஷ சூக்தம் முதலியன.—இதில் புருஷசூக்தம் ஸ்ரீ சூக்தம், துர்க்கா சூக்தம், ஆதிசங்கர பகவத் பாதாசாரிய ஸ்வாமிகளவர்களால் செய்யப்பட்ட கனகதாராஸ்தவம் என்ற லக்ஷ்மீ ஸ்தோத்திரம் இவை எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட பதவுரை, கருத்துரை விசேஷவுரை இவைகளுடன் அடங்கி இருக்கின்றன. தேவநாகரலிபியில் மந்திரங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஸ்ரீசூக்த முகவுரையில் ஸ்ரீ சூக்த ஹோமவிதி ஸ்ரீ மந்திரம் முதலிய அருமையான விஷயங்களும், புருஷ சூக்த முகவுரையில் புருஷ சூக்த ஹோமவிதியும் சேர்க்கப் பட்டிருக்கிறது விலை 1-8-0

(10) மந்திரப்பிரச்னம்—இதில் கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தோன்னயனம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப் பிராசனம் சவுளம், உபநயனம், ஸமாவர்த்தனம், சிராத்தம், அஷ்டகை, ஸர்ப்பபலி ஈசானபலி முதலிய ஸம்ஸ்காரங்களில் உபயோகிக்கப்படும் மந்திரங்களும், ஷை கர்மங்களை நிரூபிக்கின்ற ஆபஸ்தம்ப கிருஹ்யஸூத்திரங்களும், ஷை கர்மங்களைச் செய்யவேண்டிய முறைகளும் தமிழுரையுடனடங்கி இருக்கின்றன. தேவநாகர லிபியில் மூலம் அச்சிடப்பட்டிருக்கிறது. விவாஹாதி ஸம்ஸ்காரங்களி லுபயோகப்படும் மந்திரங்களின் கருத்தைத் தெரிந்துக் கொண்டால் ஷை கர்மங்களில் மிக்கசிரத்தை யுமுண்டாகுமென்பதில் யாதும் தடையில்லை. ஒவ்வொரு ஆஸ்திகனிடத்து மிப்புஸ்தகமொன்றிருப்பது மிகவுமவசியமாகும். கிளேஸ் ரூ. 3. ரப் 2–8.

(11) தைத்திரீயாரண்யகம் முதல்பிரச்னம்.—இதுவே அருணம் என்றும் சூர்யநமஸ்கார பிரச்னம் என்றும் சொல்லப்படும். இதன் ஆரம்பம் **भद्रंकर्णेभिः शृणुयामदेवाः** என்பது. இதில் 130 பஞ்சாசத்துக்களடங்கியிருக்கின்றன. தேவநாகரலிபியில் மூலமும், நியாய வியாகரண பாரங்கதர் மீமாம்ஸா சிரோமணி பிரும்மஸ்ரீ பெரம்பூர் கணேச சாஸ்

திரிகளால் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட பதவுரை, கருத்துரை, இவைகளுமுள்ளன. இம் மந்திரங்களைச் சொல்லி சூரிய நமஸ்காரஞ் செய்வதால் ஆரோக்ய முண்டாகுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.
விலை கிளேஸ் 3-0-0. ரப் 2-0-0.

(12) யாஜுஷ ஸூர்ய நமஸ்கார மந்திரங்கள்.—பிரதி தினமும் செய்யவேண்டிய சூர்யநமஸ்கார மந்திரங்கள் தமிழில் பதவுரை, கருத்துரை விசேஷ வுரைகளுட னிதிலடங்கி இருக்கின்றன. தேவநாகரலிபியிலேயே மந்திரங்கள் போடப்பட் டிருக்கின்றன. தேவநாகரலிபியிலேயே நவக்கிரஹ நமஸ்கார மந்திரம், ஆதித்ய ஹிருதயம் இவைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை அணு4. 5 அணுவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

(13) வள்ளீபரிணய மணிப்ரவாளசதகம் விலை அணு. 4.

## (தர்சன) சாஸ்திர க்ரந்தங்ள்.

(14) சாங்கியதத்துவ காரிகா — இதில் ஈசுவரகிருஷ்ணர் என்ற மஹானால் செய்யப்பட்ட காரிகைகளும், வாசஸ்பதி மிச்ரர் என்ற மஹானால் செய்யப்பட்ட "ஸாங்கியதத்துவ கௌமுதீ" என்ற அவற்றின் வியாக்கியானமும் தேவநாகரலிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அத்துடன் ஒவ்வொரு சுலோகங்களுக்கும் எளிய தமிழ்நடையில் எழுதப்பட்டபதவுரை கருத்துரைகளும் ஸாங்கிய தத்துவ கௌமுதீ என்ற வியாக்யானத்தின் கருத்தை உள்ளது உள்ளபடி வெளியிடும் தமிழ் மொழிபெயர்ப்புமடங்கி இருக்கின்றன. ஸாங்கிய சித்தாந்தத்தைத் தெரிந்து கொள்வதற்கு இதற்கு நிகரான நூல் உலகில் கிடையா என்பது திண்ணம். கிளேஸ் ரூ. 3. ரப் ரூ. 2.

## பாதஞ்ஜலயோக ஸூத்திரம்

(15) இது பதஞ்ஜலி மஹருஷியால் செய்யப்பட்டது. இதில் 4 பாதங்களுண்டு. இப்பதிப்பில் ஒவ்வொரு ஸூத்திரமும் தேவநாகரம் தமிழ் ஆகிய இரண்டு எழுத்துக்களிலும் அச்சிடப்பட்டிருப்பதுடன் பதவுரை எழுதுமிடத்தும் ஷெ இரண்டு எழுத்துக்களிலும் சூத்திரபதங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. இதற்கு (1) வியாஸபாஷ்யம், (2) வாசஸ்பதி மிச்ரர் வியாக்கியானம், (3) நாகோஜிபட்டவிருத்தி, (4) பாவாகணேசீய வியாக்கியானம், (5) ராமானந்த ஸ்வாமிகள் வியாக்கியானம், (6) ஸதாசிவேந்திர ஸரஸ்வதிகள் விருத்தி, (7) போஜவிருத்தி ஆகிய 7 வியாக்கியானங்களைத்தழுவி விரிவாய் தமிழில் பதவுரை, கருத்துரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆரிய சாஸ்திரங்களின் தத்துவம் யாவும் இப்புஸ்தகத்தைப் படித்தால்தான் நன்கு புலப்படும். இச்சமயத்தை வீணாக்க வேண்டாம். புல் காலிகோ பைண்டு செய்த கிளேஸ் காபி ரூ. 3-8-0. சாதா பைண்டு செய்த கிளேஸ் காபி ரூ. 3-0-0. சாதா பைண்டு செய்த ரப் காபி ரூ. 2-8-0.

(16) ஸ்ரீகோபிகாகீதம் — ராஸக்ரீடா காலத்தில் பகவானைக் காணாது அவரை நேரில் வரவழைப்பதற்காக ஸ்ரீகோபிகைகள் உள்ளம் உருகிப்பாடிய சுலோகரூபமான பாடல்கள். பதவுரை, கருத்துரைகளும் ராஸக்ரீடா ரஹஸ்யார்த்தமும் உள்ளது அ. 12.

## தேவநாகரலிபியில் மூலமட்டுள்ள புஸ்தகங்கள்.

(17) ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்—இதில் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரம், விஷ்ணுஸஹஸ்ரநாமாவளி, துவாதசநாம பஞ்சரம், பஞ்சாயுதஸ்தோத்திரம், ஸ்ரீ தேசிகனுல் ஸாதிக்கப் பட்ட—தசாவதார ஸ்தோத்திரம், பகவத்தியான ஸோபானம், ஸ்ரீ கோபாலவிம்சதி, திருவிச நல்லூர் அய்யாவாள் அவர்களால் செய்யப்பட்ட ஸ்ரீகிருஷ்ணத்வாதச மஞ்சரீ, ஸ்ரீகிருஷ்ணுஷ்டோ த்தர சதநாமாவளி இவைகளடங்கி யிருக்கின்றன. நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. (நாகரலிபி) விலை அணு 5.

(18) இந்திராக்ஷீ சிவகவச ஸ்தோத்திரம்—(தேவநாகரலிபியில்) அ.2.

(19) நீதிசதகம்—தேவநாகரலிபியில் மூலம் மட்டும் அணு. 2.

## எளியதமிழ் நடையிலுள்ள உபன்யாஸங்கள்.

(20) மறுபிறப்பும் லோகாந்தரமும்—பலவாக்ஷேப ஸமாதானங்களடங் கிய இனிய தமிழ் உபன்யாஸம். சரீரத்தைக் காட்டிலும், ஆத்மா ஒரு வனிருக்கிறு னென்பதும், அவன் லோகாந்தரம் செல்லும் முறையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. விலை அணு. 4.

(21) சிராத்தம்.—விரிவான ஓர் தமிழ் உபன்யாஸம் மட்டும். இதில் தத்காலம் சிராத்தத்தைப் பற்றி செய்யப்படும் எல்லாவிதமான ஆசங் கைகளுக்கும் லோகானுபவத்தை யொட்டித் தக்க சமாதானங்கள்கூறப் பட்டிருக்கின்றன. விலை அணு 3.

## (உ) மூன்றுவேதிகளின் ஸந்தியாதி மந்திரங்கள்.

(22) இதில் சந்தியா மந்திரங்களும், ஔபாஸனம் முதலியவற் றின் மந்திரங்களும் முற்கூறியபடி அச்சடித்துத் தனியாய் விலைக் குக் கொடுக்கப்படுகிறது. இதில் 144 பக்கங்க ளடங்கியது.

சாதா பைண்டு விலை அணு 12.

## தைத்திரீயோபநிஷத்து.

(23) இதில் சிக்ஷாவல்லீ, ஆனந்தவல்லீ, பிருகுவல்லீ என்ற மூன்று உபநிஷத்துக்களுக்கு—ஸ்ரீசங்கரபாஷ்யத்திற் கிணங்கிய அத்வைத ஸம்பிரதாயானுஸாரியான அர்த்தமும், ஸ்ரீரங்கராமா னுஜபாஷ்யத்திற்கிணங்க விசிஷ்டாத்வைத ஸம்பிரதாயானுஸாரி யான அர்த்தமும், ஆங்காங்கு வித்யாரண்ய ஸ்வாமிகளால் எழு தப்பட்ட விசேஷமான பொருள்களும் எளிய தமிழ்நடையில் எழுதப்பட்ட பதவுரை கருத்துரைகளுடன் வெளியிடப்பட்டு

இருகின்றன. தேவநாகர லிபியில் மூலமுள்ளது. ஸ்ரீசங்கர பாஷ்யத்திற் கூறிய விஷயங்கள் யாவும் தெளிவுபடுத்தி எழுதப் பட்டுள்ளன. கிளேஸ் ரூ. 3. ஆண்டிக் பேபர் ரூ. 4.

## ॥ स्वाराज्यसिद्धिः ॥

(24) **सर्वतन्त्रस्वतन्त्रैः श्रीगङ्गाधरेन्द्रसरस्वतीन्द्रैः विरचिता** तैरेव विरचितया **कैवल्यकल्पद्रुमाख्यव्याख्यया** वेदान्तविभूषणशास्त्ररत्नाकरादिबिरुदाञ्चितैः चेन्नपुरीस्थ-संस्कृतकलाशालाप्रधानाद्वैतवेदान्त शास्त्राध्यापकैः ब्रह्मश्रीयुत करुङ्गुळं **कृष्ण शास्त्रिभिः** विरचितया **परिमळाख्य** विषमस्थलटिप्पण्या च समेता ॥

**भोमहाशयाः!**

**अयं च ग्रन्थः कृत्स्नमद्वैतसिद्धान्तसर्वस्वं प्रसन्नसरळगंभीरमधुरैः मूलश्लोकैः, तद्विवरणैश्च करतलामलकवत्प्रकटीकरोतीत्ये तदनुभवसाक्षिकं वाचकमहाशयानाम्। यथायं ग्रन्थः सुस्पष्टमामूलाग्रमद्वैतसिद्धान्तं प्रकाशयति न तथान्यः प्रकरणग्रन्थ इति मुक्तकण्ठं वक्तुं पार्येत। अयं च ग्रन्थः यद्यपि काश्यां शिलालिपिभिः मुद्रित आस्ते, अथापि सुन्दराक्षरैरमुद्रणात्, अशुद्धिबहुलत्वात्, विषमस्थलटिप्पण्यभावाच्च न पठितॄणां हृदयङ्गमो वर्तत इति सुन्दरैः सीसकाक्षरैः अतिधवळश्लक्ष्णायां पत्रिकायां अर्थावबोधोपयोगिचिह्नैः परिष्कृत्य इदानीमस्माभिः स्वकीयार्यमतसंवर्द्धनीमुद्राक्षरशालायां मुद्रितः। एतत्पुस्तकमेकं ग्रहीत्वा अस्मदुद्यमं सफलयेयुरत्रभवन्त इति विश्वसिमः॥**

**मूल्यम्...ग्लेस्. ४-०-०. रफ्. ३-८-०.**

ஆர்யமத ஸம்வர்த்தனீ பிரஸ்.

எங்களிடம் சொந்தமாய் அச்சாபீஸ் ஒன்று இருக்கின்றது. இதில் தேவநாகரம், கிரந்தம், தமிழ் இவ்வெழுத்துக்களில் புஸ்தகமோ, நோடீஸ்களோ, கல்யாண கார்ட் முதலியவைகளோ மிகவும் நேர்த்தியாய் அச்சிட்டுக் கொடுக்கப்படும். ஆர்டர் அனுப்புகின்றவர்கள் இத்தனை காபிகள் அச்சிடவேண்டும் என்று தெரிவித்தால் சார்ஜ் விபரம் தெரிவிக்கப்படும்.

# சகுனபல நிர்ணயம்.

## தமிழ் மொழிபெயர்ப்பு.

வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!!

ஸ்ரீவராஹ மிஹிராசார்யரால் பிருஹத்ஸம்ஹிதை என்ற கிரந்தத்தில் 85-வது அத்தியாயம் முதல் 95 வது அத்தியாயம் முடியவுள்ள 11 அத்தியாயங்களால் உபதேசிக்கப்பட்ட சகுன பலன்களை சகுனபல நிர்ணயம் என்ற தலையங்கத்தின் கீழ் நாகர லிபியில் மூலத்துடனும், தமிழுரையுடனும் வெளியிட்டிருக்கிறோம். இதில் மிகவும் அனுபவத்தில் ஒத்துவருகின்ற சகுனங்களும் அதன் பலன்களும் காண்பிக்கப்பட் டிருக்கின்றன. சிலர் பஞ்சாங்கத்தில் கூறியவைகளுடன் சகுனமே முடிந்து விட்டதாய் நினைக்கின்றனர். ஆனால் அவ்விதம் நினைப்பதிற்கில்லை. தேசம், காலம், அவஸ்தை முதலிய சகுனத்தைப்பற்றிய முறைகளை யொட்டி நாம் சுப சகுனமாகக் கருதுவது அசுப சகுனமாகவும், அசுபசகுனமாகக் கருதுவது சுபசகுனமாகவும், ஆகிவிடுமாதலால் அம்முறைகளை இந்நூலுபதேசிப்பதால் இதைப்படித் தறிதல் மிக்க வவசியமாகும். ஜாதக மூலம் கண்டறிய வேண்டி தசாபுக்தி பலன்களும் சகுனத்தைத் தழுவியே நடக்கின்றனவென்பதும் இந்நூலில் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால் ஒவ்வொரு சோதிட வித்வானும் மற்றவர்களும் இதைப்படித்தலவசியமாகின்றது. மேலும், அசுப சகுனங்கள் நேர்ந்தால் அதற்குப் பரிஹாரமாய்ச் செய்யவேண்டியவைகளும் இதிலுபதேசிக்கப் பட்டிருக்கின்றன. மேலும் இதில் அக்ஷரகோசாத்தியாயம் என்றதொருபாகம் சேர்த்து உரை எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதை ஒருவன் நன்கு படித்து அறிந்து கொள்வானேல் கேட்போர் ஆச்சரியப்படும்படி அவரின் பெயரையும், அவரால் கேட்கப்படும் பொருளின் பெயரையும் எளிதில் சொல்லி விடக்கூடும் என்பதில்யாதும் ஐயமில்லை.

கிளேஸ் காபி ரூ. 1–8–0. ரப் காபி ரூ. 1–4–0.

பத்திராதிபர் கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,
ஆர்யமத ஸம்வர்த்தனீ பிரஸ்,
72 பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

Office of ...
...ctor of Archaeology
Madras

கடலங்குடி நடேசசாஸ்திரிகளால் வெளியிடப்பட்ட தேவநாகர லிபியில் மூலத்துடனும் தமிழுரையுடனும் கூடின புஸ்தகங்கள்.

பிருஹஜ்ஜாதகம்—இதையே ஹோரை என்றும், வராஹஹோரை என்றும் சொல்லுவர். இதற்குப்பல வியாக்யானங்களுக்கிணங்கவும் நமது சொந்தமான பல அனுபவங்களுக்கிணங்கவும் சுலபமான தமிழ் நடையில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரை இவைகளை எழுதி தேவநாகரலிபியில் மூலத்துடன் வெளியிட்டிருக்கிறோம். சோதிடத்தை யப்யசிக்க விருப்ப முள்ளோரும், பல சாஸ்திரத்திற் பழகுகின்றவர்களும் இப்புஸ்தகத்தைப் படிப்பது மிகவுமவசியம். புஸ்தகம் டிம்மி எட்டுபக்க அளவில் சுமார் 750 பக்கங்களுள்ளது. லெட்டு எழுத்துடன் உயர்ந்த காலிகோ பைண்டு செய்தது. கிளேஸ் ரூ. 8. ரப் ரூ. 7.

2. ஜாதகசந்திரிகை—இப்புஸ்தகம் சோதிட சாஸ்திரமாகிற இரும்புப்பெட்டிக்குத் திறவுகோலாகும். தேவநாகரலிபியில் மூலத்துடனும், சுலப தமிழ் நடையில் எழுதப்பட்ட பதவுரை கருத்துரைகளுடனும் வெளியிட்டிருக்கிறோம். விலை ரூ. 1. 1-2-0க்குஸ்டாம்பு அனுப்பியும் இதைப் பெறலாம்.

3. கோசரபல நிர்ணயம்—இதில் கோசரபலன் பார்க்கவேண்டிய முறைகள் விரிவாய் கூறப்பட்டிருக்கின்றன. பள்ளியிற்பயிலும் மாணவர்கள் கூட இதனுதவியால் அந்தந்த வருஷத்தில் மேல் வகுப்புக்குமாற்றம், பரீக்ஷையில் தேர்ச்சி இவற்றை நன்கு தெரிந்து கொள்ளக்கூடும் என்றால் மற்றவர் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? விலை அணா 12. 14 அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

4. நஷ்ட ஜாதகம்—இதனால் ஜாதகமில்லாதவனும் தனது ஜாதகத்தைக் கணித்து கொண்டுவிடலாம். விலை அணா 4.

5. உடுதசாபல நிர்ணயம்—தசை, புக்தி, அந்தரம், சூக்ஷ்மம், பிராணன் வரையுள்ள அதாவது: ஒவ்வொரு நாழியிலும் நடக்கும் பலனை இதன் மூலம் நீங்கள் நன்கறிந்து கொள்ளக்கூடும். டிம்மி 1க்கு 8பக்க அளவில் சுமார் 480 பக்கங்களுள்ளது. விலை கிளேஸ் ரூ. 4. ரப் ரூ. 3-8-0.

6. நவக்கிரஹாராதனக்கிரமம்—இதில் நவக்கிரஹ ஸ்தோத்திரம், நவக்கிரஹ கவசம், நவக்கிரஹ அஷ்டோத்தரம், விஷ்ணுகவசம், ஆதித்ய ஹிருதயம் இவைகள் பாராயணத்திற்கு உபயோகப்படுமாறு தேவநாகரலிபியில் தனியே பிழையின்றி அச்சிடப்பட்டிருக்கின்றன. விலை கிளேஸ் ரூ. 1-4-0. ரப் 1-0-0.

7. புருஷசூக்தம் [illegible]லியன—இதில் புருஷசூக்தம், ஸ்ரீசூக்தம், துர்க்கா சூக்தம், கன[illegible]தவம் என்ற லக்ஷ்மீ ஸ்தோத்திரம் இவை [illegible]ருக்கின்றன. விலை ரூ. 1-8-0.

[illegible] மந்திர[illegible]ம்—விவாஹம், உபநயனம் முதலிய கர்மங்களின் [illegible]ள் இ[illegible]டங்கி இருக்கின்றன கிளேஸ் ரூ. 3. ரப் 2-8-0.

9. பாதஞ்ஜலயோக [illegible]த்திரம்—இது பதஞ்ஜலி மஹருஷியால் செய்யப்பட்டது. ([illegible]யுடனே) [illegible]ல் காலிகோபைண்டு கிளேஸ் ரூ. 3-8-0. [illegible]பைண்டு ரூ. 3. ரப் 2-8-0.

கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,

72 பெரிய தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை.